தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் எ. சுப்பராயலு

முனைவர் செ. இராசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் – 10

பഗ 7171

தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் எ. சுப்பராயலு
முனைவர் செ. இராசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-286-X

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 226

திருவள்ளுவராண்டு 2032 மாசி - மார்ச்சு 2001

நூல்	:	தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும்
பதிப்பாசிரியர்கள்	:	எ. சுப்பராயலு, செ. இராசு
மொழி	:	தமிழ்
பொருள்	:	கல்வெட்டியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2001
மறு அச்சு	:	**சனவரி 2017**
பக்கம்	:	14 + 222 = 236
தாள்	:	டிஎன்பில் மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	1/8 டெம்மி
நூற்கட்டு	:	சாதாரணக்கட்டு
விலை	:	**ரூ 300.00**
படிகள்	:	500
அச்சு	:	ஓம் சக்தி பிரிண்டர்ஸ் தஞ்சாவூர்

முனைவர் க.பாஸ்கரன்
துணைவேந்தர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தொலைபேசி
அலுவலகம் : 04362 – 227040
இல்லம் : 04362 – 226741
நிகரி : 04362 –226159

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாய் விளங்குவதால் தமிழ்கூறும் நல்லுலகம் பயன்பெறும் பல அரிய ஆய்வு நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. பல ஆண்டுகள் அரிதின் முயன்று இப்பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் படைத்தளித்த ஆய்வு நூல்கள் பல தற்போது இருப்பில் இல்லை. ஆனால் இந்நூல்களின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தகைய ஆய்வு நூல்களை மீண்டும் வெளியிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் ஆர்வலர்களிடம் மிகுந்து வருகிறது. எனவே வெளிவந்து விற்றுத் தீர்ந்து விட்ட நூல்கள் அனைத்தையும் மீண்டும் வெளியிட தமிழ்ப் பல்கலைக்கழகம் கூடுதல் கவனஞ்செலுத்தி வருகிறது. இனி மறுபதிப்பு நூல்கள் தொடர்ந்து வெளிவரும்.

“தமிழ்க் கலவெட்டியலும் வரலாறும்” எனும் இந்நூல் பல அரிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். தமிழக வரலாற்றுக்குப் புதிய வெளிச்சங்களை வழங்கும் புதிய தவகல்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தொல்லியல் பேரறிஞர்களாகப் போற்றப்படும் பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்களும் பேராசிரியர் செ.இராசு அவர்களும் இந்நூலின்

பதிப்பாசிரியர்கள் எனும் போதே இந்நூலின் தரத்தை எவரும் உணர்ந்து கொள்ளமுடியும். இவர்கள் இருவருந்தான் அதிக எண்ணிக்கையில் இந்நூலில் கட்டுரைகள் எழுதியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மறுபதிப்பு காணும் இந்நூலைத் தமிழுலகு வரவேற்று மகிழும் என்பதில் ஐயமில்லை.

மறுபதிப்பாக்கம் பெற ஆர்வத்துடன் செயல்புரிந்த பதிப்புத்துறை இயக்குநர் (பொ) முனைவர் சா.உதயசூரியன் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்

15/12/16

(க.பாஸ்கரன்)

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை சார்பில் "தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும்" என்ற இத்தொகுப்பு நூல் வெளிவருகிறது.

தொல்லியல், தொல்லெழுத்தியல், தொல் பழங்காலக் குறியீடுகளுக்கும் எழுத்துகளுக்கும் உள்ள தொடர்பு, வரலாறு, கல்வெட்டுக்கள், கல்வெட்டுக்களுக்கும் இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பு, செப்பேடுகள், வரலாற்று நிகழ்வுகளைக் காலமுறைப்படுத்திக் கூறும் மெய்க்கீர்த்திகள், இன்றைய தேவையான சமய ஒருமைப்பாடு கூறும் ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், கிழக்கிந்தியக் கம்பெனிக்கால முத்திரை ஓலைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அண்மைக் கண்டுபிடிப்புக்களான கல்வெட்டுக்கள், கல்வெட்டு எழுதப்படும் முறை, கல்வெட்டுச் சொற்களின் கருத்தாழம், மராட்டியர் ஆவணங்கள், கிழக்குக் கடற்கரைத் துறைமுகப் பெருநகரான நாகப்பட்டினம் போன்ற அரிய செய்திகளைக் கூறும் 23 கட்டுரைகள் இன்றியமையாச் சான்றுகளுடன் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு - தொல்லியல்துறை ஆய்வாளர்களுடன், அவ்வத் துறையில் ஈடுபாடும் ஆர்வமும் மிக்க பிற ஆய்வாளர்களும் இக்கட்டுரைகளைச் சிறந்த முறையில் எழுதியுள்ளனர். மறைந்த பல்துறைத் தமிழறிஞர் மு. இராகவையங்கார் அவர்களின் எழுத்தோவியமும் இடம் பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது.

கருத்தை விளக்க ஆங்காங்கு தேவையான வரைபடங்கள் சேர்த்திருப்பது நூலுக்கு அணி சேர்க்கிறது. நூலின் இறுதியில் கல்வெட்டு-தொல்லியல் தொடர்பான இன்றியமையாத நூல்களின்

பட்டியல் இணைக்கப்பட்டிருப்பது இன்றைய ஆய்வாளர்களுக்குத் தேவையான ஒன்று.

பொதுவாக வரலாற்று ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு கையேடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இத்துறையில் ஒரு பயிற்சிப் பாடநூலாகவும் இந்நூல் இடம்பெறும் வாய்ப்புள்ளது. இளம் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக இந்நூல் விளங்குகிறது.

இதனைத் தொகுத்தளித்த இத்துறைப் பேராசிரியர்கள் முனைவர் எ. சுப்பராயலு, முனைவர் செ. இராசு ஆகிய இருவரையும் மனமாரப் பாராட்டுகிறேன். கட்டுரையாளர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

இந்த அரிய நூலைத் தமிழ்கூறும் நல்லுலகம் ஏற்றுப் போற்றுமாக!

தஞ்சாவூர்
23.3.2001

கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அறிமுகம்

இந்த நூல் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை ஆசிரியர், ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளையும், கல்வெட்டியல் துறைக் கருத்தரங்குகளில் பிற நிறுவன ஆராய்ச்சியாளர்களால் வழங்கப்பட்ட சில கட்டுரைகளையும் கொண்ட ஒரு தொகுப்பு ஆகும். தமிழ்க் கல்வெட்டியல் வளர்ச்சியைச் சுருக்கமாக எடுத்துச்சொல்லிக் கல்வெட்டுக்கள் வரலாற்றுக்கும், இலக்கிய ஆய்வுக்கும் எவ்வாறு துணை செய்யும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரைத் தொகுப்பின் நோக்கமாகும். எங்கள் துறையில் எவ்வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன என்பதையும் இந்நூல் வாயிலாக அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இத்தொகுப்பிலுள்ள முதல் மூன்று கட்டுரைகள் தமிழ்நாட்டில் தொல்பழங்காலம் முதற்கொண்டு எழுத்துக்களின் வளர்ச்சி வரலாற்றை விளக்குகின்றன. முதல் கட்டுரையில் பழைய மண்கலங்கள்மீது காணப்படும் குறியீடுகள் எழுத்துக்களின் முன்னோடியாகலாம் என்ற கருத்தை ஆராய்கிறது. அடுத்த இரு கட்டுரைகளும் கி.பி. 5 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் வழங்கிய தமிழ், வட்டெழுத்து ஆகிய இரு எழுத்து முறைகளின் வளர்ச்சியை எழுத்து அட்டவணைகள் மூலம் தெளிவாக்குகின்றன.

நான்காவது கட்டுரை தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் கடந்த நூறாண்டுகளாக எப்படிப் பல கல்வெட்டு ஆய்வாளர்களால் முயன்று கண்டுபிடிக்கப்பட்டன என்பதைக் தெரிவிக்கிறது. ஐந்தாம் கட்டுரை இத்தொகுப்பில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இது மகாவித்துவான் மு. இராகவையங்கார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1929இல் 'இலக்கிய சாஸன வழக்காறுகள்' என்ற தலைப்பில் செய்த சொற்பொழிவின் ஒரு சிறு பகுதியாகும். கல்வெட்டுக்களையும், இலக்கியங்களையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி வரலாற்று நோக்கில் ஆராயவேண்டும் என்ற அவர்தம் அறிவுரை இன்றும் மிகவும் போற்றப்படவேண்டிய ஒன்றாகும். ஆறாவது கட்டுரை தமிழ்க் கல்வெட்டுக்களின் வகைகளையும், தன்மைகளையும் கூறி வரலாற்றுக்கு அவற்றை எந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதைக் கூறுகிறது.

ஏழாம் கட்டுரை செப்பேட்டுப் பட்டயங்களின் பாடங்களைப் பதிப்பிப்பதில் உள்ள சிக்கல்களைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்க்கக் கையாளவேண்டிய அணுகுமுறைகளை விளக்குகிறது. அடுத்த கட்டுரை (8) பெருமன்னன் இராஜராஜன் வழக்கத்திற்குக் கொணர்ந்த மெய்க்கீர்த்தியின் இலக்கணத்தை விளக்கி கல்வெட்டாய்வில் மெய்க்கீர்த்திப் பாடங்களில் காணப்படும் பாடபேதங்களுக்கு உரிய இடம் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. ஒன்பதாம் கட்டுரை கல்லில் பொறிக்கப்பட்ட ஆவணங்களின் மூலங்களான ஓலையெழுத்துக்களைப் பற்றி விளக்குகிறது. இதனோடு தொடர்புடைய அடுத்த கட்டுரை (10) சோழர் காலத்தில் வழங்கிய பல்வேறுபட்ட ஆவணங்களின் வரையறைகளையும், குறிக்கோள்களையும் விளக்குகின்றது.

பதினோராம் கட்டுரை கல்வெட்டுப் பாடங்களில் வழங்கிவந்த சில அரிய சொற்களின் பொருள்களை வரலாற்று நோக்கில் விளக்குகிறது. அடுத்த மூன்று கட்டுரைகளும் (12, 13, 14) கல்வெட்டுக்களில் காணப்படும் ஆள் பெயர்கள் சமுதாய வரலாற்றைப் புரிந்துகொள்ள எப்படி உதவுகின்றன என்பதைக் காட்டுகின்றன. பதினைந்தாம் கட்டுரை கல்வெட்டில் காணப்படும் சமய ஒருமைப்பாட்டுச் செய்திகளை விரித்துக் கூறுகிறது.

அடுத்த கட்டுரை (16) சேலம் மாவட்டம் முழுவதும் உள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த அதியமான் வழிவந்த குறுநிலத் தலைவனாகிய விடுகாதழகிய பெருமாளின் வரலாற்றைப் பதினேழாம் கட்டுரை விவரிக்கிறது. பதினெட்டாம் கட்டுரை பாண்டி நாட்டில் கிடைத்த ஒரு அரிய தீர்த்தங்கரர் சிலையில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறது. இக்கல்வெட்டில் ஒருவருடைய தாய் வழி, தந்தை வழி ஆகிய இருவழி முன்னோர்களும் குறிப்பிடப்படுவது ஒரு சிறப்புச் செய்தி. முத்தரையர் போர்க்களங்களில் ஒன்றான அழுந்தியூர் எது என்பதை அடுத்த கட்டுரை (19) ஆராய்கிறது.

தொண்டித் துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டியர் கல்வெட்டின் வரலாற்றுச் சிறப்பை இருபதாம் கட்டுரை விளக்குகிறது. தமிழ்நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் இடையே நிலவிய கடல்வழித் தொடர்புக்கு ஒரு சிறந்த துறைமுகமாக

விளங்கிய நாகபட்டினம் பற்றிய கல்வெட்டு, செப்புப்பட்டயச் செய்திகளை அடுத்த கட்டுரை (21) விவரிக்கிறது. அடுத்த கட்டுரை (22) தஞ்சை மராட்டியர் காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் உள்ள வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது. இறுதிக் கட்டுரை (23) கல்வெட்டுக்களின் தொடர்ச்சியாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் காணப்படும் ஒலை ஆவணங்களின் தன்மைகளை விளக்கி இக்கால வரலாற்றுக்கு எவ்வாறு பயன்படும் என்பதை விளக்குகிறது.

பிற்சேர்க்கையில் இதுவரை தமிழ்க் கல்வெட்டுக்கள் தொடர்பாக ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ள மூலநூல்களும், சார்பு நூல்களும் பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நூல் இனிவரும் கல்வெட்டு, வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு ஒரு தூண்டுகோலாக அமையும் என்று நம்புகிறோம். இந்நூல் உருவாக ஒத்துழைப்பு நல்கிய கட்டுரையாசிரியர்கள் யாவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எ. சுப்பராயலு
செ. இராசு

பெயர்ச் சுருக்கம்

எஇ	-	எபிகிரா:பியா இண்டிகா (Epigraphia Indica)
கஆஅ	-	கல்வெட்டு ஆண்டறிக்கை (Annual Report on Epigraphy)
தெஇக	-	தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் (South Indian Inscriptions)
தெஇகோசா	-	தென்னிந்திய கோயில் சாஸநங்கள் (South Indian Temple Inscriptions)

பொருளடக்கம்

பக்கம்

1. பண்டைக் குறியீடுகளும் எழுத்துக்களும்
- கா. ராஜன் 1

2. பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்கள்
- வெ. வேதாசலம் 19

3. தமிழ்நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி
- இரா. கோவிந்தராஜ் 27

4. தமிழ்க் கல்வெட்டுக் கண்டுபிடிப்புக்கள்
- சொ. சாந்தலிங்கம் 42

5. கல்வெட்டுக்களும் இலக்கியமும்
- மு. இராகவையங்கார் 47

6. தமிழ் கல்வெட்டுக்களும் வரலாறும்
- எ. சுப்பராயலு 56

7. செப்பேடுகள் பதிப்பித்தலில் அணுகுமுறை
- செ. இராசு 65

8. மெய்க்கீர்த்தி
- செ. இராசு 74

9. ஓலையும் கல்வெட்டும்
- செ. இராசு 83

10. சோழர் காலத்திய ஆவணப் பதிவுமுறைகள்
- சு. இராசகோபால் 89

11. சில அரிய சொற்கள்
- எ. சுப்பராயலு 97

12. ஆள் பெயர்கள் காட்டும் சமுதாயம்
- எ. சுப்பராயலு 109

13. மாராயமும் மாராயனும்
- எ. சுப்பராயலு 118

14. வைத்திய குலம்
- எ. சுப்பராயலு 121

15. கல்வெட்டில் இந்து-முசுலிம் சமய ஒருமைப்பாடு
- செ. இராசு 126

16. சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள்
- அ. கிருட்டினன் 134

17. விடுகாதழகிய பெருமாள்
- செ. இராசு 154

18. எழுத்துப் பொறிப்புப் பெற்ற தீர்த்தங்கரர் திருமேனி
- வெ. வேதாசலம் 161

19. அழுந்தூரும் அழிந்தியூரும்
- செ. இராசு 170

20. தொண்டியில் ஒரு புதிய கல்வெட்டு
- செ. இராசு 175

21. வரலாற்று நோக்கில் நாகபட்டினம்
- பா. ஜெயக்குமார் 183

22. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும்
- செ. இராசு 193

23. ஓலை ஆவணங்களும் முத்திரை ஓலைகளும்
- செ. இராசு 202

இணைப்பு

தமிழ் கல்வெட்டுக்கள் தொடர்பான நூல்கள் 212

1

பண்டைக் குறியீடுகளும் எழுத்துக்களும்

கா. ராஜன்

இந்தியாவில் மிகப்பழம் எழுத்துக்கள் சுமார் கி.மு.2500ஐச் சேர்ந்த சிந்துசமவெளிப் பண்பாட்டின் வாழ்விடங்களில் கிட்டிய ஒருவகை சித்திர எழுத்துக்கள் ஆகும். இவை பெரும்பாலும் முத்திரைகளில் பொறிக்கப்பட்டவையாகும். ஆனால் இவ்வகை எழுத்துக்கள் சுமார் கி.மு.1500ல் சிந்துசமவெளிப்பண்பாடு சிதைந்தபோது வழக்கில் இருந்து மறைந்துவிட்டன. மீண்டும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் பிராமி எழுத்துக்கள் வழக்கில் வந்தன. சிந்துசமவெளிப் பண்பாட்டு எழுத்துக்களின் மறைவிற்கும் பிராமி எழுத்துக்களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட 1200 ஆண்டுகளில் தொடர்புடைய சான்றுகள் இல்லாமையால் பிராமி எழுத்துக்களின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை அறியமுடியவில்லை. கி.மு. 1500க்கும் கி.மு. 300க்கும் இடைப்பட்ட புதிய கற்காலம், செப்புக்காலங்களில் செய்த பானை ஓடுகளில் பெரும்பாலும் எழுத்துப் பொறிப்பு இல்லை. ஒருகால் இவர்கள் நிலையான பொருள்கள் ஆன முத்திரைகள், பானை ஓடுகள் முதலியவைகளில் எழுதும் வழக்கத்தைக் கைவிட்டு நிலையற்ற பனை ஓலைகள் போன்றவற்றில் எழுதியிருக்கக்கூடும். மீண்டும் கி.மு. 300ல் நிலையான பொருள்களான பானை ஓடுகள், கற்குகைகள், காசுகள் முத்திரைகள் இவைகளில் எழுதும் வழக்கம் வந்திருக்கவேண்டும்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் எழுத்துக்களின் தன்மை, வளர்ச்சி ஒரு நிலையான தன்மையினை

அடைந்தது. இவ்வெழுத்துக்கள் எங்ஙனம் தோன்றின என்பதைப் பற்றிய ஆய்வுகள் அண்மைக் காலத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய எழுத்துக்கள் (தமிழ் பிராமி எழுத்து) இயற்கையான கற்குகைகளிலும், காசுகளிலும் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்கள், காசுப் பொறிப்புக்கள், பானைப் பொறிப்புக்கள் முதலியவைகளில் உள்ள எழுத்துக்கள் நன்கு வளர்ச்சி அடைந்த தன்மையைக் கொண்டுள்ளவ. இந்த எழுத்துக்கள் பெரும்பாலும் குறியிடுகளிலிருந்து தோன்றியிருக்கக்கூடும் என அண்மைக் காலத்தில் சில தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குறியீடுகள் என்பது பெரும்பாலும் பானையின் வெளிப்புறத்திலோ அல்லது உட்புறத்திலோ பானை சுட்டபின் கீறப்பட்டவையாகும். இந்தியாவில் பானையின் மேல் பொறிக்கப்பட்ட இக் குறியீடுகளின் ஆய்வினை 1881ல் பிரான்பில் என்ற அறிஞர் தொடங்கி வைத்தார். அன்று முதல் இ.எச்.ஹண்டே, ஜி. யஜ்தானி, பி.கே.தாபர், பி.பி.லால் போன்ற மானிடவியல் வல்லுநர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள் இக்குறியீடுகளின் தோற்றம், வளர்ச்சி, குறியீடுகளுக்கு இடையிலான தொடர்பு ஆகியவற்றை அகழாய்வில் கிட்டிய பானைப் பொறிப்புக்கள், காசுப்பொறிப்புக்கள், முத்திரைகள் முதலியவைகளிலிருந்து ஆராய்ந்தனர். 1916ல் யஜ்தானி விரிந்த அளவில் இவ்வாய்வினை மேற்கொண்டு இறந்தவர்களுக்கு உருவாக்கிய ஈமச்சின்னங்களில் கிட்டிய பானைகளில் காணப்பட்ட பொறிப்புக்களை வகைப்படுத்தினார். அங்ஙனம் பெருங் கற்படைச் சின்னங்களில் 131 குறியீடுகள் கிடைத்துள்ளன.

பி.பி.லால் சிந்து சமவெளிப் பண்பாட்டைச் சார்ந்த சித்திர எழுத்துப் பொறிப்புகளையும் பெருங்கற்படைச் சின்னங்களிலும் அதன் வாழ்விடங்களிலும் கிடைத்த பானைப்பொறிப்புக்களில் காணப்படும் குறியீடுகளையும் ஒப்புநோக்கி இவ்விரு பண்பாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பினை தெளிவுபடுத்தினார். இவர் மேற்கூறிய குறியீடுகளை 61 குறியீடுகளாக வகைப்படுத்தினார். இதில் 47 குறியீடுகள் சிந்து

சமவெளிப் பண்பாட்டிலும், பெருங்கற்படைச் சின்னங்களிலும் காணப்படுவதாகக் கூறுகிறார். ஆயினும் இவர் தன் கருத்தை வலியுறுத்தும்போது எந்த ஒரு குறியீடும் ஒரு குறிப்பிட்ட பெருங்கற்படைச் சின்னத்தைச் சார்ந்ததன்று எனக் குறிப்பிட்டுள்ளார். இவரின் ஆய்வைத் தொடர்ந்து கருநாடக மாநிலத்தில் மேற்கொண்ட அகழாய்வு இடங்களான மாஸ்கி, பிரமகிரி, ஜடகனஉறள்ளி போன்ற இடங்களில் பல குறியீடுகளை அகழாய்வாளர் வெளிக்கொணர்ந்தனர். இதைத்தவிர டி. நரசிப்பூர் என்ற இடத்தில் அகழாய்வினை மேற்கொண்ட சேஷாத்திரி 186 குறியீடுகளை வெளிக்கொணர்ந்தார். எ. சுந்தரா என்ற தொல்லியலார் இப் பெருங்கற்படைச் சின்னங்களிலிருந்தும், வாழ்விடங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய குறியீடுகள் சிந்துசமவெளிப் பண்பாட்டுக்கும் பெருங்கற்படைப் பண்பாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் மத்திய பகுதியில் சுமார் கி.மு. 2000க்கும் 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் வழக்கில் இருந்த செம்புக் காலத்திலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டில் ஊடுருவியிருக்கவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். இது இங்கு மனங்கொளத்தக்கது. ஏனெனில் சிந்துசமவெளி நாகரிகத்தில் காணப்படும் எழுத்துக்கள் செம்புக் காலத்தில் தொடர்ந்து பெருங்கற்படைக் காலத்தில் பரவலாக வழங்கிய குறியீடுகளாக வளர்ச்சி பெற்றுப் பின்னர் அவை மேலும் வளர்ச்சிபெற்று பிராமி எழுத்துக்களாக உருவாகியிருக்கவேண்டும் என்ற கருத்துக்கு ஏற்புடையதாக அவர் கருத்து விளங்குகிறது. எஸ்.ஆர்.ராவ், எஸ்.எச்.ரித்தி போன்றோர் பிராமி எழுத்துவரிவடிவம் சிந்துசமவெளி எழுத்து வரிவடிவத்தின் வளர்ச்சியே எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேற்கூறிய பானை ஓட்டில் காணப்படும் குறியீடுகள் தமிழகத்தில் அகழ்ந்த பல்வேறு தொல்லியல் அகழாய்வுகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அண்மையில் அகழாய்வு செய்யப்பட்ட திருக்காம்புலியூர், உறையூர், அழகன்குளம், கரூர், வல்லம், கொடுமணல் போன்ற ஊர்களில் கிடைத்த குறியீடுகள் ஒன்றை ஒன்று ஒத்த நிலையில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.

இக்குறியீடுகள் பிராமி வரிவடிவம் தோன்றுதற்கு முன்பிருந்தே மக்களின் எண்ணங்களை ஒலிவடிவமாகவோ,

கருத்து வடிவமாகவோ வெளிப்படுத்தக்கூடிய கருவியாகப் பயன்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இவை ஓடுகளில் பயன்படுத்தப்பட்ட இடமும், நிலையும் பிராமி வரிவடிவத்துடன் ஒத்திருப்பதால் பிராமி எழுத்துக்குரிய முக்கியத்துவத்தை இக்குறியீடுகளும் பெற்றுத் திகழ்கின்றன என ஊகிக்கலாம்.

இருப்பினும் மேற்கூறிய ஆய்வுகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வராமைக்குக் காரணம் பண்பாடுகளிடையே காணப்படும் தொடர்பற்ற நிலை, குறியீடுகளின் எண்ணிக்கை, அவைகள் கிடைத்த இடம், சூழல் ஆகியவற்றை உணராமை, மேலும் புள்ளியியல் அளவிலான ஆய்வு செய்வதற்குரிய போதிய சான்றுகள் இல்லாமை ஆகியனவாகும். இருப்பினும் இக்குறியீடுகளின் தனித்தன்மையும், அவை வெளிப்படுத்தும் சாத்தியக் கூறுகளையும் உணர்ந்து அவ்வப்பொழுது கள ஆய்விலும், அகழாய்விலும், காசுகளிலும், கல்வெட்டுக்களிலும் கிட்டும் குறியீடுகள் கொண்டு இவ் ஆய்வு தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளது. மேலும் பிராமி எழுத்துக்கும் இக் குறியீடுகளுக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கக்கூடும் அல்லது இக்குறியீடுகளின் வளர்ச்சியே பிராமி எழுத்தின் வரிவடிவமாக இருக்கக்கூடும் என்ற கருத்து இவ்வாய்வினை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்லம், கொடுமணல் அகழாய்வுகளில் இக்குறியீடுகள் கணிசமான அளவில் கிடைத்துள்ளன.

வல்லம் அகழாய்வில் அகழ்ந்த குழிகளில் இக்குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் கீழ் அடுக்குகளிலும், பிராமி எழுத்து பொறித்தவை மேல் அடுக்குகளிலும் கிடைத்தன. மேலும் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள் கிடைக்கத் தொடங்கியவுடன் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் எண்ணிக்கை அளவில் குறைந்து காணப்படுவது ஓர் சிறப்பம்சமாகும். இந்தச் செய்தி பிராமி எழுத்து குறியீட்டினின்று வளர்ச்சியுற்றதா அல்லது இக்குறியீடுகள் பிராமி எழுத்து வந்தவுடன் வழக்கிலிருந்து மங்கிவிட்டனவா என்ற கேள்விகளை

எழுப்பியுள்ளது. எப்படியும் இவை எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக எழுத்துக்கள் தொடங்கு முன் விளங்கி இருக்கவேண்டும் என்று எண்ண நேரிடுகிறது.

அண்மையில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் காவிரி ஆற்றின் கிளையாறான நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொடுமணல் என்ற ஊரில் மேற்கொண்ட அகழாய்வில் இக் குறியீடுகளும், பிராமி எழுத்துப்பொறித்த பானை ஓடுகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சங்ககால நூலான பதிற்றுப்பத்தில் இவ்வூர் கொடுமணம் என்ற பெயரில் விளங்கியிருக்கிறது.

இவ்வூர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரிய கற்களைக் கொண்டு மணிகள் செய்யும் தொழிற்கூடமாகவும், இரும்புத்தாதிலிருந்து இரும்பை உருக்கி அவைகளைக் கொண்டு எஃகு உருவாக்கும் உலைக்கலங்களைக் கொண்ட தொழிற் கூடமாகவும் விளங்கியுள்ளது. இவ்வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஊரின் வாழ்விடங்களிலிருந்தும், பெருங்கற்படை ஈமச் சின்னங்களிலிருந்தும் கிடைத்த குறியீடுகள் சில ஐயப்பாடுகளைக் களைதற்கு உதவி புரிகின்றன. கொடுமணலில் கிடைத்த அனைத்துக் குறியீடுகளும், பிராமி எழுத்துக்களும் பானைகள் சுட்ட பின்னால் எழுதப்பட்டவை ஆகும். பெரும்பாலும் பானையின் வெளிப்புறத்தில் தோள் பகுதியில் அல்லது விளிம்பிற்குக் கீழ் அல்லது கழுத்துப் பகுதிக்குக் கீழ் எழுதப்பட்டவை ஆகும். அரிதாக, தட்டுகள் போன்ற பாத்திரங்களில் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்தின் அடியிலோ பொறிக்கப்பட்டன. கிடைத்த குறியீடுகள் மற்றும் பிராமி எழுத்துப்பொறித்த பானை ஓடுகளில் 90 சதவிகிதம் கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள். இவை பெரும்பாலும் குவளைகள் போன்ற மண்கலங்களின் பகுதிகளாகும்.

குறியீடுகள் எவற்றைக் குறித்தன, அல்லது எதனடிப்படையில் அவை எழுந்தன என்பதற்கு அண்மைக்கால ஆய்வுகள் கீழ்க்கண்ட மூன்று கருதுகோள்களை வைத்துள்ளன.

1. பானை செய்வோரின் சின்னம்
2. பானை உரிமையாளரின் சின்னம்
3. குலச் சின்னம்

பானை செய்வோரின் சின்னம்

ஒரு குறிப்பிட்ட அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகள் கிடைத்துள்ளன. இவை பானை செய்வோரின் சின்னமாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட ஊர் இருக்கைப்பகுதியில் ஒரே காலகட்டத்தில் பல பானை செய்வோர் இருப்பதாகக் கருதவேண்டும். இது நடைமுறையில் இருக்க வாய்ப்பில்லை. மேலும் இவை அனைத்தும் பானை சுட்டபின் கீறப்பட்டவை ஆகும். பானை செய்வோரின் சின்னமாக இருப்பின் அவர்கள் பானை சுடுவதற்கு முன்பே எளிதாகக் கீறியிருக்கலாம்.

பானை உரிமையாளரின் சின்னம்

பானை உரிமையாளரின் சின்னமாக இருப்பின் ஒரு உரிமையாளருக்கு ஒரு குறியீடு அல்லது ஒரு குறியீட்டுத் தொடர்தான் இருக்கமுடியும். மேலும் இக்குறியீடு பல்வேறிடங்களில் சமகாலத்தில் கிடைக்கின்றன. இவை தவிர ஒரு குறியீட்டுத் தொடரில் உள்ள பல்வேறு குறியீடுகள் தம்மில் இடம் மாறியும் கலந்தும் வருகின்றன. இதைக் காணும்பொழுது இவ்விளக்கம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

மேலும் பெருங்கற்படைச் சின்னங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பேர்களின் எலும்புக்கூடுகள் அல்லது அதன் எஞ்சிய பகுதிகள் காணப்படுகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட கற்படைச் சின்னத்தில் ஒரு குறிப்பிட்ட சின்னம் மட்டும் கிட்டியுள்ளதை வற்புறுத்தவேண்டும். பானை உரிமையாளரின் குறியீடு என எடுத்துக்கொண்டால் ஒன்றுக்கு மேற்பட்ட மனித எலும்புக் கூடுகளைக் கொண்ட ஓர் ஈமச் சின்னத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடுகள் பொதுவாகக் கிடைக்க வேண்டும். ஆனால் ஒரு குறியீடு மட்டுமே கிடைக்கிறது. உதாரணமாக கொடுமணலில் கீழ்க்கண்டவாறு கிடைத்துள்ளது.

பெருங்கற்படைச் சின்னம் எண் II

பெருங்கற்படைச் சின்னம் எண் III

இக் குறியீடுகள் அவ்வச்சின்னத்தில் படையல் பொருள்களாக வைக்கப்பட்ட அனைத்துப் பானைகளிலும் ஒரே சீராகக் கிடைத்துள்ளன. ஊரிருக்கைப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டு இவ்வீமக்குழிகளில் இட்ட பானை ஓடுகளில் அக் குறியீடுகள் காணப்படவில்லை. எனவே ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் மறைவிற்குப் பின் நினைவுச் சின்னங்களாக உருவாக்கப்பட்ட ஈமச்சின்னங்களில் படையல் பொருள்களாக வைப்பதற்குத் தருவிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட இப்பானைகளின் மீது ஒரே சமயத்தில் இக்குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

குலச்சின்னம்

மேற்கூறியவற்றை நோக்கும் பொழுது ஈமச் சின்னங்களில் உள்ள குறியீடுகள் ஒரு குடும்பத்தின் குறியீடுகளாக வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் ஒரு குடும்பம் என்பதைவிட ஒரு கூட்டத்தின் குறியீடாக எடுத்துக் கொண்டால் மிகவும் ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில் ஒரே வகையான குறியீடு பல சின்னங்களில் கிடைக்கின்றது. ஒரு குறுகிய கால கட்டத்தில் ஒரே குடும்பம் அத்துணை ஈமச்சின்னங்களை எழுப்புதற்கு வாய்ப்பு மிகக்குறைவு எனலாம். உதாரணமாகக் கொடுமணல் அகழாய்வில் கீழ்க்கண்ட குறியீடுகள் வெவ்வேறு ஈமச் சின்னங்களில் கிடைப்பதைக் காணலாம்.

பெருங்கற்படைச் சின்னம் எண்கள்
III, VII, VIII, X } 

பெருங்கற்படைச் சின்னம் எண்கள்
V, IX }

இன்னும் பல்வேறு இடங்களில் ஈமச்சின்னங்களை அகழ்ந்தால் இக்கருத்து மேலும் தெளிவுபெறும்.

ஊரிருக்கைப் பகுதிக் குறியீடுகள்

மேற்கூறிய ஈமச்சின்னங்களில் காணப்படும் தனிக் குறியீடுகளேயல்லாது ஊரிருக்கைப் பகுதிகளில் அகழாய்வு செய்தபோது கிடைத்த குறியீடுகளும் மிகவும் சிறப்பு வாய்ந்ததும் ஆய்வுக்கு உரியதும் ஆகும்.

அண்மையில் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த அனைத்துக் குறியீடுகளும் அவைகளின் தன்மைகளுக்கு ஏற்றவாறு இங்கு முறைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 1இல் உள்ள குறியீடுகள் ஓர் அடிப்படைக் குறியீட்டினைக் கொண்டு வளர்ச்சியுறுவதைக் காணலாம். அவற்றில் கடைசி இரண்டு குறியீடுகள் ஈமச் சின்னத்தைச் சார்ந்தவை ஆகும்.

அட்டவணை 2இல் உள்ள முதல் குறியீடு மற்றக் குறியீடுகளுடன் சேர்ந்து வருவதைக் காணலாம். குறிப்பாக இக்குறியீடு மற்றக் குறியீட்டுடன் சேரும்பொழுது அவற்றின் இறுதியில் மட்டுமே வருவதைக் காணலாம்.

அட்டவணை 3, 5 மற்றும் 6இல் உள்ள குறியீடுகள் சிறுமாற்றம் அல்லது வளர்ச்சி பெற்று வருவதைக் காணலாம்.

அட்டவணை 4இல் உள்ள குறியீடு வளர்ச்சி பெற்று மாற்றம் பெறுவதுடன் இது தமிழ் பிராமி எழுத்தாகிய 'ம' வுடன் தொடர்பு உடையதாக இருக்குமோ என்ற ஐயம் ஏற்படுத்துகிறது. இதைப்போன்ற குறியீடு கொற்கை அகழாய்விலும் கிடைத்துள்ளது.

அட்டவணை 7இல் சிறப்பம்சமாக 'கோவே' என்ற பிராமி எழுத்துப் பொறிப்புடன் சேர்ந்து ஒரு குறியீடு இறுதியில் வருவதைக் காணலாம். இக் 'கோவே' என்ற சொல் ஒரு தலைவனை அல்லது அரசனைக் குறிப்பதாக எடுத்துக் கொண்டால் இக்குறியீடு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் மேலே கூறியது போல இக்குறியீடு பெருங்கற்படைச் சின்னங்கள் III, VII, VIII மற்றும் X இல் வழங்கி வந்துள்ளன.

இச்சின்னங்களில் மிகவும் இன்றியமையாத தொல்பொருள்கள் கிடைத்தன என்பதையும் குறிப்பிடலாம். இதைப் போன்று வேறிரு குறியீடுகள் முறையே 'கோன்' என்ற பிராமி எழுத்துடனும், 'கனி' என்ற பிராமி எழுத்துடனும் கிடைத்துள்ளன (அட்டவணை-8). ஆயினும் இக்குறியீடுகள் இதுவரை அகழ்ந்த ஈமச் சின்னங்களில் கிடைக்கவில்லை.

அட்டவணை 8இல் உள்ள குறியீடுகளில் பெரும் பான்மையானவை பிராமி எழுத்துக்களுடன் தொடர்பு உடையவை. குறிப்பாக இவை சொல்லின் இறுதியில் வருவதைப் பார்க்கும்பொழுது இக்குறியீட்டிற்கெனச் சிறப்பானதொரு இடத்தை இவர்கள் அளித்திருப்பது புலப்படும்.

அட்டவணை 9இல் உள்ள முதல் குறியீட்டுத்தொடரில் இரண்டாவது குறியீடு நீங்கலாக மற்றவை கொங்கர் புளியங்குளம் பிராமிக் கல்வெட்டில் வாக்கியத்தின் இறுதியில் வருகின்றன. இது பொன்னின் அளவைக் குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இத்தொடரில் உள்ள முதல் குறியீடு அழகர்மலை பிராமிக் கல்வெட்டிலும் சிறிது மாற்றம் அல்லது வளர்ச்சி பெற்று விளங்குவதைக் காணலாம் (அட்டவணை 13). அட்டவணை 9 இல் உள்ள இரண்டாவது குறியீட்டுத்தொடர் கொடுமணலில் கிடைத்த வெள்ளி முத்திரை நாணயம் ஒன்றில் காணப்படுவதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

அட்டவணை 10இல் உள்ள குறியீடுகள் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பல்வேறு குறியீடுகளின் தொகுப்பு ஆகும்.

அண்மையில் இலங்கையில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அணைக்கோட்டை என்ற இடத்தில் பெருங்கற்படைச் சின்னம் ஒன்றை அகழ்ந்தபோது கிடைத்த முத்திரையில் மூன்று குறியீடுகளைக் கொண்ட தொடர் மேல் வரிசையிலும் அதனடியில் கீழ்வரிசையில் 'கோவேத' என்ற பிராமி எழுத்தும் காணப்படுதல் இவ்வாய்வில் ஒரு திருப்புமுனை எனலாம் (அட்டவணை 11). இந்திரபாலா அவர்களும், கே.வி.ரமேஷ் அவர்களும் இது அரசனைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். மேலே

காணப்படுகின்ற குறியீடுகள் கீழ்வரிசையில் காணப்படும் பிராமியுடன் கூடிய ஒத்த நிலையினைக் குறிக்கிறது என்பதன் மூலம் இக்குறியீடுகள் ஒலிவடிவமோ அல்லது கருத்து வடிவமோ பெற்றுத் திகழ்வதை அறியலாம்.

எழுத்துக்கள்

கொடுமணலில் வாழ்விடப்பகுதியில் மேற்கொண்ட அகழாய்வினை அதில் கிடைத்த பொருள்களின் தன்மை கொண்டு இரு காலகட்டங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

முதல் கால கட்டம் – கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. முதல் நூற்றாண்டு முடிய

இரண்டாம் கால கட்டம் – கி.பி. முதல் நூற்றாண்டுக்குப் பின்

இதில் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள் முதல் காலப்பகுதியில் மட்டுமே கிடைக்கின்றன. இவைகளும் குறியீடுகளைப் போன்றே பானை சுட்டபின் பெரும்பாலும் குவளைகள், தட்டுகள், சிறுபானைகள் ஆகியவற்றின் கழுத்துப்பகுதியில் கீறப்பட்டன.

இவ்வகை பிராமி எழுத்துப் பொறிப்புகள் சிதைந்த நிலையில் நூற்றுக்கணக்கில் கிடைத்த போதிலும் பெருங்கற்படைச் சின்னப் பகுதியில் இவை கிடைப்பதில்லை. இருப்பினும் அரிதாக 'விஸாகி' என்ற எழுத்துப் பொறிப்புடன் பெருங்கற்படைச் சின்னம் III ல் ஒரு பானை ஓடு கிடைத்தது.

இதுவும் பெருங்கற்படைச் சின்னங்களில் ஈமப் பொருள்களாக வைக்கப்பட்ட பானை ஓடு அல்ல. வாழ்விடத்திலிருந்து எடுத்துச் சென்று பெருங்கற்படைச் சின்னத்தில் போடப்பட்ட ஓடாகத் தெரிகிறது. வாழ்விடத்தில் கிடைத்த ஓடுகளில் பெரும் பான்மையானவை ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களே கொண்டு விளங்குகின்றன. சில பானை ஓடுகளே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டு விளங்குகின்றன. பொதுவாக இவை மிகுந்த கவனத்துடன் எழுதப்பட்டவையாகத்

தெரிகிறது. சில பானை ஓடுகளில் சில பிழைகளை எழுதியவரே திருத்தம் செய்ததாகத் தெரிகிறது.

எழுத்துக்களின் அமைப்பில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குக் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை எனலாம். எழுத்துக்களின் உருவ அளவில் மாற்றம் தென்படுவது பல்வேறுபட்ட மக்கள் எழுதியதால் தோன்றியதாகும். இதை க, ம, ண, ச போன்ற எழுத்துக்களைக் கொண்டு தெளிவாக உணரலாம். இவ் எழுத்துக்களின் அமைப்பு இயற்கையான குகைகளில் காணப்படுகின்ற பிராமி கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்களைப் போலவே காணப்படுகிறது. பொதுவாகவே பானை ஓடுகளில் வளைவு கோடுகளைப் போடுவதை விட நேர்கோடுகள் இடுவது எளிதாகவும் நேர்த்தியாகவும் இருக்கின்ற காரணத்தால், பெரும்பாலும் பானை ஓடுகளில் காணப்படும் எழுத்துக்கள் நேர்கோட்டு நிலையைப் பெற்று விளங்குகின்றன.

உயிர் எழுத்துக்களில் அ, ஆ, இ ஆகியனவே கிடைத்துள்ளன. 'அ' எழுத்து பெரும்பாலும் சொல்லின் முதலிலேயே வருகின்றது. 'ஆ' அரிதாக கிடைக்கின்றது. மேலும் 'அ' எழுத்தின் மையப்பகுதியில் சிறிய சமகோடு ஒன்று இடுவதால் 'அ' 'ஆ' விற்கும் அதிகமானதொரு வேறுபாட்டினைக் காணமுடிவதில்லை. இதேபோன்று மெய் எழுத்துக்களிலும் உயிரொலி கொண்ட எழுத்துக்களை வேறுபடுத்திக் காட்டுவதில்லை. இருப்பினும் ஒரு இடத்தில் மட்டும் 'ந' புள்ளியிடப்பட்டுக் காணப்படுகின்றது. இது வேண்டுமென்றால் 'நீ' என்ற எழுத்தைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். இதை அறுதியிட்டுக் கூற மேலும் சில சான்றுகள் தேவைப்படுகின்றன. அதே போன்று 'அ' 'ஆ' ஆகியவற்றினிடையே வேறுபாட்டினைக் காட்டுவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. சில இடங்களில் 'அ' என்ற எழுத்திற்கும் அதன் மேல் அல்லது மையப்பகுதியில் சமகோடு ஒன்று இடப்பட்டு உள்ளதால் அவ்வெழுத்துடைய சொல்லின் பொருளைக் கொண்டே அவ்வெழுத்தினை நெடில் எழுத்தாகவோ அல்லது குறில் எழுத்தாகவோ எடுத்துக்கொள்ள இயலும்.

மேலே கூறியதுபோல் உயிர் எழுத்துக்கள் அ, ஆ மற்றும் இ என்ற எழுத்துக்களே தனித்துக் கிடைத்த போதிலும் உயிர்மெய் குறியீடாக இ, ஈ, உ, ஊ, ஏ போன்ற எழுத்துக்கள் கிடைத்துள்ளன. உயிர்மெய் குறியீடான கி, கீ என்ற எழுத்துக்கள் வரும்போது சில சமயங்களில் 'க' எழுத்தில் வருகின்ற நேர்கோட்டில் இக்குறியீட்டினைக் குறிக்காது சமக்கோட்டில் இத்துணைக்கோட்டினை இட்டுள்ளனர்.

தமிழ்மொழிக்கே உரித்தான ழ, ள, ற, ன போன்ற எழுத்துக்களும் கிடைத்துள்ளன. இதில் 'ற' என்ற எழுத்து ஒரு முறை கிடைத்துள்ளது. அதுவும் 'து' என்ற எழுத்து போன்ற அமைப்பில் உள்ளது. 'ன' என்ற எழுத்து மிகுதியாக சொல்லின் இறுதியில் வருவதால் இது தனி மெய்யாக (ன்) விளங்குகிறது எனலாம். 'ள' என்ற எழுத்து இரு வடிவங்களைக் கொண்டு விளங்குகின்றது. இதில் ஒன்று இலங்கையில் கிடைக்கின்ற இதே எழுத்துப் போல உள்ளது.

வடமொழியில் உள்ளது போல க, ச, ட, த, ப ஆகியவற்றிற்கு வர்க்க எழுத்துக்கள் வழங்கவில்லை. கிரொலிகளில் 'ஸ' என்ற எழுத்து அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் ஶ என்ற எழுத்து ஒரே இடத்தில் மட்டுமே கிடைக்கிறது.

பொதுவாக இப் பானை ஓட்டு எழுத்துக்கள் ஆள் பெயர்களையே குறிப்பதாகக் கொள்ளலாம். பெரும்பான்மையான பெயர்கள் 'ன்' என்ற எழுத்துடனே முடிவடைகிறது. பொதுவாகத் தமிழில் ஆண்மகனைக் குறிக்கும் பெயர்கள் 'ன்' என்று முடிவடையும். இங்கு கிடைத்த கண்ணன், ஆதன், பண்ணன் போன்ற பெயர்கள் சங்கப் பெயர்களாகக் காட்சி அளிக்கின்றன. சில பெயர்கள் அந்தை என்று தொடங்குகிறது அல்லது முடிவடைகிறது. விஸாகி, வருணி, குவிரியன் போன்ற பெயர்கள் வட இந்தியப் பெயர்களாகத் தென்படுகின்றன. சில பெயர்கள் வடமொழி 'ஸ' வுடன் தொடங்குகிறது. பெயர்களை மட்டும் குறிக்காது வாணிக சங்கம் அல்லது குழுவைக் குறிக்கும் 'நிகம' என்ற சொல்லும் கிடைத்துள்ளது.

வருணி அகல், சம்பன் அகல் போன்ற சொற்றொடர்கள் வருணியுடைய அகல், சம்பனுடைய அகல் என்ற பொருள்

கொடுக்கும். ஆகவே இவ்வெழுத்துக்கள் கொண்ட மண்கலங்கள் சிலருடைய உரிமை என்பதைத் தெரிவிக்கின்றன எனலாம்.

மேற்கூறிய செய்திகளை நோக்கும்பொழுது பானை ஓட்டு எழுத்துக்கள் பலவகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று தெரியும். இவற்றை மேலும் விரிவாக ஆராய தமிழ்நாடு முழுவதும் களஆய்வும் அகழாய்வும் செய்வது மிக அவசியம்.

கொடுமணல் குறியீடுகள்



கொடுமணல் குறியீடுகள்



11



ஆனைக்கோட்டை

12



13



கொங்கர் புளியங்குளம்

அழகர்மலை

14



சாணூர்

15

MX I II

ஈமக்குழியில் கிடைத்த குறியீடுகள்

III, VI, VIII, X, XII, XIII V, IX IX

16



கொற்கை

கொடுமணலில் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள்



கொடுமணலில் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள்



2

பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்கள்

வெ. வேதாசலம்

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கள் தமிழக வரலாற்றிலும் தமிழ்நாட்டுக் கல்வெட்டு எழுத்துக்களின் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று விளங்கும் இன்றியமையாத கல்வெட்டுக்களாகும். சிவகங்கை மாவட்டத்துத் திருப்பத்தூர் வட்டத்தில் பூலாங்குறிச்சி அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள மதகுமலைச் சரிவின் அடிவாரத்தில் தமிழ்பிராமியின் பிற்கால வடிவத்தில் அமைந்த மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் நடுவிலுள்ள கல்வெட்டு மட்டும் இன்னும் முழுமையாகப் படிக்க இயலவில்லை. படிக்கப்பெற்ற ஏனைய இரண்டு கல்வெட்டுக்களும் அடுத்தடுத்து ஆண்ட சேந்தன், சேந்தன்கூற்றன் என்ற மன்னர்களின் காலத்தினைச் சார்ந்தவையாகும். இவை இரண்டும் அறக்கொடைகளைப் பற்றிப் பேசுவனவாகும். இவ்விரு கல்வெட்டுக்களில் சேந்தன்கூற்றன் காலக் கல்வெட்டினை எழுதியவன் நரியங்காரி என்று அக்கல்வெட்டிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கல்வெட்டுக்களின் எழுத்துக்களை ஆய்வு செய்ததன் மூலம் பண்டைய தமிழிலக்கிய காலத்திற்கும் பல்லவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த தமிழ்பிராமி, வட்டெழுத்து, தமிழ் ஆகிய எழுத்துக்களின் வரிவடிவங்களையும் அவை வளர்ந்து நிற்கும் முறையினையும் ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது. சங்ககாலத்திற்குப் பின்னர் அதிக அளவில் எழுத்துக்களின்

வரிவடிவங்களைத் தரும் முதற் கல்வெட்டுக்கள் இவையெனலாம். இவற்றில் காணும் உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள். ஆகியவற்றின் வரிவடிவங்கள் ஆய்வுசெய்யப்பெற்று இங்குப் பட்டியலிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

(பார்க்க : இணைப்புப் பட்டியல்கள் - 1, 2, 3), மேலும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்கள் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் காலவரிசையில் எந்த இடத்தைப் பெற்று நிற்கின்றது என்பதையறிய பிற ஊர்களின் கல்வெட்டுக்களோடு பூலாங்குறிச்சிக் கல்வெட்டு ஒப்பிடப்பெற்று அவற்றோடு காலவரிசைப்படி பட்டியலிட்டுக் (பட்டியல் 2) காட்டப் பெற்றுள்ளது.

உயிரெழுத்துக்கள்

உயிரெழுத்துக்களில் - அ, ஆ, இ, உ, எ, ஒ ஆகியவற்றின் வரிவடிவங்கள் இக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. (பட்டியல் - 1)

ஈ, ஊ, ஏ, ஓ - ஆகிய உயிர்நெடில் வடிவங்கள் காணப்படவில்லை. இவ்வெழுத்துக்கள் இக்கல்வெட்டுக்களில் வரும்சொற்களில் பயிலப்பெறாமையால் அவற்றின் வடிவங்களை இங்குக் காணமுடியவில்லை. ஆகாரத்திற்கு வரிவடிவம் இருந்திருப்பது போன்று பிறவற்றிற்கும் வரிவடிவங்கள் இக்காலத்தில் வழக்கில் இருந்திருக்கலாம். சங்க காலத்திற்குப் பிறகு தொடர்ந்து இக்கல்வெட்டுக்களிலும் ஐகாரத்திற்கு வரிவடிவம் கிடைக்கப்பெறவில்லை. பூலாங்குறிச்சிக் கல்வெட்டிற்கு முன்பு இகரம், ஈகாரம் இரண்டும் வேறுபாடு இல்லாத வகையில் ஒரே வரிவடிவில் விரவி வந்தன. அவற்றில் இகரத்திற்குத் தனி வரிவடிவம் மூன்றுகோடுகளின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றிருப்பதைப் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் காணமுடிகின்றது. இதுவே பிற்காலத் தமிழ், வட்டெழுத்துக்களின் இகர வரிவடிவத்திற்கு முன்னோடியாக

விளங்குகின்றது. அறச்சலூர்க் கல்வெட்டினைப் போன்றே எகரம் வட்டமாக நடுவில் புள்ளியிட்டு எழுதப் பெற்றுள்ளது. மீனாட்சிபுரம் கல்வெட்டில் காணும் ஒகரத்தின் வரிவடிவவளர்ச்சியினைப். பக்கவாட்டில் புதிதாக நீட்டப்பெற்ற கோட்டுடனும் சற்று வளைவுடனும் காணமுடிகின்றது.

மெய்யெழுத்துக்கள்

தமிழில் அமைந்த பதினெட்டு மெய்யெழுத்துக்களின் வரிவடிவங்களையும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் காணமுடிகின்றது. இவற்றில் ழகரமெய் (புள்ளியோடு கூடிய மெய்) மட்டும் இக்கல்வெட்டுக்களில் வரவில்லை. மற்ற மெய்யெழுத்துக்கள் அனைத்தும் புள்ளியிட்டு எழுதப் பெற்றுள்ளன.

உயிர்மெய் வரிவடிவங்கள் நன்கு அறியும் வகையில் தெளிவாக எழுதப்பெற்றுள்ளன. ஒகரம் ஏறிய 'கொ, தொ' ஆகிய இரண்டு குறில்களும் அவை குறிலெழுத்துக்கள் என்று அறியும் வகையில் தலைக்கு மேலே புள்ளியிட்டு எழுதப்பெற்றுள்ளன. எனவே மெய்யெழுத்தினை வேறுபடுத்தி அறியும் வகையில் மெய்யிற்குப் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் உயிர்மெய் யெழுத்துக்களையும் ஓரளவு நன்கறியும் வகையில் இக்காலத்தில் விரிவுபடுத்தப்பெற்றுள்ளது என்பதையும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்கள் உணர்த்துகின்றன. ஆகாரம் ஏறிய மெய் பக்கவாட்டில் சிறிய கோடிட்டுக் காட்டும் பழைய மரபைக் கொண்டு விளங்குகிறது. இகரம் ஏறிய மெய்யில் மேல்நோக்கி இடப்பெறும் சிறிய கோடு இவ்வெழுத்துக்களில் சுழித்து விடப்பெற்றுள்ளது. ஊகாரம் மெய்யெழுத்துக்களோடு சேரும்போது (எ.கா: தூ,யூ,லூ,நூ) தனிவரிவடிவம் உருவாக்கப் பெற்றுள்ளது (பட்டியல் மூன்று). ஐகாரம் ஏறிய மெய் மெய்யெழுத்தின் இடப்பக்கத்தில் 'உ' போன்ற வரிவடிவம் சேர்த்தெழுதப்பெற்று உருவாக்கப்பெற்றுள்ளது.

புள்ளியிடல்

மெய்யெழுத்துக்களின் வேறுபாடுகளை அறியும் வகையில் தவறாது அவற்றிற்குப் புள்ளியிட்டு எழுதும் வழக்கம்

பூலாங்குறிச்சிக்கல்வெட்டுக்களின்சிறப்புத்தன்மையாக இருக்கின்றது. தமிழ்நாட்டில் மெய்வடிவங்களுக்குப் புள்ளியிட்டு எழுதும் முறை தமிழ்பிராமி வரிவடிவங்களில் கி.பி. முதல் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஏற்பட்டது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் அரிக்கமேடு பானையோட்டு எழுத்துக்களின் காலத்தில் (கி.பி. 200) இவ்வழக்கம் தொடங்கியது என்று கருதுவர். ஆனால் இவ்வழக்கம் அதற்கும் சற்று முன்பாக முதல் நூற்றாண்டிலேயே தோன்றியிருக்கவேண்டும் என்பதை ஆனைமலைத் தமிழ்பிராமிக் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. ஆனால் தொடர்ந்து முதலிரு நூற்றாண்டுகளில் புள்ளியிட்டெழுதுதல் அருகிய அளவிலேயே வழக்கிலிருந்தது. அதற்குப்பின் பரவலாகப் பயன் படுத்தப்பட்டது போல் தெரிகிறது. புள்ளியிட்டு எழுதும் வழக்கம் பெருவழக்காக இருந்த காலத்திலேயே பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்கள் எழுதப்பெற்றிருக்கவேண்டும்.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் பூலாங்குறிச்சியின் இடம்

தமிழ்நாட்டு பிராமியின் வரிவடிவங்களில் மீனாட்சிபுரம் (மாங்குளம்), ஆனைமலை, திருப்பரங்குன்றம், புகழூர், அறச்சலூர், அம்மன்கோயில்பட்டி, இருளப்பட்டி, பிள்ளையார்பட்டி ஆகிய ஊர்களில் அமைந்த கல்வெட்டு எழுத்துக்களோடு பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்களையும் கால-வரிவடிவ முறையில் ஒப்பிட்டுப் பட்டியலிட்டுப் பார்க்கும்போது (பார்க்க பட்டியல் 4) அறச்சலூர், அம்மன்கோயில்பட்டிக் கல்வெட்டுக்களின் காலத்திற்கும் இருளப்பட்டி நடுகல் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தியன அவை எனத் துணியலாம். ஏற்கனவே அறச்சலூர், அம்மன்கோயில்பட்டி கல்வெட்டுக்கள் கி.பி.3-4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கணித்துக் கூறியுள்ளனர். இப்போதைக்கு பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களை 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவையெனலாம்.

வட்டெழுத்து - தமிழ்எழுத்துக்களின் வளர்ச்சி

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் பிராமியிலிருந்து தமிழ், வட்டெழுத்துக்கள் தோன்றி வளர்ந்து

கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பெற்றவையாகும். இதனால் அவற்றின் தொன்மையான வரிவடிவங்களை பூலாங்குறிச்சிக்கல்வெட்டில் காணமுடிகின்றது. வட்டெழுத்துக்களின் சாயலை அதிகம் காணமுடிகின்றது. பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களுக்கு முன்னர்த் தமிழ்நாட்டில் தோற்றம்பெற்று வட்டெழுத்து விரைவாகப் பல இடங்களுக்கும் பரவிக் கொண்டிருந்த காலத்தில் எழுதப் பெற்றுள்ளது. இருளப்பட்டி நடுகல் கல்வெட்டு, சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன் ஆகியோரது நடுகல் கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் வட்டெழுத்துக்கள் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் காணப்படும் வரிவடிவங்களின் தொடர்ச்சியாகக் காணமுடிகின்றது. இதே போன்று பாண்டியநாட்டுப் பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு, சிங்கம்பட்டி நடுகல் கல்வெட்டு, பாண்டியன் நெடுமாறனின் ஏனாதி மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டுக்கள், குலசேகரநல்லூர் கல்வெட்டு ஆகியவற்றிலும் பூலாங்குறிச்சி வரிவடிவத்தின் தொடர்ச்சியைக் காணமுடிகின்றது.

பூலாங்குறிச்சி கல்வெட்டு

1. உயிரெழுத்துக்கள்



2. மெய்யெழுத்துக்கள்



3. உயிர்மெய்யெழுத்துக்கள்



தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் பூலாங்குறிச்சியின இடம்



துணைபுரிந்தவை

1. Iravatham Mahadevan., Tamil Brahmi Inscriptions, State Dept. of Archaeology, Madras, 1970.

2. Iravatham Mahadevan., 'Corpus of the Tamil Brahmi Inscription' Seminar on Inscriptionsed. ed, R. Nagaswamy, Books (India) Private Ltd., Madras, 1966. pp. 56-74.

3. ஐராவதம் மகாதேவன், 'சுனை தந்த தமிழ்', தினமணிகதிர், தீபாவளி மலர் - *1981* - பக்கம். *149* - *150.*

4. R. Nagaswamy., 'An Outstanding Epigraphical Discovery in Tamil Nadu', Proceedings of the fifth International Conference Seminar of Tamil Studies Vol. 1 Page - 67-71.

5. Damilica, State Dept. of Archaeology, Madras, 1970.

6. எ. சுப்பராயலு, பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கள் - ஒரு மறு பார்வை, மதுரை வரலாற்றுக்கழகக் கட்டுரை, *18.7.83.*

7. N. Sethuraman., 'Madurai through the ages', Paper presented at Palani Andavar College, 19-8-83.

8. Natana - Kasinathan., Pulankuricci Inscription - a relook, தொல்லியல் கருத்தரங்கு, அ. இராசேந்திரன் (பதி.ஆ), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை. *1983* - பக்கம். *156-165.*

9. நடன காசிநாதன் இக் கல்வெட்டின் காலத்தை கி.பி.3ஆம் நூற்றாண்டு எனக் கருதுகிறார்.

3

தமிழ்நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி

இரா. கோவிந்தராஜ்

இன்று இந்திய நாட்டில் வழங்கப்படும் எழுத்துக்களின் வரிவடிவங்கள் பிராமி எழுத்துக்களிலிருந்து பெறப் பட்டவைகளாகக் கருதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களும் பிராமியிலிருந்து பெறப்பட்ட எழுத்துக்கள்தாம் என்பதற்குச் சான்றாகக் தமிழகத்திலுள்ள இயற்கைக் குகைக் கல்வெட்டுக்களாலும், அகழாய்வின் போது கிடைத்த பானை ஓடுகளில் கிறப்பட்ட எழுத்துக்களாலும் விளங்குகின்றன. எனினும், வட இந்தியாவில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் தமிழ்நாட்டில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. வட இந்திய பிராமியில் உள்ள வர்க்க எழுத்துக்கள் தமிழ்பிராமி எழுத்துக்களில் இல்லை. இதைத்தவிர வடஇந்திய பிராமி எழுத்துகளில் இல்லாத ழ, ள, ற, ன எழுத்துக்கள் இங்குக் கிடைக்கின்றன. இதைத் தமிழ்-பிராமி என்றும் தமிழி என்றும் அழைக்கின்றனர்.

தமிழ்நாட்டில் பிராமிக்குப்பின் மூன்று வகை எழுத்துக்கள் வழங்கிவந்துள்ளன. இவை வட்டெழுத்து, தமிழ், கிரந்த எழுத்துக்களாகும். இதில் கிரந்தம் சமஸ்கிருத மொழியையும் வட்டெழுத்தும் தமிழெழுத்தும் தமிழ் மொழியையும் எழுதப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் பிராமி எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி பெறுவதைக் கி.பி. 3, 4ஆம் நூற்றாண்டையொட்டிய அறச்சலூர்க் கல்வெட்டும் (பெரியார் மாவட்டம்) 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சி

கல்வெட்டும் (பசும்பொன் மாவட்டம்) உணர்த்துகின்றன. தனித்தன்மையுடன் விளங்கும் தொன்மைக்கால வட்டெழுத்துக்கள் தருமபுரி மாவட்ட நடுகல் கல்வெட்டிலும், வடார்க்காடு மாவட்டச் செங்கம் வட்டத்தில் கிடைத்துள்ள பல நடுகல் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இவைகளில் பல்லவ மன்னர் சிம்மவர்மன், முதலாம் மகேந்திரவர்மன் கால நடுகல் கல்வெட்டுக்களும் அடங்கும்.

பிராமியிலிருந்து வளர்ச்சியுற்ற தமிழ் எழுத்துக்கள் செங்கல்பட்டு மாவட்ட வல்லம் (610-630), திருக்கழுக்குன்றம் (650) ஆகிய சில இடங்களில் மட்டும் கிடைக்கின்றன. இதைவிட வளர்ச்சியுற்ற தமிழ் எழுத்துக்களைக் கூரம் செப்பேடுகளில் (669-691) முழுமையாகக் காணமுடிகிறது. (அட்டவணை II-IX,3). இச்செப்பேடுகளில் முன் பகுதி கிரந்த எழுத்துக்களிலும், பின்பகுதி தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன. சிம்மவர்ம பல்லவனின் பள்ளன்கோயில் செப்பேடுகளில் செய்தி கி.பி. 550 ஆண்டையொட்டியதாக இருந்தாலும் இவற்றில் காணப்படும் வரி வடிவங்கள் (அட்டவணை II-IX,4) 8ஆம் நூற்றாண்டின் பின்பகுதியைச் சேர்ந்ததாக இருக்கின்றன. இவ்வெழுத்துக் களைக் கூரம் செப்பேட்டு எழுத்துக்களோடும் கி.பி. 729ஆம் ஆண்டைச் சேர்ந்த பட்டத்தாள்மங்கலம் செப்பேட்டெழுத்துக் களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இது புலனாகும்.

மேற்கூறப்பட்ட தமிழ் மற்றும் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களை வைத்துப் பார்க்கும்பொழுது தமிழ் எழுத்துக்களுக்கு வட்டெழுத்துக்களைப்போல் படிப்படியான வளர்ச்சியுடன் கூடிய சான்றுகள் கிடைக்கவில்லை. கி.பி. 6,7ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து, தமிழ், கிரந்த எழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டுக்கள் அனைத்தும் பல்லவ மன்னர்கள் ஆண்ட தொண்டை மண்டலம் பகுதியில் கிடைக்கின்றன (அட்டவணை I). பல்லவர்களின் தலைநகரான காஞ்சிபுரத்தைத் தன்னகத்தே கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று கூடக் கிடைக்கப் பெறாமையாலும் தொண்டை மண்டலப் பகுதியில் பிற பகுதிகளான தருமபுரி, வடார்க்காடு மாவட்டங்களில் இக்காலகட்டத்தில் இவை அதிகமாகக் கிடைப்பதாலும்

இவ்வரிவடிவங்கள் பல்லவர்களுக்கு முன்பிருந்தே தமிழ் மக்களால் வழங்கப்பட்டன என்பது புலனாகிறது. பல்லவர்கள் தமிழ் கிரந்த எழுத்துக்களைப் போற்றியதால் 6,7ஆம் நூற்றாண்டுகளில் இவ்வரிவடிவங்களைக் கொண்ட கல்வெட்டுக்கள் செங்கல்பட்டு (24), வடார்க்காடு (4), தென்னார்க்காடு (6), திருச்சிராப்பள்ளி (7) ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து இம்மூவகை வரி வடிவங்களும் பரவலாக எல்லா இடங்களிலும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. மேலும் பாண்டிமண்டலப் பகுதியில் இதுவரை அவ்வளவாக வழங்கப்படாத வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் மிகவும் வழக்கத்துக்கு வருகின்றன.

வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் கிடைக்கவில்லை. இப்பகுதியில் தமிழ்க் கல்வெட்டுக்களும் குறிப்பிடும் அளவுக்குக் காணப்படவில்லை. கி.பி. 850 முதல் சோழர்கள் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கிய பின்னரே இப்பகுதியில் கல்வெட்டுக்கள் அதிக அளவில் உண்டாயின. சோழர் தொண்டை மண்டலத்தில் ஆதிக்கம் செலுத்தி அங்குப் பல்லவர்கள் போற்றிய தமிழ் கிரந்த வரிவடிவங்களைத் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்திற்குக் கொண்டு வந்தனர் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

இதுவரை வட்டாரங்களின் அடிப்படையில் வட்டெழுத்து, தமிழ் மற்றும் கிரந்தம் ஆகிய வரிவடிவக் கல்வெட்டுக்களின் பரிமாணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. பிராமியிலிருந்து வட்டெழுத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை தொண்டை மண்டலத்தில் காண்கிறோம். அதே பகுதியில் 7-ஆம் நூற்றாண்டளவில்தான் தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைப்பதால் தமிழெழுத்துக்களையும் வட்டெழுத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இத் தமிழ்க் கல்வெட்டுக்களில் 'ம' மற்றும் 'வி' எழுத்துக்கள் (அட்டவணை X) வட்டெழுத்துக்களின் சாயலைப் பெற்றுள்ளன. அதே போன்று திருக்கழுக்குன்றம் கல்வெட்டிலும் 'மு' எழுத்தின் மெய் வட்டெழுத்தைப் போன்று உள்ளது. மலையடிக்குறிச்சி (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டுக்களில் ச, சி, ப, ம, மு, ரு, வ, வி எழுத்துக்கள் (அட்டவணை X, 9) வட்டெழுத்துக்களைப் போன்றுள்ளதையும்

காணலாம். 7ஆம் நூற்றாண்டு வரை கிடைத்த வட்டெழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது க, ங, ச, ஞ, ட, ய, ற, ல, ள, ழ, ற ஆகிய எழுத்துக்கள் ஒன்றாகவே உள்ளன. ஆனால் உயிர்மெய்களுக்கு இடப்பெறும் குறிகள் மட்டும் இருவகை எழுத்துக்களிலும் வேறுபட்டு வளர்ந்து வந்துள்ளன. (அட்டவணை X). இவைகளை வைத்துப் பார்க்கும் பொழுது வட்டெழுத்துக்கள் இப்பகுதியில் பரவலாக வழங்கப்பட்ட காலத்தில் தோன்றிய இத்தமிழ்க்கல்வெட்டுக்களில் ஒரு சில எழுத்துக்களில் வட்டெழுத்தின் சாயல் காணப்படுவதால் வட்டெழுத்தின் தாக்கம் இவைகளின் மீது காணப்படுகிறது என்பதை அறியலாம்.

இவ்வாறு தோன்றிய தமிழ் வரிவடிவங்களின் வளர்ச்சி கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை (அட்டவணை II-IX) மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வட்டவணைகள் கீழ்க்கண்ட கல்வெட்டு எழுத்துக்களைக் கொண்டு செய்யப்பட்டுள்ளன.

எண் : 1,2 செங்கல்பட்டு மாவட்டம் வல்லம் (தெஇக 2:72) மற்றும் திருக்கழுக்குன்றம் (தெஇகோ, ப.1560) கல்வெட்டுக்களான இவை 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுக்களாகும். இவைகள்தாம் பிராமிக்குப் பின் தமிழ் எழுத்தின் தோற்றத்தை விளக்கும் கல்வெட்டுக்களில் முதன்மை வகிக்கின்றன.

எண் : 3 கூரம் செப்பேடுகளில் முதலாம் பரமேசுவர வர்மனின் காலத்திய (669-691) வரிவடிவங்களைக் காணலாம் (தெஇக. 1 : 151).

எண் : 4 பள்ளன்கோயில் செப்பேடு எழுத்துக்களான இவை சிம்மவர்மனின் காலத்திய (சுமார் கி.பி. 550) செய்தியைக் கொண்டிருந்தாலும் இதில் கண்டுள்ள கிரந்த, தமிழ் வரிவடிவங்கள் 8-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்ததாகத்தான் உள்ளன.

எண் : 5 பட்டத்தாள்மங்கலம் (தஞ்சை மாவட்டம்) செப்பேடு இரண்டாம் நந்திவிக்ரமவர்மனின் காலத்தைச் (கி.பி.792) சேர்ந்ததாகும் (எஇ. 18 : 14).

எண் : 6 தஞ்சை மாவட்டம், திருப்பூந்துருத்தி; (கி.பி. 853) (தெஇக 19 : 74).

எண் : 7 செங்கல்பட்டு மாவட்டம், திருவொற்றியூர் (கி.பி.887) (தெஇக. 12 : 70)

எண் : 8 உத்தமசோழனின் சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் (கி.பி.986) (தெஇக 3 : 128).

எண் : 9 ராஜராஜனின் லெய்டன் செப்பேடுகள் (1006) (எஇ 22 : 34).

இவ்வட்டவணைகளிலிருந்து சுமார் 400 ஆண்டுகால தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியைக் கீழ்வருமாறு விவரிக்கலாம்.

உயிர்க்குறில் மற்றும் நெடில் குறிகளுடன் கூடிய மெய்யெழுத்துக்களின் வளர்ச்சியை நோக்கும்பொழுது அக்குறிகள் தொடக்ககாலக் கல்வெட்டுக்களில் எழுத்துடன் சேர்த்தே எழுதப்பட்டுள்ளன. பின்னர் இவை சிறிது சிறிதாக மெய்யிடமிருந்து விலகித் தனியாக நிற்கின்றன.

வல்லம் கல்வெட்டில் ' கி ' கரத்தைக் குறிக்கும் குறியானது எழுத்தின் மீது வலப்புறம் தொடங்கி இடப்புறம் வளைத்து எழுதப்பட்டுள்ளது. பின் அவை எழுத்தின் மீது படாமல் தனியாக நிற்பதை ராஜராஜன் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. இறுதியில் இடப்புறம் எழுத்துடன் தொடங்கி இன்றைய நிலையைப் பெறுகிறது. ஈகாரத்தைக் குறிக்கும் குறி வளைவுக் கோட்டின் இடது புறத்தில் எழுதப்பட்டுள்ளது. இது பட்டத்தாள்மங்கலம் செப்பேட்டுக்காலம் வரை காணப்படுகிறது. பின்னர் லெய்டன் செப்பேட்டில் இது வலப்புறம் சுழித்து எழுதப்பட்டுள்ளது.

மெய்யுடன் கூடிய ' ஏ ' காரத்தையும் ' ஓ ' காரத்தையும் குறிக்கத் தனித்தனிக் குறிகள் இடப்படவில்லை. ' எ ' கர ' ஒ ' கரக் குறிகளே இடத்துக்கேற்ப மாற்றி நெடிலாகப் படிக்க வேண்டியுள்ளது.

வல்லம் கல்வெட்டு, கூரம், பள்ளன்கோயில் மற்றும் பட்டத்தாள்மங்கலம் செப்பேடுகளில் காணப்படும் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளிகள் இடப்பெற்றுள்ளன. ஆனால் இவைகளில் புள்ளிகள் இடப்பெறாத மெய்யெழுத்துக்களும் சில காணப்படுகின்றன. அரசு ஆணை தாங்கிய இச்செப்பேடுகளில் எல்லா மெய்களுக்கும் புள்ளிகளை எளிதாகச் செதுக்கியிருக்கலாம். அவை விடுபட்டுப் போனதற்கான வேறு காரணங்கள் இல்லாதநிலையில் புள்ளியிடும் வழக்கத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை என்றே கருதத் தோன்றுகிறது. இதற்குப்பின் வரும் கல்வெட்டு மற்றும் செப்புச் சாசனங்களில் முற்றிலும் புள்ளியில்லா மெய்யெழுத்து வடிவங்களைப் பார்க்கிறோம். சாசனங்கள் முதலில் ஓலைகளில் எழுதப்பட்டு, பின் அவைகள் அழியாவண்ணம் நிலைபெற்றிருக்க கல்வெட்டு மற்றும் செப்புப்பட்டயங்களில் செதுக்கப்பட்டன. ஓலைகளில் புள்ளிகள் இடும்பொழுது ஓலைகள் பழுதடைந்துவிடுவதால் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடாமல் எழுதப்படுவது வழக்கம். ஆகவே ஓலைகளில் காணப்படும் செய்திகளை உண்மைப் படிவமாக அவைகள் அழியாவண்ணம் கல்வெட்டுக்களிலும் செப்புப் பட்டயங்களிலும் செதுக்கும் பொழுது அவ்வாறே புள்ளியிடாமல் எழுதியிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

தொடக்க நிலையில் 'ச' (அட்டவணை IV), 'த' (அட்டவணை VI), 'ந', 'ர' எழுத்துக்களின் மேலே சிறிய படுக்கைக்கோடு இடப்பட்டிருக்கிறது. இவை சிறிது சிறிதாக இடது பக்கம் நீண்டு கீழ்நோக்கி வளைந்து எழுத்தின் இடதுபக்கக் கோடாக எழுதப்படுவதை ராஜராஜசோழனின் லெய்டன் செப்பேடுகளில் (அட்டவணை IV, VI, 9) காணலாம். இதே போன்று எழுத்தின் மற்ற உறுப்புக்களும் வளர்ச்சியுறுகின்றன. 'க' எழுத்தில் செங்குத்துக் கோட்டின் மீது இடப்படும் படுக்கைக்கோடு இருபக்கமும் கீழ் நோக்கிச் சற்று வளைந்திருப்பதைக் காணலாம் (அட்டவணை III). இதைத்தவிர லெய்டன் செப்பேட்டில் செங்குத்துக்கோட்டின் அடிப்பகுதி இடதுபக்கம் வளைந்து இன்றுள்ள உருவ வளர்ச்சிக்கு வித்திடுகிறது. தொடக்க நிலையில் 'ச' எழுத்தின் இடது பக்கம்

வளைத்து எழுதப்பட்டுள்ள கோடு செங்குத்துக் கோட்டிற்கு இடைவெளிவிட்டு நின்றுவிடுகிறது (அட்டவணை IV). பின் அது நீண்டு செங்குத்துக் கோட்டை நோக்கி வளர்ந்திருப்பதைப் பிற்காலக் கல்வெட்டுக்களில் காணலாம். அடுத்து 'த', 'ந', 'ழ', 'ற' எழுத்துக்களில் எழுத்தின் முடிவில் கீழ்நோக்கி இழுக்கப்படும் கோடு கூரம் செப்பேடு வரை வளர்ச்சியின்றிக் காணப்படுகிறது. பின்னர் வரும் இவ்வெழுத்துக்களில் மேலும் கீழ்நோக்கி இடப்பக்கம் நீட்டி எழுதப்பட்டுள்ளது. 'ண' (அட்டவணை X), 'ன' (அட்டவணை IX), ல, ள, எழுத்துக்கள் வளைவுகளுடன் மட்டுமே எழுதப்பட்டுள்ளதை தொடக்க கால வரிவடிவங்களிலும் பின்னர் இவை சுழித்து எழுதப்பட்டுள்ளதை ராஜராஜன் கல்வெட்டிலும் காணலாம். 'வ' கரத்தின் (அட்டவணை VIII) மேல் பக்க இருகோடுகளும் ஒன்றாக இணைந்துள்ளதை கூரம் செப்பேடு வரையிலும், அதற்குப் பின் இவை சற்று விலகி இடதுபுறம் சுழியுடன் எழுதப்படுவதையும் பின்வரும் எழுத்துக்களிலும் காணலாம்.

இவ்வாறு தமிழ் வரிவடிவங்களைப் பகுத்துப் பார்க்கும் பொழுது தொடக்க காலத்திலிருந்து 9ஆம் நூற்றாண்டு முடிய தமிழ் எழுத்துக்கள் மெதுவாகத்தான் வளர்ச்சியுற்றிருக்கின்றன. இவ்வளர்ச்சியோடு ஒப்பிட்டால் ராஜராஜன் காலந்தொட்டு ஏற்பட்ட வளர்ச்சி வேகமானது என அறியலாம். இவ்வளர்ச்சி வேகம் 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே, அதாவது சோழர் ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே தோன்றியது எனலாம். மேலும் சோழர் கல்வெட்டுக்கள் அனைத்தும் தமிழ் எழுத்துக்களிலேயே கிடைத்திருப்பதிலிருந்தும், பாண்டியர் ஆதிக்கம் வீழ்ச்சியுற்ற பிறகு வட்டெழுத்துக்களால் எழுதிவந்த பாண்டி நாட்டில் தமிழ் எழுத்துக்களைப் புகுத்தியதிலிருந்தும் சோழர்கள் தமிழ் எழுத்தைப் போற்றி வளர்த்தனர் என்று அறிய முடிகிறது.

அட்டவணை I

மாவட்டம்	கி.பி. 500-600			கி.பி. 601-700			கி.பி.. 701-985		
	கல்வெட்டு எண்ணிக்கை								
	வட்டெழுத்து	தமிழ்	கிரந்தம்	வட்டெழுத்து	தமிழ்	கிரந்தம்	வட்டெழுத்து	தமிழ்	கிரந்தம்
திருச்சி	--	--	1	--	4	6	--	340	4
தஞ்சாவூர்	--	--	--	--	--	--	--	612	5
தென்னார்க்காடு	--	--	--	--	--	6	1	257	4
சேலம்	--	--	--	--	--	--	--	17	9
செங்கல்பட்டு	--	--	--	--	4	24	--	269	22
தருமபுரி	21	--	--	16	--	--	41	6	2
வடார்க்காடு	3	--	1	34	--	3	14	271	19
கோயம்புத்தூர்	--	--	--	--	--	--	4	4	--
மதுரை	--	--	--	--	--	--	26	4	9
திருநெல்வேலி	--	--	--	3	--	--	153	18	1
இராமநாதபுரம்	1	--	--	1	--	--	20	1	3
கன்னியாகுமரி	--	--	--	--	--	--	26	4	4
	25	--	2	54	8	39	285	1803	82

II



III



IV



V



VI



VII



VIII



IX



X


1 2 3 4 5 6 7 8 9
க் கொ க கை க கா கா க கோ
ங ங் ங ங் ங் ங ங
சா சே சே சீ சே செ செ சி ச
ஞ் ஞ் ஞ
டா டு ட டு டு டு டு டி
ண ணு ண ண ண ண
தொ தை தி தே தொ தி து தி
நா ந் நி ந நா ந் ந ந
பி பெ பொ ப ப பி பி பொ ப

X - தொடர்ச்சி


1 2 3 4 5 6 7 8 9
மு ம ம ம ம மா ம மு மா
யு ய ய யா ய்
ரி ரு ரை ரு ரு ரு ரு ரு ரு
லெ ல் ல லி ல ல ல
வை வி வா வி வீ வி வா வி
ழ ழ ழ ழ் ழு ழா
ளு ள ளு ளா ளி ளு
ற ற றி ற றா றொ ற ற
ன் ன ன ன ன ன ன னை

அட்டவணை X - XI

வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள்

எண்.

1. பூலாங்குறிச்சி (பசும்பொன் மாவட்டம்)
(சுமார் கி.பி. 500)

2. இருளப்பட்டி (தருமபுரி மாவட்டம்) எஇ 39 : 32,
(கி.பி. 500 - 550)

3. தொண்டூர் (தருமபுரி மாவட்டம்) நடுகல் (கி.பி. 550 - 570)

4. திருநாதர்குன்று (தென்னார்க்காடு மாவட்டம்)
தெஇக. 17 : 262 (சுமார் கி.பி. 600)

5. சாத்தனூர் (தருமபுரி மாவட்டம்) நடுகல் (கி.பி. 630 - 668)

6. மதுரை எஇ. 38 : 4 (சுமார் 700).

தமிழ்க் கல்வெட்டுக்கள்

7. வல்லம் (செங்கல்பட்டு மாவட்டம்) தெஇக 2 : 72,
(கி.பி. 610-630)

8. திருக்கழுக்குன்றம் (செங்கல்பட்டு மாவட்டம்)
தி.நா. சுப்ரமணியம், தென்னிந்திய கோயிற்சாசனங்கள்,
பக். 1560, (கி.பி. 650).

9. மலையடிக்குறிச்சி (திருநெல்வேலி மாவட்டம்)
கஆஅ. 60 : 358, (கி.பி. 700).

4

தமிழ் கல்வெட்டுக் கண்டுபிடிப்புகள்

சொ. சாந்தலிங்கம்

தமிழகத்தில் பல ஊர்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் பல அரிய தகவல்களை நமக்குத் தருகின்றன. இவற்றைக் கண்டறிவதில், அதைச் சிறப்பான முறையில் படித்துப் பொருள் கொள்வதில் அறிஞர்கள் பெரிதும் உழைத்திருக்கிறார்கள்.

வரலாற்று ஆய்வில் புதிய கண்டுபிடிப்பு என்பது நாள்தோறும் நிகழக்கூடியதல்ல. ஒரு புதிய கண்டுபிடிப்பு ஒருமுறை கண்டறியப்படுமாயின் அதன் அடிப்படையில் அதைப் போன்ற பிற தடயங்களைக் கண்டறிய மனம் விழைவது இயல்பு. இவ்வகையிலேயே ஓரிரு பிராமி கல்வெட்டுக்களைக் கண்டறிந்த பின்னர் தொடர்ந்து இம்முயற்சியில் ஆய்வாளர் ஈடுபட்டு இன்று கணிசமான எண்ணிக்கையில் பிராமிக் கல்வெட்டுக்களை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் முதன் முதலில் 1903-ல் வெங்கோபராவ் அவர்களால் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கீழவளவு என்னுமிடத்தில் பிராமிக் கல்வெட்டு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் அப்போதைக்கு ஒருவராலும் உணரப் படவில்லை. இதன் பின்னர் 1906-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்த திரு.கமியேடு (Cammiade) என்பவர் அம்மாவட்டத்தில் மறுகால்தலை

எனுமிடத்தில் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்து அறிவித்தார். இக்கல்வெட்டு அன்றைய இந்திய அரசின் கல்வெட்டுப் பிரிவில் பணியாற்றிய வெங்கையா, கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆகியோரால் பரிசீலிக்கப்பட்டுப் படியெடுக்கப்பட்டது.

இதே ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் கே.வி. சுப்பிரமணிய ஐயர் மதுரை மாவட்டத்தில் ஆனைமலையில் ஒன்றும், அரிட்டாபட்டியில் (மாங்குளம்) நான்குமாக மொத்தம் ஐந்து கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தார். அரிட்டாபட்டி கல்வெட்டுக்களைப் பற்றிய வி. வெங்கையாவின் கருத்து இங்கு கருதத்தக்கது. "இக்கல்வெட்டுக்களே தமிழர்களின் தொன்மையான கல்வெட்டுக்களாக 'ம், தொன்மையான வரலாற்றுச் சின்னங்களாகவும் கருதத்தக்கவை. தமிழ், வட்டெழுத்து ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றி ஆராய்வதில் முக்கியமான செய்திகளைத் தரத்தக்கதாகும், பாலிமொழியில் இக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ளன ". மேலும் இக்கல்வெட்டுக்களும், அவை அமைந்துள்ள கற்படுக்கைகளும் புத்த மதத்தினரோடு தொடர்புடையனவாக இருக்கலாம் என்றும் அவர் கருதினார்.

1907ஆம் ஆண்டு மேலும் சில பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டன. விபர்ட் என்பவரால் மதுரை மாவட்டம் வரிச்சியூரிலும், வெங்கையா அவர்களால் மேட்டுப்பட்டி (சித்தர் மலை)யிலும் கண்டறியப்பட்டது. மேலே குறிப்பிட்ட கமியேடு நெல்லை மாவட்டத்திலேயே வீரசிகாமணி என்னுமிடத்தில் ஒரு புதிய கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

1908-ல் கே.வி. சுப்பிரமணிய ஐயர் திருப்பரங்குன்றத்தில் இரண்டும், அழகர்மலையில் ஒன்றுமாக மூன்று கல்வெட்டுக்களையும், வெங்ககோபராவ் குன்னக்குடியில் ஒரு கல்வெட்டையும் கண்டுபிடித்தனர். கொங்கர் புளியங்குளம் அம்மணாமலைக்குகை கண்டுபிடிப்பு ஒரு தற்செயலான நிகழ்ச்சி. இவ்வூரில் குகை ஒன்றும் எழுத்துக்களும் இருப்பதாக ஒரு ஆள் மூலம் தகவல் அறிந்த கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஒரு நாள் நண்பகல் அங்கு சென்றார். அன்று மழை நாளாகவும் இருந்தபடியால் அவர் ஏற்பாடு செய்து கொண்ட குதிரைவண்டிக்காரர் மிகவும் சலித்துக் கொண்டு அவரை ஏற்றிச் சென்றார். புதிய கண்டுபிடிப்பை

எட்டும் விருப்பம் ஐயருக்குத்தான் இருந்ததே தவிர வண்டியோட்டிக்குத் தன் குதிரை துன்பப்படுகிறதே என்ற அனுதாபமே மிஞ்சியிருந்த காரணத்தால் கொங்கர் புளியங்குளத்திற்கு இரண்டு மைல் தொலைவிலேயே வண்டியை நிறுத்திக்கொண்டு இது தான் அந்த ஊர் என்று சொல்லிவிட்டார். அவ்வூரை ஆய்வு செய்தபோது ஒரு குகையும் சில படுக்கைகளுமே அவரால் கண்டறியப்பட்டதே தவிர பிராமிக் கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை. மேலும் அவ்விடத்தை ஆய்வு செய்ததில் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டும், சமணத்திருஉருவச்சிற்பங்களுமே காணப்பட்டன.

ஆனால் இதற்கு அடுத்த ஆண்டில் எச். கிருஷ்ண சாஸ்திரி இங்கு மீண்டும் ஆய்வு செய்தார். அப்போது அவர் மேலும் சில கற்படுக்கைகளையும் ஒரு பிராமிக்கல்வெட்டையும் கண்டறிந்தார். எச். கிருஷ்ணசாஸ்திரி முத்துப்பட்டி என்னும் இடத்திலும் ஒரு கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் கருங்காலக்குடியில் ஒரு பிராமிக்கல்வெட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. சித்தன்னவாசலில் இருந்த கல்வெட்டு இராதாகிருஷ்ண அய்யரால் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. மேலும் மதுரை மாவட்டம் சோழவந்தானுக்கு அருகில் ‘உண்டாங்கல்’ என்னுமிடத்தில் ஒருகல்வெட்டை கே.வி.சுப்பிரமணிய அய்யர் கண்டுபிடித்தார்.

அறச்சலூர்க் கல்வெட்டை ஈரோடு புலவர் செ. இராசு கண்டுபிடித்ததே ஒரு சுவையான அனுபவம் எனலாம். கொங்கு நாட்டில் மூலனூர், புதுப்பைப் பகுதிகளில் அவர் ஆய்வு மேற்கொண்டிருந்தபொழுது அங்கிருந்த எழுபத்து ஐந்து வயது அம்மையார் ஒருவர் ‘‘என்னையா, இங்கெல்லாம் தேடிக்கிட்டிருக்கிங்க. அறச்சலூர் ஆண்டிப்பாறையில் போய்ப் பாருங்க, அங்கதான் பாண்டியராசா படிச்ச அரிவரி எல்லாம் இருக்குங்க'' என்ற ஒரு தகவலைச் சொன்னார். அதைக் கண்டு புலவர் இராசு மறுநாளே அறச்சலூர் மலைக்குச் செல்ல அங்கே ஒரு பிராமிக்கல்வெட்டைக் கண்டறியமுடிந்தது.

அண்மைக் காலத்தில் பல தமிழ்பிராமி கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவாதவூரில் ஐராவதம் மகாதேவனும், மீனாட்சிபுரம் அருகே எ.சுப்பராயலு, கே.வி.இராமன் ஆகியோரும், சேலம் மாவட்ட அம்மன்கோயில் பட்டியில் புது.போ.வேங்கட்ராமனும் அரிய தமிழ்பிராமி கல்வெட்டுக்களைக் கண்டறிந்தனர்.

இவ்விதம் எவ்வளவோ சிரமங்களை ஏற்று இக் கல்வெட்டுகளையெல்லாம் கண்டுபிடித்துவிட்ட நிலையிலும், இவற்றை முறையாகப் படித்துச் சரியான பொருளை அறிவதில் இடர்ப்பாடுகள் இருந்தன. இந்தியாவின் பிற பகுதிகளில் கிடைத்த பிராமி எழுத்துக்களிலிருந்து தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களில் ஒருசில மாறுபட்டன. இவை தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்கள் என்பது தொடக்கக் காலத்தில் உணரப்படாமையால் ஆய்வாளர்களிடையே ஒரு சிறிய குழப்பம் நிலவியது.

எச். கிருஷ்ணசாஸ்திரி இக்கல்வெட்டுக்களின் ஒளிப் படங்களையும், மைப்படிகளையும் தென்னிந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் 1912, 1915, 1918ஆம் ஆண்டுகளில் வெளியிட்டார். மேலும் அவர் திரு. ராம்பிரசாத் சந்தா என்பவரையும் இத்துறையில் ஆய்வு செய்யத் தூண்டினார். இம் முயற்சிகள் நல்ல பலனைத் தந்தன என்று கூறுவதற்கில்லை.

இறுதியாக 1919-ல் எச். கிருஷ்ணசாஸ்திரி புணேயில் நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் (All India Oriental Conference) இக்கல்வெட்டுக்கள் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையை அறிஞர்கட்கு முன் சமர்ப்பித்து பிறரும் இவ்வாய்வில் முழுமையாக ஈடுபட்டு உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவரே தம் துறையில் பணியாற்றிய கே.வி. சுப்பிரமணிய ஐயரை இவ்வாய்வில் முழுமையாக இறங்கும்படி ஊக்குவித்தார்.

சுப்பிரமணிய ஐயர் தமது முன்னோடியான கிருஷ்ணசாஸ்திரியின் ஆய்வு முடிவுகளை எடுத்துக்கொண்டு மேலும் நுணுகி ஆராய்ந்து, தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களையெல்லாம் அவற்றில் கண்டறிந்து படித்து இப்பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் தமிழ் மொழியிலேயே

எழுதப்பட்டுள்ளன என்று முதல் முதலாக நிறுவினார். இவர் தாம் கண்டறிந்த உண்மைகளை 1924-ல் சென்னையில் நிகழ்ந்த மூன்றாவது அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் சமர்ப்பித்தார்.

ஆனால் அவருடைய கருத்துக்களில் சிலருக்கு உடன்பாடு இல்லாமல் இருந்தது. இந்தியாவின் பிறபகுதிகளில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் பிராகிருத மொழியில் இருக்கும்போது, தமிழகத்தில் மட்டும் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன என்பதைச் சிலரால் எளிதில் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. சி. நாராயணராவ் என்பவர் இதற்கு மறுப்பாக 1940-ல் திருப்பதியில் நிகழ்ந்த பத்தாவது அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் ஒரு ஆய்வுரை அளித்தார். ஆனால் அது பொருத்தமானதாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இத்துறையில் மேலும் உழைத்து வெற்றி கண்டவர் ஐராவதம் மகாதேவன். 1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் அவர் வாசித்த கட்டுரையும், அதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் ஆய்வுகளும் சங்க இலக்கிய ஆய்வுக்குப் புத்தொளியூட்டி வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1988ஆம் ஆண்டு 'தமிழ்பிராமி எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பல அரிய கட்டுரைகள் அளிக்கப்பெற்றன.

'பிராமி' கல்வெட்டுகளைக் கண்டுபிடித்த நமது முன்னோர்கள் அவற்றைக் கண்டறிய எடுத்துக்கொண்ட முயற்சிகள், செலவழித்த உழைப்பு, சிந்திய வியர்வை அனைவராலும் வியந்து போற்றற்குரியதாகும். எட்டமுடியாத மலைமுக்குகளில் எவ்வித வசதியும் இன்றித் தம் உயிரைப் பணயம் வைத்து ஏறிச் சென்று வரலாற்றுக் கருவூலங்களைக் கண்டறிந்துள்ளனர். இன்னும் எத்தனைக் கல்வெட்டுக்கள் எங்கெல்லாம் உள்ளனவோ, எந்த ஞானக் கண்கள் அவற்றைக் கண்டறியப் போகின்றனவோ? முந்தைய சாதனையாளர்களின் ஆய்வு அனுபவங்கள் இன்றைய இளம் ஆய்வாளர்கட்கு நல்ல முன்மாதிரியாக விளங்கட்டும்.

5

கல்வெட்டுக்களும், இலக்கியமும்

மு. இராகவையங்கார்

தமிழ் மொழியின் வரலாறென்பது, அம்மொழியின் பழைமை பெருமை சிறப்பியல்களும், அது வழங்கும் நாட்டின் அமைதி வழக்க ஒழுக்கங்களும், அதன் மக்களது வாழ்க்கைச் செய்திகளுமாகும். இவை நூல்களின் பருப்பொருள்களை ஆராய்தலால் பெறப்படக் கூடியன. இத்தகைய வரலாறுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதை அறியாதவர் களென்றேனும் புறக்கணித்தவர்களென்றேனும் கூற முடியாது: ஒரு நூலுக்கு முகவுரையாகிய பாயிரம் இன்றியமையாத தென்பது தெரிந்ததே; ''ஆயிர முகத்தானமைந்த தாயினும்--பாயிர மில்லது பனுவலன்றே'' என்பது இலக்கணம். பாயிரம்--புறவுரை முகவுரை நூன்முகம் என்பன பரியாயச் சொற்கள். நூல்களுடையவும் நூலாசிரிய ருடையவுமாகிய வரலாறுகளும் பிறவும் நூல்களை யொப்பவே என்றும் நிலை நிற்கவேண்டும் என்ற எண்ணங் கொண்டே ''ஆக்கியோன் பெயர் வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன், காலம், களன், காரணம்'' என்ற பதினொரு செய்தியையும் கொண்ட சிறப்புப்பாயிரத்தை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருத்தல் வேண்டும் என்றும், இப்பருப் பொருள்களை அறிதலால் நூன் பொருளாகிய நூல் மாணாக்கர்க்கு எளிதிற்

௸ இக்கட்டுரை இலக்கிய சாஸன வழக்காறுகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

செல்ல இடமுண்டென்றும் விதிக்கலாயினர் பெரியோர். ஒரு நூலுக்குப் போலவே அந்நூற் பரப்பையுடைய பாஷைக்கும் இத்தகைய பாயிரம் வேண்டத்தக்கதேயாம். முன்னோர் விதித்த முறைப்படி ஒவ்வொரு நூலும் தன் பாயிரத்தை உரியவாறு கொண்டிருக்குமாயின்--அவற்றின் தொகுதியே பாஷையின் சரித்திரமாகக் கூடியது. இச்சரித்திரம் இவற்றிற்கண்ட செய்திகளைக் கொண்டு அறிஞர்கள் ஆராய்ச்சி காட்டி எழுதும் நூல்கள், கொழூச்சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல, பாஷையின் நுண்பொருள்களில், மக்கள் மனம் பற்றுதற்குப் பேருதவி புரியத் தடையில்லை. ஆகவே, இக்காலத்தோரால் தமிழ்ச் சரித்திரம் என்று சொல்லப்படுவது யாதெனின், அது தமிழ்ப் பாயிரமேயன்றிப் பிறிதன்று என்பது தெரியலாம். இத்தகைய பாயிரம் கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின் மாடம் போலவும், தகை மாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட ஓவியம் போலவும் பாஷைக்கு அலங்காரமாய் அதன் பெருமையைச் சிறப்பாகக் காட்டவல்லது. அதனால், இக்காலத்தவர் அவாவானது, இத்தகைய தமிழ்ப் பாயிரத்தை அறிவதில் விசேடமாக இருப்பது இயற்கையேயாம். நாகரீகம் பெற்றுள்ள நாட்டாரெல்லாம் தங்கள் பாஷா சரித்திரங்களைப் பெரிதும் விரும்பிப் புதியவாகக் கண்டெழுதித் தம் பாஷைப் பெருமையை உயர்த்தி வருகின்றனர். அதனால், பழமை பெருமைகளையுடைய தமிழ்மக்கட்கும், அத்தகைய அவாவிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இத்தமிழ் வரலாறுகளையும் வழக்குகளையும் அறிந்து மகிழ்வதற்கு அதன் கண்ணமைந்த நூற்பரப்பு இன்றியமையாத கருவி என்பது தெரிந்ததே. இதனைப்போல் அவற்றை அறிதற்கு முக்கியமாக வேண்டத்தக்க கருவி வேறுமுண்டு, அவற்றுட் சிலாதாமிர சாஸனங்கள் சிறந்ததொன்றாம். நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள சாஸனங்கள் அறிஞர்களாற் கண்டுபிடிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பத்தித்திறம் வாய்ந்த உத்தம சீலர்களால் ஆலயங்கட்கும் மற்ற தர்மங்கட்கும் ஆசந்திரார்க்கமாகச் செய்யப்பட்ட அறச்செய்கைகளே இச்சாஸனங்களிற் பெரும்பான்மை காணப்படும் செய்திகள். இவற்றினின்றும் பண்டையோர் தெய்வங்களிடத்தும் அடியாரிடத்தும் மற்ற மக்களிடத்தும் காட்டிவந்த மனப்போக்கின் பெருமை முழுதும் நன்கறியப்படும். என்றும் நிலைக்க வேண்டியனவாக செய்யப்பட்ட அறங்களாதலின், அரசருடையவும் அதிகாரிகளுடையவும்

அனுமதி பெற்றுக் கோயில் முதலிய பொதுவிடங்களில் சாஸனங்கள் கல்லிலும் செம்பிலும் வெட்டிப் பலரும் அறியப் பகிரங்கப்படுத்தப் பெற்றுள்ளன. முன்னோர்களுடைய நிரதிசயமான தர்மச் செயல்களைக் குறிக்கும், இச் சாஸனங்களை ஒருமுகமாகத் தொகுத்துப் போற்றும்படி சாஸன விலாகாக்களைத் தேசமெங்கும் தாபித்து நடத்தும் அரசாங்கத்தார் செயல் நம்மவரது போற்றற்கும் புகழ்ச்சிக்கு முரியதாகும். நம்முன்னோர்கள் நிலைத்திருக்கவேண்டிச் செய்தப் பேரறங்கள் அரசியல்களின் மாறுபாட்டால் பெரும்பாலும் சிதைந்தன. ஆயினும், அப்புண்ணிய மக்கள் வரலாறுகளை நாம் அறிந்து மகிழும்படி செய்துவரும் பேரறம் இப்போது நம் அரசாங்கத்தாருடையன என்றே சொல்லலாம். இத்தகைய சாஸனங்கள், முன்னோரது அறச்செயல்களை மட்டுமன்றித் தமிழ்மொழியின் உள்ளீடான நுண்பொருள்களையும், வெளியீடுகளான பருப் பொருள்களையும், அறிதற்குப் பேருதவி புரிவனவாயுள்ளன. அதனால், தமிழ் வரலாறுகளை அறிதற்கு, இவை பெருங் கருவிகளாக வேண்டப்படுகின்றன.

இருபது வருஷங்கட்கு முன்பு நான் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையை நடத்தி வந்த போது, காலஞ்சென்ற ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் சாஸனங்களினின்றும் கண்ட அரிய விஷயங்கள் பலவற்றை அதற்கு எழுதி உதவி வந்தனர். ராயரவர்களது சாஸன ஆராய்ச்சி வன்மை இணையற்றது என்பதைப்பற்றி நான் இங்கே கூறுவது மிகையே, அவர்கள் எழுதிய விஷயங்கள் சிலவற்றில், சாஸனச் செய்திகளிலேயே அதிக மதிப்புக் காட்டியும், இலக்கியங்களில் அத்துணையின்றியும், எழுதிய பாகமும் உண்டு. அவ்விடங்களில் எனக்கும் அவர்கட்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட, அது பற்றி, இலக்கியப் பெருமையையே அதிகமாக நானெடுத்துரைத்து எழுத நேர்ந்தது. ஆனால் நெடுங்காலம் இடைச் சென்றபின் இவ்விஷயமாக நாங்களிருவோரும் சந்தித்த போதெல்லாம் சம்பாஷித்துக் கொண்டதென்ன எனில், அவ்விரண்டும் ஒன்றுக் கொன்று இன்றியமையாதனவாதலால், அவை ஒப்ப மதித்துப் போற்றக் கூடியன என்பதேயாம். சாஸன வழக்கெல்லாம் இலக்கியத்துடனும், இலக்கிய வழக்கெல்லாம் சாஸனத்துடனும் ஒருங்கியைந்தும், ஒன்றையொன்று விளக்கியும் செல்லுமானால்,

இந்நம்பிக்கை கொள்ளத் தடையென்னை? ஆகவே, அவ்விரண்டும் ஒன்றனையொன்று உணர்ந்து கொள்ளுதற்கு இன்றியமையாதன என்பது பெறப்படுகின்றது. தமிழ் மக்கள் அவ்வக்காலத்து வழங்கிய உலக வழக்கு முறையில் வாக்கிய ரூபமான சாஸனங்கள் அமைந்தனவாகும். அவை செய்யுள் வழக்கிற்கேயுரிய சொற்களையேனும் மரபுகளையேனும் உடையனவல்ல. அவற்றிற் பயில்வன வெல்லாம் அவை யெழுதப்பட்ட காலத்தோடு சம்மந்த முடையனவேயல்லது வேறில்லை. ஆதலால், அச்சாஸனங் கூறும் சொற்பொருள் மரபுகள் யாவும் காலவியற்கைப்படி அமைந்தன என்றே அறியத்தக்கது. பழைய இலக்கியங்களும் அத்தன்மை கொண்டனவேயாம். செய்யுட்கேயுரிய சொற்களையும், மரபுகளையும், இலக்கியங்கள் கொள்வனவாயினும் தத்தங் காலத்துக்குரியனவாகிய உலக வழக்குச் சொற்பொருள்களையும் அவை பெரிதும் வழங்குகின்றன. ஆக சாஸனங்களும் இலக்கியங்களும் காலவியற்கைக்குற்ற உலக வழக்குக்களைக் கொண்டுள்ளமையால், அவ்வக்காலங்கட்கமைந்த அவ்விரண்டும் பலவிடங்களில் ஒற்றுமைப்பட நேர்கின்றன. அஃதாவது 1000 வருஷங்கட்கு முன் உலக வழக்காகக் கண்ட சாஸனச் சொற்பொருள்கள் ஒரு நூலில் அருமையாகக் காணப்படுமாயின், அந்நூல் ஏறக்குறைய அச்சாஸன காலத்தை ஒட்டியது என்று கருதத் தடையில்லை யன்றோ? இலக்கியங்கள் மேற்குறித்தபடி பாயிரத்தை பதினொன்றனையும் கொண்டனவாயின், அவற்றின் காலமும் இன்னதென்று நாம் தெரியக்கூடும். ஆக, சாசனங்களும், இலக்கியங்களும் ஒற்றுமைப்படுதலால் உண்மைப் பொருளுணர்ச்சியை நாம் அவற்றினின்று கொள்ளக்கூடிய தாகின்றது. சாஸனங்கள் பெரும்பாலும் அவை அமைந்த காலநிலை தெரியக் கூடியவைகளாகவே உள்ளன. காலந் தெரியாதவற்றையும், அதன் எழுத்தமைதி கொண்டும், அரசாட்சி வருஷங்கொண்டும், அது இன்ன நூற்றாண்டினதாக வேண்டும் என்று சாஸனவறிஞர்கள் கூறவல்லவர்கள். இவை போலவே இலக்கியங்களும் அவற்றின்உள்ளீடான வழக்குக்களையும் வரலாறுகளையும் கொண்டு அவை இன்ன நூற்றாண்டுக்குரியன என்று நாம் மதிப்பிடக் கூடும் (பக்கம் 4-7).

இதுவரைகூறிவந்த செய்திகளால் இலக்கியம் சாஸனங்கள்-- வரலாறுகளாலும், வழக்குகளாலும் ஒற்றுமைபெற்று ஒன்றிற்கொன்று பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாதனவாயுள்ள விஷயம் நன்றாக் விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன். நான் கூறியவை சாஸனங்களையெல்லாம் முற்றவாராய்ந்து சொன்னவையல்ல. இப்போது வெளிவந்துள்ள சாஸனங்கள் மிகவும் சொற்பமேயாகும். புதியவாய்க் கண்டுபிடிக்கப்பட்டு வரும் கல்வெட்டுக்களைப் பற்றிய அறிக்கைகள் சாஸன இலாகாதார்களால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வறிக்கைகளிற் கண்டபடி மூலசாஸனங்கள் நெடுங்காலம் வெளியிடப்படாமலே தொகுக்கப்பட்டுக் கிடந்தன. இப்போது சில வருஷங்களாகத் தான் அவற்றை பலர் விருப்பப்படி வெளியிட்டு வருகின்றனர். அவற்றில் இதுவரை 6 தொகுதிகள் நமக்குக் கிடைத்துள்ளன. இன்னும் வெளிவர வேண்டிய தொகுதிகள் மிகுதியாகும். இவையெல்லாம் முற்றுப்பெற்றால் எத்தனையோ அரிய புதிய செய்திகளை அறிய இடமுண்டென்பதில் ஐயமில்லை. நான் கூறியவற்றிற் பல விஷயங்கள், சாஸனவிலாகாதார்கள் வெளியிட்ட அறிக்கைகளையே ஆதாரங்களாகக் கொண்டவை. ஆதலால், மூலசாஸனங்கள் கிடைத்தபின் என் கொள்கைகள் சில மாறுதலடையவுங் கூடுமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என் உபந்யாசங்களிலே இலக்கியங்களிற் கண்ட அரசர் புலவர்களின் காலங்கள் சாஸன விசேஷமாக ஆராயப்பட்டன. இவ்வாறு நான் ஆராய நேர்ந்ததற்குத் தக்க காரணமுண்டு. நான் எடுத்துக்கொண்ட விஷயமான இலக்கிய சாஸன வரலாறுகளையும் வழக்குகளையும் காலமுறையில் வைத்து நான் விளக்கியிராவிடின் அவை தலைதடுமாறிப் போய்விடும். சரித்திரமாகிய சித்திரம் வரைதற்கு அமைந்த சுவர்த்தலம் போன்றது காலமாகும். காலவரையறையில்லாமல் எழுதப்படும் முன்னோர் வரலாறுகளும் வழக்குகளும் சாஸ்திரீயமான சரித்திர நூல்கள் ஆகா. நம் காலத்தில் வெளிவந்துள்ள வினோதரச மஞ்சரி போன்ற புலவர் வரலாற்று நூல்களை நோக்குவோமாயின் முற்காலத்தவர் வரலாறு பிற்காலத்தவராகவும் ஒருவர் கதை மற்றவரது கதையாகவும், பழையவர் பாடல்கள் புதியவர் பாடலாகவும் பலவகையில் பிறழ்ச்சியுற்றிருப்பதைக் காணலாம்.

முற்காலத்தவரான ஔவையாரையும் பிற்காலத்தவனான ஏகாம்பவாணனையும் கம்பர் வரலாற்றுடன் இயைத்து வழங்குங் கதைகளை அந்நூல் முதலியவற்றிற் காணலாம்.

ஏகம்பவாணன் 16-ம் நூற்றாண்டில் தென்காசியாண்ட சிவலமாறன் காலத்தவன் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறே ஆழ்வார்கள் காலங்களைப்பற்றிச் சரித்திரம் எழுதினோர் சிலர், குலசேரப் பெருமாள், ஸ்ரீவல்லப பாண்டியன் என்பனபோன்ற பெயர்கள் சாஸனங்கள் சிலவற்றிற் கூறப்படுவனவற்றை வைத்துக்கொண்டு, இராமானுஜர்க்கும் பிற்பட்டவர்களே அத்திருமாலடியார்கள் என்று எழுதிவிட்டனர். அவற்றையெல்லாந் தவறென்று இப்போது நன்றாகத் தெரிந்தவர்களுங்கூட, நாதமுனிகள் காலத்தும் அவர்கட்குப் பின்பும் அவ்வடியார்களை நிறுத்தி எழுதிவருகின்றனர். இலக்கிய சாஸன வழிகளால் ஆராய்ந்த நாம் உண்மை வரலாறுகளைக் கொள்ளாது போனால் பல விபரீதவுணர்ச்சிகட்கு இடமாகத் தடையில்லை. இன்னும் எத்தனையோ உதாரணங்கள் காலநிலை தெரியாமல் தலைதடுமாறியுள்ள விஷயங்கட்குக் காட்டலாகும். ஆதலால் இலக்கிய வரலாறுகள் விளங்கவேண்டி அரசர் புலவர் காலங்களைச் சாஸன வழியால் பலவிடங்களில் நான் கூற நேர்ந்தது.

சாஸனங்கள் பெரும்பாலும் பாஷை நடையாற் சிறந்தவை என்று சொல்வதற்கில்லை. அவற்றைக் கல்லில் எழுதிய முறையில் எழுத்துப்பிழைகளும் இலக்கணக் குற்றங்களும் நிரம்பவுள்ளன. இவற்றைத் தமிழறிஞர் படித்தறிவதில் விருப்பங்கொள்ளுவது அரிதேயாம். ஆயினும், நம் த்மிழ்முன்னோர் தங்காலத்துப் பேசியும் எழுதியும் வந்த முறைகளை இவை உணர்த்துவன என்று நாம் அவற்றைப் போற்றத்தக்கது. சாஸனங்கள் பலவற்றில் இலக்கிய வழக்கமைதியில்லையேனும் இலக்கியங்களிலே சாஸன வழக்கமைதிகளை மேலே நான் கூறிவந்த முறையில் நெடுகக் காணத் தடையில்லை. ஆகவே, காலநிலைக்குத்தக்க பொருளுணர்ச்சியை அறிய வேண்டுமாயின், நம் தமிழ் மக்கள், இச்சாஸனங்களைக் கற்றல் இன்றியமையாதது என்று திரும்பவும் வற்புறுத்துகிறேன். என் உபந்யாசங்களால் சேக்கிழார் முதலியோர் வாக்கிற்கண்ட வரலாறுகளையும் சொற்பொருள் வழக்குகளையும் இச்சாஸனங்கள் எவ்வளவு தெளிவாக்கி

நிற்கின்றன என்பது நன்கு விளங்கினவன்றோ? சாஸனவிலாகாதார்கள் தாங்கள் கண்டுபிடித்து வரும் சாஸன வரலாறுகளை ஆங்கில பாஷையில் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றனர். ஆனால், மூலசாஸனங்களையும் அவ்வாறு ஆங்கிலவெழுத்தில் பதிப்பிடாது தமிழில் வெளியிட்டு வருவதளவில், நமது பாக்கியமேயாம்.

தேச சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளாமல் இச் சாஸனங்களைப் படிப்பதால் விஷயங்கள் விளங்க இடமில்லை. அதனால், அவ்வறிக்கைகளைத் தேசபாஷையிலும் வெளியிடுவது, தமிழ்மக்கள் தங்கள் நாட்டு வரலாறுகளை அறிந்துகொள்ளுதற்குப் பேருதவியாகும். என்போலத் தமிழ்ச் சரித்திரங்களை ஆராய்வதில் ஆசையுள்ள பண்டிதர்கள் சாஸன வரலாறுகளை அறிந்து தங்கள் ஆராய்ச்சியிற் கண்ட செய்திகளை வெளியிடுதற்கும் ஏற்றதாகும். தமிழ் மக்களது இலக்கியப் பொருளுணர்ச்சிக்குச் சாஸனவுதவி எவ்வாறு வேண்டப்படுவதோ, அவ்வாறே சாஸன விஷயங்களை வெளியிடுவோர்க்கு இலக்கிய உதவி இன்றியமையாத தென்பது திண்ணம். பாஷா பண்டிதர்கள் உதவியை இச் சாஸன விலாகா நாடாமல் இருப்பதறிந்து விசனிக்கின்றேன். இதனால் பலகுறைகளுண்டு என்பதற்கு எத்தனையோ விஷயங்களைக் காட்டத் தடையில்லை. சென்றஉபந்யாசங்களிலும் பல செய்திகள் இதனைத் தெளிவாக்கியிருக்குமென்று நம்புகிறேன். இவ்வாறு கூறுவதால், சாஸன விலாகா வறிஞர்க்குத் தமிழறிவு இல்லை என்று நான் கூறுவதாக நினைத்தல் கூடாது, அவர்கட்கு ஒருவகையான தமிழ் ஞானம் உண்டென்பதிலும் அவரெல்லாம் ஆங்கிலத்திற் பேரறிவாளிகள் என்பதிலும் ஐயமில்லை. ஆங்கிலத்திலவர்கள் படைத்துள்ள அறிவினளவு தமிழ்ச்சாஸன வாராய்ச்சி செய்யும் அவர்கட்கு இலக்கியங்களிலும் இருப்பது அவசியமன்றோ? அத்தகைய தமிழ் ஞானம் அத்துறையிலேயே உழைத்து வரும் பாஷாபண்டிதர்க்குள்ளது போல அவர்கட்கு இருக்க நியாயமில்லை. அதனால், அப்பண்டிதர்களுதவி சாஸனவிலாகாவுக்கு இன்றியமையாதது என்பேன். சாஸனங்களில் எத்தனையோ பாடல்கள் உள்ளன. அவையெல்லாம் சேர்ந்து தொகுக்கப் பெற்றால், ஒரு சிறந்த இலக்கியமாகத் தடையில்லை. 'பெருந்தொகை' என்ற பெயர்

கொண்ட நூலொன்று செந்தமிழ்ப் பத்திரிக்கையில் சில வருஷங்களாக நான் வெளியிட்டு வருதலை அறிஞர் பலரும் அறிவர். அவற்றில் பழைமையும் பெருமையும் உடைய பாடல்களைப் பலவழிகளாலும் திரட்டி வந்த முறையில், இச்சாஸனப் பாடல்களையும் கிடைத்தளவில் சேர்த்திருக்கிறேன். மைசூர் சமஸ்தானம் சாஸன அத்யக்ஷராய் இருந்து இளைப்பாறுபவரும், என் தந்தையாரது மாணாக்கருமான வித்யாபூஷணம் ஸ்ரீமாந் ஆர். நரசிம்மாசாரியரவர்கள் (எம்.ஏ) கன்னட சாஸனங்களிற் கண்ட பாடல்களை யெல்லாம் திரட்டிப் பல தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இது போலத் தமிழ்ச்சாஸனங்களை அவ்விலாகாதார்களேனும் மற்றச் செந்தமிழறிஞர்களேனும் செய்வது முக்கிய மென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் நண்பர் டி.ஜி. ஆராவமுத ஐயங்காரவர்களும் இதற்காக முயன்றும் பலியாமையால் அத்தகைய தொகைநூல் வேறு எவ்வகையாலேனும் கிடைக்கட்டும் என்று இவ்வேண்டுகோள் செய்யலானேன். சாஸனப் பாடல்களைக் கல்வெட்டிலுள்ளபடி, சாஸன விலாகாதார் பதிப்பித்து வருகின்றனர். இது ஒரு வகையில் நன்மையே. ஆனால், தக்க பண்டிதர்களைத் துணைக்கொண்டு சீர் அடி தளை முதலியன விளங்கும்படி பாட்டுருவமாகவும் அவற்றைப் பதிப்பித்தலும் இன்றியமையாதது.

நம் தேசத்தில் நெடுங்காலமாக வழங்கி வரும் கலியப்தம் சகாப்தங்களாலன்றிக் கிறிஸ்தவாப்தத்தால் முன்னோர் காலக்குறிப்புகளை நான் அடிக்கடி கூற நேர்ந்ததை என்போன்ற பண்டிதர்கள் குறைவாக நினையார்கள் என்றே நம்புகிறேன். கி.பி. என்று கூறுவதில் சிலர்க்கு விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். அவர்கள் விருப்பின்படி, சகாப்தம் கலியப்தங்களால் நான் கூற விரும்பியதுண்டு. அது அருமையுமன்று. ஆனால், நிகழும் சகாப்த வருஷம் இத்தனையாவது என்று, நம் பண்டிதர்களில் சிலரேனும், கேட்டால் உடனே சொல்லக் கூடுமா? என்பது எனக்குச் சந்தேகமே. அப்தம் மட்டுமன்று, தமிழ் மாசந்தேதிகளே தெரிவது அருமையாகிவிட்டது. இது நம் பூர்வ அப்தங்கள் செய்த பாக்கியக் குறைவேயாகும். ஆதலால், யாவரும் அறிதற்கு

எளிதாகும்படி, இப்போது உலக முழுவதையும் வியாபித்துள்ள கிறிஸ்தவாப்தத்தால் நானும் கூறலாயினேன் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் பல சான்றுகளைக் கொண்டு ஊகித்துக் கூறிய கொள்கைகளில் அறிஞர்களுக்கு அபிப்ராயபேதம் நிகழக்கூடியதே. ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களை அற்ப ஆங்கில ஞானத்தைக் கொண்டு ஆராய்ந்து கூறிய என் கருத்துக்களில் குற்றங் குறைகள் மிகுதியாக நிகழக் கூடுமென்பதில் அதிசயமொன்றுமில்லை. தமிழ்த்துறையிலும் சரித்திர விஷயங்களிலும் நெடுங்காலம் நான் உழைத்து வருபவானயினும், ஆங்கிலப் பேரறிவு இல்லாத குறையால் எம்போன்றவர் அப்பாவிப் பண்டிதர்தானே. அதனால், என் உபந்யாசங்களில் நேரக்கூடிய குற்றங் குறைகளை ஆங்கிலப் பேருணர்ச்சியும் சரித்திர வாராய்ச்சியும் திறமையும் பெற்றுள்ள அறிஞர் பொறுத்துக்கொள்ளவும் உரியவாறு எடுத்து விளக்கவும் கேட்டுக் கொள்வதோடு, இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' *(பக்கங்கள் 274-78)*

6

தமிழ்க் கல்வெட்டுக்களும் வரலாறும்

எ. சுப்பராயலு

தமிழ்நாட்டில் கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஏறக்குறைய கிறித்துவுக்கு முன் இரு நூற்றாண்டுக்கு முன்பு தொடங்கி அண்மைக்காலம் வரை காணப்படுகின்றன. இவற்றோடு செம்புத்தகட்டில் எழுதும் வழக்கமும் ஆறாம் நூற்றாண்டு முதல் இருந்து வந்துள்ளது. ஆறாம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. மேலும் அவை ஓரிரு வரிகள் கொண்டவையாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. 550க்குப் பின் வட தமிழ்நாட்டில் பல்லவர் அரசும், தெற்கே பாண்டியர் அரசும் வளரும் நிலையில் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் எண்ணிக்கையிலும் வகையிலும் வளர்ந்தன. அதற்குப்பின் சோழர் ஆட்சிக் காலத்தில், அதாவது 10-13ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உலகில் வேறு எங்கும் எப்பொழுதும் கண்டிராத அளவுக்கு உயர்ந்தது. 13ஆம் நூற்றாண்டுக்குப்பின் அவற்றின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. விஜயநகர அரசாட்சிக் காலத்தில் செப்பேடுகள் ஏராளமாக வெளியாயின என்பதைக் குறிப்பிடவேண்டும். தமிழ்நாட்டில் காலந்தோறும் கல்வெட்டுக்கள் எவ்வளவு பொறிக்கப்பட்டன என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டும் :

காலம்	அரசு	கல்வெட்டுக்கள் எண்ணிக்கை	செப்பேடுகள் எண்ணிக்கை
550 - 850	பல்லவர்	400	
	பாண்டியர்	300	
	பிற	300	60

850 - 985	சோழர்	2000	
985 - 1300	சோழர்	9000	
985 - 1300	பாண்டியரும் பிற அரசுகளும்	7000	
1300 - 1600	பாண்டியர், சம்புவராயர் முதலியோர்	1000	500
	விஜயநகர அரசு	3500	
1600 - 1900	நாயக்கர், மராட்டியர், சேதுபதி, பிறகுறுநில அரசுகள்	2500	
		26000	560

இந்த அட்டவணைக் கணக்கு ஒரு தோராயமான மதிப்பீடுதான். கடந்த நூறாண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் களஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தென்னிந்தியக் கல்வெட்டுகள் (South Indian Inscriptions) தொகுதிகள், கல்வெட்டு ஆண்டறிக்கைகள் (Annual Report on Epigraphy) முதலியவற்றை அடிப்படையாக வைத்து இக்கணக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் பல ஆயிரங்கள் இருக்கலாம். மேலே உள்ள எண்ணிக்கையில் அண்டை மாநிலங்களிலுள்ள தமிழ்க் கல்வெட்டுக்களும் அடங்கும். ஆந்திரமாநிலத்தைச் சேர்ந்த, குறிப்பாக திருமலை-திருப்பதிக் கோயில்களைச் சேர்ந்த, தமிழ்க் கல்வெட்டுக்கள் 1200ம், கன்னட மாநிலத்தில் தென் மாவட்டங்களிலுள்ள 1100ம், கேரளத்தில் தென் மாவட்டங்களில் உள்ள 400ம் இவ்வகையில் சேரும்.

மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக் கல்வெட்டுகளின் பாடங்கள் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்

துறையின் (இ.தொ.து.) கல்வெட்டியல் பிரிவு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, கன்னட மாநில அரசு தொல்லியல் துறை, திருமலை-திருப்பதி தேவஸ்தானம், புதுக்கோட்டை சமஸ்தானம், திருவாங்கூர் கொச்சி சமஸ்தானம், தமிழ்ப்பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்கள் மூலம் வெளியாகியுள்ளன. (இந்நூற்பட்டியல் நூலில் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது). பாடங்கள் வெளியிடப் படாத பிற கல்வெட்டுக்களின் ஆங்கிலச் சுருக்கங்களை இ.தொ.து.வின் கல்வெட்டியல் பிரிவின் ஆண்டறிக்கைகளில் காணலாம்.

தமிழ்க் கல்வெட்டுக்களில் 95 விழுக்காடு கோயில் சுவர்களில் மீதே பொறிக்கப்பட்டுள்ளன. ஏதோ ஒரு வகையில் கோயில் நடைமுறைகளைப் பற்றியதாகவே உள்ளன. செப்பேடுகளில் பெரும்பாலும் ஒரு பகுதி (முதற்பகுதி) சமஸ்கிருதத்திலும் பிறபகுதி தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் மிகச்சிலவே இவ்வாறு இரட்டைமொழியில் உள்ளன. ஆயினும் சமஸ்கிருதச் சொற்கள் ஒன்றிரண்டு ஆங்காங்குக் கல்வெட்டுக்களில் காணப்படும்.

கல்வெட்டுகளின் படிவமும் பொருளீடும்

தமிழ்க் கல்வெட்டுக்களின் பாடங்களைப் பொறுத்த வரையில் எலலாக் காலத்துக்கும், இடத்துக்கும் சேர்த்து ஒரு பொதுப் படிவம் இருந்தது என்று சொல்ல இயலாது. இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் அது மாறுபடுகிறது. சமஸ்கிருதத்தில் யாக்ஞவல்கியர், விஷ்ணு போன்றோரால் எழுதப்பட்டுள்ள தர்மசாத்திரங்களில் ராஜசாஸனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கணம் அல்லது வரையறை தமிழ்க் கல்வெட்டுக்களுக்கும் பொருந்தும் என்று சில ஆராய்ச்சியாளர் கருதுவர். 4-6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலப் பல்லவர்களின் சில சமஸ்கிருதச் செப்பேடுகள் இந்த இலக்கணத்துக்குப் பொருந்தும். இவற்றில் அன்று ஆளும் அரசனின் முன்னோர் மூன்று தலைமுறைக்குக் குறிப்பிடப்படுவர், கொடை நிலத்தின் அளவும் எல்லைகளும் குறிக்கப்படும், அரசனின் இலச்சினையும் கையெழுத்தும் இடப்பட்டிருக்கும். ஆயினும் நான்காம் நூற்றாணடுக்கு முந்தியும் ஆறாம் நூற்றாண்டுக்குப் பிந்தியும்

உள்ள கல்வெட்டுக்கள் அல்லது செப்பேடுகள் இந்தியாவில் எப்பகுதியில் பார்த்தாலும் இந்த தர்மசாத்திரம் கூறும் இலக்கணத்தை ஒட்டியெழுதப்பட்டுள்ளன என்று சொல்ல இயலாது. தர்மசாத்திரங்களும், நீதி நூல்களும் காலங்கடந்தவையல்ல, அவை யெழுந்த காலத்தையே பிரதிபலிக்கின்றன என்ற வரலாற்றுண்மையை மனங்கொள்ளல் வேண்டும். எனினும் தர்ம சாத்திரக் கருத்துக்கள் ஓரளவு பின்வந்த கல்வெட்டுக்களைப் பாதித்திருக்கின்றன என்பதையும் மறுக்க இயலாது.

தெளிவாகச் சொன்னால் ஒவ்வொரு காலத்திலும் நிலவிவந்த அரசியல், சமுதாய, பொருளாதாரச் சூழல் அவ்வவ்காலக் கல்வெட்டுக்களின் வடிவங்களை நிர்ணயித்தது. இந்தக் காரணத்தினால் தான் கல்வெட்டுக்களை அவையெழுந்த காலத்தின் வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ள முடிகிறது. கல்வெட்டுக்களின் சில பொதுக்கூறுகளாகக் கீழ்வருபவற்றைக் கூறலாம்.

1. மங்கலச் சொல் அல்லது சொல் தொடர்
2. அரசனின் பெயரும் ஆட்சியாண்டும்
3. கல்வெட்டின் நோக்கம்
4. ஓம்படைக்கிளவி

முதல்கூறான மங்கலச் சொல் பெரும்பாலும் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று தொடங்கும். சில போது, குறிப்பாகச் செப்பேடுகளில், சில தெய்வங்களின் மீதான சுலோகங்களைக் கொண்டிருக்கும். இரண்டாம் கூறில் அரசன் சில அடைமொழிகளோடு, அல்லது விருதுப்பெயர்களோடு குறிப்பிடப்படுவான். சோழப் பேரரசன் முதல் ராஜராஜன் காலந்தொடங்கி இப்பகுதியில் அரசனின் புகழ்பாடும் மெய்க்கீர்த்தி செய்யுள் நடையில் கொடுக்கப்பட்டுள்ளது. செப்பேடுகளில் இம்மெய்க்கீர்த்தி சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கும். ஆட்சியாண்டுடன் பொதுவாக மாதம், நாள், திதி (தேய்பிறை, வளர்பிறை) நாள் மீன் (நட்சத்திரம்), கிழமை போன்ற பஞ்சாங்கக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கும். 14ஆம் நூற்றாண்டிலிருந்து, அதாவது விஜயநகர ஆட்சிக் காலந்தொடங்கி ஆட்சியாண்டுக்குப் பதிலாக

கலிஆண்டு, சகஆண்டு, தமிழாண்டு என்று தவறாகக் குறிப்பிடப்படும் வியாழவட்ட ஆண்டு (அறுபது ஆண்டுகள் வட்டம்) ஆகியவை தனித்தோ சேர்த்தோ கொடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கூறே கல்வெட்டின் மிக முக்கிய பகுதியாகும். இது அவ்வக் கல்வெட்டின் நோக்கத்துக்கு ஏற்ப பலவகைப்படும். பெரும்பாலான கல்வெட்டுக்கள் ஏதாவது ஒரு கொடையை பதிவு செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ்வகைக் கல்வெட்டுக்களில் கொடையாளர், கொடையைப் பெறுபவர், கொடை (தானம்) ஆகியன பற்றிய செய்திகள் நிறையக் காணப்படும். கொடுப்பவர், பெறுபவர் ஆகியோருடைய ஊர், நாடு முதலியன, அவர்கள் சமுதாயத் தகுதி, செய்யும் தொழில் ஆகிய செய்திகள் பெரும்பாலும் குறைத்தோ கூட்டியோ இடம் பெறும். கொடை நிலம், தானியம், பொன், காசு, பாத்திரங்கள், நகைகள், விலங்குகள் (ஆடு, பசு, எருமை) என்று கொடைகள் பலவகைப்படும். பத்தாம் நூற்றாண்டு வரை ஆடு, மாடுகள் கொடுப்பது பெரும் வழக்கமாக இருந்தது. பின்னால் நிலக்கொடைகள் பெருகின. நிலத்தைப் பொறுத்து அது கொடுத்தவரின் சொந்த நிலமா, வாங்கிய நிலமா, அது எங்கிருந்தது, நன்செயா, புன்செயா, எவ்வளவு விளைந்தது, எப்படி நீர்பெற்றது இப்படித் தொடர்புடைய செய்திகள் பல கொடுக்கப்படும். கொடையாளர் அரசனாக இருந்தால் ஓலை, அதிகாரிகள், புரவுவரித் திணைகளத்தார் முதலிய பல அரச அலுவலர்கள் குறிக்கப்படுவார்கள். நாட்டுப்பிரிவுகள், ஊர்கள் ஆகியவற்றின் ஆட்சிக்குழுக்களான, நாட்டார், சபையார், ஊரார், நகரத்தார் முதலியோர் கொடையாளர்களாகவும், கொடையைக் கோயிலுக்காக வாங்கிப் பேணுபவர்களாகவும் பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறார்கள். கொடை பெறுபவர்கள்/பெறுபவை பெரும்பாலும் கோயில்களே. கோயில்களிலேயே பெரும்பாலான தமிழ்க்கல்வெட்டுக்கள் உள்ளமைக்கு இதுவே காரணம். பெரும்பாலும் சிவன் அல்லது விஷ்ணு கோயில்கள் இவை. இவையல்லாமல் சில புத்த, சமணப் பள்ளிகளும் கொடைகளைப் பெற்றன. கோயில்கள் சார்ந்த மடங்களுக்கும் கொடுக்கப்பட்டன.

சில கல்வெட்டுக்கள் கொடையல்லாத வேறு செய்திகளைப் பற்றியன. சில நில விற்பனை, நிலக் குத்தகை பற்றிய ஆவணங்கள். நில உடமை பற்றிய பல செய்திகளை இக்கல்வெட்டுக்களில் காணலாம். சில கல்வெட்டுக்கள் தனித்து அரசியல் ஆவணங்கள் எனலாம். குறுநிலத்தலைவர்கள் தமக்குள் செய்துகொண்ட நிலமைத்திட்டு என்ற அரசியல் உடன்படிக்கைகள் இவ்வகையில் அடங்கும். மூன்றாம் ராஜராஜனை கோப்பெருஞ்சிங்கன் என்ற குறுநில அரசன் சிறைசெய்து சேந்தமங்கலத்தில் அடைத்ததும் சோழனைப் போசள அரசன் படை வந்து சிறைமீட்டதும் ஒரு தனிக் கல்வெட்டாக உள்ளது. ஆயினும் இத்தகைய அரசியல் கல்வெட்டுக்கள் மிகச் சிலவே. வட தமிழ்நாட்டில் (தர்மபுரி, வடார்க்காடு மாவட்டங்கள்) கி.பி. 6ஆம் நூற்றாண்டு தொடங்கி பத்தாம் நூற்றாண்டு முடியக் கிடைக்கும் ஏராளமான நடுகல் கல்வெட்டுக்கள் எதிரிகளிடமிருந்து தங்கள் ஊரையும், ஊர்த்தொறுக்கள் அதாவது கால்நடைகளையும் காப்பாற்றப் போராடி உயிர்நீத்த வீரர்கள் நினைவாக அவர்களைப் போற்றி யெழுதப்பட்டவை ஆகும்.

இறுதிக் கூறான ஓம்படைக்கிளவி செய்யப்பட்ட கொடைகளின் பாதுகாப்புக்காக ஏற்பட்டதாகும். அதாவது அக் கொடைகளுக்கு எந்த இடையூறும் வராமல் கொடைக்குத் தொடர்பான யாவரும் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நயத்தாலும், அச்சுறுத்தலாலும் சொல்வது இதன் உள்நோக்கம். முதலில் ஓம்படைக்கிளவி 'பன்மாகேசுவர ரக்ஷை', 'ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை' 'இது அழித்தார் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் பாவம் கொள்வார்' என்று சிறு வாக்கியங்களாக இருந்தன. நாளடைவில் இவ்வாக்கியங்கள் நீண்டதோடு சொல்லின் கடுமையும் அதிகமாகியது. அவ்வக்கால சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், சாதி நம்பிக்கைகளையும் எதிரொலிப்பவையாகவும் மாறின.

வரலாற்றுச் சான்றுகள்

கி.பி. 4ஆம் நூற்றாண்டு தொடங்கி 17ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்து தமிழ்நாட்டு வரலாறு பெரும்பாலும்

கல்வெட்டுக்களை அடிப்படையாக வைத்தே எழுத வேண்டியுள்ளது. பொதுவாக இந்தியாவின் பிற பகுதிகளின் வரலாறுகளுக்கும் இது பொருந்தும். அக்காலத்தைப் பற்றிய எந்த வரலாற்று நூலை எடுத்துப்பார்த்தாலும் இது விளங்கும். அதற்கு இலக்கியங்கள் ஓரளவே மூலச்சான்றுகளைத் தந்துள்ளன. மேலும் பல இலக்கியங்களின் காலங்களே கல்வெட்டுச் செய்திகளைத் துணைக்கொண்டுதான் நிறுவப்பெற்றுள்ளன என்பதையும் நினைவுகூரவேண்டும். மற்ற வரலாற்று மூலங்களை விட கல்வெட்டுக்கள் நம்பத்தகுந்தவை, ஏனெனில் இவை பொறிக்கப்பட்ட காலத்திற்குப் பின் பெரும்பாலும் எந்த மாற்றத்தையும் அடைவதில்லை. இலக்கியங்களில் ஏடுபெயர்த் தெழுதுவாரால் பலமாற்றங்களும் இடைச் செருகல்களும் புகுத்தப்படுகின்றன என்பது யாரும் அறிந்த உண்மை. பெயர்த்தெழுதப்பட்ட கல்வெட்டுக்கள் மிகச் சிலவே. சில செப்பேடுகளும் பெயர்த்தெழுதப்பட்டுள்ளன, அல்லது சிலசமயம் போலிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளை எளிதில் இனங்கண்டு கொள்ளலாம்.

பெரும்பாலான கல்வெட்டுக்களுக்குக் காலத்தைக் கணித்தறிவது எளிது. வரலாற்றுக்குக் காலம் இன்றியமையாத ஒரு தேவையாகும். கல்வெட்டுக்களின் இன்னொரு சிறப்புத் தன்மை அவற்றின் உலகியல்சார்பான, மிகைப்படுத்தாத நடையாகும். கற்பனை வளமும், எதையும் ஏற்றிச் சொல்லும் தன்மையும் கொண்ட இலக்கிய நடைக்கு இது மாறானதாகும். மெய்க்கீர்த்திப் பகுதிகளில் வரும் சில உயர்வு நவிற்சிகளையும், கற்பனைகளையும் விலக்கிவிட்டால் பெரும்பாலும் கல்வெட்டுக்கள் அன்றாடச் செய்திகளைத் திரிபில்லாமல் சொல்லுவதைப் பார்க்கலாம். இவை கோயில் கல்வெட்டுக்கள் ஆதலால் கோயில், சமயவழிபாடு தொடர்பான செய்திகளுக்கு அதிக இடம் கொடுப்பது மறுக்கமுடியாது. இந்த ஒரு சார்புத் தன்மையை மட்டும் உணர்ந்து மறக்காமலிருந்தால் இவற்றை வரலாற்று மூலங்களாகப் பயன்படுவதில் தவறேற்படாது.

கல்வெட்டுப் பொறித்தவர்கள் அவற்றை வரலாற்று மூலங்களாகக் கருதவில்லை. பழஞ்செய்திகளை காலமுறைப்படுத்திச் சொல்லுவதோ, பொருளாதார, சமுதாயச் செய்திகளை முறையாக

விவரிப்பதோ அவர்களின் முக்கிய நோக்கங்களல்ல. இக்கால வரலாற்றாய்வாளர்களே இவற்றை வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. தனித்தனியாகப் பார்த்தால் கல்வெட்டுக்கள் ஏதோ துணுக்குச் செய்திகளை அரைகுறையாகத் தருவதாகத் தெரியும். ஒரு வட்டாரத்தில் கிடைக்கும், அல்லது ஒரு கால எல்லைக்குள் எழுதப்பட்ட கல்வெட்டுக்களை ஒரு தொகுதியாக நோக்கினால்தான் அவைகள் வரலாற்றுப் பொருளுடையன வாகப்படும். தனிக்கல்வெட்டுக்களை வைத்து ஏதாவது ஒரு கருத்தை நிறுவுவது ஓரளவுக்குத்தான் இயலும். பொதுவாக இந்த முயற்சி பயனற்றதாக முடியும், சிலபோது தவறான முடிவுகளுக்கும் இட்டுச்செல்லும். காட்டாக, தஞ்சாவூரில் உள்ள ஒரே ஒரு கல்வெட்டில் மட்டும் வரும் ஒரு சொல் ஐம்பதின்மேலகரம். இதை ஒரு நாட்டுப் பிரிவு என்று எடுத்துக்கொண்டு விஜயநகர ஆட்சியில் தமிழ்நாட்டில் ஐம்பது ஐம்பது ஊர்கள் கொண்ட ஒரு நாட்டுப்பிரிவு நாடு முழுவதும் இருந்தது என்று டி.வி.மகாலிங்கம் கருத்துரைக்கிறார். உண்மையில் இந்தச் சொல் ஒரு ஊரின் பெயரே. வேறெந்த இடத்திலும் இப்பெயர் வரவில்லை. எனினும் இது நாள்வரை இந் நாட்டுப்பிரிவு உண்மை என்று நம்பப்பட்டுவருகிறது.

தொடர்புடைய கல்வெட்டுக்களைத் தொகுத்து ஒருசேர ஆராய்ந்தால் எப்படி சிறந்த வரலாற்றுண்மைகள் வெளிப்படும் என்பதை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை வெளியிட்டு வரும் பருவ இதழான எபிகிராஃபியா இண்டிகா வரிசையில் வெளியாகியுள்ள பல சிறப்புக் கட்டுரைகளைப் பார்த்தால் விளங்கும். வெங்கடசுப்பாஅய்யர் தொகுதி 28இல் புங்கனூரில் (சித்தூர் மாவட்டம், ஆந்திரமாநிலம்) கிடைத்த இரு கல்வெட்டுக்களைப் பதிப்பித்துள்ளார். இவையிரண்டிலும் அரசன் பெயர் குறிப்பிடப்படாமல் சக ஆண்டே கொடுக்கப் பட்டுள்ளது. இதுபோன்றே இவ்வட்டாரத்தில் சக ஆண்டுக் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் சேர்த்து இப்பகுதியில் கி.பி.9,10ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலையை இக்கல்வெட்டுக்கள் எப்படி எதிரொலிக்கின்றன என்று திறமையாக விளக்குகிறார் ஆசிரியர். மற்றபடி இந்த

இருதனிக்கல்வெட்டுக்களை மட்டும் வைத்துப்பார்த்தால் ஒன்றும் அதிகமாக விளக்கிவிடமுடியாது.

இதேபோல பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி உத்தரமேரூர் என்று இன்று அழைக்கப்படும் உத்தரமேருசதுர்வேதிமங்கலத்தில் கிடைத்த எல்லாக் கல்வெட்டுக்களையும் தொகுத்து அவற்றின் வரலாறு முழுவதையும் பற்றி எழுதி உள்ள ஒரு சிறந்த கட்டுரையையும் இங்கு எடுத்துக்காட்டலாம். பெரும்பாலோர் உத்தரமேரூர் கல்வெட்டுக்கள் என்றால் குடவோலைமுறை பற்றி உள்ள இரு கல்வெட்டுக்கள் தான் என்று கருதி, அவற்றைமட்டும் வைத்து சோழர் ஊராட்சி முறை பற்றி சில தவறான கருத்துக்களைக் கூறியும் நம்பியும் வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் தனிக்கல்வெட்டுக்களை மட்டும் வைத்து செய்யும் ஆராய்ச்சியைவிட்டு வட்டாரம், கால அடிப்படையில் தொகுப்பு செய்து ஆராயும் முயற்சி வளர்ந்து வருகிறது. ஜப்பான் நாட்டுப் பேராசிரியர் கராஷிமா சோழர், விஜயநகரகால வரலாற்றில் மேற்கொண்டுவரும் ஆய்வை இங்கு எடுத்துக்காட்டலாம். அவர் வழக்கமாக சில ஊர்கள் அல்லது வட்டாரக் கல்வெட்டுக்களை முழுமையாக எடுத்துக்கொண்டு கால அடிப்படையில் ஆராய்கிறார். கல்வெட்டுப் பாடங்களை நன்கு ஊன்றிப்பார்த்து, பகுப்பாய்வு செய்து தரவுகளைச் சேர்ப்பதோடு, புள்ளியியல் முறைகளைப் பயன்படுத்தி தரவுகளைச் சீர்தூக்கிய பிறகே கருத்து விளக்கம் செய்ய முற்படுகிறார். இவ்வாய்வாளர்களை முன்னோடிகளாகக் கொண்டு கல்வெட்டுக்களைப் பயன்படுத்தி முறையான வரலாற்றாய்வுகளை மேற்கொள்ளல் வளர்ந்துவரும் தலைமுறையினரது கடமையாகும்.

7

செப்பேடு பதிப்பித்தலில் அணுகுமுறை

செ. இராசு

உலோகங்களில் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, ஈயம், இரும்பு முதலியவற்றை எழுத மக்கள் பயன் படுத்தினாலும், அவற்றுள் செம்பில் பயன்பாடே அதிகம்.

செம்பில் எழுதியவை செப்பேடு, பட்டயம், செப்புப் பட்டயம், தாமிர/தாம்பிர சாசனம், தாமிரப் பட்டயம், செப்புப் பத்திரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டில் செப்பேடுகள் கிடைக்கின்றன. பல்லவர், சேரர், பாண்டியர், சோழர் காலத்தில் செப்பேடுகள் ஓரளவு அளிக்கப்பட்டாலும், விசய நகர மன்னர், நாயக்கமன்னர் காலத்திலும், சேதுபதி, தொண்டைமான் போன்ற சிற்றரசர் காலத்திலேயும், பாளையக்காரர் காலத்திலும் செப்பேடுகள் மிகவும் அதிகமாக அளிக்கப்பெற்றன. பிற்காலத்தில் கல்லில் எழுதும் மரபு குறைந்ததே இதற்குக் காரணம்.

தமிழ்நாட்டின் பண்டைய செப்பேடுகள் பனை ஓலைகளை முன் மாதிரியாக வைத்தே நீள்சதுர வடிவில் தயாரிக்கப்பட்டன. ஆனால் பிற்காலச் செப்பேடுகள் வடநாட்டு முறையைப் பின்பற்றிப் புத்தகவடிவில் தயாரிக்கப்பட்டன.

செப்பேடுகளை இப்போதைய எழுத்து வடிவில் மாற்றஞ்செய்து சரியான பாடம் தேர்ந்தெடுத்துச் செப்பேட்டின்

காலத்தைக் கணித்து ஆய்வுக் குறிப்புக்களுடனும் படங்களுடனும் பதிப்பிப்பதே செப்பேடு பதிப்பிப்பாளர்களின் பணியாகும்.

பெரும்பாலும் உழும்போதோ அல்லது வேறு எதற்காவது தோண்டும்போதோ நிலத்தினுள்ளிருந்து தற்செயலாகப் பல செப்பேடுகள் கிடைக்கின்றன. பரம்பரை பரம்பரையாகவும் சிலரிடம் செப்பேடுகள் பாதுகாக்கப்பெறுகின்றன.

செப்பேடுகள் வைத்திருப்போர் வெளியில் யாருக்கும் எடுத்துக் காட்டுவதில்லை. காட்ட மிகவும் அச்சப்படுகின்றனர். அவற்றில் எழுதப் பெற்றிருப்பவை என்னவென்று தெரியாமல், ஏதோ புதையல் கிடைக்கும் இடமோ, வேறு பெரும் இரகசியமோ அவற்றின் எழுதப் பெற்றுள்ளன என்று அவர்கள் நம்புகிறார்கள். சிலர் தங்களுக்கு நன்மை தரும் மந்திரங்கள் அவற்றில் இருப்பதாக எண்ணுகிறார்கள். அவற்றைப் பிறருக்குக் காட்டினால் அவற்றின் பயனைத் தாம் அனுபவிக்க முடியாமல் போய்விடுமோ என்று நினைக்கிறார்கள். அவைகளில் பெரும்பாலும் நிலங்கள், சொத்துகள், பிற உரிமைகள் பற்றிக் கூறியிருப்பதால், அவற்றைப் பிறர் பார்த்தால் அந்த உரிமைகள் பறிபோய்விடுமோ என்றும் அஞ்சி அவற்றை மிகவும் இரகசியமாகப் பாதுகாத்து வருகிறார்கள். எனவே கிடைத்தவற்றைக் காட்டிலும் இன்னும் நமக்குக் கிடைக்காத செப்பேடுகள் பல மடங்கு இருக்கும்.

தமிழ்நாட்டில் ஓரளவு கண்டறியப்பட்ட செப்பேடுகளும் முழுமையாகப் பதிப்பிக்கப் பெறவில்லை. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் முதல் மூன்று தொகுதிகளில், கல்வெட்டுக்களுடன் செப்பேடுகளும் பதிப்பிக்கப் பெற்றன. பின்னர் வந்த 4 முதல் 24ஆம் தொகுதிகளில் செப்பேடுகள் பதிப்பிக்கப் பெறவில்லை. எபிகிராபியா இண்டிகாவிலும், தனிச் சிறப்புத் தொகுதிகளிலும் செப்பேடுகள் சில பதிப்பித்து வெளியிடப் பெற்றாலும், எல்லாச் செப்பேடுகளையும் முறையாக முழுமையாகப் பதிப்பிக்கும் பணி இன்னும் தொடங்கப் பெறவில்லை.

ஒவ்வொரு செப்பேட்டுக்கும் அது கிடைத்துப் பதிப்பிக்கும் வரலாறு ஒன்றுண்டு. வரலாற்றுச் சிறப்பு மிக்க பாண்டியரின்

வேள்விக்குடிச் செப்பேடு மைப்படி கிடைத்து பதிப்பிக்கப் பெற முப்பது ஆண்டுகள் ஆயின. கரந்தைச் செப்பேடுகள் பதிப்பிக்கப் பெற்று வெளிவரச் சுமார் 34 ஆண்டுகள் ஆயின.

செப்பேடுகளுக்குப் பெயர் வைப்பதில் மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. பாதுகாப்பில் இருக்கும் இடங்களை வைத்துச் சில பெயரிடப்படுகின்றன (லெய்டன் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள்). பெரும்பாலானவை கிடைத்த இடத்தால் பெயர் பெற்ற செப்பேடுகள் ஆகும். காட்டு : பள்ளன் கோயில் செப்பேடுகள், கூரம் செப்பேடுகள். சில கொடை வழங்கப்பெற்ற இடங்களால் பெயர் பெற்ற செப்பேடுகள் ஆகும் (வேள்விக்குடிச் செப்பேடுகள், புல்லூர்ச் செப்பேடுகள்). ஒரே செப்பேட்டைக் கொற்றங்குடிச் செப்பேடு என்று தி.நா. சுப்பிரமணியமும்[1] பட்டத்தாள் மங்கலம் செப்பேடு என்று கே.வி.சுப்பிரமணிய அய்யரும் பதிப்பித்துள்ளனர்.[2]

ஓர் இடத்தில் யாராவது ஓர் அரசனுடைய கல்வெட்டு ஒன்று கிடைத்தால், அந்த அரசனுடைய ஆட்சி அந்த ஊர்வரை பரவியிருந்தது என்று பெரும்பாலும் கூறுகின்றோம். ஆனால் அதேபோல் ஓர் ஊரில் ஓர் அரசனுடைய செப்பேடு கிடைக்குமானால், அந்த அரசனுடைய ஆட்சி அந்த ஊர் வரையில் பரவியிருந்தது என்று உறுதியாகக் கூற இயலாது. பெரும்பாலும் கொடை கொடுக்கப்பெற்ற நிலங்களின் அல்லது ஊர்களின் பேரில் கொடை பெற்றவர்களுக்குரிய உரிமையை நிலைநாட்டும் ஆவணங்களாகச் செப்பேடுகள் பயன்பட்டனவாதலின், அத்தகைய செப்பேடுகள் பல கைகள் மாறித் தானம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு வெகு தொலைவில் உள்ள வேறோர் ஊரில் கிடைக்கவும்கூடும். எனவே அந்தச் செப்பேட்டில் கூறப்பெற்றுள்ள ஊர் எது என்று உறுதி செய்தாலல்லது, அந்தக் கொடையைக் கொடுத்த அரசனது ஆட்சி எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதைக் கூற இயலாது.

எல்லாச் செப்பேடுகளும் ஒரே அளவாக இருப்பதில்லை. முதலில், எழுதப்பெறுகின்ற செய்திகட்கு ஏற்ற அளவிற் செப்புத் தகட்டைக் காய்ச்சி வெட்டித்தட்டிச் சீராக்கிப் பலகைபோல் அமைத்துக்கொள்வர். பல ஏடுகள் இருப்பின், ஒன்றாகக் கோக்க

இணைப்பு வளையமும் தயார் செய்யப்படும். பிற்காலச் செப்பேடுகளில் அழகிய கைப்பிடிகள் அமைக்கப்பட்டுக் கொடைச் செய்திகளும், தலங்களுக்கு ஏற்றவாறு அழகிய வரைகோட்டு ஓவியங்களும் வரையப்பட்டன.

எழுதுவதற்கு முன் மெல்லிய கோடுகள் போடப்பட்டு, எழுதவேண்டிய செய்தியைப் பளிச்சென்று தெரியும் ஒரு பொருளில் முதலில் எழுதிக் கொள்வர். பின்னர், வரையப்பட்ட அவ்வெழுத்துக்களின் மேல் மிகக் கூர்மையான உளியைக்கொண்டு வெட்டுவர். சில செப்பேடுகளில் ஆழமாகக் கோடுகள் போடப்பட்டு, இருகோடுகளுக்குள்ளே எழுதப்பெறும். சில செப்பேடுகளில் எழுத்துக்கள் உளியால் வெட்டப் பட்டதற்கான, அடையாளம் தெரிகிறது. ஆனால் பல செப்பேடுகளில் மெழுகில் எழுதுவது போன்று எழுத்தின் வளைவுகள் சிதறாமல், வெட்டிய அடையாளம் தெரியாமல், கடினமான, உறுதியான செப்பேடுகளில் எப்படி அழகாக வெட்டினர் என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. புள்ளி புள்ளியாக எழுத்துக்களை வெட்டுவதுமுண்டு. நேராக எழுதப்பெறுவதற்காகப் போடப்பட்ட மெல்லிய கோடுகள் அழியாமல் சில செப்பேடுகளில் தெரிகின்றன.[3] பிழையான எழுத்துக்களின் மேல் சரியான எழுத்துக்கள் மீண்டும் வெட்டப்பெற்றன; அல்லது அவை அழிக்கப்பட்டன. பிழை அதிகம் ஏற்பட்டால், அப்பகுதியைக் காய்ச்சி அடித்து மீண்டும் அப்பகுதியை வெற்றேடாக்கி எழுதுவர்.[4] முன்பு எழுதப்பெற்ற பிழையான எழுத்துக்களும் சில செப்பேடுகளில் தெரிகின்றன. விடுபட்ட எழுத்துக்களை அருகில் மேலே அல்லது கீழே எழுதுவர். சில செப்பேடுகளில் அவை சேரவேண்டிய இடங்களை /,+ போன்ற குறிகள் அமைத்துக் காட்டியிருப்பர்.[5]

இச்செப்பேடு சாதனம் இயற்றியவன் புண்ணைவணம்,
இச்செப்பேட்டைச் செய்தவன் வேயீன்றமுத்து ஆசாரி,
செப்பேட்டில் வரைந்தவன் தாணப்ப முதலியார்,
செப்பேடு கொத்தியவன் விசுவகர்ம வங்குசம் தாணப்பன்,
இச்செப்பேட்டை வெட்டினேன் முத்தையன் ஆசாரி[6]

என வரும் பல்வேறு வகைப்பட்ட தொடர்களால் செப்பேட்டின் அமைப்பு முறைகளை நாம் நன்கு உணர முடிகிறது. ஓலையில் எழுதுவது நெட்டெழுத்து என்றும், செப்பேட்டில் எழுதுவது வெட்டெழுத்து என்றும் ஒரே செப்பேட்டில் குறிக்கப் பெறுகிறது.[7]

கொடைச் செய்தி முதலில் ஓலைகளிலே எழுதப் பெற்றது. பின்னர், தொடர்புடைய அலுவலர்கள் கையொப்பமிட்டு, கொடை பெற்றவர்கட்கு நாட்டார் மூலமாக ஓலை அனுப்பப் பெறும். பண்டைய செப்பேடுகளில் அந்த ஓலையை உரிய மரியாதையுடன் நாட்டார் பெற்று, கொடை நிலத்தையோ கிராமத்தையோ எல்லைகளில் பெண்யானை கொண்டு நடத்தி, எல்லை நிறுவிக் கொடையை உரியவருக்கு அளிப்பர் (ஆனைமங்கலம், கரிவலம்வந்தநல்லூர் என்ற பெயர்கள் இம்முறையில் ஏற்பட்டன எனலாம்).

பின்னர் இந்தக் கொடை நீடூழிகாலம் நின்று நிலைக்கவும், எல்லோரும் அறியும் பொருட்டும், பின்னர் வரும் வேறு அரசர்கள் இக்கொடையைத் தவிர்க்காமல் இருக்கும் பொருட்டும் கோயில்களிலோ அல்லது பொது இடங்களிலோ கல்லில் வெட்டப்பெறும். ஓலை விரைவில் அழிந்து விடுமாதலின், கொடை பெற்றவர் நீண்டகாலம் பயன்படுத்திக் கொள்ளச் செம்பிலும் வெட்டிக் கொடுக்கப் பெறும். இதனை

''கல்லிலும் செம்பிலும் வெட்டி
இவ்வூர் விட்டோம்''[8]
''கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளச் சம்மதித்தோம்''[9]
''ஓலை பிடிபாடாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
கொள்ளுக''[10]

என்ற தொடர்களால் அறிகின்றோம். ஓரிடத்தில் ''செப்பேட்டில் பொறிக்கப்படுவது மூன்றாம் பிரதி'' என்ற குறிப்பு வருகிறது.[11]

இதன்படி பார்த்தால் பெருவாரியான கல்வெட்டுகள் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டு நமக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கிடைப்பன மிக மிகச் சிலவே.

எனவே, இவ்வாறு கல்லிலும் செம்பிலும் எழுதுவது ஒரு மரபாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. குன்றத்தூரில் கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவனின் மூன்று கல்வெட்டுக்கள் செப்பேட்டில் பொறிக்கப்பெற்றுள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை படி எடுத்த செப்பேடுகளில், ஐந்து பாண்டியர் கல்வெட்டுக்களின் படிகள் என்று எண்ணக்கூடிய செப்பேடுகள் கிடைத்துள்ளன.

கோவில் கொடை தொடர்பான ஓலைகள் மட்டும் கோவிலில் கல்வெட்டுகளாக வெட்டப்பட்டன என்றும், தனி ஆட்களுக்கோ தனிக்குழுவினர்க்கோ அளிக்கப்பெற்ற கொடைகள் கல்வெட்டாகப் பொறிக்கப்பெறாமல் செப்பேடுகளாக மட்டும் செய்யப்பெற்று, அவர்கட்கு அளிக்கப்பெற்றன என்றும் தெரிகிறது. ஒரு செப்பேட்டில் 'கல்லிலும் வெட்டிக் கொள்ளுக' என்ற தொடர் வருகிறது. கொங்கு நாட்டில் சமுதாயச் செப்பேடுகள் பலவற்றிற்கு ஓலைப் படிகள் மட்டும் கிடைத்துள்ளன.

கூட்டெழுத்துக்கள் மற்றும் குறியீடுகள்

ஓலைகளில் போன்றே பல செப்பேடுகளில் கூட்டெழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கும். இக்கூட்டெழுத்துக்கள் சரியாகப் படிக்கப் பெறாவிட்டால் குழப்பம் நேரிடும். பல சொற்கள் குறியீடுகள் மூலம் குறிக்கப்பெறும். ஆண்டு, மாதம், தேதிகள், நிலம், பொன், காசு, பணம், வாரம், நெல், கலம் போன்ற சொற்கள் குறியீடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலச் செப்பேட்டில் 'திரிபு' என்றும், மவுனத் தம்பிரான் மடத்துச் செப்பேட்டில் 'ம' என்றும், புள்ளிருக்கு வேளூர்ச் செப்பேட்டில் 'பு' என்றும் வெட்டப் பெற்றிருப்பது அந்தந்த இடங்களின் முதற்குறிப்பாகலாம்.

சில செப்பேடுகளில் குறிப்பிட்ட செய்தி முடிவில்[1] என்றும், செப்பேட்டின் முடிவில்[2] என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. சில செப்பேடுகளில் உ என்று குறிக்கப் பெற்றிருப்பதைப் பிள்ளையார் சுழி எனக் குறிப்பிடுகின்றோம்.

தொடக்கத்தில் மட்டுமின்றி, இடையிலும் இறுதியிலும் அவ்வ...வம் குறிக்கப் பெறுகின்றது. தொடர்கள் முற்றுப்பெறும் போதும் சுலோகங்களின் இறுதியிலும் அது குறிக்கப் பெறுகின்றது. கையெழுத்துக்களுக்குப் பின்னும் அக்குறியீடு உள்ளது. ஒரு செப்பேட்டில் குடியானவர், அக்கிரகார அசேச வித்துவ மகாசனங்கள் ஒவ்வொருவர் கையெழுத்தின் பின்பும் சுமார் 30 இடங்களில் அக்குறியீடு உள்ளது.[13] எனவே பிள்ளையார்சுழி போன்று மங்கலத்திற்காகக் குறிக்கப்படும் அதே குறியீடு முற்றுப் புள்ளிகள் போலவும் பயன்படுத்தப் பெற்றுள்ளது என்றும் அறிகின்றோம்.

செப்பேடுகளில் கல்வெட்டுக்களில் போன்றே தமிழ் எண்களே எழுதப் பெற்றிருக்கும். 10/100/1000 ஆகியவற்றிற்குத் தனி வடிவங்கள் குறிக்கப் பெற்றிருக்கும். பின்னங்களும் செப்பேடுகளில் குறிக்கப்பெறும்.[14]

வரிவடிவங்கள்

செப்பேடுகள் கிடைக்கும் இடங்களுக்கேற்ப, வரிவடிவில் சில மாற்றங்கள் காணப்படும். வடசொற்களும், சுலோகங்க... கிரந்த எழுத்துக்களில் எழுதப்பெற்றிருக்கும். தமிழ் வரி...டிவச் சொற்களில் இடை இடையே கிரந்த எழுத்துக்கள் வரும். பல செப்பேடுகளில் இடைஇடையே தெலுங்கு, கன்னட, மராத்தி எழுத்துக்களில் அமைந்த சொற்களும் காணப்படும்.

தமிழ்ச் செப்பேடுகளை இப்போதைய எழுத்துக்களில் மாற்றி எழுதும்போது இடையிடையே உள்ள கிரந்த எழுத்துக்களையும் சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் ஒலி மாறாமல் தமிழ் வரிவடிவில் எழுதலாம். அடிக்குறிப்பில் அச்சொல் எம்மொழியில் உள்ளதெனக் குறிக்கலாம்.

இந்தியத்தொல்லியல் அளவீட்டுத் துறை வெளியீடுகளிலும், பல்லவர், பாண்டியர் செப்பேட்டுத் தொகுதிகளிலும் கிரந்த எழுத்துக்கள் தேவநாகரி எழுத்தில் அச்சிடப்பெறுகின்றன.[15]

தமிழ்ச் செப்பேடுகளைப் பதிப்பிக்கும்போது ஏகார ஓகார உயிர் எழுத்துக்களையும் பலர் குறிலாகவே அச்சிடும் முறையைப் பின்பற்றுவதால், பல மயக்கங்கள் ஏற்படுகின்றன. ஆய்வாளர்கட்குச் சரியான பொருள் புரிவதில்லை. ஆங்கில ஒலிபெயர்ப்பில் அவைகளை நெடிலாக எழுதும் அவர்கள் தமிழ்ப் பதிப்பிலும் நெடிலாகவே அவைகளை எழுத வேண்டும். ஓலை, ஏடு, செப்பேடு என எழுதினால், அவற்றின் பொருள் தெளிவாகும். உடும்பொடி (உடும்போடி), தென்படுவரை (தேன்படுவரை), கொட்டை (கோட்டை), பொய் (போய்), மெலொலை (மேலோலை), தெவன் (தேவன்) என்பன போன்ற சொற்கள் நெடிலாக எழுதப்படுமானால் பொருள் சிறக்கும்.

சில மயக்கங்கள்

பிற்காலச் செப்பேடுகளில் சில எழுத்து மயக்கங்கள் காணப்படுகின்றன. ர-ற; ண-ந-ன; ல-ள-ழ; ங-வ-ல; ஆகியவை மயங்கி, ஒன்று வரவேண்டிய இடத்தில் மற்றொன்று பொருள் உணர்ச்சியின்றி எழுதப் பெற்றிருக்கும்.

ர-ா-ர்; க-கு-க-த; ை-ஐ ஆகிய எழுத்துக்களை ஒரே அமைப்பில் எழுதுவதினாலும், மெய்யெழுத்துகட்குப் புள்ளி இடும் வழக்கம் பெரும்பாலும் இல்லாததாலும், இகர ஈகாரக் குறிகள் சரியாக வேறுபடுத்திக் காட்டப் பெறாததாலும் செப்பேடு பதிப்பிப்பவர்கள் மயங்கிச் சில வேறுபட்ட பாடங்களைக் கொள்ள நேருகிறது. காட்டு : எமமண்டலம் (எம் மண்டலம்), திட்டினபடி (தீட்டின்படி), எர்தம் (ஏரகம்), கேசபதி (கெசபதி), உன்பய சாமாம் (உபைய சாமரம்).

சாம என்பதை சரம, சாம், சர்ம, சரம் எனப் பல்வேறு சொற்களைப் படிக்க நேரிடுகிறது. பொருள் உணர்ச்சிக்கு ஏற்றவாறு சரியான பாடம் கொள்ளவேண்டும். காத்தூர்-கரத்தூர் என்றும், கரந்தை-காந்தை என்றும் படிக்கப்பட்டுள்ளது. ஏகார ஐகார இறுதிக்குப் பின்னர் யகரஒற்றுச் சில செப்பேடுகளில் எழுதப்பெற்றுள்ளது. நடுவேய், உலகத்தேய், தலைய், விலைய் என வருவதை மெய்யாகப் படிக்கா விட்டால் பொருள் மாறுபடும்.

காலக்கணக்கு

அரசனின் ஆட்சியாண்டுகள் மட்டுமின்றி சாலிவாகன சகாப்தம், கலியுக ஆண்டு, கொல்லம் ஆண்டு, ஹிஜ்ரி ஆண்டு, சுகர்சன் ஆண்டு, விக்கிரமாங்கத ஆண்டு, புதுவைப்பு ஆண்டு, வியாழவட்டம் என்று பல ஆண்டுக் கணக்குகள் செப்பேடுகளில் எழுதப் பெற்றிருக்கும்.

'யாண்டு பதின் மூன்றாவது நாள் 4360' என்று சில செப்பேடுகளில் குறிக்கப்பெற்றிருக்கும். கலியுகக் கோட்டு நாள் ''பதினாள்கு நூறாயிரத்து நாற்பத்து ஒன்பதினாயிரத்து எண்பத்து ஏழு சென்ற நாள்'' எனவும் ஆண்டுக் கணக்கிடு எழுதப்பெற்றிருக்கும்.

குறிப்புகள்

1. மிதிக் சொஸைட்டி ஜேர்னல் – தொகுதி 14 பக். 126–129.
2. எபிகிராபியா இண்டிகா–தொகுதி 18பக். 115
3. கரந்தைச் செப்பேடுகள் 26
4. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறையில் உள்ள அமர்சிங் செப்பேடு.
5. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50, பக். 34–35.
6. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்
7. கிருஷ்ணராஜ உடையாரின் கோயமுத்தூர்ச் செப்பேடு
8. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 17–253
9. கல்வெட்டு ஆண்டு அறிக்கை, 1904 எண் 670.
10. மேலது எண். 14.
11. தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுக்கள் தொகுதி 3 பகுதி 2, பக். 326.
12. இவை கல்வெட்டுக்களிலும் காணப்பெறும்.
13. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50, பக்.28–29.
14. விரிவான செய்திகளுக்குக் கணக்கதிகாரம், அண்டகோள விலாசம் முதலிய நூல்கள் பார்க்க.
15. எபிகிராபியா இண்டிகா, பல்லவர் செப்பேடுகள் 30, பாண்டியர் செப்பேடுகள் 10 பார்க்க.

8

மெய்க்கீர்த்தி

செ. இராசு

இலக்கணம்

முற்காலக் கல்வெட்டுக்கள் சிலவற்றிலும், பிற்காலக் கல்வெட்டுக்கள் பலவற்றிலும் முக்கியமான கல்வெட்டின் பகுதியாகத் தொடக்கத்தில் காணப்படுவது மெய்க்கீர்த்தியாகும். பாட்டியல் நூல்கள் சிறுபிரபந்த வகைகளில் மெய்க்கீர்த்தி, மெய்க்கீர்த்திமாலை ஆகியவைகளைக் கூறுகின்றன. அவைகட்குக் கூறப்பெற்ற இலக்கண அமைதிகள் கல்வெட்டுக்களில் காணப்பெறும் மெய்க்கீர்த்திகளுக்கும் பெரும்பாலும் பொருந்தி வருகின்றன.

'சீர்நான்கு ஆகி இரண்டுஅடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றுஅவன்
இயற்பெயர் பின்னர்ச் சிறக்க யாண்டுஎனத்
திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி'

'நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்
உரையாய் முடியும் எனஉரைத் தனரே'

'தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீர் அடியால்
எழிலரசர் செய்தி இசைப்பர்'

'சிறந்தமெய்க் கீர்த்தி அரசன் செயற்சொற்
றவையாச் செய்யுள்
அறைந்ததோர் சொற்சீர் அடியாம்'

'சொற்சீர் அடியால் தொழிற்படு கீர்த்தியைப்
பொற்புற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலை'

என்பன பாட்டியல் நூல்கள் கூறும் இலக்கணங்களாகும்.[1] உரைகாரர்களும்.

'ஆசிரியம் விரவிய சொற்சீரடிகளால் மன்னரது
உண்மைக் கீர்த்தியைத் தொடுத்துப் பாடுவது
மெய்க்கீர்த்தியாம்'

'குல பரம்பரையில் கீர்த்தியாக நடப்பித்ததைச் சொற்சீரடி
என்னும் கட்டுரைச் செய்யுளால் சொல்லுதல்
அம்போதரங்கம், அசையடி, பிரிந்திசைக்குறள், சொற்சீரடி,
எண் என்பன ஒருபொருட் கிளவியாம்'

என விளக்கம் எழுதியுள்ளனர்.[2]

மெய்க்கீர்த்தியின் பொருள்

மெய்க்கீர்த்தி என்ற தொடரில் மெய் எனவரும் சொல்லுக்குப் பலரும் உண்மை என்ற பொருளையே கூறிவருகின்றனர்.[3] ஒருவரது புகழைப் பேச வருகின்றவர் நான் உண்மையான புகழைக் கூறுகிறேன் எனக்கூறித் தொடங்குவார்களா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது. அபிதான சிந்தாமணியிலும் (பக். 1122) சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியிலும் (பக். 3336) அவற்றின் தொகுப்பாளர்கள் முறையே மெய்க்கீர்த்தி என்பதற்கு

'சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளால்
குலமுறையில் செய்த கீர்த்தியைக் கூறுவது'

'அரசனது புகழ் வரலாறுகளைக் கூறி அவன்
தேவியுடன் வாழ்க என்று வாழ்த்தி அவன்
இயற்பெயருடன் ஆட்சி வருடத்தைக் கூறும்
பாடல்வகை'

எனப்பொருள் தருகின்றனர். இவற்றில் கீர்த்தியை மட்டுமே காணுகிறோம். மெய்-உண்மை என அவர்கள் எழுதவில்லை.

மு. இராகவையங்கார் மெய்க்கீர்த்தி என்ற தொடரைக் 'கீர்த்திமெய்' எனக்கொண்டு மெய்க்கீர்த்தி அரசர்களின் கீர்த்திமெய்யை நிறுவுகின்றன என்று கூறி அவற்றைப் புகழ்ச்சிப் பாடல்கள் என்றும் கூறுகிறார்.[4]

மெய் என்றால் உடம்பு. உடம்பு என்று பொருள்தரும் சொல் ஆகுபெயராக அதனையுடைய ஒருவர்க்கு ஆகி மெய் என்றாலே ஆள்-ஓர் ஆள்-ஒருவர் என்று பொருள் குறிப்பதைக் கல்வெட்டுக்களில் பல இடங்களில் காணுகின்றோம்.

திருக்கோயில் காவலரை மெய்காவல், மெய்காவலர்,
திருமெய் காவல், திருமெய்க்காப்பு என்றும்,
ஆட்களைச் சாட்டிக் கொடுக்கும் சிட்டை மெய்ப்பூட்டுத்திட்டு
என்றும்,
ஒருவருக்கு ஒரு நாளைக்கு என்பதை மெய்யால் திவசம்
என்றும்,
இவ்வளவுபேர் என்று நேரில் காண்பதை மெய்கண்டு
என்றும்,
ஒருவர்க்குரிய சோற்றரிசியை மெய்யால் அரிசி
என்றும்,
ஒவ்வொருவரும் தனித்தனியாக என்பதை மெய்வேறு
என்றும்,
கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[5]

'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் 'பாட்டுடைத் தலைவர் பெயர்' என்றே பொருள் எழுதுகிறார்.[6]

எனவே மெய்க்கீர்த்தி என்பதற்கு உண்மையான புகழ் என்று பொருள் கூறுவதைக்காட்டிலும் ஒருவரது புகழ், பாட்டுடைத்தலைவர் புகழ் என்று பொருள்கொள்ளுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. வடமொழியில் இவற்றைக் குறிக்கும் 'பிரசஸ்தி' எனும் சொல்லுக்கு கீர்த்தி,

புகழ், அறிவித்தல், பிரகடனம் செய்தல் என்று பொருள் கூறப்பெறுகிறதேயன்றி உண்மை என்ற பொருள் அங்கு கூறப்படுவதில்லை.

இராசராசனுக்கு முற்பட்ட மெய்க்கீர்த்திகள்

மெய்க்கீர்த்தி பற்றி எழுதுவோரும், இராசராசன் வரலாறு எழுதுவோரும் இராசராசன் காலத்தில்தான் முதன்முதலில் மெய்க்கீர்த்தி கல்வெட்டில் பொறிக்கப்பட்டது என்று எழுதியுள்ளனர்.

ஆனால் கல்வெட்டுக்கள் இராசராசனுக்கு முன்னர் சிறுதொடராக மெய்க்கீர்த்திகள் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

> **'தென்னாற்று எறிந்து இராச்சியமுங் கொண்ட'**
> **[நந்திவர்மன்]**
> **'தஞ்சை கொண்ட பரகேசரி' [விசயாலய சோழன்]**
> **'தொண்டைநாடு பாவிய இராசகேசரி' [முதல் ஆதித்தன்]**
> **'மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி'**
> **[முதல் பராந்தகன்]**
> **'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி'**
> **[ஆதித்த கரிகாலன்]**

என்ற தொடர்களைச் சிறுதொடர் மெய்க்கீர்த்திகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். இராசராசன் கல்வெட்டுக்களில் முதலில்

> **'சாலை கலமறுத்த கோவிராசகேசரி'**
> **'காந்தளூர்ச்சாலை கலமறுத்த கோவிராசகேசரி'**

என்ற தொடர் மட்டுமே மெய்க்கீர்த்தியாகக் காணப்படுகிறது. (தெஇக.7, 414, 857). பின்னர் ஆண்டுகள் செல்லச்செல்ல வெற்றிகள் பெருகப்பெருக மெய்க்கீர்த்தியும் வளர்வதைக் காணுகிறோம். எனவே இராசராசன் மெய்க்கீர்த்தியை விரிவுபடுத்திப் பெரிதாக்கினான் என்றே கொள்ளவேண்டும்.

முற்காலப் பாண்டியர் செப்பேடுகளிலும் தமிழ்ப் பகுதியில் கலியோசை தழுவிய மெய்க்கீர்த்திப் பகுதிகள் சேர்க்கப் பெற்றுள்ளன. அவற்றுடன் வடமொழிப் பிரசஸ்திப் பகுதிகளும் உள்ளன.

அறிஞர்கள் கருத்து

மெய்க்கீர்த்திகளைப் பற்றிக் கருத்துக்கூறிய அறிஞர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் 'கற்பனைக் கதைகளும் உயர்வு நவிற்சியும் கலந்தவை' என்று கூறினார். கே.கே.பிள்ளை அவர்கள் பொய்க்கீர்த்தி என்பார். இவை பிற்கால அரசர்களின் சில மெய்க்கீர்த்திகளுக்குப் பொருந்துமே அன்றி இராசராசன், இராசேந்திரன் போன்ற அரசர் மெய்க் கீர்த்திகளுக்குப் பொருந்தாது. அவை நடந்த ஆட்சியின் செய்திகளையே கூறுகின்றன. எடுத்துக்காட்டாக இராசராசன் மெய்க்கீர்த்தியில்

'திருமகன் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழில் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டு தன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோஸ்ரீ இராச கேசரி
வன்ம ரானஸ்ரீ இராசராச தேவர்க்கு....'

எனவரும் தொடர்கள் அவன் போர்ச்செய்திகளை மட்டும் வரிசையாகக் குறிக்கின்றன.

பாடபேதம் காணல்

இலக்கியங்களில் பாடபேதங்கள் ஏற்படுவதற்குக் காரணம் அவற்றின் பலபிரதிகளைப் பலர் எழுதுவதே, அதேபோல் ஓரே

வகை மெய்க்கீர்த்திகள் பல கல்வெட்டுக்களில், பல ஊர்களில் வெட்டப்பெறுவதால் இலக்கியங்கள்போல மெய்க் கீர்த்திகளிலும் பாடபேதங்கள் பல ஏற்பட்டுள்ளன. இதுவரை மெய்க்கீர்த்திகளில் பாடபேதங்கள் காணும் முயற்சி விரிவாக மேற்கொள்ளப்பெறவில்லை.

முதல் இராசராசனின் மெய்க்கீர்த்தியில்

'முரட்டொழில் சிங்களர் ஈழமண் டலமும்'

என்ற தொடருக்குப் பதிலாக

'முரட்டெழில் சிங்களர் ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ்தரு ஈழமண் டலமும்'
'எண்டிசை திகழ ஈழமண் டலமும்'
'எண்டிசை நிகழ்தர ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ்தர எறிகடல் ஈழமும்'
'ஆழ்கடல் சூழ்ந்த அருநிதி ஈழமும்'

என்றெல்லாம் பலவாறு எழுதப்பட்டுள்ளன.' இவற்றுள் சில எழுதுவோரால் மாற்றப்பட்டிருக்கலாம். ஒரு சிலவேனும் ஏதாவது அரசியல் காரணமாக மாற்றம் பெற்றிருக்கலாம். அவற்றின் காரணத்தை ஆய்வு செய்தல் வேண்டும்.

முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில்

'பொருகடல் ஈழத் தரசர்தம் முடியும்' என்ற தொடர்
'பொருதிடர் ஈழத் தரைசர்தம் முடியும்' என்றும்,

'முதிர்பட வல்லை மதுரைமண் டலமும்' என்ற தொடர்
'முதுரை படவல் மதுரைமண் டலமும்' என்றும்,

'வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்' என்ற தொடர்
'வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்' என்றும்,

'ஒளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடு' என்ற தொடர்
'ஒளித்த சயசிங்கண் அழப்பெரும் புகழொடு'
'ஒளித்த சயசிங்கண் அமர்ப்பெரும் புகழொடு' என்றும்,

'தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்' என்ற தொடர்
'தேனக் கலர்பொழில் மானக்க வாரமும்' என்றும்
எழுதப்பட்டுள்ளன.

மெய்யல்லா மெய்க்கீர்த்தி

காலம் செல்லச்செல்லத் தமிழக அரசர்தம் மெய்க்கீர்த்திகள் மிகவும் விரிவடைந்தன. வீரராசேந்திரசோழன் மெய்க்கீர்த்தி 158 அடிகளையும், சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி 132 அடிகளையும் கொண்டதாக விளங்குகிறது. எனவே எல்லாக் கல்வெட்டுக்களுக்கும் மெய்க்கீர்த்திகளை வெட்டுவதென்பது இயலாத காரியமாகவும் இருந்தது. சில கோயில் சுவர்களில் போதுமான அளவு இடம் இன்மையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதனால் முழு மெய்க்கீர்த்திகளுக்குப் பதிலாக

'ஸ்ரீமெய்க்கீர்த்திக்கு மேல்'
'ஸ்ரீமெய்க்கீர்த்திக்கு முன்னாக'
'புயல்வாய்த்து வளம்பெருக என்கிற பாட்டு எழுதி'
'ஸ்ரீமெய்க்கீர்த்தி வெட்ட இடம் இன்மையால்'
'ஸ்ரீமெய்க்கீர்த்தியுடைய திரிபுவனச் சக்ரவர்த்திகள்'

என்ற தொடர்கள் மட்டும் வெட்டப்பெற்ற கல்வெட்டுக்களைக்[6] காணுகிறோம். இவ்வமைப்பு பாண்டியர் கல்வெட்டுக்களில் அதிக அளவிலும், சோழர் கல்வெட்டுக்களில் குறைந்த அளவிலும் காணப்பெறுகின்றன. 'சீர்மெய்க்கீர்த்தி' எனும் பாட்டியல் கூறுவதையே கல்வெட்டு 'மெய்க்கீர்த்தி' எனக் குறிக்கிறது போலும்.

மெய்க்கீர்த்தி இலக்கியம் பாடியோர்

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் முதல் இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியில் முதல் இரண்டு அடிகளை எடுத்துக்காட்டிச் செய்யுள் என்றே அதனை அழைக்கின்றார்.[9] மூன்றாம் குலோத்துங்கனின் குத்தாலக் கல்வெட்டு மெய்க்கீர்த்தியைப் பாட்டு என்று குறிக்கிறது. எனவே மெய்க்கீர்த்திப் பகுதிகள் சிற்றிலக்கியங்களோடு ஒத்து எண்ணப்பட்டுப் பிரபந்தவகையுள் ஒன்றாகப் பாட்டியலுடையார்களால் கூறப்பெற்றன. வேள்விக்குடிச் செப்பேட்டிலும் 'இப்பிரசஸ்தி பாடின சேனாபதி ஏனாதி ஆயின சாத்தஞ்சாத்தன்' என்ற குறிப்பு இறுதிப் பகுதியில் வருகிறது.[10] எனவே மெய்க்கீர்த்தி இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளப்பெறுகிறது.

புறப்பாடல்களையும் குறிப்பாக வாகை, பாடாண் திணைப் பாடல்களைப் பார்த்தும், பதிற்றுப்பத்துப் பதிகங்களை ஒட்டியும் இவை தோற்றம் பெற்றிருக்கவேண்டும். இத்தகு சீரும் சிறப்பும் வாய்ந்த மெய்க்கீர்த்திகளைப் பாடியோர் மிக நல்ல இலக்கண, இலக்கியத் தேர்ச்சியுடன் கவிபாடும் வல்லமையும் கற்பனை ஆற்றலுமுடைய பெரும்புலவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் ஒருவர் பெயரேனும் நமக்குக் கிடைக்கவில்லை என்பது வருத்தமான செய்தியேயாகும். பிற்காலப் பாண்டியர் மெய்க்கீர்த்திகள் இலக்கிய நயம் மிகுதியும் உடையவை.

பிற்காலத்தில்

மன்னர்கள் தம் கல்வெட்டுக்களில் பொறித்துக்கொண்ட இம் மெய்க்கீர்த்தித் தொடர்கள் புகழ்மொழிகளாகக் குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள் கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றன. காலம் செல்லச்செல்ல வணிகர், வேளாளர், இடையர், குயவர், கைக்கோளர் போன்ற பல சமூகத்தினரும் தங்களுக்கென மெய்க்கீர்த்திகளை உருவாக்கிக் கொண்டனர். மக்களுக்குப் பாடப்பெற்ற இம்மெய்க்கீர்த்தியின் அமைப்பில் தெய்வத் திருமேனிகளுக்கும் புலவர்கள் பாடலாயினர்.

குறிப்புகள்

1. பன்னிரு பாட்டியல் (198, 199); வெண்பாப்பாட்டியல் (34); நவநீதப்பாட்டியல் (53); இலக்கண விளக்கப் பாட்டியல் (105); பிரபந்த தீபிகையும், இலக்கண விளக்கமும் மெய்க்கீர்த்தி மாலையையும் கூறுகிறது.

2. வெண்பாப் பாட்டியல் உரை பக். 52.

3. வெண்பாப் பாட்டியல் உரை மேலது; சுப்பிரமணியம், பூ. மெய்க்கீர்த்தி, பக். 9.

4. சாசனத் தமிழ்க்கவி சரிதம் பக். 216.

5. கோவிந்தராசன் சி. 'கல்வெட்டுத் கலைச்சொல் அகரமுதலி; சுப்பிரமணியன் தி.நா. தென்னிந்தியக்கோயில் கல்வெட்டுக்கள் 3 : 2

6. தொல் பொருள் 87.

7. தெஇக. 2:65; 5:975; 7:152; 662 முதலியன

8. தெஇக. 4:229; 5:999; 23:35; 7:445.

9. வீரசோழியம், யாப்புப் படலம் உரை 19.

10. பாண்டியர் செப்பேடு பத்து, பக். 43.

9

ஓலையும் கல்வெட்டும்

செ. இராசு

ஓலை எழுத்து

கல்வெட்டுகளுக்கும் செப்பேடுகளுக்கும் மூலங்களாக இருப்பவை பனை ஓலையில் எழுதப்பெற்ற செய்திகளேயாகும். அரசரின் ஆணையாக இருந்தாலும், அலுவலர்களின் கட்டளையாக இருந்தாலும், நாடு-சபை-ஊர்களின் முடிவுகளாக இருந்தாலும், புலவர்களின் கவிதையாக இருந்தாலும், தனிப்பட்டவரின் குறிப்புகளாக இருந்தாலும், வேறு எச்செய்திகளாக இருந்தாலும் அவை ஓலைகளிலேயே முன்பு எழுதப்பெற்றன. ஓலைகள் எங்கும் மிகுதியாகக் கிடைப்பதாலும், கையாளவும் இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும் வசதியாக இருப்பதாலும், எவ்விதச் சிரமமும் இன்றி எழுத முடிவதாலும், திருத்தம் செய்யவும், வேறு படிகள் எடுக்கவும் எளிமையாக முடியுமாதலாலும் எல்லோராலும் ஓலைகள் மிகுதியும் பயன்படுத்தப்பெற்றன.

சண்டேசுரன் ஓலை

சிவன் கோயிலுக்குரிய பொருளை வாங்கினாலும், விற்றாலும், கொடையாக அளித்தாலும் சண்டேசுர நாயனார் பெயரில் ஆவணம் எழுதுவது வழக்கம். அதனைச் சில கல்வெட்டுக்கள் ஒரு வெண்பா வடிவில் தருகிறது. செய்தி கல்வெட்டாயினும் அது 'சண்டேசுரன் ஓலை' எனப்பட்டது.

''சண்டே சுரன்ஓலை சாகரம்சூழ் வையகத்துக்
கண்டீசன் கருமம் ஆராய்க - பண்டே
அறம்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து''

என்பது அப்பாடலாகும்.

ஓலையும் திருமுகமும்

பொதுவாக அரசனால் இடப்பெறும் ஆணைகட்கு 'ஓலை' என்றே பெயர் வழங்கிற்று. ஓலை எழுதுகின்ற அரசு அலுவலரின் பெயரும் 'ஓலை' அல்லது 'திருமந்திர வோலை' எனப்பட்டது. சிலகோயில்களிலும் திருமந்திரவோலை அலுவலர் இருந்தனர். விசயநகர, நாயக்கர் ஆட்சிக் காலத்தில் 'இராயசம்' என்னும் அலுவலர்கள் ஓலை எழுதும் பணியை மேற்கொண்டனர்.

அரசரிடமிருந்து வந்த ஆவணம் ஓலையாகவே இருந்தாலும் அதனைப் பெரும்பாலும் 'ஓலை' என்று கூறும் வழக்கம் இல்லை. 'திருமுகம்', 'ஸ்ரீமுகம்' என்றே அவ்வோலை அழைக்கப்பெறும்.

கோனேரின்மை கொண்டான் ஓலை

பாண்டியர், சோழர் கல்வெட்டுக்கள் சிலவற்றில் கொடை கொடுத்த அரசர் இயற்பெயர் குறிக்கப்பெறாமல் கோனேரின்மை கொண்டான் எனச் சிறப்புப் பெயர் குறிக்கப் பெற்றிருக்கும். 'தனக்கு யாரும் ஒப்பில்லாத தன்மையுடையவன்' என்பதே இதற்குப் பொருள். இச்சிறப்புப் பெயர் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்கள் அரசர் நேராகவே அளித்த கொடையைக் குறிப்பதாகும். பெரும்பாலும் இச்சிறப்புப் பெயர் பெறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் 'நம்ஓலை', 'இவ்வோலை' 'ஓலை', 'திருமந்திரஓலை' என்ற சொற்கள் காணப்படும். இங்கு அரசர் தம் ஆணையை ஓலை என்றே குறிப்பதைக் காணுகின்றோம்.

விற்பனை தொடர்பான ஓலைகள்

பழங்காலத்தில் நில விற்பனைச் செய்தி மிகவும் சுவையுடையதாகும். நிலச் சொந்தக்காரர் ஊர்ப் பொது இடம் வந்து நிலத்தின் பெயரையும் எல்லைகளையும் கூறி 'விலை கொள்வார் உளரோ' என மும்முறை கூவவேண்டும். வாங்குபவர் 'விலை குறித்தால் கொள்வேன்' என அவ்வாறே எதிர்மொழி கொடுப்பர். விலை உறுதியானவுடன் அங்குள்ள பெருமக்கள் முன்னிலையில் அவ்விற்பனை ஆவணம் ஓலையில் எழுதப்பெறும். முதலில் 'நிலவிலைப் பிரமாண இசைவு தீட்டு', எழுதப்பெறும். இதனை இன்றைய அக்ரிமென்ட் (Agreement) என்ற ஆவணத்தோடு ஒப்பிடலாம். இவ்வோலை 'இசைவுதீட்டு', 'இசைவோலை' எனவும் கூறப்படும். பின்னர் ஒரு சிறுதொகை கொடுத்து விற்பனை உறுதி செய்யப்பெறும். அவ்வோலை 'கைச்செலவோலை' எனப்படும். 'கைத்தீட்டு' என்பதும் இதுவாக இருக்கலாம்.

பின்னர் இறுதியாகப் பொருள் முழுவதையும் கொடுத்து நிலத்தின் முழு உரிமையையும் பெறுவர். 'பொன்னறக் கொடுத்து மண்ணறக் கொண்டேன்' என எழுதும் இவ்வோலைக்குப் 'பொருள்மா அறுதிப் பொருட்செல வோலை' என்று பெயர். இவ்வோலையே விற்பனை தொடர்பான கடைசி ஓலையாகும்.

அறையோலை

ஊர்ச்சபைகள் கூடும் குறிப்பிட்ட காலத்தை அறிவிக்கப் பல வழிகளைக் கையாண்டனர். பறையறைந்து, காளம்ஊதி, இரட்டைக்காளம் இசைத்து, பெருங்குறி கொட்டி, தட்டழி கொட்டி, தம்மிஊதி, தம்மிஎழுதி அந்நேரத்தை அறிவித்தனர். இவ்வாறு அறிவிக்கும் அறிவிப்பை 'அறையோலை' என்பர். இங்கு நேரிடையாக ஓலை இல்லாவிடினும் அறைந்து தெரிவிக்கும் செய்தி 'அறையோலை' எனப்பட்டது.

ஓலை எழுதக் கூலியா?

'ஓலை எழுத்துப் பேறு', 'ஓலை எழுத்து வினியோகம்', 'ஓலைக்காசு', 'ஓலைச் சம்பளம்', 'ஓலைச்சம்படம்', 'ஓலைச்

சம்மாதம்' ஆகியவை ஓலை எழுதுவோருக்கு ஊதியம் தரும் பொருட்டு வாங்கப்பட்ட வரிகளாகத் தெரிகின்றன. 'ஓலைக்கூலம்' என்பது அவ்வாறு ஓலை எழுதுவோருக்குக் காசுக்குப் பதில் கொடுக்கும் தானியமாக இருக்கலாம்.

ஓலை முதல் நூலகம் வரை

தனி ஓலையை 'ஏடு' என்பர் (பெருந்தொகை 656). 'ஏடாயிரங்கோடி' என்று வீரராகவக் கவிராயர் கூற்று இதனை விளக்கும். 'பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்' என்பது பழமொழி. ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதும் முறை 'கீறல்' எனப்படும். எழுத்தாணியை 'ஊசி' என்றும் கூறுவர் (பெருந்தொகை 518). எழுதிய ஓலை எழுத்துக்களை 'நெட்டெழுத்து' என்பர். 'நெட்டெழுத்து' எழுதப்பட்ட ஓலை 'நெட்டோலை' ஆகி அது 'நீட்டோலை' ஆகியிருக்கலாம். சபை நடுவே நீட்டோலை வாசிக்கத் தெரியாதவனை அவ்வையார் நல்ல மரம் என்று கூறினார்.

பல ஏடுகள் சேர்ந்தது 'சுவடி' எனப்படும். அது 'ஏட்டுச்சுவடி' 'ஓலைச்சுவடி' என்றும் கூறப்பெறும். எண்சுவடி, அரிச்சுவடி என்பன சுவடி மூலமாகப் பெற்ற பெயர்; அச்சு வடிவம் பெற்ற போதும் அதன் பழம்பெயர் மாறாமல் உள்ளது. சுவடியைப் 'பொத்தகம்' என்றும் அழைப்பர். சுவடி தொங்கவிடும் உரி போன்ற கயிறு தாங்கு பலகை 'சுவடித்தூக்கு' எனப்படும்.

பல சுவடிகள் சேர்ந்த கட்டு 'கவளி' அல்லது 'பொத்தகக் கவளி' எனப்படும் (பெரியபுராணம், மெய்ப்பொருள் நாயனார் புராணம், பா.7, புத்தகக்கவளி). வெற்றிலைக் கட்டு இலைக்கட்டு போன்றவை 'கவளி' என்று கூறப்பெறும். ஓலைச்சுவடிகள் பலவும் பாதுகாப்பாக வைக்கப்பட்ட இடம் 'அரண்தரு காப்பு' எனப்பட்டது (பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம், பா.62). சுவடிகள் சேர்த்து வைக்கப்பட்ட இடம் 'சரசுவதி பண்டாரம்' எனப்பட்டது.

படியோலை

முதலில் எழுதப்பெற்ற ஓலையை 'மூல ஓலை' என்றும் அதன் நகல் ஓலை 'படி ஓலை' என்றும் கூறப்படும் (பெரியபுராணம், தடுத்தாட்கொண்டபுராணம், பா.56, 49). பண்டைய இலக்கியங்களின் ஓலைச் சுவடிகள் பெரும்பாலும் இன்று படி ஓலையாகவே நமக்குக் கிடைக்கின்றன. தமிழ்நாட்டுத் தட்பவெப்பம் நெடுநாள் சுவடி இருப்பதற்கு ஏற்றதில்லை என்பது பழஞ்சுவடிகள் அழிவுக்குக் காரணமாகலாம்.

பிற ஓலைகள்

புலவர் பாடிய சீட்டுக்கவி 'ஓலைச்சீட்டு' எனக் குறிக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் தேர்தலுக்கு வேட்பாளர் பெயர் எழுதிக் குடத்துள் இடப்படும் ஓலை 'குடவோலை' என்று கூறப்பட்டது. 'கயிறு பிணிக்குழிசி ஓலை' என்பது சங்க இலக்கிய வழக்கு. கிராமக்கணக்கில் பதியும் ஓலை 'பட்டோலை' எனப்பட்டது. பொருள் அடைமானம் பெறுபவர் 'அடையோலை' எழுதித்தந்தார். பிற்காலத்தில் இரு சாரார் எழுதும் ஒப்பந்த ஓலைகள் 'முறியோலை' எனப்பட்டது. 'முறி நறுக்கு' என்று சேதுபதி செப்பேடு கூறும். கம்பெனி திருவாகத்தின் பொழுதும், தஞ்சை மராட்டியர் ஆட்சிக் காலத்திலும் ஆவணங்கள் 'முத்திரை ஓலை'களில் எழுதப்பெற்றன. தருமங்களைக் குறிக்கும் 'அறவோலை'யும் அடிமை வழக்கத்தைக் குறிக்கும் 'ஆள்ஓலை'யும் (பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா.39, 42, 45) வழக்கில் இருந்த வேறு சில ஓலைகளாகும். தஞ்சை நாயக்கர் காலத் தங்கத் தகட்டுப் பொறிப்பு ஒன்று 'பொன்னோலை' எனப்பட்டது. மலையாளத்தின் செப்பேட்டைச் 'செம்போலை' என்பர். காது ஆபரணம் 'காதோலை' என்று கூறப்படும்.

ஓல வலசு, ஓலப் பாளையம் என்ற ஊர்கள் சுவடிகள் எழுத ஓலைகள் கொடுத்த ஊர்களாக இருக்கலாம். திருவரங்கக் கல்வெட்டில் ஓலைமங்கலம் என்ற ஊர் குறிக்கப்பெறுகிறது.

மீண்டும் ஓலை

காகிதம் நாட்டில் அறிமுகம் ஆன பின்னரும்கூட ஓலையில் எழுதும் வழக்கம் குறையாமலிருந்தது. பல அச்சு நூல்களைப் பார்த்தவர்கள் அவற்றை ஓலைச்சுவடியில் பெயர்த்து எழுதிக்கொண்டனர். அச்சு நூல்கள் கிடைப்பது அரிதாகவும், விலை அதிகமாகவும் இருந்ததே அதற்குக் காரணமாக இருக்கலாம். சில ஓலைச் சுவடிகளில் அந்நூல் அச்சிட்ட அச்சகம், விலை முதலிய விபரங்களும் குறிக்கப் பெற்றிருக்கும் (தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை 4/1840).

ஓவியத்திலும் சிற்பத்திலும்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள சோழர்கால ஓவியமாகிய சுந்தரர் வரலாற்றில் ஓலைச்சுவடி அக்கால எழுத்துக்களுடன் வரையப்பட்டுள்ளன. ரவி வர்மா எழுதிய கலைமகள் ஓவியத்திலும் அவரைப் பின்பற்றிப் பிறர் வரையும் ஓவியங்களிலும் இடக்கையில் ஓலைச்சுவடி காட்டுதல் மரபாக உள்ளது.

தாராசுரத்தில் உள்ள சுந்தரர் வரலாற்றுச் சிற்பத்தில் ஓலை காட்டப்பட்டுள்ளது. மதுரையிலும், விசயமங்கலத்திலும் உள்ள புலவர்கள் சிற்பங்களில் கையில் ஓலைச்சுவடி உள்ளன. திருப்பெருந்துறைச் செப்பேடு ஒன்றில் மாணிக்கவாசகருக்குக் குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளிச் சிவபெருமான் உபதேசம் செய்யும் நிலையில் வரையப்பட்ட வரைகோட்டு ஓவியத்தில் சிவபெருமான் கையிலும், பின்னர் அமர்ந்துள்ள இரு சீடர்கள் கையிலும் ஓலைச்சுவடிகள் காட்டப்பட்டுள்ளன.

பழந்தமிழர் வாழ்வில் 'ஓலை' பெற்ற இன்றியமையா இடம் மேற்கண்டவை மூலம் வெளிப்படுகிறது. இன்னும் பல ஓலைகள் இருக்கலாம். அவைகளை ஆய்ந்து வெளிப்படுத்துவது அறிஞர் கடமையாகும்.

10

சோழர் காலத்திய ஆவணப் பதிவுமுறைகள்

சு. இராசகோபால்

இடைக்காலத் தமிழ்நாட்டில் பலவகை ஆவணங்கள் வழக்கிலிருந்தன. தனியார் இருவரிடையே ஏற்படும் பரிவர்த்தனைகள், விற்பனைகள், உடன்பாடுகள்; சபை, ஊர் ஆகியவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், அளித்த சலுகைகள்; அரசு அளித்த ஆணைகள், சலுகைகள்; தொடர்ந்து நடைபெற வேண்டிய தர்மங்கள், நியதிகள் ஆகியவை ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டன. ஓலையிலோ, கல்லிலோ அல்லது செம்பிலோ இவை பதிவாயின.

தர்மசாஸ்திரம் போன்ற நீதிநூல்கள் ஆவணங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு வரன்முறைகள் வகுத்துள்ளன. வியாசர், பிரஜாபதி போன்றோர் ஆவணங்களை (பத்திரங்களை) உபகதபத்ரம் (ரசீது, ஒப்புச்சீட்டு), கிரயபத்ரம் (விலை), ஆத்ஹி பத்ரம் (அடைமானம்), சந்திபத்ரம் (உடன்படிக்கை), ஸ்திதிபத்ரம் (நிலையான நடைமுறை), விபாக பத்ரம் (பாகப்பிரிவினை), தாநபத்ரம் (கொடை), தாசபத்ரம் (அடிமை) என்று வகைப்படுத்தியுள்ளனர்.

சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் நிறையக் காணப்படுகின்றன. தன்மையில் கல்வெட்டுகள், தாமே ஆவணங்கள் என்றாலும், அவை மேலும் பலவகையான ஆவண வகை, முறைகளைக் காட்டி நிற்கின்றன. இவ்வகை முறைகள் ஒரு விரிந்த தலைப்பின்கீழ் சொல்லப்படவேண்டிய ஒன்று. இங்கு பெரும்பாலானவற்றை மேலோட்டமாகவே விளக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வகைகள்

ஆவணம் : விலை ஆவணம், நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஆவணங்களைப் பரிமாற்றிக்கொள்ள ஆவணக் களங்கள் இருந்தனபோல் தெரிகிறது. இன்று பதிவாளர் முன்னிலையில் விலைக்குண்டான தொகையைக் கொடுத்து வாங்குவது போலவே அன்றும் ஆவணக்களத்தில் தொகை கொடுத்து வாங்கப்பட்டது எனக் குறிப்புகள் உள்ளன. எனினும் இது தொடர்பான ஆவணக்களம், ஆவணக்களி, ஆவணக்களரி போன்ற சொற்களுக்கான பொருள்கள் மேலும் ஆராயப்படவேண்டியவையாகும்.

பிரமாணம் : விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிரியப் பிரமாணம், பிரியப் பிரமாணம், சண்டேச்வரப் பிரமாணம் என்று பிரமாணம் என்ற சொல் யாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுக்களில் பழகி வருகிறது. ஆள்விலைப் பிரமாணம் கீழே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிரயப் பிரமாணம் என்பது அஞ்சியவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரியைக் கட்டுவதற்கு விலக்களிப்பது தொடர்பானது.

தீட்டு : தீட்டு என்பது எழுதப்பட்டது என்று பொருள்படும். கைத்தீட்டு, ஒட்டிசைவுத் தீட்டு, நிலைமைத் தீட்டு, அடையோலைத் தீட்டு, ஏவல் தீட்டு, விலைப் பிரமாணத்திட்டு, உபயத்தீட்டு, இசைவுத்திட்டு, அந்நிய நாமகரணத் தீட்டு, ஆள்விலைப் பிரமாணத் தீட்டு என்று சோழர் காலக் கல்வெட்டுகள் பல வகைத் திட்டுகளைக் காட்டுகின்றன. இசைவுத்திட்டு என்பது இருவர் நடைமுறைகள், விலை முறைகள் இவற்றை ஏற்று எழுதிக் கொள்வது.

ஓலை : அறையோலை, இறையோலை, இறை காவல் ஒட்டோலை, பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை, சிலவோலை, அடையோலை, செம்போலை, ஆளோலை, அறுதிப் பரிவர்த்தனை ஓலை, விலையாவணவோலை, கையெழுத்து ஓலை என்று பல வகைகள் உள்ளன. மன்னன்

கொடையாக நிலங்களைக் கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடம் வரும்போது நாட்டார் ஆணையைத் தலைமீது ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்று செப்பேடுகள் பலவற்றிலும் காணப்படுகிறது. இறையோலை என்பது வரிவிலக்கு தொடர்பானது. இறைகாவல் ஒட்டோலை என்பது ஒரு கொடை நிலத்தின் வருங்கால வரிகளுக்காக முன்னதாகவே காசு அல்லது பொன் போன்றவை கொடுத்து எழுதும் ஆவணமாகும். விலைக்காகப் பேசும்போது ஏற்படும் பல செலவினங்களையும் ஏற்றுக் குறிப்பிட்டு உறுதி செய்து எழுதும் ஓலை பொருள்மாவறுதிப் பொருட்செலவோலையாகும்.

பிறவகைகள் : மேற்கண்ட வகைகளைத்தவிர மேலும் அறுதிப்பரிவர்த்தனை, நிலவழிப் பரிவர்த்தனை, விலைசிராவனை, இறையிலி சிராவனை, கைத்தடி, கையெழுத்து, கையடை, பரிசு, ஒழுகு, தெரிப்பு, வியவஸ்தை, முறி, நியோகம் போன்ற வேறுபட்ட வகைகளும் சோழர்காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. பல இடங்களில் ஆவணங்களை நேரடியாகக் கல்வெட்டுகளாகவே பொறித்தும் அக் கல்வெட்டுகளையே ஆவணங்களாக மேற்கோள் காட்டப்பட்டும் உள்ளன.

ஆள் ஓலை : மனிதனை விலைபேசி விற்று அதற்காக எழுதிப்பதிவு செய்யும் ஆவணம் ஆள்ஓலை அல்லது ஆள்விலைப் பிரமாணம் என்று வழங்கப்பட்டது. வேதாரண்யத்தில் 3ஆம் ராஜராஜன் காலத்தில் ஆள் விலைப் பிரமாணத்தீட்டு ஒன்று எழுதப்பட்டுள்ளது (தெஇக. 17:541). இறைவனுக்கு அரியான் பிச்சன் என்பவனால் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். 10 பேரில் ஐவர் இவனது முன்னோரால் ஏற்கனவே விற்கப்பட்டவர்கள் ஆவர். கல்வெட்டு இவர்களை அடியார்கள் என்றும், சதையாண்டிக் கூட்டத்தவர் என்றும் விற்பனை இவர்களது வழிவழியினரையும் உள்ளடக்கியது என்றும் குறிக்கின்றது. அடிமை வாழ்வு கூட்டம் கூட்டமாகவும், வழிவழியாகவும் விலைப் பொருளாகவும் இருந்ததைக் கல்வெட்டு நன்குணர்த்துகிறது.

ஆள்விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதைக் காணும் போது அடிமை வாழ்வு அன்றைய தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக்கொண்ட மரபு என்று சொல்ல வேண்டியுள்ளது.

தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களின் அடிமைகள். அது கூட ஆள் ஓலையாக எழுதப்பட்டதை ஒரு பாடல்கல்வெட்டு காட்டுகின்றது. மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் இருந்த வாண மன்னனின் இக்கல்வெட்டு தென்னார்க்காடு மாவட்டம் திருப்பாலைப்பந்தலில் உள்ளது (தெஇக 17:177).

''தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர் – வீரப்
பெருமான்மகதேசன்பேரெழுதித் தத்தந்
திருமார்பில் ஆளோலை செய்து''

பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் நம்பியாரூரை இறைவனுக்கு அடிமை என்று பேசும். இறைவன்

''அக்காலம் உன் தந்தை தன்தந்தை ஆள் ஓலை ஈதால்
இக்காரியத்தை நீ இன்று சிரித்ததென் ஏட''

என்று அடிமையை ஏட என்று அடக்குகின்றார். மேலும்

''இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ''

என்று இறைவன் கூறும் சொற்களால் ஆள்ஓலை இசைவோடு எழுதப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவ்வோலையில் எழுதப்பட்ட வாசகத்தைச் சேக்கிழார் நல்ல முழு ஆவணமாகவே பாடலில் தருகின்றார்.

கல்வெட்டுகளில் மட்டுமில்லாது சோழர் கால இலக்கியத்திலும் ஆவண முறை தெளிவாகக் காட்டப்படுவது சோழர் காலத்தில் ஆவண அமைப்புகள் வழக்கில் மலிந்திருந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.

நிலைமைத்தீட்டு : எதிர்காலத்தில் இப்படி இப்படி நடக்க வேண்டுமென குறுநில மன்னர் அல்லது தலைவர் தமக்குள் எழுதிக்கொடுக்கும் உடன்படிக்கை நிலைமைத் திட்டாகும். சோழர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் இப்படி எழுதிக்கொண்ட நிலைமைத்திட்டு செங்கத்தில் (வடார்க்காடு மாவட்டம்) கல்வெட்டாகவுள்ளது. விக்கிரம சோழ சம்புவராயர், கரிகாலச்சோழ ஆடையூர் நாடாழ்வார் ஆகிய இருவர்க்கு விடுகாதழகிய பெருமாளான இராஜராஜ அதிகமான் எழுதித்தந்த நிலைமைத் தீட்டின் சில பகுதிகள் :

> **''இவர்கள் எநக்கு ஒரு காலமும் தப்பாதிருக்க,**
> **நானும் இவர்களுக்கு ஒருகாலமும் தப்பாதிருக்க கடவேனாகவும்**
> **இவர்களுக்கு இன்னார் எனக்கின்னாராகவும், எனக்கின்னாதார்**
> **இவர்களுக்கின்னாதார்களாகவும், இவர்கள் பகை**
> **என்பகையாகவும், என்பகை இவர்கள் பகையாகவும்;**
>
> **''யாதவராயர் பக்கலும் செய்யகங்கர் பக்கலும்**
> **குலோத்துங்கசோழ சம்புவராயர் பிள்ளைகள் பக்கலும்**
> **ஆளும் ஓலையும் போகக் காட்டுதல் உறவு பண்ணுதல்**
> **செய்யாதேனாகவும்; நாடு முன்பு இராஜராஜதேவர் போது**
> **நின்றபடியே எங்களில் எல்லை கொல்லைகள் நிற்பதாகவும்;**
> **இருபத்தொன்றாவது ஆவணி மாதத்து செய்த நிலைமை**
> **த்தீட்டின்படியே மற்றுள்ள காரியங்களும் ஒருகாலமும்**
> **தப்பாதேயிருக்கக் கடவேனாகவும் இப்படி சம்மதித்தேந்**
> **விடுகாதழகிய பெருமாளேன்''**

அந்திய நாமகரணத் தீட்டு : கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிலங்கள் கொடுக்கும்போது இறைவன் பெயரிலேயே அதாவது திருநாமத்திலேயே ஆவணங்கள் எழுதுவது மரபு. இப்படி எழுதிக் கொடுக்கப்படும் நிலங்கள் திருநாமத்துக்காணி என்றழைக்கப்பட்டன. கொடையாளர் செய்ய நினைத்த தர்மத்திற்கு (விளக்கு, அமுதுபடி முதலியன) உண்டான செலவுகளுக்கும் அதிகமாக அந்நிலத்தால் வரும் அதிகப்படி வருவாய் கோயிலுக்கே சேர்ந்துவிடும். இந்த அதிகப்படி வருவாயைப் பிறர் ஒருவருக்கு வழி திருப்பிக் கொடுக்க

பிறிதொருவர் பெயரில் அதாவது அந்நியநாமத்தில் எழுதும் ஆவணமே அந்நியநாமகரணத் திட்டாகும்.

இத்திட்டு கொடையாளருக்கும் ''அந்நியநாமகரணத்துக்குப்'' பெயர்தந்தவருக்கும் இடையில் எழுதப்படுவதாகும். கொடையாளர் தானே காசு கொடுத்து வாங்கிய நிலமான போதிலும் தன்பேரிலோ, திருநாமத்திலோ (இறைவன் பெயரிலோ) இல்லாமல் பிறிதொருவர் பெயரில் நிலத்தை வாங்கும் வழக்கினை பல 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் நமக்குக் காட்டுகின்றன.

ஆவண வழக்காறுகள்

எழுத்து : ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையொப்பமிடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமானதாக இருந்தது. ''இவை என் எழுத்து'' என்று பெயர்களுடன் ஆவணத்திற்கு கையொப்பங்கள் உயிர்கொடுத்து விளங்கின.

அறிவேன் : ஆவணங்களில் சாட்சிக் கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சிக்கையொப்பமிடுபவர்கள் 'இப்படி அறிவேன்' என்று தங்கள் பெயர்களுடன் ஒப்பமிட்டு 'இது என் எழுத்து' என்று முடித்தனர். ஓர் ஆவணத்தில் பல சாட்சிக்கையொப்பங்கள் சோழர் காலக் கல்வெட்டுக்களில் பொதுவாகக் காணப்படுவதாகும்.

ஸயிஞ்ஞை, தற்குறி : கையொப்பமிடத் தெரியாதவர்கள் ஆவணங்களில் எழுத்தாணியால் சிறிது கீறுவர். இந்தக் கீறல் அல்லது குறி தற்குறி அல்லது ஸயிஞ்ஞை எனப்பட்டது. 'இவை என் எழுத்து' என்பதற்குப் பதிலாக 'இது (பாரதாயன் கேசுவன் அறிவரியான்) ஸயிஞ்ஞை (அல்லது தற்குறி) என்று குறிப்பிட்டனர்.

மாட்டறிதல் : ஸயிஞ்ஞை என்றும் தற்குறி என்றும் குறிப்பிட்டவரது குறி கையொப்பமிடத்தெரிந்த ஒருவரால் மாட்டறிந்து (சரி என்று சொல்லப்பட்டு) கையொப்பமிடும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. இவர்கள் 'தற்குறி மாட்டறிந்தேன்', 'ஸயிஞ்ஞை மாட்டறிந்தேன்' என்று குறிப்பிட்டு

இது என் எழுத்து என்று தங்கள் கையொப்பமிட்டனர். இன்று கைரேகை வைக்கும்போது 'இன்னாருடைய இடதுகைப் பெருவிரல் கீறல்' என்று மற்றொருவர் கையொப்பமிடும் பழக்கம் இது போன்றதே.

முதுகண் : ஒருவருக்கு மற்றொருவர் பிரதிநிதியாக இருந்து ஆவணங்களை எழுதும் மரபும் அன்று இருந்தன. அவ்வழக்குகளில் 'முதுகண்ணாக உடைய' என்று பெயரெழுதிக் கையொப்பமிட்டனர். குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குக் குழந்தைகளும் முதுகண்ணாக இருந்தமை கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. 'முதுகண்ணாகக் கொண்டு விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது', 'முதுகண்ணாக உடைய செல்லப்பெண் ஞானியேன்' (தெஇக. 6:51). 'எங்களம்மை காடன் சிங்கத்துக்கு முதுகண்ணாய் விற்று விலையாவணஞ் செய்து குடுத்தேன்' (தெஇக. 11:405).

புணை : ஒருவர் ஒரு தர்மச் செயலை செய்ய ஒப்புக்கொண்டார் எனினும் அவருக்கு மற்றொருவர் புணை (அல்லது பிணை) கொடுக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது. இது இன்றைய பாதுகாப்பு (செக்யூரிட்டி) கொடுக்கும் முறையை ஒத்தது. 'சேந்தனை புணையாகக் கொடுத்து' போன்ற கல்வெட்டு வரிகளை இங்குக் குறிப்பிடலாம். புணைபட்டவர்கள் புணை கொடுத்தவர்களது தவறுகளுக்குப் பொறுப்புடையவர்கள். ஒருமுறை புணை கொடுத்த ஒருவர் தண்டம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் அந்த தண்டத்தொகையைக் கட்டவில்லை. எனவே புணைபட்டவரிடம் வசூலிக்க முற்பட்டனர். புணைபட்டவரும் கையில் காசில்லாதிருந்ததால் அவருடைய நிலத்தை விற்றுப் பணம் வசூலிக்கப்பட்டது (தெஇக. 19:260). வரி கட்டுவதற்காக புணைகொடுக்கும் வழக்கு 'இறைப்புணை' என்ற கல்வெட்டுச் சொல்லால் (தெஇக. 19:278) அறியக் கிடக்கின்றது.

திரிவிட்டுக் கொடுத்தல் : ஒருவர் பெயரில் உள்ள ஆவணத்தை அல்லது அவ்வாவணத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்தல் 'திரிவிட்டுக் கொடுத்தல்' என்று வழங்கியது (தெஇக. 17:564).

ஒட்டிக் கொடுத்தல் : ஒரு செயலை ஒப்புக் கொள்வதும் ஏற்று நடத்துவதாகச் சம்மதம் கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதுமாக ஒருவர் ஆவணத்தில் கையொப்பமிடுவது 'ஒட்டிக்கொடுத்தல்' என்று வழங்கியது. (தெஇக. 17:326) 'இப்படி ஒட்டி இட்டுக்குடுத்தோம்'; 'இக்கையெழுத்து கண்டிலாமையால் கண்டபொழுது சாவாக ஒட்டிக் குடுத்தேன்; விஜயமங்கலமுடைய பரமஸாமிக்கு ஒட்டி; 'இறை காவல் லொட்டோலை இட்டுக்குடுத்தேன்'; 'தண்டமிட வொட்டிக் குடுத்தேன்'.

அடுத்துக்குடுத்தல் : கொடையாகக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவை பராமரிப்புக்காக மற்றொருவருக்கு கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அடுத்துக் குடுத்தல்' என்று வழங்கியது. 'இவ்வாடு அறுபதும் இடையற்கு அடுத்துக் குடுத்து' 'ஒலோகமாதேவியார் கந்மிகளுக்கு நிலம் அடுத்துக் குடுத்தோம் ஆழ்வார் கந்மிகளோம்' போன்ற கல்வெட்டு வரிகள் இதை விளக்கும்.

ஆவணம் எழுதியவர்கள் : ஆவணங்களை எழுதியவர்கள் ஊர்க்கணக்கர், மத்யஸ்தர் போன்றவர்கள். ஆவணங்களை எழுதியவர்கள் தங்கள் கையொப்பத்தை ஆவணங்களில் இட்டார்கள். 'எழுதினேன் வேட்கோவன்' இக்கோயில் முதல் கணக்கு திருவாரூருடையான் கூளி கணவதி எழுத்து' (தெஇக. 17:601) போன்ற சொற்றொடர்கள் இதனை விளக்கும்.

முடிவுரை : சோழர் காலத்தில் நல்ல நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டு நிறைய நிலங்கள் பயிரேற்றப்பட்டன. சமுதாயத்தின் முதுகெலும்பாக விவசாயம் மாறியது. சோழர் சமுதாயத்தில், வாழ்வின் மையப் பொருளாக, செல்வமாக நிலங்கள் விளங்கின. எனவே நிறைய நிலப்பரிமாற்றங்கள் ஏற்பட்டு எண்ணற்ற ஆவணங்கள் சோழர் காலத்தில் நிலவின. சோழர் காலத்தில் கற்கோயில்கள் ஏராளமாக எடுக்கப்பட்டமையால் கல்வெட்டுகள் நிறைய வெட்டப்பட்டன. எனவே மேற்சொன்னவை மட்டுமல்லாது இன்னும் பல்வேறு வகையான ஆவணச்சிக்கல்கள் தோன்றி ஆவண முறைகளும் வகைகளும் மலிந்தன.

11

சில அரிய சொற்கள்

எ. சுப்பராயலு

தமிழ்க் கல்வெட்டுக்களில் பயிலும் பல கலைச்சொற்கள் இடைக்காலத் தமிழ்நாட்டில் நிலஉடமை, அமைப்பு, அரசு வருவாய், நீர்ப்பாசனம் போன்ற பொருள்களைப் பற்றி விளக்குவனவாக உள்ள. இக்கலைச் சொற்கள் பல இன்று வழக்கில் இல்லை. சில பொருள் மாறிவிட்டன. சில சொற்கள் பழைய இலக்கியங்களிலோ நிகண்டுகளிலோ கூட இடம் பெறவில்லை. சில சொற்கள் உரையாசிரியர் மட்டும் கையாண்டுள்ளனர். ஆகவே கல்வெட்டுக் கலைச்சொற்களின் உண்மைப் பொருளை விளங்கிக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. கீழே சில சொற்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் கடந்த நூற்றாண்டுகளாகப் பல கல்வெட்டாய்வாளர், வரலாற்றாசிரியர் முயற்சியில் சிறுகச் சிறுக வளர்ந்து குவிந்த கல்வெட்டியல் அறிவை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டது என்பதை முதலில் வலியுறுத்தவேண்டும். சில சொற்களுக்குப் புதிய விளக்கம் காண முயன்றிருப்பது முன்னோர்தம் விளக்கங்களில் குறைகாணும் எண்ணத்திலல்ல; வரலாற்றறிவை மேலும் வளர்க்கவேண்டும் என்பதே இதற்கு முக்கிய நோக்கம்.

ஒரு கலைச்சொல்லை விளக்குவதற்கு முன் அது எந்தெந்த சூழ்நிலைகளில் கையாளப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பெரும்பாலும் கையாளப்படும் இடத்தை வைத்தே சொற்கள் தமக்குரிய பொருள்களைப் பெறுகின்றன என்பது அகராதியியலார் அறிந்தது. காலந்தோறும் பொருள் மாறுவதும் எல்லா மொழிகளிலும் உள்ள இயல்பு. கல்வெட்டுச்

சொற்களைப் பொறுத்தவரை கையாளப்படும் இடங்களை மிகவும் முயன்றுதான் தொகுக்கமுடியும். கல்வெட்டுக்களை காலவாரியாகவும் இடவாரியாகவும் பிரித்து, சொற்கள் பயிலும் இடத்தைக் குறித்துக் கணக்கிடல் பின்னால் அச்சொற்களின் பொருள்களை விளக்க உதவியாக இருக்கும். கீழே சில அரிய சொற்கள் மட்டும் இவ்வகையில் தொகுக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வதி : இச்சொல் பிரமதேய ஊர்களில் (அதாவது பிராமண ஊர்களில்) பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. இச்சொல்லை இதுவரை வழி அல்லது சாலை என்று பொருள் தருவதாகக் கருதப்பட்டு வந்தது. உத்தரமேரூர்க் கல்வெட்டுக்களை விரிவாக ஆராய்ந்த நீலகண்டசாஸ்திரி இக்கருத்துக்கு உரமூட்டியதாகத் தெரிகிறது. இதே கருத்தை கே.வி.சுப்பிரமணிய அய்யரும் கொண்டிருக்கிறார். இருவரும் உத்தரமேரு சதுர்வேதிமங்கலத்தில் அவ்வூர்ச் சபையால் 922இல் புதுப்பிக்கப்பட்ட பரமேசுவரவதி என்ற ஒன்றை சாலை எனக் கொள்கின்றனர். ஆயினும் கல்வெட்டில் அச்சொல் வரும் இடத்தைப் பார்த்தால் இது ஒரு நீர்க்கால் என்பது தெளிவாகும். ஏனெனில் இவ்வதியில் நீரோடிக் கொண்டிருந்தது என்று ஒரு வரி உள்ளது. இப்பொழுது அவ்வதி தூர்ந்து (சேறாகி) விட்டதன் காரணமாக ஆடு மாடுகள் செல்வது கூட கடினமாகி விட்டது என்றும் அதனால் அதனைத் தூர் எடுத்து ஆழப்படுத்த வேண்டும் என்றும் சபையினர் முடிவு செய்கின்றனர். இதில் தூர்ந்துவிட்டது என்பது 'நிராயிட்டு' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சொல்லை நீராயிட்டு என்ற வினைச் சொல்லாகக் கொண்டு 'சாலை முழுவதும் நீர் நிறைந்து தேங்கிவிட்டது' என்று பொருள் கொண்டனர். அது தவறு.

வதி என்பதைச் சாலை எனக் கொண்டால் உத்தரமேரூரிலும் மற்ற ஊர்களிலும் வயலெல்லாம் சாலைகளே மலிந்திருக்கும். ஏனென்றால் கல்வெட்டுக்கள் வயல்களுடே பல வதிகளைச் சுட்டுகின்றன. நன்செய் நிலங்களினூடே மிக அரிதாகத் தான் சாலைகளைப் பார்க்கலாம் என்பது தஞ்சைப் பகுதியிலிருப்பவருக்கு நன்கு தெரியும்.

வதிகளும் வாய்க்கால்களும் எப்பொழுதும் ஒரு சேரக் குறிப்பிடப்படுகின்றன. வாய்க்கால் நீரோடும்கால் என்பதில் எந்த ஐயமும் இருக்கமுடியாது. ஆயினும் வாய்க்கால் ஓடும் திசைக்குக் குறுக்காக வதிகள் செல்கின்றன என்பதைக் கல்வெட்டுக்களை ஊன்றிப்பார்த்தால் புரியும். வாய்க்கால் கீழ்மேல் திசைகளில் போனால் வதி தென்வடல்திசையில் போகும்.

''வீர நாராயணவதிக்கு கிழக்கு மான வல்ல வாய்க்காலுக்கு வடக்கு 4ஆங் கண்ணாற்று மூன்றாஞ் சதுரத்து ஆதனூர் பாரதாயன் நாராயணச்சோமாசியார் உள்ளிட்ட அட்டகத்துக்குப்பட்ட கீழை அறுமாவில் ... ... கீழ்பிடாகை கோதண்டராமவதிக்கு மேற்கு கணபதி வாய்க்காலுக்கு தெற்கு ஆறாங்கண்ணாற்று நாலாஞ்சதுரத்து .... தசபுரியனுள்ளிட்ட அட்டகத்துக்குப் பட்ட அறுமாவில் ....'' (தெஇக. 13:146).

இதிலிருந்து வதி வாய்க்காலின் கிளைக்காலாகக் கருதலாம். உத்தரமேரூர் கல்வெட்டு ஒன்று இதனை நிருபிக்கும் வகையில் விலக்கு வாய்க்காலான விக்ரமசோழ வதி என்று குறிப்பிடுகிறது. வடிகால் நிலையில் வதி பயன்பட்டிருக்கும் என்றும் சொல்லலாம். வதி என்பது வடிகாலைக்குறிக்கும் என்று நடனகாசிநாதனும் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார்.[1]

வதிகளும் வாய்க்கால்களும் இப்படி குறுக்கும் நெடுக்குமாக ஒரு ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்டதற்கு என்ன காரணம்? பெரும்பாலும் பிராமண ஊர்களில் நிலங்கள் சதுரசதுரமாக கூறுபடுத்தப்பட்டன என்பதை மேல் சுட்டப்பட்ட கல்வெட்டுப்பகுதி உணர்த்தும். வதி, வாய்க்கால், கண்ணாறு, சதுரம் ஆகியன செயற்கையாக உண்டாக்கப்பட்ட ஓர் இணைந்த அமைப்பு என்பதற்குப் பல கல்வெட்டுக்கள் சான்று தருகின்றன. பிராமண ஊர்கள் (அரசனால்) உண்டாக்கப்படும் பொழுது அங்குப் புதிதாகக் குடியேற்றப்பட்ட ஒவ்வொரு பிராமணக் குடும்பத்துக்கும் ஒரே சீரான நிலக்கூறுகளை (பெரும்பாலும் ஒரு

1. தொல்லியல் கருத்தரங்கு - 2, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு.

வேலி) கொடுக்க வேண்டிய கட்டாயமிருந்தது. இதுவே மேற்குறிப்பிட்ட சதுர அமைப்புக்குக் காரணம். சில குறிப்பிட்ட ஊர்களின் வாய்க்கால், வதிகளை நேரடியாகப் பார்த்து ஆராய்ந்தால் மேலும் விளக்கம் கிடைக்கும்.

குடும்பு

பிராமண ஊர் நிலவுடமை அமைப்புத் தொடர்பான இன்னொரு சொல் குடும்பு ஆகும். முதன்முதல் உத்தரமேரூர் கல்வெட்டுக்களை வெளியிட்ட வெங்கையா இச்சொல் ஊரிருக்கையின் உட்பிரிவு என்ற பொருள்படும் வார்டு (ward) என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்த வார்டு என்ற பொருளை பின் வந்த நீலகண்ட சாஸ்திரியும் பிற வரலாற்றாசிரியரும், கல்வெட்டாய்வாளரும் பின்பற்றி யுள்ளனர். ஆனால் கே.வி. சுப்பிரமணிய அய்யர் மட்டும் குடும்பை குலம் என்ற சொல்லுக்கு இணைச் சொல்லாகக் கொண்டு 'குடும்பங்களின் கூட்டு' என்று கொண்டார். இது ஓரளவு குடும்பின் உண்மைப் பொருளுக்கு இட்டுச் செல்கிறது எனலாம். எனினும் குடும்பு பயிலும் இடங்களைக் கவனித்துப்பார்த்தால் சிறிது மாறுபட்ட பொருள் தரலாம். உத்தரமேருசதுர்வேதிமங்கலம் பன்னிரண்டு சேரிகளாகவும், 30 குடும்புகளாவும் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வூர்ச்சபை பல வாரியங்கள் அல்லது உட்குழுக்களைக் கொண்டிருந்தது. வாரியங்களிலிருந்து உறுப்பினர் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் போது முப்பது குடும்புகளுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு விதிகள் செய்யப்பட்டன. ஆயினும் வாரியங்களின் மொத்த உறுப்பினர் 12 அல்லது 6 என்று சேரிகளின் எண்ணிக்கை விழுக்காட்டில் முடிவு செய்யப்பட்டன.

சேரிகளின் பெயர்கள் பொதுவாக அரசனின் பெயர் கொண்டு இடப்பட்டன, எ.கா., பராந்தகச்சேரி. ஆனால் குடும்புகள் முதற்குடும்பு, இரண்டாம் குடும்பு என்று எண்பெயரே யிடப்பட்டன. சில பிரம்மதேய ஊர்களில் முப்பதுக்கு மேற்பட்ட குடும்புகளும் இருந்தன. காட்டாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் சந்திரலேகை சதுர்வேதி மங்கலத்தில் 53ஆம் குடும்பு கூட இருந்தது (தெஇக. 6:12). இப்படிச்

சுட்டப்படும் எந்தக் குடும்பின் சார்பாகவும் ஆள்பெயர்கள் வரவில்லை. அதாவது இந்தக் குடும்பில் இன்னார் வசித்தார் என்ற செய்தியில்லை. மாறாகக் குடும்பையொட்டி விளை நிலங்கள் பேசப்படுகின்றன.

46ஆம் குடும்பில் இரண்டாம் பாடகத்தில் நிலம் 1/8
முதல் குடும்பில் நான்காம் பாடகத்தில் 240 குழி.

இதைக்கொண்டு குடும்புகள் விளைநிலப் பங்கீட்டு முறையோடு ஏதோ ஒருவகையில் தொடர்புடையது என்று சொல்லலாம்.

இந்த ஊகத்தை உறுதிசெய்யும் வகையில் சில வெளிப்படையான சான்றுகளும் உள்ளன. சிதம்பரம் வட்டம் உடையார்குடியில் உள்ள ஒரு கல்வெட்டு கோயிலுக்கு அவ்வூர்ச்சபை கொடுத்திருந்த அர்ச்சனா போக நிலத்துக்கு மாறாக (சிறிது காலம் கழித்து) வேறு நிலம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது; ஏனெனில் முன்பு கொடுக்கப்பட்ட நிலம் ஒரு புதுக்குடும்பில் சேர்க்கப்பட்டதால் இந்த புது ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது என்கிறது. 947இல் பொறிக்கப்பட்ட இன்னொரு கூரம் கல்வெட்டு இன்னும் தெளிவான செய்தியைக் கொடுக்கிறது. அந்த ஆண்டிலிருந்து அவ்வூர் விளை நிலங்கள் ஆறுதரங்களாகப் பிரிக்கப்பட்டன என்றும், ஆகவே இனிமேல் ஒவ்வொரு வயலுக்கும் பாசன நீர் அக்குடும்புகள் வழியே கொடுக்கப்பட வேண்டும் என்றும், மேலும் ஊர் வாரியங்களும் அப்படியே குடும்புகள் வழியே அமைக்கப்படவேண்டும் எனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கல்வெட்டு சில முக்கிய இடங்களில் சிதைந்திருந்தாலும் குடும்பு விளைநிலங்களை அடிப்படையாகச் செய்யப்பட்ட ஓர் அமைப்பு என்பதைத் தெளிவாக்குகிறது. ஒவ்வொரு பிராமணக்குடும்பமும் துய்த்து வந்த பங்குகளைச் சேர்ந்த நிலங்கள் ஒரே சிராக இருக்கவேண்டும் என்பதே இக்குடும்புகள் செய்யப்பட்டதன் நோக்கமாகும். சோழர் காலத்திலும் பிற்காலத்திலும் வேறு சில ஊர்களில் வழங்கிவந்த 'கரையீடு' வழக்கத்தை இது ஒத்தது என்று சொல்லலாம்.

பத்தாம் நூற்றாண்டுக்கு மேல் குடும்பு என்ற சொல் கல்வெட்டுக்களில் காண்பது அரிது. பிரமதேயங்களைக் காட்டிலும் தேவதான ஊர்கள் வலுவடைந்தது இதற்கு ஒரு காரணமாகலாம். ஆனால் 'குடும்பு' வழக்கம் மறைந்துவிட்டது எனச் சொல்லமுடியாது. பின்னால் இச்சொல்லுக்கு மாறாகக் கட்டளை என்ற சொல்லாட்சி இருந்தது எனத் தெரிகிறது. கட்டளையும் முதற்கட்டளை, இரண்டாம் கட்டளை என எண்பெயர் பெற்றது (தெஇக. 13:384). தலைச்சங்காடு என்ற பிரமதேயத்தில் 10 கட்டளைகள் இருந்தன. 1239ஐச் சேர்ந்த சில மன்னார்குடிக் கல்வெட்டுக்கள் குடும்பு, கட்டளை ஆகிய இரண்டையுமே மாறி மாறி வழங்குகின்றன (தெஇக. 6:50, 58). இருப்பினும் 11, 12ஆம் நூற்றாண்டுகளில் நிலஉடமை அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்ததால் குடும்பும் கட்டளையும் எல்லாவகையிலும் ஒத்திருந்தன என்று அழுத்தமாகக் கூறமுடியாது.

வெட்டப்பேறு

ஊர்களை மொத்தமாகத் தானம் செய்யும் பொழுது தேவதானம், கணிமுற்றூட்டு, வெட்டப்பேறு என்ற சிறப்பு நிலஉடைமை வகைகளில் ஒன்றாக வெட்டப்பேறு குறிக்கப்படுகிறது. இச்சிறப்புவகைகள் பொதுவாக இறையிலி அல்லது மானிய நிலங்களாகும். முதல் இராஜேந்திரன் திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயத்தைப் பதிப்பித்த கிருஷ்ண சாஸ்திரி இச்சொல்லை வெட்டிப்பேறு எனத்திருத்தி பணிசெய் மக்களுக்குக் கொடுத்த ஒரு இனாம் நிலம் என்று கொண்டார் (தெஇக. 3:ப.389). மேற்கொண்டு எதுவும் அவர் விளக்கவில்லை. ஆயினும் 'வெட்டி' ஊழியர்களுக்கு கொடுத்த நிலம் அது என்று அவர் கருதியிருப்பதாகத் தெரிகிறது. தி.நா.சுப்பிரமணியம் இதை வேட்டப்பேறு எனப்படித்து அது வேட்டல்பேறு எனக் கொள்ளவேண்டும் என்ற கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது வேத வேள்விகள் செய்தமைக்காக அளிக்கப்பட்ட மானிய நிலம் என அவர் கொண்டார். கரந்தைச் செப்பேட்டுப் பட்டயத்தைப் பதிப்பித்த கே.ஜி. கிருஷ்ணன் காடுகளை வெட்டுவது தொடர்பான மானிய நிலம் என்று கருத்துத்

தெரிவித்தார். இக்கருத்துக்களில் கிருஷ்ணசாஸ்திரியின் கருத்தே உண்மைப் பொருளுக்கு அருகில் செல்கிறது. வெட்டி என்ற சொல் விஷ்டி என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவம்; ஊதியமில்லா கட்டாய உழைப்பை அது இந்தியா முழுவதும் குறித்தது. தமிழ்க் கல்வெட்டுக்களில் தலைவாயர் அல்லது வாய்த்தலைச் சான்றோர், இளமையார் என்ற சொற்களும் வெட்டிக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவாயர் வாய்க்கால் மதகுகளைப் பேணிப் பராமரிப்பவர். திருச்சி மாவட்டக் கல்வெட்டுக்கள் இரண்டு வெளிப்படையாக தலைவாயருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை வெட்டப்பேறு நிலம் என்றே குறிக்கின்றன (தெஇக, 8:689, 13:240). கரந்தைப் பட்டயத்திலும் உள்ளூர்ப் பெரிய ஏரியைச் சேர்ந்த அரையர்களின் நிலமே வெட்டப்பேறு நிலம் எனப்படுகிறது. இங்கு அரையர் என்ற சொல் தலைவாயரைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆகவே ஏரி, கால்கள், மதகு இவற்றைப் பேணுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மானிய நிலமே வெட்டப்பேறாகும்.

முதலில் நிலஉடமைச் சமுதாயம் வளராத நிலையில் நிலத்தைப் பயிர்செய்பவரே மேற்படி பணிகளுக்காக ஊதியமில்லா உழைப்பு கொடுக்க வேண்டியிருந்தது. நிலஉடமை வளர வளர பயிர்செய்குடிகள் தங்கள் உழைப்புக்கு மாறாக பொருள் அல்லது பணத்தைக் கொடுத்துவிடும் நிலை இருந்தது. அந்த நிலையில் பயிர் செய்குடிகளுக்குக் கீழ்ப்பட்ட வெட்டிக்குடிகள் தோன்றும் நிலை ஏற்பட்டது. வெட்டப்பேறு இந்தக் காலகட்டத்தில் வழங்கிய சொல்லாகும்.

வாரம்

வாரம் நிலக்குத்தகைகளில் ஒரு வகை ஆகும். இது நிலக்கிழாரும் குத்தகைதாரரும் தமக்குள் ஒத்து நிலவிளைச்சலை தமக்குள் ஒரு விகிதத்தில் பகிர்ந்து கொள்வது ஆகும். 'மேல்வாரம்' என்ற சொல் நிலக்கிழாருடைய பங்கைப் பொதுவாகக் குறித்தது. அத்துடன் சார்புப் பொருளில் அது அரசுக்குச் சேரவேண்டிய பங்கையும் குறித்தது. 'குடிவாரம்' என்ற சொல் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று உழும் குடிகள் விளைச்சலில் பெறும் பங்கைக் குறித்தது. 'உடன்வாரம்' மொத்த விளைச்சலைக் குறித்தது. இன்று இது உடைவாரம் எனப்படுகிறது. மேல்வாரம், குடிவாரம் என்று பிரிப்பதற்கு

முன்னால் நிலத்தைப் பயிராக்கச் செய்யப்படும் செலவு உடன் வாரத்திலிருந்து கழிக்கப்பட்டது. சிலபோது, குறிப்பாக பிராமணர் அல்லாத நிலக்கிழார் நிலங்களைப் பொறுத்து, பயிராக்கும் செலவு குடிவாரத்தில் ஏற்றப்பட்டது. பிராமண நிலக்கிழார் பெறும் மேல்வாரம் பயிர்ச்செலவு போக வந்த விளைச்சலில் 3இல் 1 பாகம் என்றும், மற்ற நிலக்கிழார் பெறும் மேல்வாரம் பயிர்ச்செலவு கழிக்காத மொத்த விளைச்சலில் 5இல் 2 பாகம் எனவும் சில 12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன (கஆஅ. 1918:429).

பஞ்சவாரம்

மேலோட்டமாகப் பார்த்தால் பஞ்சவாரம் என்றால் ஐந்தில் ஒரு வாரம் என்று பொருள்படும். இரண்டில் ஒன்று செவ்வாரம் என அழைக்கப்பட்டது என்பதை இங்கு ஒப்பு நோக்கலாம். பஞ்சவார வாரியம் என்ற குழு பிரமதேய ஊர்களில் பேசப்படுகிறது. பல்லவர் காலச்சமுதாயத்தை முதலில் ஆராய்ந்த மீனாக்ஷி அம்மையார் பஞ்சகாலம் தொடர்பான காரியங்களைக் கண்காணிக்கும் குழு அது என்று கருதினார். அதற்குப்பின் இக்கருத்து அவ்வளவாக வற்புறுத்தப்படவில்லை. நீலகண்ட சாஸ்திரி தம் சோழர் வரலாற்றில் நிலவிளைச்சலில் குத்தகைதாரருக்குச் சேரவேண்டிய பங்கில் ஐந்தில் ஒரு பங்கு என்ற பொருள் கொள்ளலாம் என்று கோடி காட்டியுள்ளார் (சோழர், 2ஆம் பதிப்பு, ப.590 அடிக்குறிப்பு 58). ஆயினும் அவர் குறிப்பிடும் கல்வெட்டில் குத்தகைதாரருக்குப் பதில் உடமையாளர் என்றிருக்கவேண்டும், ஏனெனில் இங்குப் பஞ்சவாரம் செலுத்துபவர்கள் பிராமண நிலக்கிழார்களாகக் காணப்படு கிறார்கள். கே.வி. சுப்பிரமணிய அய்யர் மொத்த நில வருவாயில் ஆறில் ஐந்து பகுதியே அரசிற்குச் செலுத்தப்பட்டது. அந்த ஆறில் ஐந்து பகுதியே பஞ்சவாரம் ஆகும் என்று கருத்துத் தெரிவித்தார். (எஇ.13:ப.22-28). ஆயினும் இவர் எடுத்துக்காட்டும் கல்வெட்டுக்களில் ஒன்று 978ஐயும் ஒன்று 1246ஐயும் சேரும். காலத்தால் மிக விலகியுள்ள இவ்விரண்டின் செய்திகளையும் சேர்த்துச் செய்துள்ள இவர் முடிவு சரியானதல்ல. முதல் கல்வெட்டு சோழர் கல்வெட்டு, பஞ்சவாரம் வேலிக்கு 50 கலம் எனக் குறிக்கிறது. இரண்டாவது

பாண்டியர் கல்வெட்டு, மொத்த நிலவரி வேலிக்கு 60 கலம் எனக் குறிக்கிறது. ஆகவே பஞ்சவாரம் மொத்த நிலவரியில் 6இல் 5 பங்கு (60 கலத்தில் 50 கலம்) என்பது இவர் முடிவு. ஆனால் இவர் காட்டும் இதே சோழர் கல்வெட்டு மொத்த நிலவரி வேலிக்கு 132.5 கலம் என்றும் குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் பஞ்சவாரம் ஆறில் இரண்டு (50/132.5) பங்கு என்று ஆகும். சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடும் பஞ்சவாரம் அளவு எவ்வளவு என்பதை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் பஞ்சவாரம் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரி என்ற அவர் கருத்து ஏற்புடையதே. பெரும்பாலும் பிராமண நிலக்கிழார்களே இப்பஞ்சவார வரியைச் செலுத்துவதாகக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. சிறுபான்மை கோயில்களும் இவ்வரியைச் செலுத்தக் காண்கிறோம். பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் அவர்கள் செலுத்தவேண்டிய வரியில் சலுகை அளிக்கப்பட்டதன் விளையே இப் பஞ்சவாரம். முதலில் மொத்த விளைச்சலில்/ மேல்வாரத்தில் 5இல் 1 பகுதி மட்டும் செலுத்தினால் போதும் என்றிருந்தது. பின்பு இந்த விகிதத்தில் சிறிது மாற்றம் செய்யப்பட்டாலும் மானியவரி என்ற பொருளில் இது நீடித்தது.

கொட்டகாரம்

இச்சொல் 10, 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசப்பட்டயங்களிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. ஊர்க் கொடைகளைப் பதிவு செய்யும் இப்பட்டயங்கள் ஊர்களிலுள்ள எல்லாவகை நிலங்களையும் விவரிக்கும் பகுதியில் 'குளமும் கொட்டகாரமும் கிடங்கும் கேணியும்' என்ற சொற்றொடரில் வருகிறது. இச்சொல் வரும் இடத்தை மட்டும் வைத்துப் பொருள் கொள்வது அவ்வளவு சரியாக இருக்காது. ஏனெனில் இந்தச் சொற்றொடர் ஓசை நயத்தையே முதன்மையாகக் கொண்டு வரும் மரபுவழிச் சொற்றொடர். இச்சொல்லுக்கு இதுவரை பல பொருள்கள் கொடுக்கப்பட்டன: அரண்மனை, மாட்டுக்கொட்டில், யானைக் கொட்டில், கதிரடிக்கும் களம். கே.ஜி.கிருஷ்ணன் இந்தப் பொருள் எதுவும் பொருத்தமில்லையென விவாதித்து நெற்களஞ்சியம் என்பதே சரி என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் (இராஜேந்திரனின் கரந்தைப்பட்டயம், ப.78).

இவர் கருத்தை ஆதரிக்கும் வகையில் நெற்களஞ்சியம் அல்லது பண்டாரம் என்ற பொருள் தரும் சில 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன (புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள், 116: தெஇக. 24:272). ஆனால் இந்த 13ஆம் நூற்றாண்டுப் பொருள் 11ஆம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்துக்குப் பொருந்துமா என்பதைச் சிந்திக்க வேண்டும். கொட்டகாரம் களஞ்சியம் என்றால் எல்லா ஊரிலும் நெற்களஞ்சியங்கள் இருந்தன என்றும் கொள்ளவேண்டும். இது இயலக்கூடிய செய்தியேயானாலும் நேரடியாக இதற்குச் சான்றுகளில்லை. கொட்டகாரத்தைக் கோட்டகாரமாகக் கொண்டு அதனைக் கோட்டகத்தின் வேறு வடிவம் என்றும் கொண்டால் அது குளங்களில் ஒருவகை யெனலாம் (தமிழ் அகராதி). திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் 'கொட்டகாரம்' இருக்கும் இடத்தில் கோட்டகம் என்ற சொல்லையே பயன்படுத்துகிறது. (கே.ஜி. கிருஷ்ணனும் இந்தச் சொற் குழப்பத்தைக் குறிப்பிடுகிறார்). ஒரு தஞ்சாவூர் மாவட்டக் கல்வெட்டு நாககோட்டகம் என்பது ஒரு குளத்தின் பெயர் என்றும் தெரிவிக்கிறது (கஆஅ. 1911:214).

கோயிற்றமர்

இச்சொல் கோயில்+தமர் எனப் பிரியும்; அரண்மனைக்குச் சொந்தக்காரர் என்று பொருள்படும். இது பொதுவாக அரசு அலுவலர்களைச் சுட்டியது. அரசச்சுற்றம் என்ற பழைய இலக்கிய வழக்குச் சொல்லையும் இங்கு நினைவுகூரலாம்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள முதல் இராஜாதிராஜனின் கல்வெட்டொன்று (தெஇக, 8:675) அரசன் தன் ஆணை ஒன்றை 'நம் தமர் எப்பேர்ப்பட்டார்க்கும்' அனுப்பியதாகத் தெரிவிக்கிறது. வேறு சில கல்வெட்டுக்களிலும் 'நம் தமர்' என்ற சொற்றொடர் வந்துள்ளது. இதற்கு முன் அரசன் தன் அலுவலர்களை விளிக்கும் போது 'நம் கருமம் ஆராயும்', 'நம் பணிமகன்', 'நம் ஓலை' என்று தனித்தனியாகக் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால் 11ஆம் நூற்றாண்டில் சோழ அரசு உன்னத நிலையை அடைந்தபோது அரசாங்கம் பல அலுவலர்களைக் கொண்டு இயங்கியது. அந்த நேரத்தில் எல்லா அலுவலர்களையும் மொத்தமாகச் சுட்ட கோயிற்றமர் வழக்குக்கு

வந்ததாகத் தெரிகிறது. நாளடைவில் இது அரசாங்கம் என்ற பொதுப் பொருளையும் கொடுக்கத் தொடங்கியது. பின்னூற்றாண்டுகளில் இச்சொல் கோமுற்றவர், கோமுற்றவம் என்ற திரிபுகளையும் பெறுகின்றது. பாண்டியர், விஜயநகர் அரசர் கல்வெட்டுக்களில் இராஜகரம் (இராஜகிருகம் என்பதன் திரிபு) அல்லது இராஜகரத்தார் என்ற சொற்களும் கோயிற்றமருக்கு இணைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியில் பின்வழங்கப்பட்ட கோமுற்றவர் என்ற சொல்லைச் சரியான வடிவமாகக் கொண்டு அது 'கோமுற்று' என்ற வேர்ச்சொல்லடிப்படையில் விளக்கப்பட்டிருக்கிறது. அது தவறு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பேரிளமையவர்

பேரிளம்பெண் வயதான பெண்களைக் குறிக்கும். அந்த வகையில் பேரிளமை யென்றால் பொதுவாக முதியோரைக் குறிக்கவேண்டும். பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடல் புராணத்தில் பேரிளமை இப்பொருளில் வந்துள்ளது (தமிழகராதி). ஆனால் கல்வெட்டுக்களில் இதற்கு மாறான ஒரு பொருள் உண்டு. மேலே சுட்டப்பட்ட 'வெட்டி' ஊழியம் புரிந்த வெட்டியார், பேரிளமையார் என்ற மாற்றுப்பெயர் கொண்டிருந்தனர் என ஒரு 997 ஆம் ஆண்டுப் பாகூர்க் கல்வெட்டு செய்தி தருகிறது. 'வெட்டியாராகிய நானூற்றுவப் பொற்சாலைப் பேரிளமையார்' என்ற சொற்றொடர் அதில் காணப்படுகிறது. 1177ஆம் ஆண்டைச் சேர்ந்த இரு திருக்கடையூர்க் கல்வெட்டுக்கள் (கஆஅ 1925:253-6) உழுகுடி வெள்ளாளரும் பேரிளமையாரும் ஒன்று என்று தெரிவிக்கிறது. பெரும்பாலும் பிராமண ஊர்களில் பேரிளமையார் சுட்டப்படுகின்றனர். பிராமணர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தாலும் ஓரளவு மரியாதையான இடத்தை அங்குப் பெற்றவராக விளங்குகின்றனர். தாமே தனிநாட்டுத் தகுதிபெற்று தனியூர் என்று அழைக்கப்பட்ட பிரமதேய ஊர்களைச் சுற்றியிருந்த நாடுகள் பேரிளமை நாடுகள் எனப்பட்டன. இப்பேரிளமை நாடுகளில் இருந்த ஊர்களில் பிராமண நிலக்கிழாரின் நிலங்களை

உழுத உழுகுடி வெள்ளாளரே பெரும்பாலும் வாழ்ந்து வந்தனர். அதாவது பேரிளமையாரே அதிகமாக இருந்தனர். ஆகவே இவை பேரிளமை நாடுகள் எனப்பட்டன.

முடிவுரை

மேலே சொல்லப்பட்ட செய்திகளிலிருந்து தெரிவது கல்வெட்டுச் சொற்களுக்கு கருத்துவிளக்கம் செய்வதற்கு இலக்கிய வழக்கை மட்டும் நாடினால் போதாது, அவை பயிலும் இடம், காலம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதே.

12

ஆள் பெயர்கள் காட்டும் சமுதாயம்

எ. சுப்பராயலு

சோழர் காலக் (கி.பி.846-1279) கல்வெட்டுக்கள் இடைக்காலத் தமிழ்நாட்டு அரசியல், சமூக மற்றும் பொருளாதார வரலாற்றுக்கு மிகவும் துணைபுரிபவை. இதுவரை ஏறக்குறைய 9,000 சோழர் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் படியெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள சுமார் 3,200 கல்வெட்டுக்களில் காணப்படும் ஆள்பெயர்கள் கீழே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவைகளிலிருந்து ஏறக்குறைய 9,600 பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றில் சில கீழே வருமாறு அமைந்துள்ளன.

ஒரு பகுதிப் பெயர்கள்

1. சேவை
2. தண்மப்பிரியன்
3. நாலாயிரவன்
4. உத்தமசோழமாராயன்

இருபகுதிப் பெயர்கள்

5. கௌசிகன்/கணவதிபட்டன்
6. கோனுழான்/கவறைமன்றாடி
7. எச்சல்/சோலை
8. கல்லன்/நக்கன்
9. பட்டன்/தானதொங்கியார் (பெண்)

முப்பகுதிப் பெயர்கள்

10. காப்பியன்/சேந்தன்/சோமதேவன்
11. கோவத்தக்குடியுடையான்/சிங்கன்/பாழி
12. மதுராந்தக இருக்குவேள்/(ஆன) ஆதித்தன்/ விக்கிரகேசரி
13. பராந்தகன் மாதேவடிகள்/ (ஆன) / செம்பியன் மாதேவியார் (பெண்)

நாற்பகுதிப் பெயர்கள்

14. விசலூர் உடையான்/பராந்தகப் பல்லவரையன்/ (ஆன) அரையன்/விளக்கன்
15. சிஞ்சல்கிழவன்/குழியன்/ஆச்சன்/(ஆன) அரிகுலாந்தகவாரணப் பேரரையன்
16. மொகிலியன்/தத்தைக்கன்று/உய்யவந்தான்/ (ஆன) அறம்பயத்தபட்டன்

ஐம்பகுதிப் பெயர்கள்

17. காசியபன்/நெற்குப்பையுடையான்/ ஆட்கொண்டான்/ திருச்சிற்றம்பலமுடையான்/ (ஆன) சோளேந்திரசிங்கபட்டன்
18. பெருமருதூர்/ஆத்ரேயன்/நம்பிப்பிரியன்/ பெரியஉடையான்/பஞ்சநெதிவாணபட்டன்

இப்பெயர்கள் பலவகைப்பட்டு காணப்படினும் சில நெறிமுறைகளுக்கு உட்படுத்தி வகைப்படுத்தக்கூடியனவாக உள்ளன. பெரும்பாலான பெயர்கள் ஒன்று அல்லது இரு பகுதிகள் கொண்ட பெயர்களாகவும், மற்றவை மூன்று அல்லது நான்கு பகுதிகள் கொண்டவையாகவும் உள்ளன. ஐந்துக்கு மேற்பட்ட பகுதிகள் கொண்ட பெயர்கள் மிகச்சில. இப்பெயர்களின் பகுதிகள் சில நியதிகளின் அடிப்படையில் அமைந்தவை. ஒரு பகுதி பெற்றோர் இட்ட பெயராகவும், மற்றவை முறையே ஊர், கோத்திரம் அல்லது குடி, தந்தை பெயர்,

இப்பெயர்களும் பெயர்களுக்குரியோரைப் பற்றிய பிற செய்திகளும் பற்றி விரிவாக அறிய பார்க்க : Noboru Karashima, Y. Subbarayalu & Toru Matsui, A Concordance of the Names in the Cola Inscriptions (Sarvodaya Ilakkiya Pannai, Madurai,1978).

பட்டப் பெயர் எனவும் இருப்பதைக் காணலாம். இப்பகுதிகளை உள்ளடக்கிய அடிப்படை வரைவை எண் குறியீட்டில் கீழ்வருமாறு அமைக்கலாம்.

ஊர்	குடி	தந்தை	தான்	பட்டம்
1	2	3	4	5

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் பெயர்கள் பெரும்பாலும் தந்தையின் பெயரை முதலிலும் தன் பெயரை இரண்டாவதாகவும் வைத்து இருபகுதிப் பெயர்களாக வழங்குகின்றன. இவ்வகை மேலே காட்டிய (3,4)இல் அடங்கும். அதாவது கல்லன் மகன் சோலை என்பவரின் பெயர் கல்லன் (3) சோலை (4) என்றோ, சுருக்கமாக ஆங்கில வழக்கத்தைத் தழுவி க.சோலை என்றோ எழுதுவது இப்போதைய வழக்கம். சோழர்காலப் பெயர்களுள் பெரும்பாலானவை இந்த வகையில் அடங்கும். ஆனால் தந்தை பெயரைச் சுருக்குவது வழக்கமில்லை. பெண்கள் பெயர்களும் இதே பாங்கிலே உள்ளன. திருமணமான பிறகு கணவன் பெயரைச் சேர்த்துக் கொள்வதில்லை. அரசியர் மட்டும் 'மாதேவி' என்று முடியும் ஒரு பட்டத்தைப் பெறுவர்.

மூன்று பகுதிகள் கொண்ட பெயர்களில் ஒரு பகுதி ஊர் பற்றியதாக இருக்கும். காட்டு : 1) உலக்கையூர் உடையான் (3) ஆச்சன் (4) அங்காடி. முதல் பகுதி, ஊர்ப்பெயரோடு கிழான், கிழவன் அல்லது உடையான் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைப் பின்னொட்டாகப் பெற்றுவரும் (பெரும்பன்றூர் கிழான் பனையூர் கிழவன்). சில பெயர்கள் குடையான், ஊழான் ஆகியவைகளில் முடிகின்றன: பருத்திக்குடையான், ஆற்றூழான். இவற்றை முறையே பருத்திக்குடி உடையான், ஆற்றூர் கிழான் என்று விரிக்கலாம்.

பிராமணர் பெயர்களில் வரும் ஊர்ப்பகுதி பெரும்பாலும் உடையான் முதலிய பின்னொட்டு இல்லாமல் வருகின்றன: (1) கோட்டையூர் (3) பூவத்தன் (4) பூவத்தனார். பிராமணப் பெயர்களில் இன்னும் ஒருவகை உண்டு. அதாவது ஒரு பகுதி ஊர்ப்பெயருக்குப் பதிலாகக் கோத்திரப் பெயரைக் கொண்டிருக்கும்:

(2) காசியபன் (3) கண்ணன் (4) ராமன். பிராமணரல்லாதார் பெயர்களில் மிகச்சிலவே குடிப்பெயரைக் கொண்டுள்ளன.

நான்கும் அதற்கு மேலும் பகுதிகள் கொண்ட பெயர்களுள் ஒரு பகுதி தவறாமல் பட்டப் பெயராகக் காணப்படுகிறது. காட்டு: (1) கிளிநல்லூர் கிழவர் (3) விடங்கன் (4) தேவனார் (ஆன) (5) ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார். இதில் (4), (5) க்கு இடையில் உள்ள 'ஆன' ஒரு தனிப்பகுதியல்ல, இணைப்புச் சொல்லே சில பெயர்களில் இது குறிப்பிடப்படுவதும் இல்லை.

மேலே இரண்டு, மூன்று அல்லது நான்கு பகுதிகள் கொண்ட பெயர்களின் தெளிவான, முழுமையான வகைகளைப் பார்த்தோம். ஆனால் இப்படி முழுமையான வகைகளுள் சேராத பெயர்களும் உண்டு. நீண்ட பெயர்கள் சில பகுதிகளை நீக்கிவிட்டும் வரும். பகுதிகள் முறை மாறியும் வரும்.

எடுத்துக்காட்டாக
[1]கிளிநல்லூர் கிழவன் [3] விடங்கன் [4] தேவனார் [ஆன][5]ஜயங்கொண்டசோழமூவேந்தவேளார்என்றபெயர்

[2] கிளிநல்லூர் கிழவன் [4] தேவனார் [ஆன]
[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் என்று சிலபோதும்
[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் என்று மட்டும் சிலபோதும்,

[5] ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளார் [ஆன]
[1] கிளிநல்லூர் கிழவன் [3] விடங்கன் [4] தேவனார் என்று சிலபோதும் வரலாம்.

நீண்ட பெயர்களைச் சுருக்கியெழுதும் பொழுது எழுதப்படும் பகுதிகள் விடப்பட்ட பகுதிகளைவிட சிறப்பானவைகளாகப் பார்த்துக் கொள்ளப்பட்டன. காட்டாக, (4 5) என்ற பெயரைச் சுருக்கினால் (4) தான் விடப்படும். ஏனென்றால் இயற்பெயரை விடப் பட்டப்பெயர் சிறப்புடைய பகுதிதானே? முறை மாறும் பொழுதும் சில நெறிகள் கடைப்பிடிக்கப்பட்டன. (4 3) என்று எப்பொழுதும் வருவதில்லை (வழக்கத்துக்கு மாறானது என்பதால்). பகுதி (3) தனித்தும் வராது.

பெயர்களில் வரும் பல வகைகளாவன :
14, 15, 24, 34, 45, 51, 54,
124, 134, 145, 154, 514, 524, 534,
1234, 1245, 1345, 5124, 5134,
12345, 51234.

இவைகளில் சில வகைகள் (*34, 124, 134, 1345*) தான் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வகைகளில் சேராத வேறுசில பெயர்களும் உள்ளன. ஒரே ஆள் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டங்களை வைத்திருப்பதும் உண்டு. அப்பெயர்களில் பகுதி (*5*) இரண்டு முறை வரலாம்.

எந்தச் சமூகத்திலும் பெயர்கள் சில அடிப்படைக் கோட்பாடுகளை வைத்துத்தான் இடப்படுகின்றன. குறிப்பிடப்பட்ட ஆளின் பெற்றோரின் சமயநம்பிக்கை, குடிப்பெருமை முதலியவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பெயர்கள் இடப்படுவது மரபு. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பிறந்த 'ஜாதியும்' ஒரு அடிப்படையாக அமைகிறது. சோழர் கல்வெட்டுகளில் உள்ள பெயர்களில் (*34*) என்ற வகையைக் கொண்டே மேற்குறிப்பிட்டவைகளை நிரூபிக்கலாம். காட்டாக, சோழர் காலத்தில் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் (சிவனுடைய ஒரு பெயர் ஆன்) நக்கன் என்ற பெயரையும், வைணவர்கள் நாராயணன் என்ற பெயரையும் விரும்பி வைத்துக் கொண்டார்கள் எனத் தெரிகிறது.

பகுதி (2)ஐ உடைய பெயர்களில் உள்ள பிராமண கோத்திரங்களைப் பற்றிய செய்திகள் பிராமணக் குடும்பங்கள் இடம்பெயர்ந்த வரலாற்றை ஓரளவு தெரிவிக்கின்றன. இப்பகுதியை உடைய பெயர்கள் பெரும்பாலும் பிராமணர்களுக்கே உரியவை.

கிழான், உடையான் முதலிய ஒட்டுக்களையுடைய ஊர்ப்பகுதி கொண்ட பெயர் குறிப்பிட்ட ஆளின் ஊரைக் குறிக்கிறது என்று கருதப்படுவது வழக்கம். ஆனால் இப்பெயர்களையும் பெயர்களுக்குரியோரின் செயல்களையும், பதவிகளையும் ஊன்றிப் பார்த்தால் வெறும் ஊரைமட்டும்

குறிப்பனவாகக் கொள்ளமுடியவில்லை. மாறாகக் குறிப்பிட்ட ஊரில் நிலக்கிழமை அல்லது உடைமை உடையவர்களே அவ்வவ்வூரின் கிழார் அல்லது உடையார்களாகலாம் என்று தெரிகிறது. மற்றவர்கள் ஊர்உடையார் அல்லது ஊர்கிழவர் எனப்படுவது இல்லை.

இனி, பகுதி (5)ஐ உடைய பெயர்களைப் பார்க்கலாம். இப்பகுதி பட்டப்பெயர்ப்பகுதி என மேலே குறிப்பிடப்பட்டது. அரசனாலும் ஊர் அவைகளாலும் சிறுபான்மை மற்றவர்களாலும் பட்டப் பெயர்கள் வழங்கப்பட்டன. அரசனால் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்களே எண்ணிக்கையில் முதலிடம் பெறுவன. பட்டப்பெயர்கள் இரு கூறுகளைக் கொண்டது. முதல் கூறு அரசலின் விருதுப்பெயர் அல்லது இடப்பெயராகவும், இரண்டாம்கூறு ஒரு சிறப்புச் சொல்லாகவும் இருக்கும் (இராஜராஜ வேளான், தக்களூர் நாட்டுப் பேரரையன்). இரண்டாம்கூறை வைத்துப் பட்டப்பெயர்களைச் சில வகைகளாகப் பிரிக்கலாம். முக்கியமாக அவை வேளான், அரையன், ஜாதி அல்லது தொழில் ஆகியவைகளுள் அடங்கும்.

'வேளான்' வகையில் வேளான் அல்லது மூவேந்த வேளான் என்ற பின்னொட்டுகள் ஆளப்படுகின்றன.

காட்டு : இராஜராஜ வேளான், அருமொழி மூவேந்தவேளான்.

இப்பட்டங்கள் வேளாளக் குடியில் பிறந்து பொதுவாழ்வில் உயர்பதவிகளை வகித்தவர்க்கு அளிக்கப்பட்டவை. சங்ககால 'வேள்' என்ற பட்டம் 'வேளான்' என்பதின் முன்னோடியா என்ற கேள்விக்கு தெளிவான பதில் இன்னும் கிடைக்கவில்லை. மூவேந்தவேளான் சோழர்காலத்தில் தான் வழக்கக்கு வந்து செல்வாக்குப்பெற்றது. 907-954இல் ஆண்ட முதல் பராந்தகன் தான் முதன்முதலில் இப்பட்டத்தை வழங்கியவனாகத் தெரிகிறது.

'அரையன்' ராஜன் அல்லது அரசன் என்பதன் இன்னொரு வடிவம். இவ் வகையில் அரையன், பேர்அரையன், அதிஅரையன், மாராயன் என்ற பின்னொட்டுகள் உள்ளன. 'வேளான்' பட்டங்களுக்கும் அரையன் பட்டங்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அரையன் பெயர்களிலும் முன்கூறாக அரசன் அல்லது இடப்பெயர் வருகிறது. இந்தக் கூறுக்கும் 'அரையன்' கூறுக்கும் இடைப்பட்ட பகுதி ஒன்று உண்டு. அது 'பிரம்ம' என்றாவது ஏதாவது குறுநிலத் தலைவர் குடிப்பெயராகவாவது, ஒரு தொழில்பெயராகவாவது இருக்கும். காட்டு : குலோத்துங்கசோழ பிரம்மப் பேரரையன், திருவிந்தளூர்–நாட்டுப் பல்லவரையன், இராஜராஜ நாடக மாராயன்.

பிராமண அரசியல் தலைவர்களையும், பரம்பரை அரசியல் தலைவர்களையும், சில தொழில் வல்லுநர்களையும் பெருமைப்படுத்த இவ் 'அரையன்' பட்டங்கள் வழங்கப்பட்டன எனலாம். பேர், அதி, மா என்ற அடைகள் சில தகுதி நிலைகளை நிர்ணயித்தன எனவும் வேண்டும். பிராமணர்க்குப் பெரும்பாலும் அதிஅரையன் அல்லது மாராயன் என்று முடியும் பட்டங்களே வழங்கப்பட்டன. மாராயன் என்ற சொல் பெருமன்னன் ராஜராஜன் (985-1014) காலத்திலேயே மிகச் செல்வாக்குப் பெற்றது. பல்லவர்கள் காலத்தில் இது வெகு அருகியே வழங்கப்பட்டது. மாராயன்என்ற இப்பட்டத்துக்கும் தொல்காப்பியம் சுட்டும் வஞ்சித்திணைத்துறையான மாராயத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து ஜாதி அல்லது தொழில்பற்றிய பட்டங்கள், இவைகளில் காணப்படும் முதல்கூறு மற்ற பட்டங்களில் உள்ளது போன்றதே. பின்னொட்டு ஜாதி அல்லது தொழில்பற்றி யெழுந்தது. இடையர்கள் 'கோன்' அல்லது மன்றாடி' என்ற பின்னொட்டைப் பெற்றார்கள் (மும்முடிச்சோழக் கோன்). வணிகர் செட்டி, மாயிலட்டி, பாலன் என்ற பின்னொட்டுகளைப் பெற்றனர். மற்ற ஜாதியினர் அல்லது தொழிலாளிகள் வேறு வகையில் சிறப்பிக்கப்பட்டார்கள். இப்பெயர்கள் 'அரச விருது+ பெரு + தொழில்/ஜாதி' என்ற பாங்கில் அடங்கும். காட்டாக, தச்சராக இருந்தால் ராஜராஜப் பெருந்தச்சன் என்று வரும். கணக்கர்

பெருங்காவிதி என்ற பின்னொட்டைப் பெற்றனர் (ராஜராஜப் பெருங்காவிதி).

இதுவரை குறிப்பிட்ட செய்திகளிலிருந்து ஆள்பெயர்கள் சமுதாய வரலாற்றுக்கு எப்படித் துணைபுரியும் என்பதை ஓரளவு ஊகிக்கலாம். குறிப்பாகப் பட்டப் பகுதி கொண்டுள்ள பெயர்கள் இவ்வகையில் பெரிதும் உதவும். பட்டங்கள் சமுதாயத் தகுதியை நிர்ணயித்தன எனலாம். வேளான், அரையன் என்ற ஒட்டுள்ள பட்டங்கள் சாதாரணத்தொழிலாளிகள் பெற இயலாது என்பதை இரண்டாம் ராஜாதிராஜனின் ஒரு கல்வெட்டு (கி.பி. 1177)[1] பணிசெய்மக்கள் வேளும் அரசும் பெறாதார் ஆகவும் என்று அழுத்தமாகக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

மேலும் பட்டங்கள் ஜாதி அடிப்படையில் அளிக்கப்பட்டன என்பது குறிப்பிடப்பட்டது. இடைக்காலத் தமிழ்நாட்டில் ஜாதி எவ்வளவு தூரம் வேரூன்றியிருந்தது என்பதற்கு இது ஒரு சான்று. இப்பட்டங்களுக்குரியவர்கள் சமூகத்திலும் அரசியலிலும் பெற்றிருந்த பதவிகளையும் தகுதிகளையும் கல்வெட்டுகள் ஓரளவு குறிப்பிடுகின்றன. அவற்றைப் பகுத்துப்பார்த்தால் வேளாள நிலக்கிழார்களும் பிராமண நிலக்கிழார்களும் மேலிடத்தைப் பெற்றிருந்தார்கள் எனத் தெரிகிறது. அடுத்து 'அரையன்' பட்டம் பெற்ற சில குறுநிலத் தலைவர்கள் ஏறக்குறைய இத்தகைய செல்வாக்குப் பெற்றிருந்ததைக் குறிப்பிடலாம். இக்கூற்றை மூவேந்தவேளான், பிரம்மராயன்[2] ஆகிய இரு பட்டங்களுக்கும் சோழ அரசுப் பதவிகளுக்கும் உள்ள தொடர்பைக் கொண்டு விளக்கலாம்.

மேலே குறிப்பிட்ட 9600 பெயர்களில் 307 பேர் மூவேந்தவேளான் பட்டத்தையும் 94 பேர் பிரமராயன் பட்டத்தையும் பெற்றிருந்தனர். இவர்கள் பெற்றிருந்த உயர் அரசியல் பதவிகளைக் கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

---

1. இக்கல்வெட்டின் ஒரு படி தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் உள்ள ஆச்சாள்புரத்திலும், இன்னொருபடி அதே வட்டத்தில் திருக்கருகாவூரிலும் உள்ளன (க.ஆ.அ. 1918 எண். 429, 538).
2. இதில் பிரம மாராயன், பிரமாதிராயன் ஆகியவையும் அடங்கும்.

	மூவேந்த வேளான்	பிரம்மராயன்
பதவி வகித்தவர்	307	94
அதிகாரி	90	4
நாயகம்	12	4
புரவுரித்துறை	37	0
சேனாபதி/தண்டநாயகம்	0	7
ஓலை	39	8
ஸ்ரீகாரியம்	9	1
பிறஉயர்பதவிகள்	26	7
பதவி வகித்தவர் மொத்தம் (பட்டம் பூண்டவருள் விழுக்காடு)	213(69%)	31(32%)

இவ்வட்டவணையிலிருந்து சில சுவையான செய்திகள் கிடைக்கின்றன. அரசியலைப் பொறுத்தவரையில் வேளாளர் பிராமணரைக் காட்டிலும் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மூவேந்தவேளான் பட்டம் பெற்றவர்களில் 69 விழுக்காட்டினர் உயர்பதவிகளை வகிக்க, பிரம்மராயன் பட்டம் பெற்றவர்களில் 31 விழுக்காட்டினர் தான் அப்பதவிகளை வகித்தனர். மேலும், சில பதவிகள் மூவேந்த வேளாளர்களுக்கே உரியனவாகவும் சில பிரம்மராயர்களுக்கே உரியனவாகவும் இருப்பதைக் காணலாம். புரவுவரித்துறை (அதாவது வருவாய்த்துறை) மூவேந்த வேளாருக்கே உரியதாகவும் சேனாபதிப் பதவி பிரமராயருக்கே உரியதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலமை உருவாக என்ன காரணங்கள் என்பதைக் கண்டுபிடிக்க அக்காலச் சமூக, பொருளாதார அமைப்பினைப் பற்றிய பிற செய்திகளையும் ஆராயவேண்டும்.

13

மாராயமும் மாராயனும்

எ. சுப்பராயலு

'மாராயம்' என்ற சொல்லை முதன்முறையாகத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை இயல் 65ஆம் சூத்திரம் வஞ்சித்திணைத்துறைகளுள் ஒன்றன் பெயராகக் குறிக்கிறது. பின்னர் இது இனியவை நாற்பது (6 : 1), சிலப்பதிகாரம் (25 : 142), புறப்பொருள் வெண்பாமாலை (வஞ்சிப்படலம் : 46)ஆகியவைகளில் வழங்கக் காண்கிறோம். இனியவை நாற்பதில் கருத்து தெளிவாக இல்லை. சிலப்பதிகார வழக்கு தொல்காப்பியத்தை அப்படியே அடியொட்டிச் செல்கிறது. புதிய விளக்கம் எதுவும் இல்லை. புறப்பொருள் வெண்பாமாலையும் தொல்காப்பியத்தைப் போலவே வஞ்சித்துறைகளுள் ஒன்றாகக் குறிக்கிறது. தொல்காப்பியத்தில் வரும் 'மாராயம் பெற்ற நெடுமொழியானும்' என்னும் தொடருக்கு இளம்பூரணர் 'மாராயமாகிய உவகை பெற்ற நெடியமொழியும்' என்று பொருள் கூறுகிறார். 'மாராயம்' என்ற சொல்லுக்கு மகிழ்ச்சி, நற்செய்தி, பாராட்டுச் சொல் என்ற பொருள்கள் உண்டு என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி (ப. 3173) குறிக்கிறது. நச்சினார்க்கினியர் மேல்குறித்த தொடருக்கு 'வேந்தனாற் சிறப்பெய்திய அதனாற் றானேயாயினும் பிறரேயாயினும் கூறும் மீக்கூற்றுச் சொல்லும்' என்ற பொருள் தருவதோடு 'சிறப்பாவன ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலுமாம்.....' என்று விளக்கிச் செல்கிறார். புறப்பொருள் வெண்பாமாலையில் மாராய வஞ்சி 'மறவேந்தனிற் சிறப்பெய்திய விறல் வேலோர்

நிலையுரைத் தன்று' என்று விளக்கப்படுகிறது. இது நச்சினார்க்கினியர் உரைக்கு அரண் செய்யலாம். ஆக மாராயம் என்பது 'அரசனால் செய்யப்படும் சிறப்பு', 'அதனால் பெறும் பாராட்டு மொழி' என்று கருத வேண்டியுள்ளது. இந்தச் சொல் தொகை நூல்களில் வேறு எங்கும் காணவில்லை. 'மாராயம் பெற்ற நெடுமொழி' க்கு எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்படும் 'துடியெறியும் புலைய' என்று தொடங்கும் 287ஆம் புறநானூற்றுப் பாடலின் திணை கரந்தையாகவும், துறை நீண்மொழியாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

மா. இராசமாணிக்கம் 'மாராயம்' என்பது ஒரு பட்டம் என்று தொல்காப்பியம் கூறுகிறது; அதனைப் பெற்றவன் ''மாராயன்'' எனப்பட்டான்' என்று எழுதியுள்ளார்.[1] நீலகண்ட சாஸ்திரி,[2] ந. சுப்பிரமணியம் போன்ற வரலாற்றாசிரியர்களும் இக்கருத்தை ஓரளவு கொள்வதாகத் தெரிகிறது. ந.சுப்பிரமணியம் எட்டி, காவிதி, ஏனாதி என்பவை மூவகையான மாராயப்பட்டங்கள் என்று கூறுவதோடு மாராயம் என்ற சொல்லுக்கும் மாராயன் என்பதனுக்கும் தொடர்பு உள்ளதாகச் சுட்டிச் சொல்கிறார்.[3] ஆயினும் மாராயம், மாராயன் என்ற சொற்களுக்கிடையே நேரடித் தொடர்பு இருக்கிறது என்பதற்கு உறுதியான இலக்கியச் சான்றுகளில்லை.

காவிதி, எட்டி, ஏனாதி பட்டங்களுக்கு இலக்கிய வழக்குண்டு. காவிதிப் பட்டம் பெற்ற சில புலவர் பெயர்கள் நற்றிணையில் உள்ளன. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார், இளம்புல்லூர்க் காவிதி, கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் என்ற பெயர்களில் ஊர்ப்பெயரின் பின்னொட்டாக 'காவிதி' காணப்படுகிறது. ஆகவே காவிதி ஊரைச் சார்ந்து கொடுக்கப்பட்ட பெயராகக் கொள்ளலாம். மதுரைக்காஞ்சியில் காவிதிமாக்கள் தன்மை விவரிக்கப்பட்டுள்ளது: **நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடங்கி/அன்பும் அறனும் ஒழியாது காத்து/ பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த/செம்மை சான்ற காவிதி மாக்கள்/** (வரி: 496 : 99). ஏனாதி பட்டம் பெற்றோரும் சிலர் தொகைப்பாடல்களில் காணப்படுகின்றனர். பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன், சோழிய ஏனாதி திருக்குட்டுவன், முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். இங்கு அரசன் பெயரோடு

பின்னொட்டாக வருவதைக் கவனிக்கலாம். ஏனாதியைச் சேனாபதியின் மருஉவாகக் கொண்டு சேனாதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயராகக் கொள்வது வழக்கமாக உள்ளது. எட்டிப்பட்டம் மணிமேகலையில் தான் முதன் முதல் குறிப்பிடப்படுகிறது. இது சிறந்த வணிகர்களுக்குக் கொடுக்கப்படும் சிறப்பு என்று தெரிகிறது.

இவற்றில் காவிதி 11ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுக்களிலும் காணலாம். ஊர்க் கணக்கரின் பட்டம் என்ற வகையிலேயே கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது. ஏனாதிப் பட்டம் மிகவும் அருகியே காணப்படுகிறது. எட்டி தனித்து வழங்கவில்லை. எனினும் இலக்கிய வழக்கில் முன்பில்லாத மாராயன் என்ற பட்டம் பெரும் அளவில் கல்வெட்டுக்களில் வழங்குவதைக் காண்கிறோம்.

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970, ப. 453 அ.கு.
2. The colas , 1955, ப. 462.
3. Sangam polity , 1966, ப. 85.

14

வைத்திய குலம்

எ. சுப்பராயலு

கி.பி. 7-8ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுகளில்' சிலருடைய பேர்கள் 'மங்கலம்' என்ற சொல்லை அடிப்படையாக வைத்து பட்டங்களைப் பெற்றிருக்கின்றன.

(பட்டம்) // (தந்தை) // (தான்)

1. பாண்டி/மங்கல/அதிஅரைசன்//சாத்தன்//ஏறன்
2. மூவேந்த/மங்கலப்/பேரரையன் (ஆகிய)//மாறன்// காரி
3. பாண்டி மங்கல/விசையரையன் (ஆகிய)//மாறன்//எயினன்
4. பாண்டி/அமிர்த/மங்கலப்/பேரரைசன் (ஆயின)//சாத்தன்//கணபதி
5. வீர/மங்கலப்/பேரரைசன் (ஆகிய)//மூர்த்தி//எயினன்
6. பாண்டி இளங்கோ/மங்கலப்/பேரரைசன்(ஆகிய)//சங்கன்//சிரிதரன்.

இவர்களின் முதலில் உள்ளவர் மலையடிக்குறிச்சியில் ஒரு குகைக்கோயிலை உண்டாக்கியவர். அவர் பாண்டிய அரசாங்கத்தில் ஓர் உயர்பதவி வகித்தவர் என்பது உறுதி. மற்ற ஐவரும் முதல் வரகுணபாண்டியன்கீழ் உயர்பதவி வகித்தவர். இரண்டாமவரும் மூன்றாமவரும் ஒருவர்பின் ஒருவர் இவ்வரசன் கீழ் உத்தரமந்திரி பதவி வகித்தனர். நாலாமவரும் ஐந்தாமவரும் மஹாசாமந்தன் என்ற உயர் பதவி வகித்தனர். ஆறாமவர் யானைப்படைத்தலைவர்.

இவர்கள் பெயர்களில் முதலில் கொடுக்கப்பட்ட பகுதி சென்ற கட்டுரையில் விளக்கியது போல் பட்டப்பகுதியாகும்.

இடையில் உள்ள இரு பகுதிகள் தந்தை பெயரும் தன் பெயருமாகும். இடையில் உள்ள ஆகிய அல்லது ஆயின என்ற சொல் பட்டத்தையும் பெயரையும் இணைக்கும் சொல். கீழே பட்டப்பகுதி மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இப்பட்டப்பகுதிகளைமூன்று உட்கூறுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் இறுதிக்கூறு பேரரைசன் என்று நான்கு முறையும் அதிஅரைசன் என ஒரு முறையும் விசையரையன் என ஒரு முறையும் வந்துள்ளது. அரையன், அரைசன் ஆகியன 'அரசன்' என்ற சொல்லின் பிறவடிவங்கள். இங்கு 'தலைவன்' அல்லது 'முதல்வன்' (chief) என்ற பொருள் கொடுக்கும். பேர், அதி என்ற இரண்டும் பெருமை என்ற பொருளைத் தரும் அடைகளாகும். 'விசை' விஜய என்பதன் மரூஉ; வெற்றி எனப் பொருள் தரும்.

பட்டப்பகுதியில் முதல் உட்கூறு பாண்டி என இரு முறையும், பாண்டி அமிர்த, பாண்டி இளங்கோ, மூவேந்த, வீர என ஒவ்வொரு முறையும் வந்துள்ளது. இது ஆளும் அரசன் பெயர் சார்ந்து வந்துள்ளது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. சோழர் காலப் பட்டப்பகுதிகளையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

இடைப்பட்ட கூறான 'மங்கலம்' இங்குச் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இச்சொல் பிராமண ஊர்ப்பெயர்களின் பின்னொட்டாகப் பெரும்பாலும் காணப்படுகிறது (வெள்ளேற்றான் மங்கலம், கும்மணமங்கலம், சிவரமங்கலம் முதலியன). ஆகவே இக்கூறு மேற்குறிப்பிட்ட பேருக்குரியோரின் ஊர்களாகக் கருத வாய்ப்புண்டு. காட்டாக மூவேந்தமங்கலப் பேரரையன் மூவேந்தமங்கலத்தைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். ஆயினும் இப்பெயர்களை அவ்வாறு கொண்டால் உண்மையான பொருள் தவறிவிடும். சோழர் கல்வெட்டுக்களில் உள்ள பெயர்களைப் பகுத்துப் பார்த்தால் பெரும்பாலும் பட்டப்பெயரில் வரும் இந்த இடைக்கூறு ஒரு சாதி அல்லது தொழில் அடிப்படையில் ஏற்பட்டதாக நிருபிக்கலாம். ராஜராஜ பிரம்மராஜன், ராஜராஜ நாடக மாராயன் என்ற பெயர்களில் வரும் பிரம்ம, நாடக என்பவை முறையே பிராமணரையும், நாடகத்தொழில் வல்லாரையும் குறிக்கின்றன. 'மங்கல' என்ற கூறையும் இவை போன்றே கொள்ளல் வேண்டும். அது சாதி/தொழில் அடிப்படையில் எழுந்திருக்கவேண்டும் .

வடமொழியிலும், தமிழிலும் 'மங்கலம்' என்பது மகிழ்ச்சி, போர், பேறு, நற்சடங்கு என்று பல பொருள்களைக் கொண்டுள்ளது.[2] தமிழில் மங்கலன், மங்கலியன் நாவிதரையும் குறிக்கும்.[3] தெலுங்கிலும் 'மங்கலி' என்றால் நாவிதரைக் குறிக்கும்.[4] எனவே மங்கலப்பட்டமுடையோர் நாவிதர் குலத்தைச் சேர்ந்தவர் எனக் கொள்ளலாமா?

உண்மையில் மேலே உள்ளவர்களில் நால்வர் (2-5) களக்குடி அல்லது கரவந்தபுரம் என்னும் பெயர்கொண்ட ஊரினராகவும் வைத்யகுலத்தைச் சேர்ந்தவராகவும் குறிப்பிடப்படுகின்றனர். மற்ற இருவரைப் பற்றி முழுச் செய்தி கிடைக்கவில்லை. முதன்மைக் கல்வெட்டாய்வாளர் கே.ஜி.கிருஷ்ணன் வைத்யகுலத்தைச் சேர்ந்தவர்களின் பட்டப்பெயரில் 'மங்கலம்' சிறப்பாக வருவதைக் குறிப்பிட்டுள்ளார்.[5] ஆயினும் அதன் காரணத்தை அவர் ஆராய முற்படவில்லை. கே.வி.ராமன் தம் 'பாண்டியர் வரலாறு' என்ற நூலில் இச்சொல்லைப்பற்றித் தெளிவாகக் கருத்தளித்துள்ளார்.[6] அவர் வைத்தியகுலம் என்பது வேத விற்பன்னர் குலமென்று சொல்கிறார். அதாவது இவர்கள் வைதிக பிராமணர் ஆக இருக்கவேண்டும் என்பது அவர் கருத்து. வேதசாத்திரங்களை நன்கு கற்றவர் வைத்யர் என்ற சொல்விளக்கம் உண்டுதான். அகராதிகளும் இதைக் குறிப்பிடுகின்றன.

ஆயினும் வைத்தியருக்கு மருத்துவர் என்ற பொருளும் உண்டு.[7] மேற்சொன்ன வைத்ய குலத்தினர் பிராமணர் என்ற குறிப்பு கல்வெட்டுகளில் எங்கும் இல்லை. மேற்குறிப்பிட்ட எவர் பெயரிலும் 'பிரம்ம' என்ற பிராமணருக்கு உரிய அடை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வேதத்தைக் கற்றுக் கரைபோகியவர் என்ற குறிப்புமில்லை. இரண்டாமவர் வேள்விக்குடிச் செப்பேட்டில் சமஸ்கிருதப்பகுதியில் 'சாத்திரங்கள் கற்றவர், கவி, நல்ல பேச்சாற்றல் உடையவர்' என்று பொதுப்படையாகக் குறிப்பிடப்படுகிறார். ''வாத்ய கேய சங்கீதங்களான் மலிவெய்திய வங்களந்தை வைத்தியகுலம்'' என்ற ஒரு குறிப்பும் சீவரமங்கலச்செப்பேட்டில் உள்ளது. இதிலும் வேதச்சார்பு இல்லை.

இவற்றையெல்லாம் நோக்கும்போது இவர்கள் நாவிதகுலத்தைச் சேர்ந்தவர் என்பதை ஊகிக்கலாம். பெரும்பாலும் அவர்கள் மருத்துவத் தொழில் புரிந்தவர் என்றும் சொல்லலாம். நாவிதர் மருத்துவர் என்பதில் முரண்பாடு இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் வரலாற்று நோக்கில் பார்த்தால் அம்முரண்பாடு மேலோட்டமானதே என்று தெரியும்.

அண்மைக்காலம் வரை நாட்டுப்புறங்களில் பல இடங்களில் நாவிதர்கள் மயிர்வினைஞர்களே அல்லாமல் மருத்துவத் தொழில் புரிபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். நாவிதப் பெண்கள் மருத்துவச்சிகளாக பேறுகாலங்களில் உதவுவது வழக்கமாக இருந்துள்ளது. ஒரு அரசியின் பேறுகாலத்தில் அறுவைச்சிகிச்சை செய்த ஒரு 'மங்கலை' பற்றி கொங்குமண்டலசதகம் குறிப்பிடுகிறது. உண்மையில் பழந்தமிழ்ச் சமூகத்தில் நாவிதக்குலம் ஒரு மதிப்புடைய குலமாகவே இருந்தது. கொங்குநாட்டில் இன்றும் நாவிதர் பலகூட்டத்தினருக்கு, குறிப்பாக கொங்குவேளாளருக்கு மணவினை போன்ற சடங்குகளின் போது முக்கியப் பொறுப்புக்களையேற்று நடத்துகின்றனர்.

சோழர் கல்வெட்டு ஒன்றில் தொடர்புடைய ஒரு செய்தி கிடைக்கிறது. தஞ்சாவூர் பெரிய கோயிலிலுள்ள ராஜராஜனின் கல்வெட்டு (கி.பி.1014) ஒன்றில் பஞ்சவன் மங்கலப் பேரரையன் அரையன் பவருத்திரன் என்பவர் கோலினமை என்ற தொழிலில் வல்லவர் என்ற குறிப்பு உள்ளது.[8] 'கோலினமை' என்ற சொல் எதைக்குறிக்கிறது என்பதற்கு அகராதிகளில் விளக்கம் கிடைக்கவில்லை. ஆயினும் இது மருத்துவத்தோடு தொடர்புடையது என்பதை ஊகிக்கலாம். இப்பெயருக்குப் பக்கத்தில் ராஜராஜ பிரயோகதரையன் என்ற அம்பட்டன் குறிக்கப்படுகிறார். பிரயோகம் மருத்துவசிகிச்சையைக் குறிக்கும். அம்பட்டன் என்ற சொல்லும் மருத்துவரைக் குறிக்கும்.

மேற்சொன்ன செய்தித் துணுக்குகளையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் மங்கலம் என்ற சொல் மருத்துவர் என்று பொருள்படும் வைத்யரோடு தொடர்புடையது என்பதை மறுக்கமுடியாது.

இம் மங்கலப் பேரரையர்கள் முற்காலப் பாண்டிய அரசியலில் ஒரு முக்கிய இடத்தை வகித்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ எட்டாம் நூற்றாண்டுக்குபின் இவர்கள் பாண்டிய அரசிலிருந்து மறைந்துவிடுகிறார்கள். சோழ அரசில் மட்டும் இவர்கள் 11ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை காணப்படுகிறார்கள்.

1. அ) கஆஅ, 1959-60: 358.
   ஆ) எஇ, 17:16, 8:33(1)
   இ) எஇ, 8:33(2)
   ஈ) எஇ, 36:15
   உ & ஊ) பாண்டியர் செப்பேடுகள் பத்து : ப. 61.
2. மோனியர்வில்லியம்ஸ் சமஸ்கிருத ஆங்கில அகராதி.
3. சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் அகராதி.
4. சி.பி.பிரவுன், தெலுங்கு ஆங்கில அகராதி.
5. எஇ, 36, ப. 116-117,
6. கே.வி.ராமன், பாண்டியர் வரலாறு (1977) ப. 73-76, 168, 211.
7. சமஸ்கிருத ஆங்கில அகராதி.
8. தெஇக, 2, 66 ப. 277 வரி 498 ; ப. 302 அடிக்குறிப்புரை.
9. சமஸ்கிருத ஆங்கில அகராதி.

15

கல்வெட்டில் இந்து-முசுலிம் சமய ஒருமைப்பாடு

செ. இராசு

இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் வழங்கியவைகளில் இந்து-முசுலிம் சமய ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எதிர்கால இந்தியச் சமுதாயம் சமய வேறுபாடுகளை யெல்லாம் களைந்து ஒன்றுபட்டு வாழ்ந்து முன்னேறிச் செல்லச் சமய ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த சமய ஒருமைப்பாட்டிற்குக் கல்வெட்டுக்கள் நமக்கு மிகச் சிறந்த சான்றுகளைத் தந்து வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

சோழர் காலம்

இராசராசன் 1010இல் கட்டிமுடித்த தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பலரும் கொடையளித்துள்ளனர். அவர்களில் ஒருவர் தஞ்சைப் புறம்படியில் ராஜவித்யாதரப் பெருந்தெருவில் வாழ்ந்த சோனகன் சாவூர் பரஞ்சோதி என்னும் இசுலாமியர் ஆவார்.[1] சோனகன் என்பது அராபியரை அக்காலத்தில் குறித்த சொல். சாவூர் என்பது ஜாஃபர் என்பதன் வடிவம் ஆகலாம். பரஞ்சோதி என்பது அவர் பெற்ற சிறப்புப் பெயர். இராசேந்திர சோழன் காலத்தில் இச் சோனகன் சாவூர் பரஞ்சோதி கங்கை கொண்ட சோழபுரத்தில் பெருந்தர அரசு ஊழியராகத் திருமந்திர ஒலை நாயகமாக இருந்துள்ளார்.[2]

தஞ்சைப் பெருவுடையார் விமானத்தின் வடபக்கம் உள்ள தொப்பியணிந்த வெளிநாட்டவர் ஒருவர் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இராசராசன் பெருவுடையார் கோயிலுக்கு அளித்த அணிகலன்களில் சோனகச் சிடுக்கு என்பதும் ஒன்றாகும்.

புகழ்வாய்ந்த சோழரின் ஆனைமங்கலச் செப்பேட்டில் மத்யஸ்தனாவும் கரணத்தானாகவும் நாகப்பட்டினத்துக்கருகில் சன்னமங்கலம் என்ற ஊரில் பணிசெய்த துருக்கன் அகமுதன் என்பவர் குறிக்கப்பெறுகின்றார்.[3]

பாண்டியர் காலம்

மதுரை, கோரிப்பாளையம் ஒருகோல் சுல்தான் பள்ளிவாசலுக்குக் கூன்பாண்டியன் 14 ஆயிரம் பொன் கொடுத்துச் சோளிகுடி, சொக்கிகுளம், வீவிகுளம், கண்ணாளேம்பல், சிறுத்தூர், திருப்பாலை ஆகியஆறு ஊர்களை விலைக்கு வாங்கித் தானமாக அளித்தார்[4] (வீவிகுளம்-பீபிகுளம்?).

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் பிள்ளை என்ற பட்டமுடைய தகியுடீன் என்னும் இசுலாமியர் குலசேகர பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தார்.[5] சில கல்வெட்டுக்களில் இசுலாமியர் முதலியார் பட்டம் பெற்றிருந்தமையும் தெரிகிறது.[6]

சிறிய மெக்கா எனப்படும் காயல்பட்டினத்தில் கற்புடையார் பள்ளி, இரட்டைக் குளத்துப்பள்ளி ஆகிய பள்ளிவாசல்களில் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.[7]

கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதியில் கேரள மன்னர் உதயமார்த்தாண்டவர்மன் காயலிலிருந்து திருசெந்தூர் செல்லும் வழியில் வீரபாண்டியன் பட்டினம் என்னும் பகுதியில் உள்ள மக்தூம் பள்ளி எனப்படும் ஜிம்மாத்துப் பள்ளியைப் புதியதாகக் கட்டி அப் பள்ளிக்கு உதயமார்த்தாண்டப் பெரும்பள்ளி என்று தன் பெயரிட்டான். அங்கு பணிபுரிந்த அபூ பக்கர் காதியாருக்கு உதயமார்த்தாண்டக் காதியார் என்றும் பெயரிட்டான். மேலும் காயல் ஆன சோணாடு கொண்டான் துறைமுகத்தில் ஏற்றுமதி

இறக்குமதியாகும் பொருட்களுக்கு எல்லா மதத்தாரையும் நாலு பணத்துக்குக் கால்பணம் அப் பள்ளிக்கு மகமையாக அளிக்கும்படி ஏற்பாடு செய்தான்.[8]

விசய நகர, நாயக்கர் காலம்

இரண்டாம் தேவராயர், இராமராயர் போன்ற பேரரசர்கள் முசுலிம் போர் வீரர்கள், முசுலிம் படைத்தலைவர்கள் தம்மை வணங்க வரும்போது தமக்கு முன்பாகப் புனிதத் திருக்குர்ஆனை வைத்திருக்குமாறு கட்டளை பிறப்பித்திருந்தனர்.[9]

கூன்பாண்டியன் கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்கு அளித்த கொடைஊர்கள் பற்றிப் பிற்காலத்தில் அரசு அலுவலர்கட்கும், பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும் சர்ச்சை மூண்டது. வீரப்ப நாயக்கன் பாண்டியர் கால ஆவணங்களைப் பார்த்து விசாரணை செய்து முன்பு இருந்ததுபோல் கொடை அளிக்கப்பட்ட ஆறு ஊர்களும் கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்குச் சேர்ந்தவை எனத் தீர்ப்பளித்து அங்குக் கல்வெட்டும் பொறித்தான். சிவமயம் என்று தொடங்கும் அக் கல்வெட்டு இன்றும் அப்பள்ளிவாசலில் உள்ளது.[10]

நாயக்க அரசியர் மீனாட்சியும்,[11] மங்கம்மாளும்[12] திருச்சியிலும் மதுரையிலும் பல பள்ளிவாசலுக்கும், இசுலாமியப் பெரியார்களுக்கும் கொடையளித்தனர். மதுரைத் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தான் காயல்பட்டினம் இசுலாமியர் மணப்பெண்ணிடம் கைக்கூலி (சீதனம்) வாங்கக்கூடாது என்று முடிவு செய்தனர்.[13]

1531இல் செவ்வப்ப நாயக்கன் அதிராம்பட்டினம் கலாரத் காகா அலாவுதீன் சாகிப் தர்காவிற்குப் பெருங்கொடை அளித்தார்.[14] 1550இல் செவ்வப்ப நாயக்கர் தஞ்சை சமுகபீரு பள்ளிவாசலுக்கு நாஞ்சிக்கோட்டை மன்னையார்களைக் கொண்டு 7 வேலி நிலம் அளிக்கச் செய்தார்.[15] 1645இல் விசய ராகவ நாயக்கன் நாகூர் அசரத்காதிர் ஒலி தர்காவின் முதல் வாயில் அருகில் உள்ள மினார் எனப்படும் கோபுரத்தைக் கட்டினார்.[16]

சேதுபதியின் ஆணை

தொண்டியில் ஒரு பௌத்தப் பள்ளி இசுலாமியப் பள்ளிவாசலாக மாற்றப்பட்ட தடயங்கள் இன்றும் உள்ளன. சேதுபதி அரசர் ஒருவர் எந்தக் கோயிலில் விளக்கு எரியவில்லையோ, எந்தக் கோயிலில் மணியோசை கேட்கவில்லையோ அந்தக் கோயிலை இசுலாமியப் பள்ளிவாசலாக மாற்றிக்கொள்ளுமாறு ஆணையிட்டதாகவும் செப்பேடு வெட்டித் தந்ததாகவும் அப் பள்ளிவாசல் நிர்வாகிகள் கூறுகின்றனர்.[17]

இராமேஸ்வரம் ஆபில் காவல் பள்ளிவாசலுக்கும், ஏர்வாடி சுல்தான் சையது இபுறாகிம் வலி தர்காவிற்கும் 1742, 1745 ஆகிய ஆண்டுகளில் முத்துக்குமார விசய ரகுநாதச் சேதுபதி பெருங்கொடைகள் அளித்தார்.[18]

பூலாங்கால், அபிராமம், நாரணமங்கலம், தொண்டி, புல்லுக்குடி, திருச்சுழியல், காரேந்தல், சொக்கிகுளம், நாடாகுளம், குச்சனேரி, கொக்காடி, போறந்தப்புளி, காட்டுபாவா சத்திரம் போன்ற பல இடங்களில் இருந்த பள்ளிவாசல்களுக்குச் சேதுபதி அரசர்கள் கொடைகள் அளித்துள்ளனர்.[19]

தஞ்சை மராட்டியர்

மராட்டியர் காலத்தில் படைக்காகவும், யூனானி மருத்துவத்துக்காகவும், வணிகத்திற்காகவும் தஞ்சையில் இசுலாமியர் பலர் குடியேறினர். அவர்களின் பொருட்டுத் தஞ்சையில் மட்டும் 42 பள்ளிவாசல்களும் தர்காக்களும் உள்ளன. வடக்கு அலங்கம் படே உசேன் தர்கா போன்ற பல நிறுவனங்கள் தஞ்சை மராட்டிய மன்னர் குடும்ப மேற்பார்வையில் இன்றும் உள்ளன. அல்லாப் பண்டிகைக்கு இசுலாமியப் பெருமக்களுக்கு அரசர், அரசியர் கொடுத்த கொடைகள் பற்றி மோடி ஆவணங்களில் பல குறிப்புக்கள் உள்ளன.

பிரதாப சிம்மன் நாகூர் தர்காவின் முன்பு உள்ள 11 நிலைக் கோபுரத்தை 17.2.1753இல் தொடங்கி 20.1.1755இல் கட்டி முடித்தார்.[20] நாகூர் கந்தூரியின் போது மராட்டிய மன்னர் சந்தனம்,

சாதரா ஆகியவைகள் அனுப்பிவைப்பர். அவைகளை யானை குதிரையுடன் வரவேற்று அரசர் குடும்பத்தின் நலன் கருதித் தர்காவில் இசுலாமியர் பாத்தியா ஓதுவர்.

ஏறக்குறைய இதே காலத்தில் சிவகங்கையில் அரசு நிலையிட்ட முத்து வடுகநாதப் பெரிய உடையாத்தேவர் மொட்டைப் பக்கிரி சாயபு தர்காவிற்கு நிலம் அளித்தார்.[21] 1795இல் தொண்டி கைக்களான் குளம் கலிங்கு மருதுபாண்டியரால் கட்டப்பட்டது. அப்போது அப்பகுதி நிர்வாகியாக இருந்தவர் அபூப் சகா மரைக்காயர் என்பவர்.[22]

கொங்கு நாட்டில்

திருவரங்கக் கோயிலில் இருப்பதைப் போலவே துலுக்கநாச்சியம்மன் வழிபாடு கொங்கு நாட்டில் பல பகுதிகளில் உள்ளது. இராவுத்தன்மார் சுவாமி வணக்கம் இசுலாமிய வீர வணக்கமே ஆகும். சிலர் திங்களூர் மசிரியாத்தாள் வழிபாடு இசுலாமிய வழிபாட்டின் சின்னமே என்பர்.

காங்கேய மன்றாடியார் குடும்பத்தில் முடப்பெண் ஒருத்தி பிறந்தாள். அவளுக்குச் சகோதரர்கள் தம் நிலத்தில் பங்கு அளிப்பதாகக் கூறினர். பின் என்ன காரணத்தாலோ அளிக்க மறுத்தனர். முடப்பெண் 'துலுக்க சருதார்' அவர்களிடம் முறையிடவே அவர் விசாரித்து முடப்பெண்ணுக்கு உரிய நிலம் பெற்றுத்தந்தார் என மக்கென்சி ஆவணம் ஒன்று கூறுகிறது.[23] இவ்வரலாறு கூறும் வெள்ளையம்மாள் காவியம் என்ற ஓலைச் சுவடி அண்மையில் கிடைத்துள்ளது.

நவாப் செய்த பைசல்

திருவரங்கத்தில் கந்தாடை அண்ணங்கார் வரதாச்சாரியார் பரம்பரைக்கும் ரெங்காச்சாரியார் பரம்பரைக்கும் பத்து தலைமுறையாகச் சுமார் 120 ஆண்டுகட்கு மேல் சில உரிமைகள் பற்றிய தகராறு இருந்தது. 1797இல் ஆர்க்காடு நவாப் அசரத் சாயபு அவர்கள் கச்சேரி கூட்டித் தீர விசாரித்துப் பழைய ஆவணங்களைப் பார்த்துத் தீர்ப்பளித்தார். இப் பைசல் நாமா மக்கென்சி ஆவணத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

ஐதரும் திப்புவும்

ஐதர் அலி கொங்கு நாட்டில் பாளையக்காரர் மாளிகைக்கு வந்து பருப்புச்சாதம் சாப்பிட்டுக் குதிரை வாங்கிச்சென்றார் என்று ஒரு ஆவணம் கூறுகிறது. கொங்குப் பாளையக்காரர் முடிசூட்டு விழாவில்

'போர்வீர ராம் ஐதர்அலி சர்க்காரின்
புலிபோன்ற தாசில்களும்
புனிதமுள சிரஸ்துகளும்'

பங்கேற்றனர் என ஒரு நாட்டுப்பாடல் கூறுகிறது.[24] கோவை, குறிச்சி செல்லாண்டியம்மன் கோயிலுக்குத் திப்புசுல்தான் கொடையளித்துள்ளார்.[25] சேலம், மின்னக்கல் கோபால கிருட்டிணர் கோயிலுக்குத் திப்பு சுல்தான் 575 ராஜகோபால வராகன் சோடிகை மானியமாகத் தந்தார். தமக்கு ஆதரவு அளித்த பாளையக்காரர்களைப் 'பெத்த பிள்ளைபோல மரியாதையாய்' நடப்பிவிக்கச் சொல்லித் திப்பு சுல்தான் தம் அலுவலருக்கு ஆணை வழங்கினான்.[26]

காஞ்சி வரதராசரும் கருநாடக நவாப்பும்

*1688*ஆம் ஆண்டு காஞ்சி வரதராசப் பெருமாள், தாயார் ஆகியோர் பாதுகாப்பின் பொருட்டு உடையார்பாளையம் காட்டுப் பகுதிக்கு வந்தனர். அவைகளின் அழகில் ஈடுபட்ட உடையார்பாளையம் பாளையக்காரர் அவற்றைக் காஞ்சிக்கு அனுப்ப மறுத்தார். ஆத்தான் திருவேங்கட ராமானுஜ ஜீயர் வேண்டுகோளை ஏற்றுக் கர்நாடக நவாபு சாதத்துல்லாகான் *1710*ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தற்கு வரதராசர் மீண்டும் வர ஏற்பாடு செய்தார்.

இந்தக் கோயிலுக்கு இசுலாமியர் கொடை

9.6.1758 அன்று தஞ்சை மேலவீதி கொங்கணீசுவரர் கோயிலுக்குப் பதினெட்டுப்பட்டடை வணிகர் மகமை வசூல் செய்து தந்தனர். இந்துக்களுடன் பாசிக்கடை, சந்தைப்பேட்டை,

மூக்குப்புறி இசுலாமிய வணிகர் முகம்மது ராவுத்தன், மீரா லெப்பை உட்பட 13பேர் மகமை தந்தனர்.[27] விரிஞ்சிபுரம் சிவன் கோயில் தேர் அவ்வூர் மசூதி முன்னர்ச்செல்லும்போது மசூதியின் சார்பில் சிறப்புப் பூசை நடைபெறுகிறது. நெல்லையப்பர் கோயிலில் இன்றும் வழிபாட்டில் உள்ள உமாமகேசுவரர் அன்வருதீன் என்பவரால் செய்தளிக்கப்பட்டது. பனைமலை தாலபுரீசுவரர் கோயில் மண்டபம், படிகள் ஆகியவைகளை அமைத்தவர் நவாபு சடெல்லேகான் சாயபு ஆவார்.[28] இலுப்பூர் பெருமாள் கோயில் கொடிக்கம்பம் செய்து கொடையாக அளித்தவர் சையத் அலிகான்.[29] சந்தா சாயபு சிங்கிகுளம் கைலாசநாதர் கோயிலுக்குக் கொடையளித்தார்.[30] ஆர்க்காடு நவாப் அசராம்கான் பல சைவ வைணவக் கோயில்கட்குக் கிணறு வெட்டித் தந்தார்.[31] அகத்திசுவரர் கோயிலுக்கு இலுப்பைத் தோப்புக்கு நிலம் அளித்தவர் ஹசரத்குப்ளேகான்.[32] உத்தரகோச மங்கைக்கு உலோகத் திருவாசி செய்தவர்கள் சில இசுலாமியர். பல்லாவரம் அக்கிரகாரத்திற்குக் கிணறு வெட்ட இடம் வாங்கி அளித்தவர் சேகு அலாவுதீன் மகன் சேகு முசாமியார்.[33]

இவ்வாறு கல்வெட்டுக்கள் பல இந்து முசுலிம் ஒருமைப்பாட்டை விளக்குகின்றன. அதனை அறிந்து அவ்வாறே நடப்பது நம்மவர் கடமையாகும்.

குறிப்புக்கள்

1. தெஇக, 2:95
2. EC. 10 : 3
3. கல்வெட்டு ஓர் அறிமுகம், 6. எஇ. 22 : 34.
4. இசுலாமியத் தமிழ்இலக்கியம் -- ஓர் அறிமுகம், ப.78.
5. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வாலாறு
6. காயல்பட்டினம் அரபுத் தமிழ்க் கல்வெட்டுக்கள்
7. கட்டுரையாசிரியர் நேரில் கண்டவை.
8. கஆஅ 311 / 1964.
9. Sathiyanatha Iyer, Indian History, II p.358..
10. இசுலாமியத் தமிழ்இலக்கியம் - ஓர் அறிமுகம், ப.78.

11. Sewell. List of Antiquities, I 40, 268.
12. அ.கி.பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, ப. 342.
13. கட்டுரையாசிரியர் நேரில் கண்டவை.
14. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை கண்டுபிடிப்பு.
15. கஆஅ 294 / 1964, ஆவணம் 4, எண். 28.
16. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை கண்டுபிடிப்பு.
17. மேலது
18. இராமநாதபுரம் டாக்டர் எஸ்.எம்.கமால் அளித்தவை.
19. இராமநாதபுரம் அரண்மனை நிலமானிய ஒலைக்கணக்கு.
20. கஆஅ 293 / 1964, மற்றும் ஆவணம் 4, எண் 28.
21. Burgess, J. Tamil and Sanskrit Inscriptions, 19.
22. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை கண்டுபிடிப்பு.
23. பாளையப்பட்டுக்களின் வமிசாவளி, பக். 93-95.
24. பழைய கோட்டைநாட்டுப்பாடல்கள், ப.63.
25. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை கண்டுபிடிப்பு.
26. மக்கென்சி ஆவணம்
27. தஞ்சை மராட்டியர்செப்பேடுகள், 21
28. கஆஅ 616 / 1915.
29. கஆஅ 297 / 1944.
30. கஆஅ 268 / 1941.
31. கஆஅ D 142 / 1971.
32. தெஇகோ எண். 11
33. கஆஅ 56 / 1941.

16

சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள்

அ. கிருட்டினன்

சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள் வரலாற்றுக்கு எந்த அளவுக்குத் துணை நிற்கின்றன என்பதை அம்மாவட்டக் கல்வெட்டுச் சான்றுகளின் வாயிலாக அறியலாம். இம்மாவட்டத்தில் 90க்கும் மேற்பட்ட இடங்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. சில ஊர்களில் அதிக எண்ணிக்கையிலுள்ள கல்வெட்டுக்களும் பல ஊர்களில் ஒன்றிரண்டு கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. பெரும் பான்மையான கல்வெட்டுக்கள் கோவில்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. சில கல்வெட்டுக்கள் மலைக்குகைகள், பாறைகள் தூண்கள், ஊர் வயல்பகுதி ஆகியவற்றில் பொறிக்கப் பெற்றுள்ளன.

இம்மாவட்டத்தில் இதுவரை 330 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் பெரும்பான்மை தமிழ்க் கல்வெட்டுக்களேயாகும். சில கல்வெட்டுக்கள் வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பெற்றுள்ளன. கோவில்களில் சுண்ணம் பூசியும், சுவர் எழுப்பியும், கல் பொரிந்தும், சிதைந்தும் காணப்பெறுதலால் சில கல்வெட்டுக்கள் நன்முறையில் படியெடுக்க இயலாத நிலையில் அமைந்துள்ளன.

கால வரிசையில் கீழ்க்கண்டவாறு கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உள்ளன.

10, 11, 12ஆம் நூற்றாண்டுகள்	63
13ஆம் நூற்றாண்டு	115
14--17ஆம் நூற்றாண்டுகள்	117

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தமிழக அரசியலில் பல்வேறு மாற்றங்களும் குழப்பங்களும் நிலவிய காலமாகும். அக்காலச்சூழலில் அனைத்து நாட்டு அரசர்களின் மேலாண்மை மிக்கிருந்தது. அந் நூற்றாண்டில் மட்டும் அதிக எண்ணிக்கையில் கல்வெட்டுக்கள் காணப்படுவன குறிப்பிடத்தக்கதாகும்.

1888இல் டாக்டர் ஊல்சு அவர்களின் கண்காணிப்பில் இம்மாவட்டத்தில் முதல் முதலாக கல்வெட்டுக்களைப் படியெடுக்கும்பணி தொடங்கப்பெற்றது. சேலம் சுகவனேசுவரர் கோவில், கோட்டை சௌந்திரராசப்பெருமாள் கோவில், உத்தமசோழபுரம், கரபுரநாதர்கோவில் முதலிய இடங்களில் இருந்த கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பெற்றன. அவை தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதி நான்கில் 1923ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றுள்ளன. 1888 முதல் 1980 வரையிலான காலத்தில் இம்மாவட்டத்தில் 267 கல்வெட்டுக்கள் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டியல் பிரிவினால் படியெடுக்கப்பெற்றுப் பாதுகாத்து வரப்பெறுகின்றன. இவற்றுள் 71 கல்வெட்டுக்கள் இதுவரை பாடங்களோடு வெளிவந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சோழ அரசர்களின் ஆட்சிக்காலங்களில் 86 கல்வெட்டுக்களும், பாண்டிய அரசர் ஆட்சிக்காலங்களில் 53 கல்வெட்டுக்களும் , விஜயநகர ஆட்சியின்போது 54 கல் வெட்டுக்களும், போசளர் ஆட்சியில் 10 கல்வெட்டுக்களும், கொங்குச் சோழர்களின் 4 கல்வெட்டுக்களும், கொங்குப் பாண்டியர்களின் 2 கல்வெட்டுக்களும் இடம் பெற்றுள்ளன. சோழர்களில் முதல் இராசேந்திரன் (கி.பி. 1012-1044) மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) ஆகிய இரு அரசர்களின் ஆட்சிக்காலத்தில் மிகுதியான கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

சேலம் மாவட்டத்திலுள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பெறுவது ஓமலூர் வட்டம் அம்மன்கோயில்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டாகும். அதன் பாடம் வருமாறு :

"பரம்பன் கோசுவர் கிழார் மகன் வியக்கன் கோபன்
கணதேவன் தொட சுனை".

இக்கல்வெட்டு பிராமி அல்லது பழந்தமிழ் எழுத்தில் பொறிக்கப்பெற்ற கி.பி.4ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். தமிழ் எழுத்துவளர்ச்சியின் நிலையை எடுத்துக்காட்டுவதாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. நாமக்கல் அரங்கநாதர் குடைவரைக்கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள் தனிச்சிறப்பும் பெருமையும் உடையனவாகும். இக்கல்வெட்டுக்கள் கி.பி.7,8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகும். அதியமான் மரபினர் சிலர் இக் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றனர். பல்லவ கிரந்த எழுத்தில் பொறிக்கப்பெற்றுள்ள இக்கல்வெட்டுக்கள் அக்கோவில் கொடையாளர் சிலருடைய பெயரையும் சிறப்புப்பட்டப் பெயர்களையும் குறிப்பிடுகின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓமலூர் வட்ட கேத்தநாயக்கன்புதூர் ஏரியின் மதகு அருகில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் 'கிடங்கில் புலியார்மகன் நல்லி' என்பவன் மதகு ஒன்றை ஏரிக்கு வைத்துக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

சோழர் கால ஆட்சியைச் சார்ந்த முதல் கல்வெட்டு முதலாம் பராந்தகனின் பத்தாம் ஆட்சியாண்டில் (917) பொறிக்கப்பெற்ற கூளிப்பட்டி நடுகல் கல்வெட்டாகும். இதையடுத்து அதே ஊரில் இரண்டாம் ஆதித்த கரிகால சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் (960) கல்வெட்டொன்றும் காணப்பெறுகிறது. அடுத்துக் கொல்லிமலைப் பகுதியில் உத்தமசோழனின் பத்தாம் ஆட்சியாண்டு முதல் பதினாறாம் ஆட்சியாண்டு வரையிலான நான்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. பிற சோழ அரசர்களுடைய மெய்க்கீர்த்திகள் அடங்கிய கல்வெட்டுகள் கதிராநல்லூர், மல்லசமுத்திரம், கொக்கராயன் பேட்டை முதலிய ஊர்களில் கிடைக்கின்றன.

பாண்டியர் ஆட்சியின் கல்வெட்டுகளில் பழைய கல்வெட்டு இடைக்காலப் பாண்டியரில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1250-84) ஆறாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள திருச்செங் கோட்டிலுள்ள கல்வெட்டாகும். இவ்வரசன் இருபத்தேழாம் ஆட்சியாண்டுவரை ஆட்சிபுரிந்துள்ள காலத்தில் பொறிக்கப் பெற்ற பதினைந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அடுத்து

இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனின் பதினான்காம் ஆட்சியாண்டு முதல் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டு வரை பொறிக்கப்பெற்றுள்ள நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு முதல் பதினெட்டாம் ஆட்சியாண்டு வரையிலான பதினாறு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் பதினேழு ஊர்களில் உள்ளன.

நாட்டுப்பிரிவுகளும் ஊர்களும்

சேலம் மாவட்டம் சோழர் ஆட்சிக்காலத்தில் இரு பிரிவுகளாக வழங்கப்பெற்றன. நாமக்கல், இராசிபுரம், திருச்செங்கோடு, சேலம் ஆகிய வட்டங்களைச் சார்ந்த பகுதி 'வடகரை இராசாசிரியவளநாடு' என்றும், ஆத்தூர் வட்டப்பகுதி 'மகதை மண்டலத்துச் சனநாதவளநாடு' என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளன. வடகரை இராசாசிரயவளநாடு' பிற்காலத்தில் வீரசோழ மண்டலம் என்று வழங்கப்பெற்றது. "முஞ்சவல்லவரையர் நாடு" என்ற ஒரு நாட்டுப்பிரிவும் சேலம் மாவட்டத்தில் இருந்துள்ளது. காலப்போக்கில் பல்வேறு நாட்டுப்பிரிவுகள் இந்தப்பகுதியில் வழக்கில் இருந்தன. நாடாழ்வார் நாடு, கொல்லிமலை நாடு, மின்னாமொழி நாடு, மழ நாடு, ஏழூர் நாடு, கீழ்கரைப்பூந்துறை நாடு, பருத்திப்பள்ளி நாடு, தென்பூவாணிய நாடு, தூசூர் நாடு, வஞ்சிநாடு, வெள்ளாறை நாடு, சேல நாடு, இராசிபுர நாடு என்ற பல பிரிவுகள் இருந்தன.

நடுகற்கள்

சேலம் மாவட்டத்தில் மிகச்சில நடுகற்களே உள்ளன. கூளிப்பட்டியில் இரண்டும், செந்தாரப்பட்டியில் ஆறும், இராசிபுரத்தில் ஒன்றும், விலாரிபாளையத்தில் ஒன்றும், திருச்செங்கோட்டில் இரண்டும் ஆக 12 நடுகற்கள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. இவற்றுள் கூளிப்பட்டி நடுகற்கள் ஆதித்த கரிகால சோழன் காலத்தைச் சார்ந்ததாகும்.

மகதைவாணர்கள்

ஆறகளூரைத் தலைநகராகக்கொண்டு சோழ அரசரின் கீழ் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் மகதைவாணர்கள் ஆவர். இராசராச வாணகோவரையன் என்றும் பொன்பரப்பினான் மகதைப்பெருமாள் என்றும், மகதேசன் உலகம் காத்த பெருமாள் என்றும் அவ்வாணர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெறுகின்றனர். ஆறகளூர், தியாகனூர், வீரகனூர், தடாவூர், ஆத்தூர் ஆகிய இடங்களில் இவர்களுடைய கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. இவர்களுடைய காலத்தில் காஞ்சிக்குச் செல்லும் பெருவழி ஒன்று இருந்தது. 'மகதேசன் பெருவழி காஞ்சிபுரம்' என்ற பெருவழிக்கல் ஒன்று ஆறகளூரில் உள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தன் மேற்குப் பகுதியும், சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியும் இவர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பகுதியாகும். அப்பகுதி மகதை மண்டலம் எனப்பெற்றது.

சோழகங்கதேவர்கள்

சேலம், இராசிபுரம் வட்டப்பகுதியில் சோழர் ஆட்சிக் காலத்தில் குறுநிலத் தலைவர்களாக இருந்தவர்கள் சோழகங்க தேவர்கள் ஆவர். இராசேந்திர சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் இராசிபுர வட்டம் காக்காவேரியிலுள்ள சிவன்கோவிலில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டொன்றில் 'சேலநாட்டு அஞ்சாத பெருமாளான சோழகங்கதேவர் பொன் பரப்பினான்' என்பவன் குறிப்பிடப்பெற்றுள்ளான். இச் சோழகங்கதேவர் என்னும் பட்டப்பெயர் இரண்டாம் இராசேந்திரன் தன் உடன்பிறந்தாரில் மூன்றாமவரான மதுராந்தகனுக்குச் சூட்டப் பெற்றதாகும். இச்செய்தி அவனுடைய 'திருமாது புவியெனும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

> 'வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்
> சோழ கங்க னென்றும்'

என்று மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. சேலம் நாட்டு அஞ்சாத பெருமாள் என்று குறிப்பிடப்பெற்றுள்ளமையால் மதுராந்தக சோழன் என்ற பட்டப்பெயரில் சேலம் நாட்டை ஆண்ட ஒரு குறுநிலத் தலைவளாக இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

சேலம் நாட்டு சிரகப்பாடியில் மாணிக்கன் என்பவன் தான் கட்டிய மன்றீசுவரமுடை நாயனாருக்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் முதலாக அவனால் கட்டப்பெற்ற உட்பிறப்பழகியான் என்றும் ஏரியின் கீழ் நீர்பாய்ந்த நிலத்தைப் பொன்பரப்பின சோழகங்கதேவரிடம் பொன் கொடுத்து விலைக்கு வாங்கிய செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இராசிபுரம் வட்டம் கூனவேலம்பட்டி அழியா இலங்கையம்மன் கோவிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினைந்தாம் ஆட்சியாண்டைக் சார்ந்த கல்வெட்டில் 'அழகிய சியனான சோழகங்க தேவன்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளார்.

வாழக்குட்டப்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டில் 'எல்லாம் தலையான சோழகங்கதேவ முதலி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளார். இவர் கீழ்ப் பணிபுரிந்த திருநீற்றுப் பல்லவராயன் என்பவர் இடபதேவரை எழுந்தருளுவித்துக் கோவிலையும் கட்டிப் பூசைச் செலவினங்களுக்கு நிலத்தையும் கொடையாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வூரிலுள்ள மற்றொரு கல்வெட்டு சோழகங்கதேவர் என்னும் தன் தலைவனுக்கு நன்மை உண்டாகும்பொருட்டுச் சோழக்கோன் என்பவர் மூங்கில்பள்ளம் என்னும் ஏரியின் கீழ் இருந்த நிலத்தைப் பொன்பரப்பீசுவரமுடைய நாயனார்க்குத் தேவதான இறையிலியாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. எனவே சோழகங்கதேவர் என்பவர் ஒரு குறுநிலத்தலைவர் என்பதும் அவர் பொன்பரப்பிய கோவில் வாழக்குட்டப்பட்டியிலுள்ள பொன்பரப்பீசுவரமுடைய நாயனார் கோவில் என்பதும் இச்சான்றுகளால் அறியலாம். இச் சோழகங்கதேவர் என்னும் பட்டப்பெயரை மரபுவழியில் பலர் பெற்றிருக்கலாம். அழகிய சியனான சோழகங்கதேவன, எல்லாம் தலையான சோழகங்கதேவன், அஞ்சாத பெருமாளான சோழகங்கதேவன் எனப் பலர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவர்களுடைய தலைநகரம் மல்லூரை அடுத்துள்ள பொன்பரப்பி என்னும் ஊராகும். மூன்றாம் குலோத்துங்கசோழன் காலம் தொடங்கிச் சோழப் பேரரசு முடிவுறும் வரையில் இவர்கள் குறுநிலத்தலைவர்களாக இருந்துள்ளனர்.

சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர்

சோழர் காலத்துக்குப்பின் விஜயநகர ஆட்சிக்காலத்தில் மதுரை நாயக்கரால் தோற்றுவிக்கப்பெற்ற பாளையப்பட்டு வழிமுறையில் உருவானதே சேந்தமங்கலம் என்னும் பாளையமாகும். நாமக்கல், இராசிபுரம் வட்டப்பகுதிகளுக்குப் பாளையக்காரர்களாக இருந்தவர் இராமச்சந்திர நாயக்கர் வழியினர் ஆவார். இவருடைய தலைநகரம் நாமக்கல் வட்ட சேந்தமங்கலம் ஆகும். இராமச்சந்திர நாயக்கர் என்ற பெயரில் கல்வெட்டுக்களில் நால்வர் காணப்பெறுகின்றனர். இவர்களைப் பற்றிய பத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. 'கோனூர் தலமலை இம்முடி இராமச்சந்திர நாயக்கர்' என்றும், 'நாயக்கர் காரியத்துக்குக் கர்த்தரான இம்முடி இராமச்சந்திர நாயக்கர்' என்றும் கல்வெட்டுக்கள் இவரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

சேலம் சின்னமநாயக்கன்

வரலாற்றில் இதுவரை அறியப்பெறாத புதிய பாளையக்காரன் ஆவான். சேலம் சின்னபூபாலன் என்றும் சின்னமகிபன் என்றும் இவன் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெற்றுள்ளான். செக்கடிப்பட்டியில் உள்ள கல்வெட்டொன்று இச்சின்னமநாயக்கனைப்பற்றியும், இவனுடைய மக்கள் அறுவரைப் பற்றியும், இவனுடைய ஆட்சிச்சிறப்பு மற்றும் பரப்பு பற்றியும் குறிப்பிடுகிறது.

இவனுடைய மகன் இலட்சுமிநாயக்கன் என்பவன் ஆத்தூரின் கல்கோட்டை கட்டியவர் என்பதும், வசிஷ்ட நதியில் பல இடங்களில் அணைகளைக்கட்டி நீரைத்தேக்கி 'சாமை விளையும் காடெல்லாம் சம்பா விளைவிக்கச் செய்தான்' என்பதும் அக்கல்வெட்டால் அறியலாம். பேளூரில் உள்ள இவனுடைய மற்றொரு கல்வெட்டு, ''திருச்சிராப்பள்ளி முற்றுகைக்கு உதவ வேணுமென்று திருமலை நாயக்கர் ஓலை அனுப்ப, அதன்படி இவன் மகன் வெங்கடப்பநாயக்கன் படையுடன் சென்று பகைப்படையை அழித்தான்'' என்றும் குறிப்பிடுகிறது. அதில், ''மதுரை, தஞ்சாவூர், செஞ்சி, நாலாம் படைவீடு சேலம்'' என்று இவனுடைய பாளையம் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவனைப்பற்றிஐந்து கல்வெட்டுக்கள்கிடைத்துள்ளன.

கட்டிமுதலிகள்

தாரமங்கலப் பகுதியைப் கட்டிமுதலிகள் என்னும் மரபினர் ஆண்டனர். அன்றைய அரசர்களாகிய போசளர்களுக்கும், பாண்டியர்களுக்கும் பணிந்து சிற்றரசாக ஆட்சிபுரிந்தனர். போசளரும் பாண்டியரும் வீழ்ச்சியுற்ற பின்னர் விசயநகரப் பேரரசர்க்குப் பணிந்து ஆட்சி புரிந்தனர்.

காரமங்கலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணிய நாட்டைச் சார்ந்திருந்தது. இச்செய்தியை அவ்வூர்க் கயிலாயநாதர் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டில் 'கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணி நாட்டுத் தாரமங்கலம்' எனும் தொடர் தெரிவிக்கிறது.

இப்பூவாணி நாடு கொங்கு மண்டலத்தின் இருபத்து நான்கு பிரிவுகளுள் ஒன்று என்பதைக் 'கொங்கு மண்டல சதகம்' குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டுகள் அச்சுதராயர், சதாசிவராயர் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பெற்றுள்ளன. இவற்றில் 'வணங்காமுடிக் கட்டிமுதலி' என்பவர் குறிக்கப் பெறுகிறார். விசயநகர ஆட்சியினரின் கல்வெட்டுகளில் வணங்காமுடி பற்றிய செய்தி அறியப்பெறுவதால் இவ்வணங்காமுடி முதலி விசயநகர ஆட்சியின்கீழ் ஒரு சிற்றரசனாக ஆட்சி புரிந்துள்ளமை தெளிவாகிறது. கி.பி. 1541ஆம் ஆண்டின் அச்சுதராயர் கல்வெட்டும், கி.பி. 1568ஆம் ஆண்டின் வேங்கடன் கல்வெட்டும் வணங்காமுடி முதலி இருபத்தாறு ஆண்டுகள் தாரமங்கலத்தை ஆட்சிபுரிந்ததாகத் தெரிவிக்கின்றன. கல்வெட்டுக்களில் 'வண்ணத்தடுக்கும் புலிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டை முதலியார் இம்முடி கட்டிமுதலியார்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளனர்.

கயிலாயநாதர் கோவில் கல்வெட்டுக்கள் 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காத முடியான் முதலியார்' எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவ்வூரிலுள்ள இளமீசுவரர் கோவில் கல்வெட்டுக்கள். 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி வண்ணத்தடுக்கும் வாடாமாலையும் புலிக் கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார்' எனக் குறிப்பிடுகின்றன.

இவை அவர்களுடைய வலிமையையும் பெருமையையும் விளக்குகின்றன. வண்ணத்தடுக்கு, வாடாதமாலை ஆகியவை அவர்களுடைய அரச சின்னமாகவும், புலி அவர்களுடைய கொடியின் சின்னமாகவும் இருந்துள்ளன.

வணங்காமுடி கட்டிமுதலி தாரமங்கலத்துக் காவேரிப் பட்டணத்தைக் 'கோட்டை சமுத்திரம்' எனப்பெயர் மாற்றம் செய்து பிராமணரின் குடியிருப்பாக வழங்கியதை இளமீசுவரர் கோவிலுள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. தாரமங்கலத்து இராமகூடலுக்கு 'வணங்காமுடி சமுத்திரம்' எனப் பெயரிட்டு அதையும் பிராமணர்களின் குடியிருப்பாகக் கொடுத்ததைச் சதாசிவராயர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தாரமங்கலத்துத் திருத்தோன் பட்டினத்தை 'இளமசமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்து கயிலாயநாதர் கோவிலுக்கும், இளமீசுவரர் கோவிலுக்கும் தேவதான இறையிலியாக வழங்கப்பெற்ற செய்தியும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இக் கட்டிமுதலி சிதம்பரத்தில் தன்னுடைய பெயரில் 'வணங்காமுடி' என்னும் சைவ மடத்தை நிறுவியுள்ளார். அதனைப் பேணும் பொருட்டு ஏழுகரை நாட்டுப் பகுதியில் பல்வேறு வரிகளின் வாயிலாக வந்த வருவாய் அனைத்தையும் கொடையாக வழங்கியுள்ளார். இச் செய்தியை இளமீசுவரர் கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக் கட்டிமுதலி காலத்தில் கயிலாயநாதர் கோவில் திருப்பணி செய்து முடிக்கப்பெற்றுள்ளது.

கயிலாயநாதர் கோவில், இக் கட்டிமுதலிகளின் குலதெய்வக் கோயிலாகக் கருதப்பெறுகிறது. தாரமங்கலத்தை அடுத்த இலவம்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு 'இம்மடி கட்டி முதலியாரோம் தேவஸ்தான தர்மம் ... நம்முடைய குல ஸ்வாமியான தாரமங்கையின் சிவன் க்ஷேத்திரத்தில் வாழும் கைலாசநாத சுவாமியார்க்கு' என்னும் கல்வெட்டுத் தொடரால் இதனையறியலாம். இக் கட்டிமுதலிகள் விசயநகர ஆட்சியின் போது பாளையக்காரர்களாக இருந்துள்ளமை சாலிவாகன சகாப்தம் 1400 மேல் (கி.பி. 1478) அமரகுந்திக்குச் சேர்ந்த பாளையப்பட்டுக் குடையோன் கெட்டி என்ற பேர் பெற்று வெள்ளாள சியாத்தியானபடியாலே கெட்டி முதலியார் என்று பெயர் வந்து பாளையக்காரனாயி சீர்மை அனுபவிச்சுக் கொண்டு

வரும் காலத்தில்' என்னும் அவர்களுடைய வமிசாவளிப் பகுதியால் அறியலாம். 'கெட்டி' என்பது அவருடைய பட்டம் என்பதையும் 'வெள்ளாளர்' என்பது அவரது இனத்தையும் குறிப்பிடுகின்றன.

மோரூர்க் காங்கேயர்கள்

அரசியல் பொறுப்பிலிருந்து ஒதுங்கி சமுதாய நலனுக்காக வாழ்ந்த மோரூர்க் காங்கேயர்கள் பற்றித் திருச்செங்கோட்டுக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்கள் கொங்குவேளாளர் பெருமக்களின் தலைவர்களாகவும் புலவர்களைப் புரந்த புரவலர்களாகவும் இருந்தனர். திருச்செங்கோட்டில் இவர்கள் செய்துள்ள திருப்பணிகளைப்பற்றி அங்குள்ள கல்வெட்டுக்களும் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையும் சிறப்பாக குறிப்பிடுகின்றன.

சில முக்கிய ஊர்க் கல்வெட்டுக்கள்

ஆத்தூர் வட்ட ஆறகளூர் என்ற ஊரில் 48 கல்வெட்டுகள் உள்ளன. இங்கு திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் 37 கல்வெட்டுகளும், கரியவரதராசப்பெருமாள் கோவிலில் 9 கல்வெட்டுகளும், சோழீசு வரமுடைய நாயனார் கோவிலில் இரு கல்வெட்டுகளும் உள்ளன. சோழர் காலம் முதல் விஜயநகர காலம் முடிய உள்ள இவற்றுள் பெரும்பான்மையான கல்வெட்டுகள் கோவிலுக்குக் கொடையாக வழங்கிய பொன், நிலம், கிராமங்கள் ஆகியவை பற்றிக் குறிப்பிடுகின்றன. பிராமணர்களுக்கும் நிலம் இறையிலியாக வழங்கப்பெற்றுள்ளது. கொடைகள் அரசு மரபைச் சார்ந்தோராலும், தனிப் பட்டவர்களாலும் வழங்கப் பெற்றுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தையது மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக் களாகும்.

உடன்படிக்கை

இவற்றுள் இரு கல்வெட்டுகள் அவ்வரசர் காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கையைத்

தெளிவுபடுத்துகின்றன. இதேபோன்று இம்மன்னர் காலத்தில் குறுநில மன்னர்களிடையே நடந்த உடன்படிக்கைகள் பற்றிய கல்வெட்டுகள் பல திருவண்ணாமலையில் இடம் பெற்றுள்ளன. இவ் இருவிடங்களிலுள்ள கல்வெட்டுகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. குலோத்துங்க சோழனின் 35-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலி சோழச் சம்புவராயர் என்பவர் பொன்பரப்பின வாணகோவரையர்க்கும் குலோத்துங்க சோழ வாணகோவரையர்க்கும் அவர் மைத்துனர் காடவராயர்க்கும் உடன்பட்டு எழுதிக் கொடுத்த அடர் முறைமை உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது. இம் மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழ வாணகோவரையர்க்கும், திருக்கோவிலூரிலுள்ள மலைய மானுக்கும் தங்கள் நாட்டெல்லைகள் பற்றிக் கருத்து வேறுபாடும் பூசலும் நேர்ந்தபோது இருவரும் உடன்பட்டு ஆள்வினையாற்றின் தென்பகுதி வாணகோவரையனுக்கும், வட பகுதி மலையமானுக்கும் உரியவை என்றும், இருவரும் தங்கள் அரசனான குலோத்துங்க சோழரின் அரசுச் செயல்களுக்கு ஒத்துநின்று வேண்டிய உதவி புரியக் கடவர் என்றும் உடன்படிக்கையை மேற்கொண்டனர். திருவண்ணாமலையிலுள்ள கல்வெட்டில் குறுநிலத்தலைவர்கள் பதின்மர் சேர்ந்து அரசுக்குக் கேடு சூழக் காரணமாக இருந்த வாணகோவரையனுடன் பகைத்துச் செய்து கொண்ட உடன்படிக்கை இடம் பெற்றுள்ளது.

மற்றொரு கல்வெட்டில் மலையன் ஆடையூர் நாடாழ்வானுக்கும் விக்கிரம சோழச் சம்புவராயர்க்கும் விடுகாதழகிய பெருமாளான இராசராச அதிகைமான் உடன்பட்டு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை இடம்பெற்றுள்ளது. இன்னும் சம்புவராயனும் மலையமானும் செய்துகொண்ட உடன் படிக்கையும் இராசராச நீல கங்கரையன் என்பான் சம்புவராயன், காடவராயன், மூவேந்தரையன் என்ற மூவரோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. எனவே இவ்விரு ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் ஒரே அரசர் காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ளன. இருவிடங்களிலும் அதே குறுநிலத் தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பதும் கருதத்தக்கது. இதனால் சோழ அரசின் பிற்பகுதியில் குறுநிலத் தலைவர் பலர்

தத்தம் நாடுகளில் தனித்தன்மையோடு ஆட்சிபுரிந்து வந்தனர் என்றும் அவர்கள் அனைவரும் சோழ அரசனின் ஆணைக்கு ஒருவாறு கட்டுப்பட்டு உதவினர் என்பதும் தெரிகிறது.

கொடைகள்

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அவ்வூரில் இருந்த சிறுத்தொண்டன் என்பவன் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய எம்பெருமானடிகளை எழுந்தருளச் செய்தார். அத் திருமேனிகளுக்குத் திருமஞ்சனம் பூசவும் திருவிளக்கு எரிக்கவும் திருப்பள்ளித்தாமம் கட்டவும் மற்றும் கோவில் செலவினங்களுக்கும் ஐயாயிரம் காசுகள் கொடையாக கோவில் கருவூலத்தில் சேர்க்கப்பெற்றுள்ளது. குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு மலையனுடையான் செம்பை ஆழ்வான் என்பவன் தன் காணியான இலத்திப்பாடி நிலத்தை 135 பொன்னுக்கு விற்ற செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இரண்டாண்டுகள் கழித்து வெட்டப்பெற்றுள்ள வேறொரு கல்வெட்டு அந்நிலத்தின் மீதான வரிகளை அரசன் நீக்கி ஆணை பிறப்பித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. அக் கோவில் அமுதுபடிக்காகத் தொண்டைமான் தங்கை நாச்சியார் நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி கொடுத்ததையும் நந்தாவிளக்கெரிக்கக் காவிரிப்பாக்கத்துக் கவுசிகன் ஒற்றிகொண்டான் என்பவனிடமிருந்து கோவில் முப்பது வட்டத்துச் சிவபிராமணர் ஈராயிரம் காசுகளைப் பெற்ற செய்தியையும் ஏழு திருநந்தா விளக்குகளை எரிக்க நாற்பத்தொன்பது பசுக்களைக் கொடையாகப் பெற்ற செய்தியையும் குறிப்பிடுகிறது. அந்நாளில் ஒரு நந்தாவிளக்கு நாள்தோறும் எரிய ஏழு பசுக்கள் வீதம் கொடையாக அளிக்கப் பெற்றுள்ளமை இதனால் அறியலாம்.

கோவில் பூசைநாள் உரிமையைப் பெற்றிருந்த ஒரு பெண் கோவில் அணிகலன்களைகத் திருடிய காரணத்தால் அவளைச் சிறை வைத்து அவளுடைய பூசை உரிமையையும் அவளுடைய மருமகள் பூசை உரிமையையும் பறித்தனர். அவ்வுரிமையைத்

திருஞானசம்பந்த பண்டிதர் என்பவர் 250 பணம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கோவில் முப்பது வட்டத்துக்காணி உடைய சிவபிராமணர்க்கு விற்றுள்ளார். கோவில் பூசை செய்த பொன் பரப்பினான் திருஞானசம்பந்த பிரமராயர் உள்ளிட்ட மூவர் தங்கள் கோவில் பூசை உரிமையை 'காணிவிலைப் பிரமாணம்' பண்ணி விலைக்கு விற்றுள்ளனர். அந்நாளில் ஒருவர் தன் பூசை உரிமையைப் பிறர்க்கு விற்கும் உரிமை பெற்றிருந்தமையை இது காட்டுகிறது.

கொல்லிமலை

கொல்லிமலையிலுள்ள அறப்பள்ளி ஈசுவரர் கோவிலில் கோப்பரகேசரிவர்மரான உத்தம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 980) பொறிக்கப்பெற்றுள்ள பல கல்வெட்டுகளில் அக்கோவிலில் கார்த்திகை விழா நிகழ்த்தச் சாலைப்புறநிலம் விட்ட செய்தி காணப்பெறுகிறது. மேலும் பன்னிரண்டு ஊராரிடம் நூறு கழஞ்சு பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு அக்கோவில் பூசை நடத்தப் பெற்றுள்ளமையைப் பல கல்வெட்டுகள் விளக்குகின்றன. ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஆறு திங்களுக்கு ஐங்குறுணி நெல் வட்டியாகவும், மற்றொரு கல்வெட்டில் ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஆறு திங்களுக்கு நான்கு குறுணி நெல் வட்டியாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. ஒரே காலத்தில் வேறுபட்ட வகையில் வட்டி வாங்கியுள்ளமையை அறியலாம்.

அறப்பள்ளி ஈசுவரர்க்குக் கொல்லிமலை நாட்டினரும் கோவில் தானத்தாரும் பலமண்டலத்து மாகேசுவரர்களும் சேர்ந்து வணலூராரிடமிருந்து நான்குகல நெல் விதைப்பு அளவிலான நிலவருவாயை அறப்பள்ளி இறைவர்க்கு உரிமையாக்கியுள்ள செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. நெல் விதை அளவைக்கொண்டு நிலத்தின் அளவு கணிக்கப்பெற்றுள்ளது. கொல்லிமலை நாட்டு மலையாளர்கள் தங்கள் நிலத்தின் கடமையை ஒன்பதாவது ஆண்டு முதல் செலுத்த உறுதியளித்துக் கோவிலில் கல்வெட்டிக் கொடுத்துள்ளனர். எனவே முன்னர் எட்டாண்டுகள் வரை அம்மலையாளர்கள் தங்கள் நிலத்திற்கு வரிவிலக்குப் பெற்றிருந்தமையை அறியலாம்.

தம்மம்பட்டி

தம்மம்பட்டி என்னும் ஊரில் நரசிங்கப்பெருமாள் கோவிலில் நான்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. அவை கி.பி. 15ஆம் நூற்றாண்டின் விசயநகர ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தவையாகும். அக்கோவிலுக்குத் தேவர்மறி, புளியங்குறிச்சி, பூடிதிபறுகு, ஆருளம்பள்ளி, மாறாடி சீர்மைக்குட்பட்ட மங்கைவார்ப்பட்டி, மண்மலைச் சீர்மைக்குட்பட்ட செங்கிணறு ஆகிய கிராமங்களைத் திருவிடையாட்டமாக அளிக்கப் பெற்றதாக அம் மூன்று கல்வெட்டுகளின் செய்தி குறிப்பிடுகிறது. ஒரு கல்வெட்டு திம்மயநாயக்கர் என்பவர் கோவிலுக்குக் கொடையாக நிதியைச் சேர்க்க வழி செய்த முறையை விளக்குகிறது. நான்கு திசைகளுக்கும் சென்று வாணிகம் புரிந்த செட்டி வியாபாரிகள் அவ்வூருக்குள் கொண்டு வந்த பொருள்களுக்கும் வெளியில் கொண்டு சென்ற பொருள்களுக்கும் தலைச்சுமையாகக் கொண்டு வந்த பொருள்களுக்கும் விதிக்கப்பெற்ற வரியின் வருவாயில் பாதியை அக்கோவில் கருவூலத்தில் கொடையாகச் சேர்க்கப் பெற்ற செய்தியைக் கூறுகிறது.

திருச்செங்கோடு

திருச்செங்கோட்டில் 38 கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றில் திருச்செங்கோட்டுக் கோவில் திருஏகாதசி கணப்பெருமக்கள், திருவாதிரை கணப்பெருமக்கள், திருவோணக் கணப்பெருமக்கள், துவாதசி கணப்பெருமக்கள் ஆகியோர் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இக் கணப்பெரு மக்களிடம் 'காசெட்டாங்கல்' என்னும் அளவினால் நிறுக்கப் பெற்ற பொன்னைக் கொடுத்து அதனின்றும் வந்த வட்டியால் கோவில் பிராமணர்களுக்கு உணவு படைத்துள்ள செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ் வறச்செயலுக்குப் பலர் கொடை அளித்துள்ளனர். இவ்வாறு பல்வேறு கொடையாளர்கள் அளித்த பொன்னைப் பெற்ற கணப்பெருமக்கள் அதை வட்டிக்கு விட்டு அதனின்றும் வந்த வருவாயைக் கொண்டு இருகலம் வீதம் பிராமணர்களுக்கு உணவு ஊட்டுவதாக உறுதியளித்த செய்தி ஒரு கல்வெட்டில் உள்ளது. இரண்டாம்சடையவர்மன்சுந்தர பாண்டியனின்

காலத்தைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகளுள் ஒன்று உலகம் காத்த கண்ணையன் என்பவருக்கு அவருடைய சிறப்பைப் போற்றி நடுகல் எடுத்த செய்தி குறிப்பிடுகிறது. விஜய நகர அரசர் கிருஷ்ணதேவராயர் ஆட்சியின் போது (கி.பி.1522) பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் அலுவலர்கள் பலரை நியமித்துள்ள செய்தியுடன் உழவுக்குடிக்கு ஏர் ஒன்றுக்கு ஐந்து பணம் வீதமும் கைக்கோளருக்கு முதலிரண்டாண்டுகளுக்கு வரிநீக்கம் செய்யப் பெற்றுப் பின்னர்த் தறிக்கு இரண்டு பணமும் மனை ஒன்றுக்கு ஒரு பணமும் ஆக மூன்று பணம் வரி விதிக்கப்பெற்ற செய்தி விளக்கப்பெற்றுள்ளது.

திருச்செங்கோட்டுக் கைலாயநாதர் கோவில் தெற்குச் சுவரின் அடித்தளத்தில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டொன்று விஜயநகர அரசர் சதாசிவராயர் (1561) காலத்தைச் சார்ந்தது. அக் கல்வெட்டு ஆசிரிய விருத்தப்பாவால் அமைந்தது. இப்பாடல் கி.பி.1685இல் சதாசிவ பண்டிதரால் எழுதப்பெற்ற 'திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை' என்னும் நூலில் சதாசிவராயரின் சிறப்பைப் போற்றும் பாடலாக இடம் பெற்றுள்ளது.

சீரார்ச காப்தத்தி லாயிரமு நானூறு செல்கவெழு
பத்துமூன்றின்
திரமான துன்மதிச் சித்திரைத் திங்களைச் சேர்ந்துவிரு
பத்தைந்தினில்
பூராய பூர்வபட் சந்திக ளுந்தசமி பூசமாம் மேனாவிலே
புவியாள் சதாசிவ மகாராயர் ஜெகதேவு பூபால னுக்குதவவே

வீராக மப்பிரபுட நரசிங்க ராமாஞ்சி மிகுகொங்கு நாடாளுனாள்
விப்ரகுல சர்வயன் தேவசா யாதிபன் வீறா வனந்தபூபன்
ஏரானசெங்கோட்டில்மேவு கைலாயர்முன் எழிலான கற்கம்பமே
இன்பொடு நிறுத்திணன் கீர்த்திப் பிரதாபமது விமசேத ளவுநிற்கவே

என்பது அப்பாடலாகும்.

1664 இல் மதுரையில் விசுவநாத சொக்கலிங்க நாயக்கர் ஆட்சி புரிந்தபோது அவர் தலைமையின் கீழிருந்த சேஷாத்திரி பிள்ளை என்பவர் திருச்செங்கோட்டுத் திருக்கைலாய நாதருக்குக் கோபுரம் ஒன்றைக் கட்டுவித்துக் காசிவிசுவநாதர் ஆலயக்

கற்றளியை எடுப்பித்த செய்தி பாடல் கல்வெட்டாக இடம் பெற்றுள்ளது. அப்பாடல் கல்வெட்டுக்கு முன் 'ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1585 இதன்மேற் செல்லாநின்ற சோபகிருது வருஷம் ஆவணி மாதம் ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணுகையில்' என்ற செய்திக்குப்பின் இவ் வெண்பா வடிவில் கல்வெட்டு இடம் பெற்றுள்ளது.

நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணிகிளரும் கோபுரமுண் டாக்கிப் – பணிமலைமேற்
காசிவிசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருணற் சேஷாத் திரி

இப்பாடல் பகுதி மட்டும் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையில் சேஷாத்திரிபிள்ளையின் பெருமையை உணர்த்தும் ஏழு பாடல்களில் ஈற்றுப் பாடலாக இடம் பெற்றுள்ளது.

விஜயநகர ஆட்சியில் அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் என்பவரால் கல்மண்டபம் ஒன்று 1600இல் கட்டப்பெற்ற செய்தி பொறிக்கப்பெற்றுள்ளது. அக் காங்கேயன் சுப்பிரமணியர் கோவிலின் முன்பண்டபத்தைக் கட்டுவித்த செய்தி வேறொரு கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. மீண்டும் அவரால் 1619இல் குமாரசாமியார் மண்டபத்திற்கும் பெரியாண்டார் சன்னதிக்கூடத்திற்கும் சிங்கக்கால், குதிரைக்கால், தூண்கள் இருபத்திரண்டும், சக்கரம், கண்டக்கால் பன்னிரண்டும், தளவரிசையும் அமைத்துத் திருப்பணி செய்வித்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது.

1912இல் திருச்செங்கோடு வட்டக் குமாரமங்கலம் என்னும் சிற்றூரான மேட்டுப்பாளையத்தில் வசித்த தோட்டிகள் பதினால்வர் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். அக்கிராமத்தில் அத்தோட்டிகள் அனைவர்க்கும் அரசாங்கத்தால் ஊதியம் வழங்கப்பெற்ற பின்னர் அவர்களுக்குள் ஊதிய வேறுபாடு இருப்பின் அவ்வேறுபாட்டைக் களைந்து அனைவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்று அவர்களுக்குள் உடன்பட்டுக் கல்வெட்டிக் கொண்டனர். ஊழியத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பினும் ஊதியத்தில் சமபங்கீடு செய்து கொண்ட முறை போற்றத்தக்கது.

வழக்கும் நீதியும்

ஆறகளூர் திருக்காமீசுவரமுடையநாயனார் கோவில் முப்பது நாள் பூசை வட்டமும் திருஞானசம்பந்த பண்டிதர்க்கு உரிமையாக இருந்தது. பசுபதி பண்டிதர் என்பவர் நம்பியார் அழகியார்க்குரிய அப்பூசை உரிமையில் பதினைந்து நாள் உரிமை தனக்கு உண்டு என்றும் அதற்கான கோவில் ஆணை ஓலை உண்டென்றும் கூறி உரிமை கொண்டாடினார். பின்னர் அவர்க்கு ஏழரைநாள் பூசை உரிமை அளிக்கப்பெற்றது. அதை மறுத்து அவர் பத்தெட்டுத்தலைமுறையாக அப்பதினைந்து நாள் உரிமையைத் துய்த்து வருவதாகவும் கூறி அம்முடிவை ஏற்க மறுத்தார். பின்னர் ஊரைவிட்டு வெளியில் சென்றிருந்த நாட்டார் திருஞானசம்பந்தரை ஓலை கொடுத்து வரவழைத்தனர். வழக்கை எடுத்துரைத்தனர். பின்னர் அந் நாட்டார் முற்றுப்பெறாத நிலையிலிருந்த அவ்வழக்கைக் கேட்டுத் திருமலை நாயக்கரிடம் எடுத்துரைத்து அவருடைய தலையீட்டின் பேரில் அவர்தம் ஆணையின்படி அனைவரும் கூடி வழக்கைக் கேட்டுக் காலம் காலமாகத் தொடர்ந்து பூசை உரிமையைத் துய்த்து வந்த திருஞானசம்பந்த பண்டிதர்க்கு முப்பதுநாள் பூசை உரிமையை அளித்துத் தீர்ப்பு வழங்கினர்.

மகதை மண்டல நாட்டார் பல்வேறு வரிச்சுமையின் காரணமாகத் தங்கள் குடிகளின் நலம் குறைந்ததாகக் கூறித் தியாகணநாயக்கர் புதிய அடையோலை (வரிநிர்ணய ஓலை) கொடுத்து மிகுந்திருந்த வரிச்சுமையை (அடர்ந்தேற்றம்) தளர்த்திக் குடிமக்களைக் காப்பதாக உறுதியளித்த செய்தி கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

இராசிபுரத்து ஊர்ச்சபையாரும் நாட்டாரும் சேர்ந்து கயிலாயநாதர் திருமடைவளாகத்தில் குடியேறிய நெசவாளர் குடும்பத்திற்குத் தறிக்கு மூன்று பணம் வீதமும், வெள்ளாளர் குடியேறியமைக்காகக் குடிக்கு இரண்டு பணம் வீதமும் வரியும், எவரேனும் இவ்வெல்லையில் குற்றம்புரிந்தால் அக் குற்றத்திற்காகப் பத்துப்பணம் தண்டனையும் விதித்து அவ்வருவாயை கோவில் கருவூலத்திற்கு அளித்தனர்.

இராசிபுரத்துப் போதமலை என்னும் ஊரிலுள்ள இராசகேசரி வீரபாண்டியன் (1286) கல்வெட்டொன்று அன்றைய வரி செலுத்த இயலா நிலைமையைத் தெரிவிக்கிறது. கருங்காலி மலையின் மேல் சுக்கம்பூண்டி என்னும் ஊரில் வாழ்ந்த மலைவாசிகள் கடமை என்னும் வரி செலுத்த இயலாமையால் ஊரை விட்டுக் குடிபெயர்ந்தனர். அந்நிலையறிந்த அவ்வூர் நாட்டவரும் நகரத்தவரும் கூடி இனிவரும் நாளில் கொல்லிமலைவாசிகள் ஆண்டொன்றுக்குக் குடிக்கு ஒருபணம் வீதம் கடமைவரி செலுத்தி வந்ததைப்போல இம் மலைவாசிகளும் அதே முறையில் குடிக்கு ஒரு பணமாகச் செலுத்த ஆணை பிறப்பித்துக் கல்வெட்டினர்.

ஏழூர் நாட்டுத் திருவாரைக்கல் என்னும் ஊரில் வாழ்ந்த பதினேழு கம்பளத்தாரும் சுக்காடர் என்பவருக்கு இசைந்து இசைவுமுறி கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. எறமாஞ்சி அய்யன் அவர்கள் காலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டைச் செகதேவராயர் என்பவர் ஆட்சிசெய்து வந்தார். அவருடைய காரியகர்த்தரான தம்மரசையன் அவர்கள் மரபினரும் பூந்துறை நாட்டு நாலுகவுண்டர்களும் பருத்திப்பள்ளி நாட்டுக் கொண்டரசக் கவுண்டர்களும் இராசிபுர நாட்டுத் துலுக்கண கவுண்டர்களும் காரையூரைச் சேர்ந்த நல்ல நாயனாரும் மற்றும் குடியானவர்களும் கூடியிருந்து அவ்வழக்கைக் கேட்டு நீதி வழங்கினர். சுக்காட நாயனார்க்கு அவர்கள் நாள்தோறும் சூடிவந்த மாலை உரிமை இல்லையென்று மறுக்கப்பட்ட நிலையில் இவ் வழக்கு நிகழ்ந்துள்ளது. கல்வெட்டுச் சிதைந்துள்ளமையால் செய்தி தொடர்ந்து அறிய இயலவில்லை.

புதுமையான செய்திகள்

மூன்றாம் இராசராச சோழதேவர் காலத்தில் இராசிபுரத்தில் வாழ்ந்த வணிகர்க்குப் பல மண்டலத்து வணிகர்கள் கூடி வீரபட்டணம் ஒன்று அமைத்துக்கொடுத்துள்ள ஒரு கல்வெட்டு விளக்குகிறது. வீரபட்டணம் என்பது வணிகர்கள் தங்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பினையும் கொண்ட வாணிக நகரத்தைக் குறிக்கும். இன்று அவ்வூர் இராசிபுரத்தை யடுத்துப் பட்டணம் என்று வழங்கப்பெறுகிறது.

இராசிபுரத்துக் கயிலாயநாதர் கோவிலுக்கு உற்சவம் நடத்த இராசிபுர நாட்டைச் சேர்ந்த பாச்சல், குருசாமிபாளையம் முதலிய ஏழு ஊர்களில் வாழ்ந்த கைக்கோளர்க்கு மட்டும் உரிமை இருந்தது.

மல்லூர் அருகில் எருமைநாயக்கன் பாளையம் என்ற ஊரில் அம்மன்மலை எனப்பெறும் பொன்சொரிமலை ஒன்றுள்ளது. அங்குள்ள தாமரப்பாழியின் மேற்பாறையில் புலால் மறுக்கும் திருக்குறள் ஒன்று பொறிக்கப்பெற்றுள்ளது. சமண முனிவர்கள் அம்மலையில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

நாமக்கல் வட்டம் எருமைப்பட்டியிலுள்ள கல்வெட்டொன்றில் தேவன் என்பவர் அரச ஆணையால் நல்லூர் என்னும் ஊரில் நன்செய் புன்செய் நிலத்தின் பாதி உரிமையைப் பெற்றார் என்று தெரிவிக்கிறது. அக்கல்வெட்டில் 'ஐவர் இராசாக்கள் ஆணை' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இது இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1284) பொறிக்கப் பெற்றுள்ளது. இங்குக் குறிப்பிடப்பெற்றுள்ள ஐவர் இராசாக்கள் பாண்டியர்களாவர். இக்கல்வெட்டில் 'அடுத்தூண்' என்னும் இலக்கியச் சொல் ஆளப்பெற்றுள்ளது.

ஏழூரில் பாவடிப் பிள்ளையார் கோவில் ஒன்றுள்ளது. அக்கோவில் மேடையில் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று பொறிக்கப் பெற்றுள்ளது. 'படைபிடித்த பல்லாயிரவர்க்கும் ஐம்பெருங்குழுவிற்கும் அடைக்கலம் இவை' என்னும் தொடர் குறிப்பிடப்பெற்றுள்ளது. பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் இங்குக் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் ஏதேனும் தொடர்புண்டா? என்பதை ஆராயவேண்டும்.

ஏழூர் நாட்டிலிருந்த வானவன் மாதேவி என்னும் சிற்றூரை மருத்துவர் ஒருவருக்கு இறையிலியாக அரசன் அளித்த ஆணை ஒன்று பொறிக்கப்பெற்றுள்ளது. நாங்கூரைச் சார்ந்த அறுவை மருத்துவர் (அங்க வைத்தியர்) சுவர்ணன் பாராசிரியன் ஆதித்ததேவன் என்பவருக்கு அவ்விறையிலி நிலம் வழங்கப்பெற்றது.

நாங்கூர் மக்களால் அம்மருத்துவர் 'வைத்தியபுரந்தரன்' என்னும் பட்டம் சூட்டிச் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். இக் கல்வெட்டுகள் சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பெற்றதாகும்.

நாமக்கல் நரசிங்கப் பெருமாள் கோவில் தானிகர் மணியக்காரர், கணக்கப்பிள்ளை, பாளையக்காரர் ஆகியோர் சேர்ந்து 'மரியாதைமுறி ஆவணம்' என்ற ஒன்றை அளித்துள்ளனர். அக்கோவில் திருமடைப்பள்ளியில் இறைவர்க்குப் பூசை செய்து படைக்க சர்க்கரைப் பொங்கல் அமுது முதலியன செய்யாமல் இருந்ததாகவும் அவற்றைப் பூசைக்குப் படைக்காமல் யாரேனும் வாங்கினாலும் விற்றாலும் பாவம் அடைவர் என்னும் செய்தியையும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கோவிலிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் கொடை பற்றிய செய்தியையே கூறுகின்றன.

திருச்செங்கோடு வட்டம் மதியம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கல்வெட்டு மல்லசமுத்திரத்தில் இருக்கும் இராசேந்திர சோழீசுரர்க்கு உதிரப்பட்டி நிலமாக இருந்த திரியம்பகபுரம் என்னும் ஊர் திருவிடையாட்டமாக விடப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது. திருமாலுக்கு விடப்பெறும் நிலம் மட்டுமே திருவிடையாட்டம் எனப்பெறும். இங்கு சிவபெருமான் கோவில் நிலமும் திருவிடையாட்டம் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது. சங்ககிரி வட்டம் மருதூரில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் சிற்றூர் குனக்குரிச்சி முதலிய கிராமங்களைக் காணி உரிமையாகப் பெற்றிருந்த வெங்கச்சி வேட்டுவரான திருவாலப்பிள்ளை என்பவர் மருதூரில் (காணி உடைய) காளியை எழுந்தருள்வித்தார். மருதூர்க்காளி என்பது இன்று மதுரகாளி என மருவி வழங்கப்பெறுகிறது.

17

விடுகாதழகிய பெருமான்

செ. இராசு

சங்க காலத்திற்குப்பின் அதியர் மரபு

சங்க கால அதியர் குடியினர் வாழையடி வாழையெனப் பிற்காலத்தும் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். இதனைச் செங்கம், தகடூர் நடுகற்களும்,[1] சிவரமங்கலச் செப்பேடும்,[2] நாமக்கல் குகைக் கல்வெட்டுக்களும்,[3] ஒட்டபட்டி மேலைக்கங்கர் கல்வெட்டும்[4] தெளிவாகச் சுட்டுகின்றன.

சில இலக்கியங்களும் பிற்கால அதியர் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. பெரியபுராணத்தில் புகழ்ச்சோழ நாயனாரின் காலத்தில் கருவூருக்கு அண்மையில் அதிகன் ஆட்சிபுரிந்த குறிப்புக் கூறப்படுகிறது.

''அதிகன்; அவன் அணித்தாக
ஓங்கு எயில்சூழ் மலையரணத்து உள்உறைவான்''

என்பது பெரியபுராணப் பகுதி.[5]

முதலாம் குலோத்துங்களின் கலிங்கப்போரில் அதிகனும் போரிட்டான் என்று விக்கிரமசோழன்உலாக் கூறுகிறது.

''ஒட்டிய
மான அரசர் இரிய வடகலிங்கத்
தானை துணித்த அதிகனும்''

என்பது உலா வரிகளாகும்.[6]

விடுகாதழகிய பெருமாள்

தொடர்ந்துவரும் அதியர் குடியில் 12ஆம் நூற்றாண்டில் இறுதியில் விடுகாதழகிய பெருமாள் என்ற பெயருடையவன் வாழ்ந்து வந்தான். இவன் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவன்.

ராஜராஜ அதிகமான்,[7] பிறந்த பெருமாள்[8] என்ற பெயர்கள் இவனுக்கு வழங்கின. 'ஆண்டார் அதியமானார்' என்ற மரியாதையுடன் கல்வெட்டுக்களில் இவன் குறிக்கப்பட்டுள்ளான்.[9] அதிகேசன், அதிகேந்திரன் எனவும் இவன் அழைக்கப்பட்டான்.[10]

இவன் குறுநில மன்னராகத் தகடூரில் விளங்கினாலும் தேவைப் பட்டபோது சோழருக்குப் படைத்தலைமைபூண்டு பணிகள் ஆற்றியுள்ளான். கல்வெட்டுக்களில் இவன் 'சாமந்தன் அதியமான்' என்றும் குறிக்கப்பெறுகிறான்.[11] 'கார் அனைய கையான்' 'விரை மருவும் தார்மார்பன்' என்றெல்லாம் புலவர் விடுகாதழகிய பெருமாளைப் பாடல்களில் புகழ்கின்றனர்.[12] விடுகாதழகிய பெருமாள் 'தகடையர் காவலன்'[13] 'தகடை மன்னன்' எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றான் 'விலங்காமொழி' என்று பட்டப்பெயரும் இவனுக்கு வழங்கியது.[15]

தகடூர்

முதலாம் இராசராசன் கங்கபாடியைக் கைப்பற்றிய பின் பெரும்பாலும் கங்கநாடு சோழருக்கு உட்பட்ட பகுதியாகவே இருந்தது.[16] குவளாலபுரம் (கோலார்) உட்பட்ட கங்கநாட்டுப் பகுதி தகடூருக்கு அண்மையில் இருப்பதால் அதையும் தங்கள் பகுதியோடு இணைத்து அதியர் ஆட்சிபுரிந்தான். ஒரு கல்வெட்டு

'நிகரிலி சோழ மண்டலத்துக் கங்கநாட்டுத்
தகடூர் நாட்டுத் தகடூர்'

என இப்பகுதியை அழைக்கிறது.[17] 'தென்தகடை' என்றும்,[18] 'திரை மருவும் தடங்கமலத் தகடை' என்றும்[19] புலவர்கள் புகழ்கின்றனர். தகடூர்த் தலைவன் ஒருவன் 'தகடாதிராயன்' எனப்பட்டான்.[20]

சேரர் மரபு

விடுகாதழகிய பெருமாளின் திருமலைக் கல்வெட்டின் தமிழ்ப் பகுதியில்

'சேரவம்சத்து அதிகைமான் எழினி'

'வஞ்சியர் குலபதி எழினி'

என்றும், வடமொழிப் பகுதயில்

'ஸ்ரீமத் கேரளபூபிரிதா யவநிகா நாம்நா'

என்றும் குறிக்கப் பெறுவதைக் காணுகிறோம்.[21] சித்தூர் மாவட்டப் பகுதிகளில் காணப்படும் விடுகாதழகிய பெருமாளின் கல்வெட்டுக்களில் இருபுறமும் சேரருக்குரிய வில் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.[22] லட்டிகம் கல்வெட்டில் தன்னையே சேரவம்சத்து அரசர் என்று விடுகாதழகிய பெருமாள் குறித்துக் கொள்ளுகின்றான்.[23]

ஆட்சி எல்லை

விடுகாதழகிய பெருமாள் பாலி, டெண்ணை, பொன்னி மூன்று ஆறுகட்கும் தலைவன் என்று குறிக்கப்படுகின்றான்.[24] பாலாறு, தென்பெண்ணை, காவிரி மூன்று ஆறுகட்கு உட்பட்ட பகுதியை அவன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும்.[25] தருமபுரி மாவட்டம், வடஆர்க்காடு மாவட்டம், சித்தூர் மாவட்டம் பகுதிகளில் விடுகாதழகிய பெருமாள் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அகஸ்திய கொண்டாமலைக் கல்வெட்டில் விடுகாதழகிய பெருமாள் தனக்குக் காடவர், மகதர், கங்கர் ஆகியோர் பகைவர் என்பதைத் தெளிவாகச் சுட்டுகின்றான்.[26] இப்பகுதிக் குறுநில மன்னர்களின் ஆட்சிப் பகுதிகளுக்கு இரண்டாம் ராசராசன் காலத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்யப் பட்டதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[27]

சமயப்பணி

வாணியம்பாடியில் சிவாலயம் ஒன்று விடுகாதழகீச்சுரம் எனப் பெயர் பெற்றுள்ளது.[28] இம் மன்னனின் உடல் நலத்துக்காகத் தகடூர்க் கோயிலுக்குக் கொடை அளித்த பணியாளர் பெயர்

'பம்மர்க்கூத்தன் புலியூர் கிழவன் தம்பிரான தோழன்' என்பது.[29] இவன் காலத்தில் காளத்தி மலையிலிருந்து 'வண்ணானைக் கும்பிட்டார்' என்னும் அடியார் தகடூர் வந்து திருப்பணிக்கு உதவினார்.[30] 12ஆம் நூற்றாண்டில் தகடூர்க் கோயில்கள் சிதைந்து பூசையின்றிக் கிடந்தன. விடுகாதழகிய பெருமாள் காலத்தில் அவை திருப்பணி செய்யப்பெற்றுப் 'புதுக்குச் சாந்தும்' பெற்றன. தில்லையிலிருந்து சிவப்பிராமணர் வரவழைக்கப்பட்டுப் பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பெற்றது.

திருமலையில் தன் முன்னோனான அதிகைமான் எழினி செய்வித்த சமண இயக்கர், இயக்கிகளைப் புதுப்பித்தான். அந்தச் சமணப் பள்ளிக்கு எறிமணி அளித்தான். அப்பள்ளியின் கொடை நிலத்தில் உள்ள கடப்பேரி பாசன வசதி பெறும் பொருட்டுக் கால்வாய் அமைத்தான்.

கூட்டணி

மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குப் பின் வலிமையான சோழ அரசர் எவரும் இல்லாத காரணத்தால் சோழ நாட்டின் வடபகுதிச் சிற்றரசர்கள் தம் எல்லைகளையும் அதிகாரத்தையும் விரிவாக்கிக் கொள்ள முற்பட்டபோது தங்களுக்குள் சதா பூசலிட்டுக் கொண்டனர். அதன் விளைவாகக் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர்.

முதலில் மலையமானும், சம்புவராயருள் ஒருபிரிவினரும் ஒன்றாக இணைந்தனர். இவர்கட்கு எதிரிகள் யாதவராயர், செய்யகங்கர், குலோத்துங்க சோழச் சம்புவராயர் ஆகிய மூவர். அப்போது விடுகாதழகிய பெருமாள் முதலிருவரோடு சேர்ந்து கொண்டு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறான். பிற்கால அரசு ஒப்பந்தங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் அழகிய நடையில் அவ்வொப்பந்தம் அமைந்துள்ளது.[31]

பெயர்க்காரணம்

நாமக்கல் கல்வெட்டில்கூட அக்கால அதியமான் 'உத்பல கர்ணிகன்' (அழகான காதுடையவன்) என்று கூறப்பெறுகின்றான். எனவே காதழகுப் பெயர் அதியர் பரம்பரைப் பெயர் போலும்.'

காதணி ஒன்றும் இல்லாமல் இருக்கும்போதே (விடு காதாக) மிகுந்த அழகைப் பெற்றவன் என்ற பொருளில் 'விடுகாது அழகிய பெருமாள்' என்ற இவன் பெயர் அமைந்திருக்கலாம்.[32] விடுகாதழகியர் என்பதற்கு 'விடுகாது ஆனாலும் தோடிட்ட காது என்று தெரியும்காண்' என்று திவ்வியப் பிரபந்த உரையில் பொருள் கூறப்படுகிறது.[33]

குறிப்புகள்

1. இப்பகுதி நடுகற்களில் பல இடங்களில் குறிக்கப்பெறும் அதியரசர், அதிரைசர் - அதியர் மரபினராகலாம். செங்கம் நடுகற்கள் 1971/62.
2. பாண்டியர் செப்பேடு பத்து, ப.65.
3. கஆஅ : 1906 – 7
4. கஆஅ : 1910 – 212
5. பெரியபுராணம், புகழ்ச்சோழ நாயனார் புராணம், 17, 19, 29.
6. விக்கிரமசோழன் உலா 170–172.
7. தெஇக. 7–119 ; கஆஅ. 1900 – 107
8. தெஇக. 7–127 ; கஆஅ. 1900 – 115
9. தெஇக. 7–533 ; கஆஅ. 1901 – 307
10. கஆஅ. 1906 – 545; 547
11. தெஇக. 7–786; கஆஅ. 1902–161 ; 1956–244
12. தெஇக. 7–8; கஆஅ. 1900 – 8 4
13. தெஇக. 1–75; இ.பி. 6 பக். 332.
14. தெஇக. 7–8; கஆஅ. 1900 – 8
15. கல்வெட்டு, இதழ் 6, ப.37 [இராட்சச, ஆடி]
16. சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, ப. 296.
17. தெஇக. 7–534; கஆஅ. 1901–308.
18. கஆஅ. 1906––552.
19. தெஇக. 7–8; கஆஅ. 1900–8
20. தெஇக. 3; கஆஅ. 1900 – 3
21. தெஇக. 1–75 இ.பி.1–6 பக். 332
22. கஆஅ. 1906 – 547.
23. மேலது
24. தெஇக. 6–8; கஆஅ 1900–8.
25. எஇ. 6 பக். 333.
26. கஆஅ. 1906 – 552
27. தெஇக. 7–119; கஆஅ. 1900–107
28. கஆஅ. 1964–185.
29. தெஇக. 7–534; கஆஅ. 1901–308.
30. தெஇக. 7–533; கஆஅ. 1901–307.
31. தெஇக. 7–119; கஆஅ. 1900–107.
32. இராகவையங்கார், மு., இலக்கிய சாசன வழக்காறுகள், ப.18.
33. ஈடு 10:1:1.

பிற்சேர்க்கை (விடுகாதழகிய பெருமாள் கல்வெட்டுகள்)

1. தருமபுரி மாவட்டம், தருமபுரி, மல்லிகார்ச்சுனர் கோயில் கல்வெட்டுக்கள்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பத்தாவது நிகரிலி சோற மண்டலத்து கங்கநாட்டுத் தகடூர்நாட்டுத் தகடூரில் சாணாயிர முழமாயிர முட்பட்ட கோயில் உடையார் திரு வேளாலீஸ்வரமுடையாரும் உடையா ரோராயிஸ்வரமுடையார் கோயிலும் இக்கோயில்கள் இன்னதன்காலம் பாழ்பட்டுக் கிடந்ததென்று அறிவாரில்லை திருக்காளத்தி யினின்றும் ஆண்டார் வண்ணானைக் கும்பிட்டா ரெழுந்தருளி இக்கோயில்கள் கிடக்கிற அனுசுதத்தைக் கண்டு அதியமானார் மாடெலென்று தேவரே காணாயிர முழமாயிர முட்பட்ட கோயில்கள் மூன்றும் சிவப்பிராமணர் பூஜிக்கவேணுமென்று ஆண்டார் அதியமானார்க்குச் சொல்ல அவரு மாண்டாருமக்கு ஆவானொரு சிவப்பிராமணனைக் கொடுவாருமென்ன ஆண்டாரும் த்தில் காணி உடைய சிவப்பிராமண .... யார் .... னை தேவரோலக்கத்தே கொடுவந்து காட்ட சாணாயிர முழமாயிர முட்பட்ட கோயில்கள் ஊர்க்கே காணியாகத் தந்தோமென்று அதிரோகதியாக வாசலுக்குள்ளே இருந்து திருக்கையாலே நீர்வார்த்து அப்போதே காணி பிரமாணமாக எழுதி ....னுக்கே குடுத்தோமென்று திருவெழுத்துமிட்டு இதுக்கு அரசுருடையானெழுத்து மிட்டுத் தகடூர்த்த ....

(தெஇக. 7:533; கஆஅ. 1901:307)

2. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பன்நிரண்டாவது நிகரிலிசோழ மண்டலத்துக் கங்கநாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூரில் முழமாயிரமென்று பேர் கூவப்பட்ட சாணாயிர முட்பட்ட இக்கோயில் திருவேளாளீச்சுரம் உடையார் கோயிலில் திருப்பிரதிட்டையும் திருப்புதுக்குச் சாந்தும் செவித்தேன் அதியமானுக்கு நன்றாக வென்று அதியமான் அடியேன் பம்மார் கூத்தனேன் புலியூர்கிழவன் தம்பிரான் தோழனேன்.

(தெஇக. 7:534; கஆஅ. 1901:308.)

3. தருமபுரி மாவட்டம், கம்பையநல்லூர் தேசிநாதேசுவரர் கோயில் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 22 ஆவது

உரைமருவு குலோத்துங்க சோழதே வர்க்கு
உரைத்திட்ட யாண்டிருப திரண்டின்மேல் [இரண்டில்] பெண்ணைக்
கரைமருவுஞ் சிறுகோட்டை குலன்நாகை நாயகர்க்கவித்து
கற்றளிதன் பேரிட்ட காரணைய கையான்
திரைமருவும் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாலி பெண்ணைபொன்னித்திருநதிமூன்றுடைய
விடைமருவுந் தார்மார்வன் ராஜராஜ அதிகன்
விலங்காமொழி விடுகா தழகியபெரு மாவே!

(தெஇக. 7:8; கஆஅ. 1900:8)

4. வடஆர்க்காடு மாவட்டம், போளூர் வட்டம், திருமலைக் கல்வெட்டு (தமிழ்ப்பகுதி)

ஸ்வஸ்திஸ்ரீ சேர வம்சத்து அதிகைமான் எழினி செய்த தம்மம் யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறிமணியும் இட்டு கடப்பேரிக் காலுங் கண்டு குடுத்தான் ஸ்ரீமத் கேரள பூபிரிதா யவநிகா நாம்நா ஸுதர்ம் மாத்மநா துண்டீராஹவ்யமண்டலார்உறசு கிரெள யக்ஷகேஷஸ்வரெள கல்பி தென பாஸ்சாத்தத் குல பூஷணாதிக நிருப ஸ்ரீ ராஜராஜாத்மஜ வியாமுக் தாஸ்ரவனோஜ் ஜ்வாலேந தகடாநாதேந ஜீர்னோ த்ரிதௌ :

வஞ்சியர் குலபதி எழினி வகுத்த வியக்கர் இயக்கியரோ
டெஞ்சிய வழிவுதிருத்தியவ்வெண்குண விறைதிரு மலைவைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன்வழி முதலிகலி அதிகன் வகன்..நூல்
விஞ்சையர்ஸ்தலபுனைதகடையர்காவலன்விடுகாதழகிய பெருமாளே.

(தெஇக. 1:75 (76))

18

எழுத்துப் பொறிப்புப்பெற்ற தீர்த்தங்கரர் திருமேனி

வெ. வேதாசலம்

அண்மையில் முதல் இராச ராசசோழனின் கல்வெட்டு பொறிக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று பந்தல்குடி என்ற ஊருக்கு அருகில் கண்டறியப்பட்டுள்ளது. பந்தல்குடி விருதுநகர் மாவட்டம் அருப்புக் கோட்டையிலிருந்து எட்டையாபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரின் தென்கோடியில் நெடுஞ்சாலைக்கு மேற்காக அமைந்த நெடுங்கரைப்பட்டி என்ற பகுதியில் பாலவரதவிநாயகர் என்ற பிள்ளையார் கோவில் ஒன்று உள்ளது. இது பந்தல்குடிக் கண்மாயின் கரையில் அமைந்துள்ளது. அண்மைக்காலத்தில் எடுத்துக் கட்டப்பெற்ற இவ்விநாயகர் கோவில் வாயிலின் வெளிப்புறத்திலேயே இத்தீர்த்தங்கரரின் கற்சிற்பம், கிழக்கு நோக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இத்தீர்த்தங்கரரின் சிற்பம் முன்பு இக்கோயிலுக்கு அருகில் பந்தல்குடிக் கண்மாயின் கரையிலமைந்த ஆலமரத்தடியில் இருந்ததாகவும் திடிரென அடித்த காற்றால் ஆலமரம் இதன் மீது சாய்ந்தமையால் இரண்டாக உடைந்த நிலையில் தற்போது விநாயகர் கோவிலின் முன்பாக எடுத்து வைக்கப்பட்டதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஒரு காலத்தில் இத்தீர்த்தங்கரர் இப்பகுதியிலமைந்த ஒரு சிறிய கோவிலில் (சமணப் பள்ளியில்) இருந்திருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் இன்னும் பந்தல்குடி கண்மாயின் கரையில் காணப்படுகின்றன.

இத்தீர்த்தங்கரரரின் சிற்பம் இரண்டரை அடி உயரமுள்ளது. இருபுறமும் இரு சிங்கங்கள் நிற்கும் இணையரியாசனத்தில் வலக்கால் பாதத்தினை இடக்காலின் மீது போட்டு அர்த்தபரியங்காசனத்தில் முக்குடையின் கீழே அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. அரியணையின் இருபுறமும், பின்புறத்தில் இரண்டு மகரவாய்கள் எளிய முறையில் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் பின்புறத்தில் சாய்வதற்கென்று அமைத்த திண்டும், தலையைச் சுற்றி ஒளிவட்டமும் உள்ளன. தலைக்கு மேல்புறம் உள்ள முக்குடையின் பக்கவாட்டில் அசோகமரத்தின் கிளைகள் இரண்டு மலர்களுடனும் மணிகளுடனும் காட்சியளிக்கின்றன. மேலும் தீர்த்தங்கரர்க்கு இருபுறமும் சாமரங்களுடன் இருவர் இடையில் கைவைத்து நிற்கின்றனர். இச்சிற்பத்தினுடைய பீடத்தின் முன்புறமும் பக்கவாட்டிலும் வட்டெழுத்தில் அதனைச் செய்வித்தவர் பற்றி ஏழுவரிகளில் கல்வெட்டு காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் காணப்படும் சமணப்பள்ளிகள் அமைந்த குன்றுகளில் புடைப்புச் சிற்பங்களாக சமணத்திருமேனிகள் பல அவற்றைச் செய்வித்தோர் பெயருடன் கூடிய கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன. ஆனால் இதுபோன்று கல்வெட்டுப் பொறித்த நிலையில் தனித்த முறையில் அமைந்த சிற்பமாகக் காணப்படுவது மிகவும் அரிதாகும். 'கிடங்கில்' என்ற இடத்தில் கல்வெட்டுப் பொறித்த தீர்த்தங்கரரின் செப்புத் திருமேனி ஒன்று கிடைத்துள்ளது.[1] புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஊர் ஒன்றில் சோழர்கால இயக்கி சித்தாக்கியாவின் கற்சிற்பம் ஒன்று கல்வெட்டுப்பொறித்த நிலையில் கிடைத்துள்ளது.[2] இதுபோன்று தனித்த நிலையில் சமணத்திருவுருவங்களைச் செய்து அவற்றின் அடியில் அவற்றைச் செய்வித்தோர் பெயரைக் கல்வெட்டாகப் பொறித்து வைக்கும் வழக்கம் வடநாட்டில் மதுரா போன்ற இடங்களில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிற்கு அண்மையிலுள்ள கர்நாடகத்திலும் இவ்வழக்கம்காணப்படுகின்றது. இம்முறையைப் பின்பற்றி இப்பந்தல்குடிச்சிற்பம் செய்யப்பட்டு அதில் அதனைச் செய்வித்தார் பெயர் கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டிருக்கவேண்டும்.

பாண்டிநாட்டுச் சமணத்தலங்களில் அமைந்த குன்றுகளில் காணப்படும் புடைப்புச்சிற்பங்களின் அடியில் சிலவற்றைத்தவிர அரசனது ஆட்சியாண்டுடன் அவற்றைச் செய்வித்தோர் தானமளித்தோர் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுகளைக் காண்பதும் அரிதாக உள்ளது. இந்நிலையில் முதல் இராசராச சோழனின் பெயரும் அவனது ஆட்சியாண்டும் பொறித்த நிலையில் தீர்த்தங்கரரின் கற்சிற்பம் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். இச்சிற்பம் மிகுந்த கலைச்சிறப்புடன் அமைந்த சிற்பம் என்று கூறமுடியாவிட்டாலும் தீர்த்தங்கரர் திருமேனிக்குரிய இலக்கணத்துடன் எளியமுறையில் வடிக்கப் பெற்றுள்ளது. முற்காலப்பாண்டியர் காலத்தில் பாண்டி நாட்டில் சிறப்புடன் விளங்கிய சமணசமயம் தொடர்ந்து பாண்டி நாட்டில் சோழரின் ஆட்சியின் போதும் சிறப்புடன் விளங்கியிருப்பதை இச்சிற்பம் காட்டுகின்றது.

கல்வெட்டுச் செய்தி

முதல் இராசராசசோழனின் 22ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1007) இத்தீர்த்தங்கரரின் திருமேனி செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதனை வெண்புநாட்டு நாலூரில் இருந்த சமணப்பள்ளிக்குப் புகழ்சடையன் என்பவன் தனது பாட்டனார், பாட்டி ஆகியோரது நினைவாக (சார்த்தி) செய்து வைத்ததாக கல்வெட்டு தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டில் அவனது இச்செயல் அவனது தந்தை வழியுடன் தாய்வழி வழிமுறைப்பெயர் பட்டியலுடன் விளக்கமாக எடுத்துக் கூறப்பெற்றிருப்பது இக்கல்வெட்டின் மற்றொரு சிறப்பாகும். பொதுவாக முற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளிலும், அதன் பின்னர் வந்த கல்வெட்டுக்களிலும் இவ்வகைச் சிற்பங்கள் செய்வித்தோரின் தந்தைவழிமுறையே குறிப்பிடப்படுகின்றது. இங்கு தாய்வழிமுறைப்பட்டியலும் சிறப்பித்துக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம் தாய்வழியின் சிறப்புமிக்க தலைமுறை கருதியே எனலாம்.

கல்வெட்டுப்பாடம்

1. ஸ்ரீஇராசஇராசதேவர்க்குயாண்டு இருபத்தி(ரண்)டாவது வெண்புணாட்டு நா

2. லூரவி சேரிபள்ளிக்கு இவ்வூர் மாறஞ்சடையன் மகன் சடையசங்கையன் ம
3. கன்சங்கையஞ்சடையன்மகள்சடையநற்சக்கி[யை][3] இந்நாட்டு வெண்புஎ்ர திணை
4. வழுவிலி மகன் வழுவிலிசாத்தன் பெற்ற சடையநற்சக்கி மகன் சாத்
5. தம்புகழ் மகன் புகழ்சடயேன் எம்மூத்தப்பன் வழுவிலி சாத்த
6. னையும் எம்மூத்தம்மை சடையன்நற்சக்கியையுஞ் சாத்தி
7. இட்ட [கற்திரு]மேனி.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் அரசன் முதல் இராசராச சோழன் என்று கொள்வதற்குக் காரணம் இக்கல்வெட்டு வட்டெழுத்தில் பொறித்துள்ளமையே ஆகும். இரண்டாம், மூன்றாம் இராசராசசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் பாண்டி நாட்டின் தென்பகுதிகளில் கிடைக்கவில்லை. சோழவந்தான், தென்கரை போன்ற சில இடங்களைத் தவிர்த்துப் பல இடங்களில் முதல் இராசராசனின் கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலேயே எழுதப்பெற்றுள்ளன. மேலும் இச்சிற்பம் காணப்படும் பகுதியிலேயே திருச்சுழியல் என்ற ஊரில் வட்டெழுத்தில் எழுதப்பெற்ற முதல் இராசராசனின் இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.[4]

நாலூர் அவிசேரிப்பள்ளி

இச்சிற்பம் கிடைத்துள்ள பகுதி வெண்புநாடு என்ற உள்நாட்டுப் பிரிவைச் சார்ந்த பகுதியாகப் பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. பாண்டியர் காலத்தில் இந்நாட்டுப்பகுதியில் சமண சமயம் சிறப்புடன் விளங்கி உள்ளதை இப்பகுதியில் கிடைக்கும் சமணத் தீர்த்தங்கரரின் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவை உணர்த்துகின்றன.[5] வெண்புநாட்டுப் பகுதியிலேயே புகழ்பெற்ற சமணப்பள்ளியான 'குறண்டி திருக்காட்டாம்பள்ளி' சிறப்புடன் விளங்கி இருக்கிறது.[6] பாண்டிநாட்டுக் கழுகுமலை சமணப்பள்ளியில் செய்தளிக்கப் பட்டிருக்கும் சமணசிற்பங்கள் பலவற்றையும் செய்வித்தோரில் முன்னிற்பவர்களில் ஒருவராக வெண்பு நாட்டு ஊர்களைச்

சார்ந்தவர்கள் விளங்குகின்றார்கள்.[7] வெண்பு நாட்டைச் சார்ந்த 'நாலூரர்' என்ற பெயர் கழுகுமலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் வெண்புநாட்டு நாலூராக இருக்கவேண்டும்.[8] ஆனால் தற்போது இப்பெயர் இச்சிற்பம் காணப்படும் ஊருக்கு வழங்கப்படவில்லை. இவ்வூர் முற்காலப் பாண்டியர் காலத்திலும் சிறப்பு வாய்ந்த சமணத்தலமாக விளங்கி தொடர்ந்து கி.பி.11ஆம் நூற்றாண்டில் சோழர்காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும் என்பதை கழுகுமலைக் கல்வெட்டுக்களும் புதியதாகக் கண்டறியப்பெற்ற இராசராசன் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றன. நாலூரைச் சார்ந்த 'ஏனாதி மாகணக்குரத்தி' என்ற சமணப்பெண்துறவி ஒருவர் கழுகு மலையில் தீர்த்தங்கரர் திருமேனி ஒன்று செய்வித்துள்ளதைக் கழுகுமலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[9] இச்சமணப் பெண்துறவி தோன்றிய நாலூரில் இராசராசன் காலத்தில் அவிசேரிப்பள்ளி என்ற பெயரில் சமணப்பள்ளி ஒன்று சிறப்புடன் விளங்கியதை தீர்த்தங்கரர் உருவத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு தெரிவிக்கின்றது. தற்போது இது முற்றிலும் அழிந்து போய் அதில் செய்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்கரரின் உருவம் மட்டும் எஞ்சிய நிலையில் காணப்படுகின்றது. இப்பள்ளி நாலூரில் 'அவிசேரி' என்ற பகுதியில் இருந்தமையால் அவிசேரிப்பள்ளி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவிசேரி என்பது வேள்வித்தொழில் செய்யும் அந்தணர் குடியிருப்புப் பகுதியாக இருக்க வேண்டும். தொழில் அடிப்படையிலும் பிறவகையிலும் பாண்டி நாட்டிலிருந்த ஊர்கள் சேரிகளாகப் பிரிக்கப் பட்டிருந்ததற்கு இக்கல்வெட்டு ஒரு சான்றாகும். முற்காலப்பாண்டியர் காலத்தில் கூத்தன்குடி என்ற ஊரில் அறுவைவாணிபச்சேரி[10] என்றும் வெண்பைக் குடியில் வெட்டஞ்சேரி[11] என்றும், களக்குடியில் மங்கலச்சேரி என்றும்[12] இருந்திருப்பதைப் பாண்டியர் கல்வெட்டுக்கள் தெரிவிப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புகழ்சடையனின் தலைமுறையினர்

இத்தீர்த்தங்கர் திருமேனியைச் செய்வித்த புகழ் சடையனின் முன்னோர்கள் பாண்டியர் காலத்தில் தாய்வழியில் பாண்டியரது அரசியல் அதிகாரிகளாகவும் தந்தைவழிகளில் ஊர்களில் பணிபுரிந்த நில வருவாய் தொடர்பான அதிகாரிகளாகவும்

விளங்கியிருக்கவேண்டும். கல்வெட்டில் காணப்படும் அவர்களது பெயர்களைக் கொண்டு பின்வருமாறு அவர்களை முறைப்படுத்திக் கூறலாம்.

தாய்வழி — தந்தைவழி

மாறஞ்சடையன்
|
சடையன்சங்கையன்
|
சங்கையன்சடையன் — வழுவிலி (வெண்புரைத்திணை)
|
சடையநற்சக்கி — — (மண உறவு) — —வழுவிலிசாத்தன்
|
சாத்தம்புகழ்
|
புகழ்சடையன்
(தீர்த்தங்கரர்சிறபத்தை செய்வித்தவன்)

மாறஞ்சடையன் என்பவனின் வழிவந்த சடையநற்சக்கி என்ற பெண்ணுக்கும் வெண்புநாட்டுத் திணை வழுவிலி என்பன் மகன் வழுவிலிசாத்தனுக்கும் பிறந்த சாத்தம்புகழ் என்பவனது மகனே புகழ்சடையன் ஆவான்.

மூத்தப்பன் மூத்தம்மை

புகழ்சடையன் தனது தந்தையின் தந்தையையும் தாயையும் முறையே மூத்தப்பன் என்றும் மூத்தம்மை என்றும் குறிப்பிடுகின்றான். தமிழ்நாட்டில் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தந்தையை 'எமப்பன்',[13] 'தமப்பன்'[14] என்றும் சிற்றப்பாவை 'சிற்றப்பன்'[15] என்றும் பெரியப்பாவை 'பேரப்பன்'[16] என்றும் உறவுப் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். தந்தையின் தந்தையையும் தாயையும் இவர்கள் எல்லோருக்கும் மூத்தவர்கள் தொன்மையானவர்கள் என்று பொருளில் மூத்தப்பன், மூத்தம்மை என்று அழைத்திருப்பதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

மலையாளத்தில் மூத்தப்பன் என்ற சொல்வழக்கு இதே பொருளில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பாண்டிய நாட்டில் மூத்தப்பன் என்ற சொல்வழக்கு கி.பி.9ஆம் நூற்றாண்டில் இருந்திருப்பதைப் பெரியாழ்வார் பாடல் தெரிவிக்கின்றது. ஆனால் அவர் பாடல்கள் தாத்தாவையும் அப்பாவையும் கூட மூத்தப்பன் என்று அழைக்கும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றது.

மாறஞ்சடையன்

புகழ்சடையனின் தாய்வழியில் முதல்வனாக வரும் மாறஞ்சடையன் முற்காலப்பாண்டியரின் பட்டப்பெயரான மாறஞ்சடையன் என்ற பெயரையே தனது பெயராக வைத்துக் கொண்டிருப்பது இவன் பாண்டிய அரசில் பணிபுரிந்த அரசியல் அதிகாரியாக இருக்கவேண்டும் என்று எண்ணம் இடந்தருகின்றது. இவனது பிள்ளைகள் சடையன் என்ற பட்டத்தை மட்டும் மாறிமாறி புனைந்துகொண்டு விளங்கியிருக்கின்றார்கள். இவ்வாறு பாண்டியர் காலத்தில் மாறன், சடையன் என்ற பாண்டிய மன்னர்களுக்குரிய பெயர்களை அவர்களது அதிகாரிகளாக விளங்கியவர்கள், குடிமக்கள் ஆகியோர் வைத்துக்கொள்வது வழக்கமாக இருந்திருக்கின்றது.[17] இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் தலைமுறையினர் வாழ்ந்த ஆண்டினைக் கணக்கிட்டுப் பார்த்தால் இதில் முதல்வனாக வரும் இம்மாறஞ்சடையன் முற்காலப்பாண்டியர் காலத்தில் 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவனாக இருக்கவேண்டும் எனத் தோன்றுகின்றது. மேலும் புகழ்சடையன் தனது மூத்தம்மையின் முன்னோர் நினைவாக அவர்கள் புனைந்து கொண்ட 'சடையன்' என்ற பெயரை வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. புகழ் என்ற முன்னொட்டு அவன் தந்தை பெயராகும்.

திணை வழுவிலி

சடையன் புகழனது தந்தை வழி முன்னோன் வழுவிலி வெண்புநாட்டு வெண்புரை என்ற ஊரில் 'திணை' என்ற நிலவரி

தொடர்பான அலுவலராகப் (கணக்கர்) பணிபுரிந்திருக்கின்றான். இவன் கல்வெட்டில் வெண்புரை திணை என்று அவனது ஊரையும் சேர்த்து குறிப்பிடப்படுகின்றான். முற்காலப் பாண்டியர் காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் அவ்வூருக்கென்று நிலவரி போன்ற வரிகளை மக்களிடமிருந்து வாங்கவும் கணக்கிடவும் திணைக்களத்து அதிகாரிகள் பணி புரிந்திருக்கின்றார்கள். முற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் இவர்கள் 'திணைக்களத்தான்' என்று குறிப்பிடப்படுகின்றனர். அம்பாசமுத்திரம் கல்வெட்டில் வெண்புநாட்டைச் சார்ந்த நால்கூர் திணைக்களத்தானாகிய சாத்தன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.[18] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுப் பூலாங்குறிச்சி கல்வெட்டிலும் பெருந்திணை என்ற வருவாய்த்துறை அலுவலர் குறிக்கப்படுகின்றனர். நான்கு வகையான திணைகளையும் அக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. மேற்குறிப்பிட்ட 'திணை' அலுவலர் சோழர்கால கல்வெட்டுகளில் விரிந்த அளவில் திணைக்களம், திணைக்களநாயகம், திணைக் களக்கண்காணி என்று அழைக்கப்படுகின்றனர்.

முடிவுரை

புதியதாக கண்டறியப்பெற்ற இத்தீர்த்தங்கரர் சிற்பம் பாண்டிய நாட்டு அரசியல், சமயம், சமுதாய வரலாற்றில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்றது என்பதை மேற்கண்ட செய்திகள் உணர்த்துகின்றன. மேலும் அக்காலத்தில் ஆள்பெயர் மற்றும் உறவுப்பெயர்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் அறியவுதவும் புதிய கல்வெட்டாகவும் இது விளங்குகின்றது.

குறிப்புகள்

1. சோழர்கால இச்செப்புத்திருமேனி தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.
2. கஆஅ 281/1940-41 புதுக்கோட்டை மாவட்டம் செம்பாட்டூர் சிவன்கோயிலின் அருகே இவ்வியக்கியின் உருவம் காணப்படுகின்றது. கி.பி.11-12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இதன் பீடத்தில் பொறித்த கல்வெட்டு மூவேந்தனூர்த் தேவர் என்பவர் இதனைச் செய்வித்ததைத் தெரிவிக்கின்றது.
3. கல்வெட்டில் 'மை' என்ற எழுத்தினைச் சேர்ப்பதால் இக்கல்வெட்டிற்கு பொருள் கொள்ளுவதில் மயக்கம் ஏற்படுகின்றது. இக்கல்வெட்டுச் செய்தியை ஆய்ந்து அறிந்து கொள்வதில் எனக்குத் துணைநின்ற திரு. ச. இராசகோபால், கல்வெட்டாய்வாளர் தொல்பொருள் ஆய்வுத்துறை அவர்களுக்கு நன்றியுடையேன்

ஆவேன். இச்சிற்பம் இக்கட்டுரையாசிரியரால் கள ஆய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது.

4. இவ்விரு கல்வெட்டுக்களும் திருச்சுழியில் திருமேனிநாத சுவாமி கோயிலின் கருவறை வெளிப்புறச் சுவரில் காணப்படுகின்றன.

5. வேதாசலம், வெ. 'பாண்டியநாட்டில் சமணசமயம்' கல்வெட்டு காலாண்டு இதழ் 13, தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை – 28.

6. தெஇக, 14, எண்கள் 34, 35 – 39

7. வேதாசலம், வெ., 'கழுகுமலை சமணப்பள்ளி' கல்வெட்டு காலாண்டு இதழ், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை–28.

8. தெஇக, 5, எண். 404.

9. மேலது

10. மேலது 14 எண்.94

11. மேலது 14 எண். 106

12. மேலது 5 எண். 308

13. மேலது 14 எண். 62

14. டாக்டர் நாகசாமி, இரா. தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை (1964) பக். 192.

15. மேலது பக்கம் 165

16. மேலது பக்கம் 164, 165

17. தெஇக, 14 எண்.1, 2, 46 – 85.

18. மேலது எண். 81

19. தெஇக, 14 எண். 104.

19

அழுந்தூரும் அழிந்தியூரும்

செ. இராசு

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பல்லவர் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு 'முத்தரையர்' என்னும் சிற்றரச மரபினர் சோழநாட்டுப் பகுதியில் ஆட்சி புரிந்தனர். நாலடியார் இவர்களைப் 'பெருமுத்தரையர்' என்று கூறும்.[1]

முத்தரையர் நியமம், செந்தலை, வல்லம், தஞ்சை போன்ற பகுதிகளில் தங்கள் ஆட்சியை நிறுவினர். அம்முத்தரையர் தலைவர்களில் ஒருவர் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் என்பவர். அவர் தம் பகைவர்களான பாண்டியரையும், சேரரையும், மணலூர், கொடும்பாளூர், காரை, காந்தளூர், கண்ணனூர், செம்பொன்மாரி, மறங்கூர், அண்ணல் வாயில், அழிந்தியூர் ஆகிய ஊர்களில் வென்றதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். அப்பாடல்கள்தாம் புகழ்வாய்ந்த செந்தலைப் பாடல் கல்வெட்டுக்கள் ஆகும்.[2]

அழிந்தியூரில் பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன்மாறன் ஆற்றிய போர் பற்றிப் பாடிய புலவர் பாச்சில்வேள் நம்பனென்பவர். அப் பாடல்,

வெங்கண் பொருகயல்சேர் வெல்கொடியோன் வான்மாறன்
செங்கண் கரும்பகடு சென்றுழக்க—அங்குலந்தார்
தேர்அழுந்தி மாவழுந்திச் செங்குருதி மண்பரந்த
ஊர்அழிந்தி யூர் என்னும் ஊர்

என்பதாகும்.[3]

முத்தரையர் போரில் பகைவரை எதிர்த்துப் போரிட்டுப் பெரு வெற்றிபெற்ற 'அழிந்தியூர்' தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த 'தேரழுந்தூர்' என இன்று வழங்கும் ஊர் என்று மு.இராகவையங்கார் அவர்கள் எழுதியுள்ளார்.[4] அழுந்தூர்-திரு அழுந்தூர் என்பதே தேரழுந்தூர் என மாறியது. அழுந்தியூர் பற்றிய வேறு கருத்துக்களும் உள்ளன.

தஞ்சை மாவட்டத் திருவழுந்தூர் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உய்யக்கொண்டார் வளநாட்டில் திருவழுந்தூர் நாட்டைச் சேர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.[5]

இக் திருவழுந்தூர் கம்பர் வரலாற்றோடு தொடர்புடையது.

கம்பன் பிறந்தஊர் காவேரி தங்கும்ஊர்
கும்பமுனி சாபம் குறைந்தஊர்–செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும்தே டிக்காணா
ஓதகத்தார் வாழும்அழுந் தூர்

என்பது ஒரு பழம்பாடலாகும்.[6] ஒரு இராமாயண ஏட்டில்

ஆவின் கொடைச்சகரம் ஆயிரத்து நூறொழித்துத்
தேவர் திருவழுந்தூர் நன்னாட்டு–மூவலூர்த்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை

என்ற பாடல் காணப்படுகிறது.[7]

அழுந்தூர் - திருவழுந்தூர் என்றே எல்லா இடங்களிலும் குறிக்கப்பெறும் கம்பர் பிறந்த சிறப்புடைய இவ்வூர் முத்தரையர் போரிட்ட அழிந்தியூர் ஆகுமா? என்பது கேள்வி.

திருச்சிக்குத் தெற்கில் 18 கி.மீ. தொலைவில் அழுந்தூர் என்ற தொன்மையான ஊர் ஒன்று உள்ளது. அவ்வூரின் வரகுண ஈச்சுரம் என்ற பழம்பெரும் சிவன்கோயில் சிதைந்த நிலையில் உள்ளது. அங்குள்ள கல்வெட்டு அவ்வூரை 'அழிந்தியூர்' என்றே குறிக்கிறது. முற்காலப் பாண்டிய மன்னர் பெயரால் அமைந்த

வரகுண ஈச்சுரம் என்ற அக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் முதன்முறையாகத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினரால் படியெடுக்கப்பட்டன.[8] அங்குள்ள முதல் குலோத்துங்க சோழனின் 48 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துத் திருஅழிந்தியூர்' என்றும், மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 38ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'வடகோனாட்டு அழிந்தியூர்' என்றும் அவ்வூர் குறிக்கப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில், அவ்வூரில் வாழ்ந்த காடையான் வலையன் குற்றிச்சேந்தன் ஆன பெரியநாட்டு முத்தரையன் என்பவன் அவ்வூர்க்கு உரிமையுடைய காணியாளனாகக் குறிக்கப்பெறுகின்றான். முத்தரையர் வெற்றிபெற்ற அவ்வூரில் முத்தரையத் தலைவர்கள் நிரந்தரமாகக் குடியேறினர் போலும். இக் கல்வெட்டில் அழிந்தியூர் எனக் குறிக்கப்பெறுகிறது.

முத்தரையர் பல்லவர்களின்கீழ்ப் பாண்டிய நாட்டு எல்லையில் காவல் புரிந்தனர். முத்தரையர் படையெடுப்புக்கள் அனைத்தும் பாண்டிய நாடு உள்ள தென்திசை நோக்கியே இருந்தன என்பது அறிஞர் கருத்து.[9] காரை, கண்ணனூர், கொடும்பாளூர், மணலூர், செம்பொன்மாரி, அண்ணல்வாயில் போன்று முத்தரையர் போரிட்ட பிற ஊர்களும் மேற்கண்ட திருச்சிக்குத் தெற்கேயுள்ள அழிந்தியூரைச் சுற்றியே உள்ளன.

எனவே முத்தரையர் பகைவருடன் போரிட்டது சோழ நாட்டுத் திருஅழுந்தூர் (தஞ்சை மாவட்டம்) அல்ல ; பாண்டியநாட்டு எல்லையின் அருகே உள்ள (திருச்சி மாவட்டம்) அழிந்தியூரே என்பது பெறப்படுகிறது.

தஞ்சையின் வடகிழக்கே 60 கி.மீ. தொலைவில் உள்ளது கம்பரோடு தொடர்புடைய அழுந்தூர் ; அழிந்தியூரோ தஞ்சையின் தென் மேற்கில் 60 கி.மீ. தொலைவில் உள்ளது.[10]

அழிந்தியூர் வரகுண ஈச்சுரக் கல்வெட்டுக்கள்

அ. வடக்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீகோமாற பன்மராந திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு 38வது பங்குனிமாதம் 10 தேதி வடகோனாட்டு அழிந்தியூராராக இசந்த ஊரவரோம் நாயநார் மன்னற்கு பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது எங்கள் பக்கல் இவர் விலைகொண்டு நாங்கள் உடையார் வரவுணீசுரமுடைய நாயநாற்கு குடிநீங்காதேவதாநமாகத் திருச்சூலத். தாபநம் பண்ணிக்குடுத்த குடிக்காடு தட்டான்குள

2. மும் கணக்கன்குளமுமாந வரவுணப் பெருமாள் நல்லூற்கு கடமை நிச்சயித்தபடி இக்குடிகாடு நான்கெல்லைக் குட்பட்ட வயலில் பயிரேறின நிலம் பயிர் பார்த்து பயிர்கண்ட நிலத்துக்கு மாத்தால் அஞ்சுகலமாக வந்த நெல் நாயனார் திருக்கொட்டாரத்தே தேவதாநம் கோயில் கணக்கந் சீகாரியம் செய்வாரோமே அளக்கக் கடவாராகவும் இவ்வயலில் எள்ளு வரகு தினை விளைஞ்சபயிருக்கு மாத்தாலிரண்டு பணம் கொள்ள்க் கடவ தாகவும் இப்படிக்கு சந்திராதித்தவரை செ

3. ல்லக்கடவதாகக் கல்லும் வெட்டிப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் நாயநார் மன்நற்கு வடகோநாட்டு அழிந்தியூர் ஊரவரோம் கோநாட்டுவேளாந் எழுத்து அணுக்கநம்பி எழுத்து பிள்ளைவேளாந் எழுத்து இராசவேளாந் எழுத்து அழகியசோழவேளாந் எழுத்து திருநீற்றுச்சோழ வேளாந் எழுத்து அணுக்கிவேளாந் எழுத்து அழகர்மூவேந்தவேளாந் எழுத்து விக்கிரமசோழவேளாந் எழுத்து.

ஆ. மேற்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இக்கல் ஒன்றும் அழிந்தியூரில்
2. வண்ணான் அழிவில்லாததேவன் மொண்ணை தன்மம்

இ. கிழக்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ புதழ்மாது விளங்க ஐயமாது விரும்ப நிலமகள் நிலவமலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடிசூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மந்நவ ரிரியலுற்றிழிதர திக்கனைத்தும் தந் சக்கர நடாத்தி வீர ஸிம்ஹாஸனத்து உலகுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோவிராஜகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 48ஆவ்து இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு உறத்தூர் கூற்றத்துந் திருவழிந்தியூராக இசந்த ஊரோம் எங்களிலிசைந்த பரிசாவது இவ்வூர் வரகுண ஈஸ்வரமுடைய மகாதேவற்கு திருமண்டபமும் எடுப்பித்து திருமேனியும் எழுந்தருளிவித்து மற்றுமுள்ள திருப்பணிகளும் செய்விக்கக் கடவோமாகவும் இத்திருப்பணிகளுக்கு உடலாக புந்செயிலும் மெந்செயிலும் அளந்து முதலான தானியத்தில் கலத்துவாய் னாழி தானியம் அளக்கக் கடவோம்...'

குறிப்புகள்

1. நாலடியார் 200, 286
2. மு.இராகவையங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக். 17–21.
3. மேலது, ப.18
4. மு.இராகவையங்கார், பெருந்தொகை, மதுரைத் தமிழ்ச்சங்கம், பாடல் 1012, ப.238.
5. கஅஆ 485 1907; பின்பு இதே வளநாடு இராச நாராயண வளநாடு என்றும் (489, 491 – 1907), ஜயங்கொண்ட சோழ வளநாடு என்றும் (289, 300, 486 – 1907) பெயர் மாற்றப்பட்டது.
6. தமிழ் நாவலர் சரிதை 185; பெருந்தொகை 2126
7. இராமாயண ஏட்டுப் பிரதிகள்; பெருந்தொகை 1519.
8. இக்கோயிலைக் கண்டுபிடித்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அறிவித்துக் கல்வெட்டுக்களைப் படி எடுக்க உதவிய கலை ஆய்வர் டாக்டர் இரா.கலைக்கோவன், அவர்களுக்கு நன்றி.
9. K.G. Krishnan, 'Studies in South Indian History and Epigraphy. New Era Publication, Madras, 1981, P.139.
10. கே.ஜி. கிருஷ்ணன் புதுக்கோட்டை மாநிலத்து அழுந்தையே அழுந்தியூர் என்றும் (மேலது, ப.139), பேராசிரயர் இராசசேகர தங்கமணி அவர்கள் தஞ்சை மாவட்ட அடஞ்சியூரே அழுந்தியூர் என்றும் (பாண்டியர் வரலாறு, ப. 229) கூறுவர். தமிழ்நாட்டின் வேறு சில பகுதிகளிலும் அழுந்தூர் என்ற பெயரில் நாடுகளும் ஊர்களும் உள்ளன. வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் வழுவூர்ப் பகுதி அழுந்தூர் நாடு என்றும் (தெஇக. 12-62; கஅஆ.68 - 1908) சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் 'சிற்றழுந்தூர்' என்றும் வழங்கப்பெற்றுள்ளன. ஆனால் அழிந்தியூர் என்று மேற்கண்ட திருச்சி மாவட்ட ஊர் மட்டுமே வழங்கி வந்துள்ளது காண்க.

20

தொண்டியில் ஒரு புதிய கல்வெட்டு

செ. இராசு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் துறையினர் 21.7.1985 அன்று சிவகங்கை மாவட்டம் தொண்டியில் உள்ள கைக்களான் குளத்தின் நடுவில் நடப்பட்டுள்ள தூணொன்றில் சடையவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டொன்றைப் படி எடுத்தனர்.

அக்கல்வெட்டின் தொடக்கத்தில் மிகவும் அரிதான முறையில் இணைக்கயல்,[1] வில், புலி ஆகிய பாண்டியர், சேரர், சோழர் சின்னங்கள் ஒரே அளவில் அடுத்தடுத்துப் பொறிக்கப்பட்டுள்ளன. சிறப்புமிக்க இச்சிறபங்களைப் பெற்ற அக்கல்வெட்டின் வரலாற்றுச் சிறப்பை ஆராய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கி.பி.12-14-ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர் மரபில் தோன்றிய தாயாதிகள் பலர் பாண்டிய நாட்டின் பல பகுதிகளிலும், பாண்டியர் வென்ற பிற பகுதிகளிலும் ஆட்சியுரிமைபெற்று ஆண்டுவந்தனர். ஒரே சமயத்தில் ஒருவருக்கு மேற்பட்ட பாண்டியர் அரசு புரிந்துள்ளனர்.[2]

கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மாறவர்மன் சீவல்லபன் மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்கும், மாறவர்மன் பராக்கிரம பாண்டியனுக்கும் ஆட்சியுரிமைபற்றிப்

பாண்டியன் கொல்லப்பட்டான். பராக்கிரம பாண்டியனுக்கு ஆதரவாகப் பாண்டி நாட்டுக்குப் படையொடு வந்த சிங்களப் படைத்தலைவன் இலங்காபுரித் தண்டநாயகன் பராக்கிரம பாண்டியனைக் கொன்ற குலசேகரனை வென்று மலை நாட்டுக்குச் சென்று வாழ்ந்த பராக்கிரமன் மகன் வீர பாண்டியனை மதுரை அரசன் ஆக்கினான்.[3]

ஆனால் விரைவில் வீரபாண்டியனின் ஆட்சிக்குட்பட்ட தலைவர்களான கண்டதேவ மழவராயன், மழவச் சக்கரவர்த்தி ஆகியோர் துணையுடன் குலசேகரன் வீர பாண்டியனை வென்று மதுரையைக் கைப்பற்றினான்.[4] குலசேகரனின் மாமன் ஆன கொங்குச் சோழன் குலோத்துங்கனும் குலசேகரனுக்கு உதவி புரிந்தான்.

மீண்டும் இலங்கையிலிருந்து பெரும்படையுடன் வந்த ஜகத் விஜய தண்டநாயகனும், ஏற்கெனவே தமிழ்நாட்டிலிருந்த இலங்காபுரித் தண்ட நாயகனும் பெரும்போர் செய்து குலசேகரனை விரட்டி மதுரை ஆட்சியில் வீர பாண்டியனை அமர்த்தினர்.[5] இதைப் பற்றிய செய்தி இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்திலும் காணப்படுகிறது.

மனமுடைந்த குலசேகர பாண்டியன் சோழநாடு சென்று இராசாதிராசன்பால் தன் நாட்டைத் தான் பெறுமாறு தனக்குப் படை அனுப்பித் துணைபுரியுமாறு வேண்டினான்.[6] அதற்கு இசைந்த இராசாதிராசன் சிங்களப்படைகளை விரட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயன் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினான்.

சோழர் படைக்கும் சிங்களப்படைக்கும் பெரும்போர் மூண்டது. தொண்டி, பாசிப்பட்டினம் போன்ற ஊர்களில் மோதல்கள் ஏற்பட்டன. தொடக்கத்தில் நடைபெற்ற சில போர்க்களங்களில் சிங்களப்படை வெற்றிபெற்றது.[7] அதனால் சோழநாட்டில் கலக்கம் ஏற்பட்டது.[8] ஆனால் இறுதிப் போரில் சிங்களப்படை தோல்விகண்டு கடலில் புகுந்தது.[9]

இலங்காபுரித் தண்டநாயகன், ஜகத் விஜயத் தண்டநாயகன் என்ற இரண்டு சிங்களப் படைத் தலைவர்களின் தலைகளும் கொய்யப்பட்டு மதுரைக்கோட்டை வாயிலில் பலரும் காணுமாறு வைக்கப்பட்டன.[10]

பாண்டிய நாட்டாட்சியிலும் வீரபாண்டியன் விரட்டப்பட்டு குலசேகரபாண்டியன் அமர்த்தப்பட்டான். சோழப் பெரும்படை வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன் தலைமையில் இலங்கை மீதும் படை எடுத்துப் போரிட்டுச் சிங்களருக்குப் பலத்த சேதத்தை விளைவித்தது.[11]

இவ்வாறுசோழரின் துணையோடு பாண்டி நாட்டு ஆட்சியுரிமை பெற்ற குலசேகரன் விரைவில் நன்றிமறந்து சிங்கள வேந்தனுடன் நட்புக் கொண்டான். அதனால் சோழர் படைத் தலைவன் அண்ணன் பல்லவராயன் மதுரைமீது படைஎடுத்துச் சென்று குலசேகரனை விரட்டி வீர பாண்டியனை மதுரை அரசு கட்டில் ஏற்றினான்.[12]

அந்நிலையில் குலசேகர பாண்டியன் மரணம் அடையவே அவன் மகன் விக்கிரமபாண்டியன் அப்போது சோழநாட்டில் ஆட்சிபீடம் ஏறிய மூன்றாம் குலோத்துங்க சோழனை அடைந்து தன் தந்தையிழந்த நாட்டை மீட்டுத் தனக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டான். அப்போது சோழனால் மீண்டும் அரசுரிமை பெற்ற வீரபாண்டியனும் இலங்கை மன்னனோடு நட்புக் கோண்டு சோழனுக்கு எதிரியாக மாறியிருந்தான்.

விக்கிரம பாண்டியனுக்கு உதவி புரியும் பொருட்டுக் குலோத்துங்கசோழன் வீரபாண்டியன் மீது படை எடுத்து அவன் மக்களில் ஒருவனைக் கொன்றான் ; ஒருவனை மூக்கரிந்தான். வீரபாண்டியன் மனைவியைப் பிடித்து வேளம் ஏற்றினான். வீரபாண்டியனுக்கு உதவி புரிந்த மறவர்படை, ஏழகப்படை, சிங்களப்படை, சேரர்படை ஆகிய படைகளைச் சோழன் அழித்தான். வீரபாண்டியன் சுற்றத்தினரோடு மலைநாடு சென்று சேரனிடம் அடைக்கலம் அடைந்தான். சோழன் விக்கிரமபாண்டியனை மதுரைக்கு அரசன் ஆக்கினான்.[13]

வீரபாண்டியனுக்கு உதவி தோல்வியைத் தழுவிய சேரன் தோல்வியுற்ற வீரபாண்டியனுக்குத் தன் நாட்டில் அடைக்கலம் அளிக்க அஞ்சினான். மூன்றாம் குலோத்துங்க சோழனின் பேராற்றலுக்குப் பயப்பட்டான். அதனால் சேர மன்னன் குடகொல்லதம் வந்த வீரபாண்டியனையும் அழைத்துக் கொண்டு சோழநாடு சென்று இருவரும் சோழனைப் பணிந்து அடைக்கலம் வேண்டினர்.[14]

மூன்றாம் குலோத்துங்கன் வீரபாண்டியனையும், சேரனையும் வரவேற்று உபசரித்தான். மதுரையில் விக்கிரம பாண்டியன் ஆட்சிபுரிந்ததால் தொண்டி, பாசிப்பட்டினம் அருகில் ஏற்கனவே சிங்களப்படைகள் நிலை கொண்டிருந்த பாண்டிய நாட்டின் ஒரு பகுதிக்கு வீரபாண்டியனை அரசன் ஆக்கினான்.[15] சேரனுக்கும் சிறப்புக்கள் பல செய்தான். உடன் இருந்து உண்ணும் உற்ற நண்பன் ஆக்கினான்.

பாண்டியரும், சேரரும், சோழரும் நெடுநாட்களுக்குப் பின் பகையின்றி நட்புறவுடன் ஒன்றுபட்டு அப்போது இருந்தனர். தமிழ் நாட்டில் தமிழ் அரசரிடையே பிளவு இல்லை என்பதைப் பிறருக்கு, குறிப்பாக சிங்கள மன்னருக்கு அறிவிக்க நினைத்த வீரபாண்டியன் தொண்டியில் பொறித்த கல்வெட்டில் மீன், வில், புலி என்ற மூவேந்தர் சின்னங்களையும் சம அளவில் பொறிக்குமாறு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதனையே தொண்டி கைக்களான்குளக் கல்வெட்டில் காணுகின்றோம்.

சோழ மன்னனிடமிருந்து சேரன் உதவியோடு பாண்டி நாட்டில் ஒரு பகுதியை வீரபாண்டியன் பெற்றான். பலமுறை நாட்டை இழந்து துன்பப்பட்டு மீண்டும் ஆட்சியுரிமை எய்திய வீரபாண்டியன் மூவேந்தர் ஒற்றுமையை மிகவும் விரும்பியிருக்க வேண்டும்.

தன் மக்கள் இருவருக்கும் வீரகேரளன், பருதி குலபதி என்று சேரர், சோழர் தொடர்பான பெயர்களை வீரபாண்டியன் வைத்தான்.[16]

வீரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டில் தொண்டியில் 'காளிகணத்தான்' என்ற பெயரில் குளம் ஒன்றமைக்கப்பட்ட செய்தி இக்கல்வெட்டில் கூறப்படுகிறது. மேலும தொண்டிக்குப் பவித்திரமாணிக்கப்பட்டினம் என்ற பெயர் இக்கல்வெட்டில் கூறப்படுகிறது. கடலில் விளைந்த முத்தே பவித்திரமாணிக்கம். காயல்பட்டினம், பெரியபட்டினம் போன்ற கிழக்குக் கடற்கரை ஊர்களும் இப்பெயரைப் பெற்றிருந்தன. இப்பெயர் சிறப்புடைய பெயராகக் கருதப்பட்டது.[17] திருப்பெருந்துறைக்குப் பவித்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர்.[18] இப்பெயரால் தொண்டியின் அக்காலப் பெரும் செல்வவளம் நமக்குத் தெரிகிறது. தொண்டி சிதம்பரேசுவரர் கோயில் கல்வெட்டில் அவ்வூர் வயலொன்றுக்கு 'மாசிலாமணி வயக்கல்' என்று பெயர் கூறப்பெறுகிறது.

இக்கல்வெட்டில் தொண்டியில் நாணய பரிசோதகனாக (சமஞ்சிதன்) விளங்கிய அலுவலன் ஒருவன் குறிக்கப் பெறுகின்றான். அவன் உய்யவந்தான் சுந்தனான தேவேந்திர வல்லபச் சமஞ்சிதன் ஆன பரசமய கோளரி என்பவன்.[19]

தொண்டி, வணிகர்கள் நிலையாக வாழ்ந்த செல்வமிக்க ஊர். அங்குள்ள ஒரு சிவாலயம் 'நகரீசுவரம்' என்ற பெயரால் அழைக்கப்பெற்றது. வணிகர்களின் காவலின் பொருட்டு அங்கிருந்த வீரர் குழு காளி கணப்பிள்ளைகள் எனப்பட்டனர். அவர்கள் பெயராலேயே அக்குளம் 'காளி கணத்தான்' என்று அழைக்கப்பட்டது.

இதே போல் மதுரை மாடக்குளக் கீழ்க்கரையில் உள்ள கல்வெட்டொன்றில் அங்கிருந்த ஒரு குளம் 'எண்டிசை நாட்டெறிவீர கணத்தான்' என்று அழைக்கப்பட்டது தெரிய வருகிறது.[20]

காளி கணத்தான் குளத்துக்கு இன்று கைக்களான் குளம் என்று பெயர் வழங்கப்படுகிறது. இன்றும் நன்னிலையில் விளங்கித் தொண்டிக்கும் குடிநீர் வழங்கும் அக்குளத்தின் கலிங்குகள் 9.11.1785இல் மருதுபாண்டியரால் கட்டப்பெற்றன. மருது பாண்டியன் காலத்தில் தொண்டி அதிகாரம் செலுத்தியவர் அபூப் சகா மரைக்காயர்.

800 ஆண்டுகட்கு மேலாகியும் அக்குளத்தின் நடுவில் நடப்பட்டுள்ள அக்கம்பீரக் கற்காவியம் தன் பெருமையெல்லாம் தோன்ற அழியாமல் நிற்கிறது.

பிற்சேர்க்கை

1. தொண்டிக் கல்வெட்டுக்கள்

1. உ ஸ்வஸ்தஸ்ரீஉ
2. உ கோச்சடை பந்
3. மரான திரிபுவனச் ச
4. க்கரவத்திகள் ஸ்ரீ வீரப
5. ாண்டிய தேவற்கு ய
6. ாண்டு மூன்றாவது
7. தொண்டியான பவி
8. த்திர மாணிக்க பட்
9. டினத்து உய்ய வ
10. ந்தான் சுந்தரனானதே
11. தவேந்திர வல்லப
12. ச் சமஞ்சிதனான பரச
13. மய கோளரி பக்க
14. ல் காவி கணப்பிள்ளை
15. கள் பேரால் விலை கொ
16. ண்டு தன்மமாக்கின
17. குளம் இதின் பேர்
18. காவி கணத்தான்

2.
1. சிவமயம் கலியுகம் 4896 சாலிவாகன சகாப்
2. தம் 1717 இதின்மேல் செல்லாநின்ற ராக்ஷத வருசம் அற்
3. ப்பசி மாதம் 27 சோம வாரமும் பஞ்சமியும் புநற்பூச நக்ஷத்ர
4. மும் கூடிய சுபதினத்தில் தொண்டிப்பட்டிணம் கைக்கவான்
5. குளம் கலுங்கு கட்டி முகிஞ்சுது ராச மானிய ராமருதுபாண்டி

6. யன் உபயம் அபுப் சகா மரைக்காயர் அதிகாரத்தில் கட்டிமுகிஞ்சுது

7. அருணாசல ஆசாரி கட்டி முகிஞ்சுது உ

குறிப்புகள்

1. பாண்டியர் சின்னம் இணைக் கயல்கள். இதனை

'இருகயல் ஆணை ஒருங்குடன் நடாஅய்' என்று நெடுஞ்சடையனின் சீவரமங்கலச் செப்பேடும் [20]

'கயலிணை வடவரைப் பொறித்தும்' என்று பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடும் [86,87]

'கயலிணை உலகின் கண்எனத் திகழ' என்றும்

'கயலிரண்டு நெடுஞ்சிகரக் கனவரையில் விளையாட' என்றும்

'வானாந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட' என்றும்

முறையே அரிகேசரி பராக்கிரம பாண்டியன், சடைய வர்மன் சுந்தர பாண்டியன், மாறவர்மன் சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்திகளும் கூறும்.

2. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் 'பாண்டியர் வரலாறு' பக். 107

3. மேலது

4. மேலது, பக். 417.

5. கே.வி.ராமன் 'பாண்டியர் வரலாறு' பக். 99.

6. 'பாண்டியனார் குலசேகர தேவர் தம்முடைய ராஜ்யம் விட்டுச் சோழ ராஜ்யத்திலே புகுந்து என்னுடைய ராஜ்யம் நான் பெறும்படிப் பண்ணவேணும் என்று சொல்ல' எஇ. 21:31

7. தி.வை.ச. தாசிவப்பண்டாரத்தார் 'பாண்டியர் வரலாறு' பக். 97.

8. 'ஈழப்படை பாண்டி மண்டலத்தைக் கைக்கொண்டு மதுரையிலே இருந்த ராஜா குலசேகரனைப் போகத் துரத்தி பின்பு மகாராஜா ஸ்ரீராஜாதிராஜ தேவர் ஸாமந்தரோட பூசல் வரத் தொடங்கி தொண்டி பாசி முதலிய பிரதேசத்தில் பூசலுண்டாய் அபாயத்திலே ஈழப்படை ஜயித்தவாறே சோழ மண்டலத்திலும் மற்றுமுள்ள நாடுகளிலும் உள்ளஜனங்களெல்லாம் பயப்பட்டமையைக்கேட்டு... ஈழப்படையாகிறது சாலப் பாப கர்மாக்கள். அவர்கள் சோழ மண்டலத் தெல்லை புகுதில் ஸ்ரீமகாதேவர்கோயிலுள்ளிட்ட தேவர்கள்கோயிலுக்கும் பிராணமர்களுக்கும் ராஷ்டிரத்துக்கும் அடங்க விரோதமுண்டாகும்' [இங்கு சிங்கள நாடே ஈழம் என்று குறிக்கப்படுகிறது]. தெ.இ.க.4, எண். 456.

9. 'சிங்களப்படை மூக்கறுப்புண்டு அலைகடல் புக' தெ.இ.க.3, எண். 86.

10. 'இலங்காபுரித் தண்டநாயகனுள்ளிட்டாரைக் கொன்று பாண்டியர்கள் இருப்பான மதுரை வாசலிலே இவர்கள் தலை தைப்பிக்கக் கடவாராகவுஞ் சொல்லி இப்படி எல்லாம் விண்ணப்பம் செய்து திருவுள்ளம் ஆனபடியே பாண்டியனார் குலசேகர தேவர் சோழ ராஜ்யத்தில் இருந்த நாளில் இவர்க்கு வேண்டு வனவெல்லாங் குறைவறச் செய்து பரிகரித்த பலத்தாலும்அர்த்தத்தாலும் உத்ஸாகத்தாலும்

பாண்டிய நாடு கைக்கொண்டு தாஞ் சொன்னபடியே இலங்காபுரித் தண்ட நாயகன் உள்ளிட்டாரைக் கொன்று இவர்கள் தலை மதுரை வாசலிலே தைப்பித்து....' எஇ.21:31

11. 'ஈழ மண்டலத்திலே கீழ்மேல் இருபதின் காதமேற்படவும் தென்வடல் முப்பதின்காத மேற்படவும் அழித்து' மேலது, தொகுதி 22, பக். 90.

12. தி.வை.சதாசிவபண்டாரத்தார், 'சோழர் வரலாறு' பக். 385.

13. 'விக்கிரம பாண்டியன் வேண்ட விட்ட தண்டால் வீரபாண்டியன் மகன் பட ஏழகப்படை மறப்படை பட..... வீரபாண்டியனை முதுகிடும்படி தாக்கி மதுரையும் அரசும் கொண்டு' தெ.இ.க. 3, எண். 86.
'தண்டொன்றால் வழுதி மைந்தனை மூக்கரிந்து' தெ.இ.க. 7, எண். 797.

14. தி.வை.சதாசிவபண்டாரத்தார், 'சோழர் வரலாறு' பக். 400, 401.

15. 'அடுத்த முதல் சுற்றத்தோடும் புகல்லற்று குடகொல்லம் புக்கதென்னனும் மிக்க சேரனும் வந்தடி வணங்க அவர் முடிமேல் அடிவைத்து செந்தமிழ் நாட்டரைசும் மவுலியும் தென்னவனுக்களித்தருளி வீரக் கழல் புனைந்து வீரக்கொடியும் தியாகக் கொடியும் உடன் எடுத்து கைய்கையர்கோன் காதலனை பேர்காட்டக் கண்டருளி எய்தரிய செல்வத்துள் எல்லையில் பரிசட்டம் நல்கி மீறவராம் வீரகேரளந் வேளை கொண்டு விரல் தறித்து தாநடிமை புகுதுதலால் தராதிபர் பெறா வாழ்வளித்து பக்கமிருந்துண்ண பரிகல பரிச்சிந்ற நல்கி'
தெ.இ.க.22, எண். 42.

16. தி.வை.சதாசிவபண்டாரத்தார், 'சோழர் வரலாறு' பக். 400.

17. தஞ்சை மாவட்டம் திட்டக்குடி சுகாசனப் பெருமாள் கோயில் கல்வெட்டில் 'பவித்திரமாணிக்க வேளான்' என்பவன் குறிக்கப் பெறுகின்றான். நெல்லை மாவட்டம் மாறமங்கலம் சந்திரசேகர ஈசுபரன் கோயில் கல்வெட்டில் 'பவித்திர மாணிக்கப்பட்டினம்' குறிக்கப் பெறுகிறது.

18. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடு, தமிழ்ப் பல்கலைக் கழகம் கல்வெட்டியல் துறைத்தொகுப்பு.

19. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி 3, பகுதி 2, பக். 426.

20. 'ஸ்வஸ்திஸ்ரீ இ
ந்தக் குளமுங் கா
லும் எண்டிசை
நாட்டெறிவீர க
ணத்தான்'
[மதுரைகாமராசர்பல்கலைக்கழகம் வரலாற்றுத் துறையின்கண்டுபிடிப்பு]

21

வரலாற்று நோக்கில் நாகபட்டினம்

பா. ஜெயக்குமார்

சங்ககாலத் தமிழ்நாட்டில் சோழர்களின் சிறந்த துறைமுகமாகவும், தலைநகராகவும் விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தைப் போல இடைக்காலச் சோழர் ஆட்சியில் நாகபட்டினம் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் சோழர்களின் முக்கிய துறைமுகமாக மட்டுமன்றி சமய, பண்பாட்டு மையமாகவும் விளங்கியது.

இந்நகரம் பல பெயர்களில் அழைக்கப் பெற்றுள்ளது. கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவாரப் பாடல்களில் இவ்வூரின் பெயர் 'நாகை' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.[1] எனினும் இதுவரை இப்பெயரை உறுதி செய்யும் வகையில் எழுதப்பெற்ற சான்றுகள் எவையும் கிடைக்கப்பெறாமல் இருந்தன. அண்மையில் நாகபட்டினம் நாகநாதர் கோவிலில் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப் பெற்றது. அது எழுத்து அமைப்பு முறையில் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலக் கல்வெட்டாகக் கருதப்படுகிறது. அக்கல்வெட்டில் இவ்வூரின் பெயர் 'நாகை' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. சோழ மன்னன் ஒருவனுக்கும் நாக நாட்டு மங்கைக்கும் ஏற்பட்ட திருமண உறவு வழியாக இவ்வூரின் பழங்குடிகளாக 'நாகர்கள்' என்னும் இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்ததாகவும், அவர்களின் பெயரால் நாகை, நாகபட்டினம் ஆகிய பெயர்கள் வரக் காரணமாக இருந்ததாகவும் செவிவழிச் செய்திகளின் வாயிலாக அறிகிறோம்.[2] மேலும் வெளிநாட்டுக் கடல் பயணிகளின் பயணக் குறிப்புகளிலும் கல்வெட்டு மற்றும் செப்புப் பட்டயங்களிலும் இவ்வூரின் பெயர் கீழ்க்காணுமாறு அழைக்கப்பட்டுள்ளது :

பயணிகள்/கல்வெட்டு பெயர்கள்	காலம் (நூற்றாண்டில்)	நாகபட்டினத்தின் பிற பெயர்கள்
தாலமி	கி.பி.2	நிகமா
இத்சிங்	கி.பி.7	நாகவதனா/ நகியபொடனா
சோழர்கால கல்வெட்டு செப்பேடுகள்	கி.பி.[illegible]	நாகபட்டினம் என்ற சோழகுலவல்லிப் பட்டினம்
மார்க்கோபோலோ	கி.பி.13	படன்
இரஸீத்-உத்-தின்	கி.பி.13	மலிபடன்
பர்மாவில் உள்ள கல்யாணிக் கல்வெட்டு	கி.பி.15	நவுதபட்டன்
மேற்கத்தியர்கள்	கி.பி. 18,19	நெகபடன்

பல்லவ மன்னன் இராஜசிம்மன் (கி.பி. 691-729) ஆட்சியில் பல்லவ அரசு உலகளவில் பரந்த அளவில் புகழ்பெற்று விளங்கியது. குறிப்பாக சீன அரசுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு இருந்தது. இவ்வரசன் இருநாடுகளுக்கும் இடையே பண்பாடு மற்றும் வணிக வளர்ச்சிகள் ஏற்பட வழிவகுத்தான்.[3] அதன் பொருட்டு சீனாவிலிருந்து நாகபட்டினம் துறைமுகம் வரும் புத்த சமய வணிகக்குழுக்களின் இறைவழிபாட்டிற்காக புத்தவிகாரம் ஒன்றை இராஜசிம்மன் கட்டினான். இக்காலத்தில் நாகபட்டினம் பல்லவர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாமல்லபுரத்திற்கு ஒப்பான பன்னாட்டுத் துறைமுகமாக விளங்கியதாகக் கொள்ளலாம்.

இதே காலகட்டத்தில், தமிழ்நாட்டில் வைணவ சமயம் வளர்ச்சிபெற்று இருந்தது. அது புத்தமத வளர்ச்சியை விரும்பாத கொள்கையுடன் விளங்கியது. வைணவ சமயப் பெரியோராகக்

கருதப்படும் திருமங்கை ஆழ்வார் நாகபட்டினத்தின் புத்த விகாரத்தில் வைக்கப்பெற்றிருந்த தங்கத்தில் ஆன புத்தர் சிலையை களவாடிச் சென்று அதன்மூலம் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலைக் கட்டுவதற்குத் தேவையான பொருள் சேர்த்தார் என்று வைணவ மரபு கூறுகிறது.[4] இக்கதை உண்மையாக நடந்திருந்தால் இப்புத்தர் சிலை பெரும்பாலும் இராஜசிம்மனால் நாகபட்டினத்தில் கட்டப் பெற்றிருந்த புத்தவிகாரத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

நாகபட்டினத்தில் கிடைக்கின்ற கல்வெட்டுக்களின் வாயிலாக இவ்வூர் இடைக்காலச் சோழர்களின் ஆட்சியில், குறிப்பாக முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலங்களில் ஒரு பன்னாட்டுத் துறைமுகமாக விளங்கியதைக் காண்கிறோம். இக்காலத்தில் வணிகர்கள் இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் குறிப்பாக கொல்லம், கொல்லாப்பூர் ஆகிய மேற்குக் கரை துறைமுகங்களிலிருந்து இங்கு வந்து குடியேறி ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தில் ஈடுபட்டனர்.[5]

இவையன்றி, தென்கிழக்கு ஆசிய நாடுகளான ஜாவா, சுமத்ரா, சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா, பர்மா மற்றும் மலேயா ஆகிய நாடுகளிலிருந்து வணிகர்கள் இத்துறைமுகத்திற்கு வந்து சென்றனர். 11ஆம் நூற்றாண்டில் ஜாவா, சுமத்ரா, மற்றும் மலேயா ஆகிய நாடுகள் உள்ளடங்கிய ஸ்ரீவிஜயம் மற்றும் கடாரம் என்று அழைக்கப்பட்ட ஒரு பெரிய நாட்டின் புத்தமதம் சார்ந்த வணிகர்கள், தூதுவர்கள், அந்நாட்டு அரசனால் நாகபட்டினத்திற்கு அனுப்பப்பட்டார்கள் .[6] இதேபோன்று, தூதுக்குழுக்கள் சில சோழப் பேரரசர்களால் சீனாவுக்கு அனுப்பப்பெற்றன. அவற்றில் முதல் தூதுக்குழு முதலாம் இராஜராஜன் காலத்தில் 1015 ஆம் ஆண்டிலும், இரண்டாவது தூதுக்குழு முதலாம் இராஜேந்திரன் காலத்தில் 1033 ஆம் ஆண்டிலும், மூன்றாவது குழு முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் 1077 ஆம் ஆண்டிலும் சீனாவுக்குச் சென்றன.[7] இக்குழுக்கள் அனைத்துமே பண்பாட்டு நோக்கத்தின் அடிப்படையில் மட்டும் அல்லாது, வணிக நோக்கத்திலேயும் அனுப்பப்பட்டன.

இராஜராஜனது ஆனைமங்கலம் (பெரிய லெய்டன்) பட்டயம் மேற்கூறிய கருத்தை நிலைநிறுத்துகிறது.[8] கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவிஜய நாட்டின் மன்னன் சைலேந்திர வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீமாறவிஜயோத்துங்கவர்மன் இராஜராஜனது அனுமதியுடன் துறைமுக நகரமான நாகபட்டினத்தில் ஒரு புத்த விகாரத்தை அவனது நாட்டு புத்தமதம் சார்ந்த வணிகர்கள் வழிபாட்டுக்காகக் கட்டினான். அதற்குச் சூடாமணிவர்ம விகாரம் என்று தனது தந்தை சூடாமணி வர்மதேவன் பெயரைச் சூட்டினான். மேலும் இவ்விகாரத்திற்கு இராஜராஜன் தனது 21ஆவது ஆட்சியாண்டில் (1006) நாகபட்டினத்திற்கு அருகிலுள்ள ஆனைமங்கலம் என்ற ஊரையும் அதன் வருவாயையும் மேலே கூறிய புத்த விகாரத்திற்குக் கொடையாக வழங்கினான். இப்பட்டய அளிப்பை பின்னால் இராஜேந்திரனும் உறுதி செய்தான். முதல் குலோத்துங்கசோழன் மேலும் சில ஊர்களைக் கொடுத்தான். அப்பொழுது சூடாமணிவர்ம விகாரம் இராசராசப் பெரும்பள்ளி என்றும் அழைக்கப்பட்டது.[9] இந்தச் செப்பேட்டில் இராஜேந்திர சோழப்பெரும்பள்ளி என்ற இன்னொரு புத்தவிகாரமும் அங்கு இருந்ததாகக் குறிக்கப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விகாரங்கள் இப்பொழுது அழிந்துவிட்டன. இருப்பினும் லெய்டன் செப்பேடுகள் மூலமும் அங்கு மேற்கொண்ட கள ஆய்வின் போதும் இவை எங்கிருந்தன என்பதை ஊகிக்கமுடிந்தது. ஆனைமங்கலம் செப்பேடு இவ்விகாரம் $31\frac{3}{4}$ வேலி (சுமார் 200 ஏக்கருக்கு மேல்) பரப்புளவு நிலத்தைக் கொண்டதாகச சொல்கிறது. இதன் எல்லையாக கிழக்கே கடற்கரையில் அமைந்திருந்த பெரிய மணற்குன்று, தெற்கில் புகையுணிக்கிணறு, திருவீரட்டானமுடைய மகாதேவர் கோவில் நிலம், பறவைக்குளத்து மாராயன் கல்லுவித்த குளம், மேற்கில் காரைக்கால் பெருவழி, வடக்கில் வடகாடன்பாடி ஆகியன குறிப்பிடப்படுகின்றன.

மேற்கூறிய எல்லைகளின் கிழக்கு எல்லையான கடற்கரையில் அமைந்துள்ள மணற்குன்று இன்று நம்பியார்குப்பம் அல்லது நகர் என்று அழைக்கப்படுகிறது. இம் மணற்குன்றில் வாழும் முதியோர்கள், இக்குன்று 1952-ல் ஏற்பட்ட புயலால் பாதிக்கப் பட்டதாகவும் அதற்கு முன்பும் பலமுறை இயற்கையின்

சீற்றத்தால் பாதிப்புக்கு உள்ளானதாகவும் கூறுகின்றனர். இதுபோன்று, கடந்த ஆயிரம் ஆண்டுகளில் பலமுறை இயற்கையின் தாக்குதலில் சிக்குண்ட இம்மணற்குன்று இன்று அளவில் சற்று சிறுத்துக் காணப்படுகிறது. கடற்கரையில் பெரும்பாலும் வேறு எங்கும் கிடைக்காத நல்ல குடிதண்ணீர் இம்மணற்குன்றில் கிடைப்பதால் இங்கு மக்கள் ஆதிமுதல் வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றனர். மேலும் கள ஆய்வின்போது இம்மணல் குன்றில் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில சீன மண் பாண்டங்களின் சில்லுகளும் கண்டுபடிக்கப்பட்டன.

மேற்கு எல்லையான காரைக்கால் பெருவழி தற்பொழுது உள்ள நீதிமன்றக் கட்டிடத்தின் பின்புறம் செல்லும் சாலை ஆகலாம். ஆனால் தற்பொழுது காரைக்கால் சாலை நீதிமன்றத்திற்கு முன்பாகச் செல்கின்றது. வடக்கு எல்லையான வடகாடன்பாடி இப்பொழுதும் காடம்பாடி என்றழைக் கப்படுகிறது. தெற்கு எல்லையான புகையுணிக் கிணறு அழிந்து போயிற்று, வீரட்டான மகாதேவர் நிலம் வீட்டு மனைகளாக மாறிவிட்டன, ஆனால் குளம் மட்டும் இருக்கின்றது, அது தற்பொழுது தாமரைக்குளம் என்று அழைக்கப்படுகிறது.

நாகபட்டினம் நாகநாதர் கோவிலில் கிடைத்துள்ள 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு ஒன்றில் இராஜராஜப் பெரும்பள்ளி என்ற ஸ்ரீமாகேசுவரப் பெரும்பள்ளியின் திருப்பணிக்குக் கொடுத்த கொடையைக் குறிக்கின்றது.[10] இதில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜராஜப் பெரும்பள்ளி சந்தேகம் இன்றி ஆனைமங்கலச் செப்பேட்டில் கூறும் புத்த விகாரமே என்பது தெளிவாகிறது. ஆனால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் நாகபட்டினம் பாண்டியர்களின் கீழ் இருந்தபொழுது இவ்விகாரம் ஸ்ரீமாகேசுவரப் பெரும்பள்ளி என பெயர் மாற்றப்பட்டு சைவ மதத்தோராலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகிறது.

இந்தியாவின் பண்டைய சின்னங்களின் மீது மிகுந்த பற்றும் அவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியும் கொண்டிருந்த வால்டர் எலியட் என்ற ஆங்கிலேயர் நாகபட்டினத்தில் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இக்கடற்கரைக்கு வரும் கப்பல்களின்

மாலுமிகளுக்கு திசையை உணர்த்தும் கலங்கரை விளக்கமாக விளங்கிய இரு பெருங்கோபுரங்களைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.[11] இக்கோபுரம், புதுவெளிக் கோபுரம், பழைய கோபுரம், சீனக் கோபுரம், கறுப்புக் கோபுரம், ஜெயினக் கோபுரம், மற்றும் மொட்டைக் கோபுரம் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் நான்கு பக்கங்களைக் கொண்டதாக, மூன்று அடுக்குகளைக் கொண்டு முழுவதும் செங்கற்களைக் கொண்டு காரையில்லாமல் கட்டப்பட்டிருந்தது. எந்தவிதமான கல்வெட்டுகளோ அல்லது சிலைகளோ இதில் காணப்படவில்லை. இதுபோன்ற கட்டிடக்கலைப் பாணியைக் கொண்ட அமைப்புடைய கட்டிடம் தென்னிந்தியாவில் இல்லாத ஒன்றாகும். ஆனால் இத்தகைய அமைப்புடையக் கட்டிடங்கள் ஜாவா மற்றும் சுமத்ரா நாடுகளில் பெருமளவில் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே அக்கட்டிடம் பழைய புத்த விகாரங்களில் ஒன்றின் கட்டிடமாக இருக்கவேண்டும்.

1859-ஆம் ஆண்டு, நாகபட்டினத்தில் கிருத்துவ சபையின் மதக் குருக்களால் கட்டப்பட்டிருந்த சமய வழிபாட்டு இடத்திற்கு (chapel) சூரிய ஒளி வராமல் இக்கோபுரம் தடுக்கிறது என்பதாலும், மேலும் அங்குப் புதிதாகக் கட்டப்படவிருந்த (தற்பொழுது திருச்சியில் உள்ள) புனித சூசையப்பர் கல்லூரிக்கு இக்கோபுரம் ஆபத்தை விளைவிக்கும் என்ற நோக்கத்திலும், கோபுரத்தை இடிக்கவும், அதிலிருந்து கிடைக்கும் பொருள்களை புதிய கல்லூரிக் கட்டிடத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் அனுமதி வேண்டி சென்னை ஆளுநர் நேப்பியரைக் கேட்டுக்கொண்டனர். கிருத்துவ சபையைத் தவிர வேறு எந்தவொரு பிரிவினரும் இவ்வரலாற்றுச் சிறப்புமிகு கோபுரத்தை அழிக்க விரும்பாததால் ஆளுநர் உடனடியாக அனுமதி அளிக்க முடியவில்லை. இருப்பினும் நிர்ப்பந்தத்தின் பெயரில் 1867-ஆம் ஆண்டு ஆகஸ்டு 28-ஆம் தேதி அக்கோபுரத்தை இடிக்கவும், அதிலுள்ள பழைய பொருள்களைக் கல்லூரிக் கட்டிடத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி 1867-ல் கோபுரம் இடிக்கப்பட்டு அதன் பொருள்கள் கல்லூரிக் கட்டிடம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இங்குக் கட்டப்பட்ட கல்லூரிக் கட்டிடப்

பகுதி இன்று காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் வட்ட ஆட்சியர் அலுவலகங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இதில் சில இடிந்துபோன கட்டிடப் பகுதிகளின் சுவர்களுக்குள் பழைய விகாரங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த செங்கற்களும், சோழர்கால ஓடுகளும் காணப்படுகின்றன. மேலும் இங்கு கிறித்துவ மதகுருக்களால் கட்டப்பட்ட சமய வழிபாட்டுக் கட்டிடம் பக்கத்தில் நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வழிபாட்டுக் கட்டிடத்திற்குச் சூரிய ஒளி வருவதை முற்றிலும் கோபுரம் தடுக்கிறது என்ற விவாதத்தினை கருத்தில் கொண்டு கள ஆய்வு மேற்கொண்ட பொழுது இவ்வழிபாட்டுக் கட்டிடத்தின் முன்பு நூறு அடிக்குள் பூமியில் செங்கற்கள் பரப்பப்பட்டுள்ளது போன்ற கட்டிடப்பகுதி பரவலாக தொடர்ச்சியாக பல இடங்களில் காணப்பட்டது. இப்பகுதியில் சீனக் களிமண் வகை மண்பாண்டச் சில்லுகள் அதிகமாகக் கிடைக்கின்றன. சோழர் கால ஓடுகளும் இங்குக் கிடைக்கின்றன. பெரும்பாலும், இப்பகுதியே விகாரம் நின்ற இடமாகத் துணியலாம்.

சோழர்கள் வழங்கிய கொடைகளைப் போலவே ஸ்ரீவிஜய அரசனின் வணிகப் பிரதிநிதிகள் நாகபட்டின சைவக் கோயிலான காயாரோகண சுவாமி கோவிலுக்கு தங்கம், மணிரத்தினக் கற்களால் செய்யப்பட்ட அணிகளையும், $87\frac{3}{4}$ கழஞ்சு எடையுள்ள சீனக்கனகத்தையும் அளித்தனர்.[12] வரலாற்று ஆசிரியர்கள் 'சீனக்கனகம்' என்பதற்கு சீனத் தங்கம் அல்லது சீன நாணயம் என்று பொருள் கொள்கின்றனர். கல்வெட்டியல் அறிஞர் கே.ஜி. கிருஷ்ணன், 'சீனக்கனகம்' என்ற நாணயம் சீனாவிலிருந்து ஸ்ரீவிஜயம் மற்றும் கடாரம் வழியாக தமிழ்நாட்டில் சிறப்புமிகு வணிகத் துறைமுகமாக விளங்கிய நாகபட்டினத்திற்கு வணிகர்கள் மூலமாக வந்திருக்கவேண்டும் என்று கருதுகிறார்.[13] இதற்கு மேலும் துணை சேர்க்கும் வகையில் கடற்கரைப் பகுதியான தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்காவில் சில இடங்களில் சீனச் செப்பு நாணயங்களின் புதையல்கள் கிடைத்துள்ளன. இவைகளின் பெரும் பகுதி கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையே. இத்தகைய நாணங்களைப் பற்றி பேராசிரியர் நொபொரு கராஷிமா குறிப்பிடுகையில் 'இடைக்காலத்தில் இந்திய நாடு குறிப்பாகத்

தென்னிந்தியா கீழ்த்திசை நாடுகளுடனும், மேற்கத்திய நாடுகளுடனும் சிறப்பான முறையில் கடல் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. அவ்வகையில் இரண்டு நாடுகளின் வணிகத் தொடர்பாலேதான் இத்தகைய சீன நாணயங்கள் வந்திருக்க வேண்டும். என்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது' என்று கூறுகின்றார்.[14] இத்தகைய கொடைகளை இரண்டு கடற்சார் நாடுகளும் தங்களது வணிக, சமய, பண்பாட்டு வளர்ச்சிக்காகவே கொடுத்தன என்பதை நம்ப முடிகிறது. அக்காலங்களில் உலக அளவில் வணிகத்திலும் சமயத்திலும் மையமாக விளங்கிய நாகபட்டினம் பெருமளவில் அன்னியச் செலாவணியை ஈட்டி உள்நாட்டில் அரசுக் கருவூலத்தைச் செழிப்பாக்கிய மையமாக விளங்கியது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

பர்மாவில் உள்ள கி.பி. 1476ஆம் ஆண்டைச் சேர்ந்த மன்னன் தம்மசேத்தி அல்லது இராமாதிபதியின் பாலி மொழியிலுள்ள கல்யாணிக் கல்வெட்டு நாகபட்டினத்தில் புத்த மதம் சிறந்து விளங்கியதை நமக்கு தெளிவாகக் காட்டுகின்றது.[15] இரண்டு பக்கங்களிலும் கல்வெட்டுக்களைத் தாங்கி நிற்கும் பத்து தனித்தனி கல்வெட்டுப் பட்டியல்களில் இரண்டாவது கல்வெட்டு சித்திரதூதர் மற்றும் இராமதூதர் என்ற இரண்டு தலைவர்களின் கீழ் இரண்டு கப்பல்களில் இரு குழுக்கள் இலங்கைக்குப் புத்தமத வளர்ச்சிப் பற்றி அறியும் பொருட்டு அனுப்பப்பட்டதையும்; இவற்றில் சித்திரதூதனின் கலம் கடலில் விபத்துக்குள்ளாகியதையும்; சித்திரதூதன் மட்டும் நாகபட்டினம் (நவுதபட்டின) துறைமுகம் வந்தடைந்து அங்கு சீன மன்னனால் கட்டப்பட்டிருந்த புத்த விகாரத்தை வணங்கியதையும் தெரிவிக்கிறது.

கி.பி. 1867-ல் இருந்து சூடாமணிவர்ம விகாரம் இருந்த இடமான தற்பொழுதைய வெளிப்பாளையம் மற்றும் நாணயக்காரத் தெரு ஆகிய இடங்களில் பல காலக்கட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட சுமார் 350 உலோக புத்தர் சிலைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.[16] இவைகள் வரலாற்று ஆசிரியர்களால் அமராவதி மற்றும் நாகார்ஜுனகொண்டாவில் கிடைத்த புத்த உருவங்களின் தன்மைக்கு ஒப்பிடப்படுகின்றன.

மேலும் விகாரங்கள் இருந்த வெளிப்பாளையத்தில் விகாரத்தை ஒட்டி இருந்த பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலுப்பை மரத்தை மரப் பலகைக்காக பயன்படுத்தும் நோக்கத்தில் கிறித்துவ சபையினரால் சாய்த்த பொழுது அம்மரத்தின் வேர் சென்றிருந்த ஆழத்தில் ஐந்து புத்தர் உருவச்சிலைகள் கிடைத்தன. இவற்றில் ஒன்று மட்டும் சீனக் களிமண்ணால் உருவாக்கப்பட்டிருந்தது என்பது சிறப்பானதாகும். இவைகள் அனைத்துமே சோழர் காலந்தொட்டு விஜயநகர ஆட்சிவரை உள்ள காலத்தைச் சேர்ந்தவையாகும். பர்னல், போகாக்ஸ், பெர்குஸன் மற்றும் எலியட் போன்றவர்கள் இங்குக் கிடைத்த சிலைகளின் அமைப்பைக் கொண்டு இவை பர்மா இந்தோசீனா அல்லது இந்தோனேசியாவிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

நாகபட்டினத்தில் சோழர் கடற்படை இருந்ததா என்பதற்கு நேரிடையான ஆதாரங்கள் இல்லாதபோதிலும், இத்துறைமுக நகரில் சோழர்காலத்தில் பலதரப்பட்ட படைகள் இருந்ததை கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.[17] கல்வெட்டுகள் சேனாமுகம், மடிகை ஆரியச்சாலை என்ற இரண்டு தனித்தனிப் பகுதிகள் நாகபட்டினத்தில் இருந்ததாகக் குறிக்கின்றன. மேலும் அகம்படி நியாயங்கள் என்று அழைக்கப்படும் இராணுவ அமைப்பில் வேட்டைக்காரர், தெரிந்த வில், அகம்படி, அணுக்க வில், வேளைக்காரர், குதிரைச் சேவகர், சேனாதிபதிகள் மற்றும் தண்டநாயகம் ஆகிய பிரிவுகள் இருந்ததாகக் காட்டுகின்றன.

குறிப்புகள்

1. மயிலைகிழார் இளமுருகனார், தேவாரம் அடங்கன் முறை. சென்னை, 1953, 46ஆம் பதிகம், பக். 1056–1059.

2. ரா.பி. சேதுபிள்ளை, தமிழகம் ஊரும் பேரும், சென்னை, 1976, பக். 88. பாலசுப்பிரமணியன், ''வாலைகூடும் நாகை'', நூற்றாண்டு விழா மலர், நாகபட்டினம் நகராட்சி, நாகபட்டிணம், 1966, பக். 2.

3. K.A. Nilakanta Sastri, *Foreign Notices of South India*, University of Madras, 1972, P. 116-117.

4. K.A. Nilakanta Sastri, *The Colas*, University of Madras,1984, P. 107.

5. கஆஅ. : 1956 – 57 : 152, 155, 157.

6. கஆஅ. : 1956 – 57 : 164, 166 மற்றும் எ.இ. 22, 1984, பக். 267–281.

7. K.A. Nilakanta Sastri, *Foreign Notices of South India*, University of Madras, 1972, P. 25.

8. எஇ. தொகுதி 22, பக். 213 – 266

9. எஇ. தொகுதி 22, பக். 267 – 281.

10. கஆஅ. 1963 – 64 : 290.

11. *IA*, 7, பக். 224 – 227.

12. கஆஅ. 1956 – 57 : 166

13. K.G. Krishnan, *Studies in South Indian History and Epigraphy*, New Era Publications, Madras, 1981, P.103

14. Noboru Karashima, "Trade Relation Between Tamilnadu and China During the 13th and 14th centuries", *Sixth International conference - seminar of Tamil Studies*, University of Malaya, Kuala Lampur, November 13,1987.

15. *IA*, 22, பக். 11 – 243.

16. T.N. Ramachandran, "The Nagapattinam and the other Buddhist Bronzes in the Madras Museum", *Bulletin of the Madras Govt. Museum*, New General Section Vol. VII, No.1, 1965, pp. 19-20.

17. கஆஅ. 1956 – 57 : 154.

22

தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும்

செ. இராசு

தஞ்சை மராட்டியர் மரபு

மராட்டிய மாவீரர் சிவாசியின் (1640-1680) தந்தை சாசி போன்ஸ்லே (1621-1664). அவர் பீசப்பூர்ச் சுல்தானின் படைத் தலைவராகத் தென்னகத்தில் படையெடுத்துப் பெற்ற வெற்றியின் காரணமாகப் பெங்களூர்ப் பகுதியைச் சாகீர் ஆகப் பெற்றார். பெங்களூர்க் கோட்டையில் தங்கி ஆட்சிபுரிந்த அவர், தம் மூத்த மனைவியின் இளைய மகனான ஏகோசியை கி.பி.1640இல் பெங்களூரின் இளவரசாக ஆக்கினார். பூனா, சாதாரா பகுதிக்கு தன் இளைய மனைவியின் மூத்த மகன் சிவாசிக்கு அளித்தார்.

மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கர், தஞ்சை மன்னர் விசையராகவ நாயக்கரின் மகளை மணம்செய்துகொள்ள விரும்பினார். தஞ்சை நாயக்கர் பெண் கொடுக்க மறுக்கவே தஞ்சைக்கும் மதுரைக்கும் பகை ஏற்பட்டுத் தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலில் பெரும்போர் மூண்டது. அப்போரில் தஞ்சை விசைய ராகவ நாயக்கரும், அவர் மகன் மன்னாரும் இறந்தனர். தஞ்சை மதுரை நாயக்கர் வசமாயிற்று. மதுரை நாயக்கர் சார்பில் அழகிரி நாயக்கர் தஞ்சையில் ஆட்சிபுரிந்தார்.

தஞ்சை விசையராகவ நாயக்கரின் பேரனும், மன்னாரின் மகனுமான செங்கமலதாசு என்ற சிறுவன் பணியாளர் சிலர் உதவியுடன் தப்பிச்சென்று நாகபட்டினம் தருமலிங்கம் செட்டியாரால்

வளர்க்கப்பட்டான். தஞ்சை ராயசம் வெங்கண்ணா வேண்டுகோளின் படி தஞ்சை நாயக்கர் வாரிசான செங்கமலதாசை அரியணையில் அமர்த்தப் பீசப்பூர் சுல்தானின் படைத்தலைவர் காதர், அமைச்சர்கள் கவாஸ்கான், அப்துல் உறலீம் ஆகியோருடன் பெங்களூரிலிருந்து தஞ்சை வந்த ஏகோசி மதுரை நாயக்க அரசின் பிரதிநிதியாகிய அழகிரி நாயக்கரை விரட்டிச் செங்கமலதாசை 1675இல் பதவியில் அமர்த்தினார்.

செங்கமலதாசு ஆளும் பயிற்சி அற்ற இளைஞரானதால் ஆட்சியைச் சரியாகக் கவனிக்க இயலவில்லை. அமைச்சர் பதவி கிடைக்காத வெங்கண்ணாவின் தூண்டுதலால் செங்கமலதாசை விரட்டி ஏகோசி தஞ்சை அரியணையில் அமர்த்தினார். பீஜப்பூர் சுல்தானுக்குப் பெரும் பொருள் பரிசாக அளிக்கப்பெற்றதால் ஏகோசி தஞ்சை மன்னராக அங்கீகரிக்கப் பெற்றார். ஏகோசிக்கு வெங்கோசி என்றும் பெயருண்டு. 1676 முதல் தஞ்சை மராட்டியர்தம் ஆட்சி தொடங்கியது. 1855 வரை ஏறக்குறைய 180 வருடகாலம் மராட்டியர் தஞ்சையை ஆட்சிபுரிந்தனர். கிழ்க்கண்ட அரசர்கள் தஞ்சையை ஆட்சிபுரிந்துள்ளனர்.

1. ஏகோசி I (1676-1684)

2. சகசி (1684-1711) | *3. சரபோசி -I (1711-1729)* | *4. துக்கோசி (1729-1735)*

7. காட்டுராசா (1738)

5. ஏகோசி (1735-1737) | *8. சையாசி (1738)* | *9. பிரதாபசிங் (1739-1763)*

6. சுசான்பாய் (1737-1738)

10. துளசா (1763-1787) | *11. அமர்சிங் (1787-1798)*

12. சரபோசி (1798-1832)

13. சிவாசி (1832-1855)

1798 இல் ஆட்சிக்குவந்த இரண்டாம் சரபோசி ஓர் ஒப்பந்தப்படி நாடு முழுவதையும் ஆங்கிலேயர்க்கு அளித்து விட்டுத் தஞ்சைக் கோட்டையை மட்டும் ஆட்சிபுரிந்துவந்தார். 1855இல் ஆட்சிக்கு வந்த சிவாசிக்கு வாரிசு இல்லாத காரணத்தால் முழு ஆட்சிப் பொறுப்பையும் ஆங்கிலேயரே மேற்கொண்டனர்.

ஆவணங்கள்

சமயம், மொழி, இலக்கியம், மருத்துவம், கலை இவைகளைப் பேணிவளர்த்த தஞ்சை மராட்டிய அரசர்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி (மராட்டி--நாகரி, மோடி எழுத்துக்களில்), பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு வரலாற்று ஆவணங்களை விட்டுச் சென்றுள்ளனர். அன்றாட அரசு நடவடிக்கைகளை அவர்கள் மோடி எழுத்துக்களில் எழுதி வைத்துள்ள பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் இன்னும் சரியாக ஆய்வு செய்யப்பெறவில்லை. தமிழக அரசர்கள் போலப் பல கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் பொறித்துள்ளனர்.

கல்வெட்டுக்கள்

மராட்டியர் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தஞ்சை மாவட்டத்திலும் சில வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, பாண்டிச்சேரி, சென்னை ஆகிய பகுதிகளிலும் கிடைத்துள்ளன. 125 கல்வெட்டுக்கள் இதுவரை கிடைத்துள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயில்களிலேயே கிடைக்கின்றன. சமாதிகள், சத்திரங்கள், கிறித்துவ தேவாலயங்கள், எல்லைக்கற்கள், பாலங்கள், படித்துறைகள், மண்டபங்கள், யாகசாலை, அரண்மனை, கோட்டை, மருத்துவமனை, தண்ணீர்த்தொட்டி, இசுலாமியர் தர்கா ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

இவை பெரும்பாலும் தமிழிலேயே எழுதப் பெற்றுள்ளன. சில கல்வெட்டுக்கள் மராட்டி, ஆங்கிலம், சமஸ்கிருதம், பாரசீகம், உருது ஆகிய மொழிகளில் எழுதப்பெற்றுள்ளன.

இருமொழி (தமிழ்-மராட்டி; தமிழ்-ஆங்கிலம்; மராட்டி-பாரசீகம்), மும்மொழி (தமிழ்-மராட்டி-தெலுங்கு; தமிழ்-மராட்டி-ஆங்கிலம்), நான்குமொழி (தமிழ்-மராட்டி -தெலுங்கு-சமஸ்கிருதம்), ஐந்துமொழி (தமிழ்-தெலுங்கு- மராட்டி-ஆங்கிலம்-உருது) கல்வெட்டுக்கள் காணப்படுவது சிறப்புடையதாகும். சிறுபான்மை மொழியினருக்கும் உரிய சிறப்பு அளித்ததை இப்பன்மொழிக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் அரசர்களே நேரடியாகக் கொடுத்த கொடைகளைச் சுட்டுகின்றன.

செப்பேடுகள்

செப்பேடுகள் மொத்தம் 60 கிடைத்துள்ளன. இவற்றில் 43 செப்பேடுகள் தமிழில் பொறிக்கப்பெற்றவை. மராத்தி மொழியில் 12 செப்பேடுகளும், வடமொழியில் நான்கும், வடமொழியிலும் மராட்டியிலும் ஒரு செப்பேடும் பொறிக்கப் பட்டுள்ளன. மராத்தி மொழியில் அமைந்த 12 செப்பேடுகளில் 10 மோடி எழுத்துக்களிலும், 2 நாகரி எழுத்துக்களிலும் எழுதப் பெற்றுள்ளன. வடமொழிச் செப்பேடுகள் கிரந்த எழுத்துக்களில் உள்ளன. அவற்றில் மூன்று செப்பேடுகளில் அழகிய தமிழ்ப் பாடல்கள் உள்ளன. அவை சிதம்பரம் கோயில் பற்றியவை.

அழகிய முறையில் கைப்பிடிகளும், சிலவற்றில் சிறு துவாரங்களும் உள்ளன. மோடிச் செப்பேடுகளில் அரசு முத்திரைகள் காணப்படுகின்றன.

இச்செப்பேடுகள் பல்லவர், சோழர், பாண்டியர் செப்பேடுகள் போல் ஓலைச்சுவடி வடிவில் இல்லாமல் நீண்ட சதுர வடிவில் ஒரே ஏடாகப் பெரியதாக உள்ளன. இவை வடஇந்தியச் செப்பேடுகளின் அமைப்பை ஒட்டித் தோன்றின என்பர். செப்பேட்டின் இரண்டு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன. அரசர்களின் பரம்பரை, வெற்றி, கொடை, ஆட்சிச்சிறப்புக்களைக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதிகளும், அரசர்களுக்குக் கூறப்பெறும் ஆட்சியாண்டும், அரசியரைப் பற்றிய குறிப்பும் தஞ்சை மராட்டியர் செப்பேடுகளில் காணப்பெறுவதில்லை.

பெரும்பாலான செப்பேடுகளில் செப்பேட்டுச் செய்தியோடு தொடர்புடைய வரைகோட்டு ஓவியங்கள் வரையப் பெற்றிருக்கும். கும்பகோணம் செப்பேட்டில் பல்வேறு இசைக்கருவிகள் அழகிய புடைப்புச் சிற்பமாகவே அமைக்கப்பெற்றுள்ளன. சில செப்பேடுகளில் சோழநாட்டை ஆட்சிபுரிந்த சோழர், விசயநகர அரசர், நாயக்க அரசர் ஆகியோரின் பெயர்கள் காணப்படுகின்றன. சில செப்பேட்டைச் செய்த அல்லது எழுதியவர் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஆவணங்களைப் பொறித்தோர்

அரசர்கள் மட்டுமின்றி அரசகுடும்பத்துப் பெண்களும், பிற உறவினர்களும், அமைச்சர்களும், பிற அலுவர்களும், பொது மக்களும், கிழக்கிந்தியக் கம்பெனியினரும், பாதிரிமார்களும், மாவட்ட ஆட்சித்தலைவரும் கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். செப்பேடுகள் அனைத்தும் அரசர்களும், அரசிகளும் அளித்த கொடைகளையே கூறுகின்றன.

போன்ஸ்லே வம்ச சரித்திரம்

தஞ்சைப் பெருவுடையார் கோயில் தெற்கு மதிட்சுவர் உட்பக்கம் மிக நீண்ட கல்வெட்டாகப் போன்ஸ்லே பரம்பரை பற்றிய மிகப்பெரிய கல்வெட்டைச் சரபோசி மன்னர் பொறித்துள்ளார். அந்நூல் 'போன்ஸ்லே வம்ச சரித்திரம்' என்னும் பெயரில் வெளியிடப்பெற்றுள்ளது.[1] இதனைப் பிராகாரம் முழுவதும் தரையில் வெட்டும் முயற்சி தொடங்கிநின்றுவிட்டது.

அரசர் -- அரசியர் பெயர்கள்

'அலகாபுரியாகிய தஞ்ச நகராதிபதி எகோசி மகராசா சாயிபு'

'ராயிஸ்ரீ சாசி மகாராசா சாயபு'

'மகாமண்டலேசுரன், ராசமானிய ராசஸ்ரீ ஏகோசி
மகாராசா சாயபு'

'போசல வம்சம் கவுசிககோத்திரம் ராசஸ்ரீபிரதாப சிம்ம
மகாராசா சாயப்பு'

'இஸ் அபினெஸ்[2] ஸ்ரீமந்த் சிவாசி மகாராஜா சத்ரபதி சாயபு'

என்ற அமைப்பிலேயே அரசர்கள் பெயர்கள் சுட்டிக் கூறப்படுகின்றன. 'சாயபு' என்ற சொல் மரியாதை நிமித்தம் இறுதியில் சேர்க்கப்பெறுகிறது. எல்லோருடைய பெயர்களும் ஏகோஜி, சரபோஜி, சகஜி என்ற அமைப்பிலன்றி ஏகோசி, சரபோசி, சகசி என்றே எழுதப்பெறுவது அக்காலத்தின் பேச்சுத்தமிழின் நிலையைக் காட்டுகிறது.

அரசியர் பெயரும்
'மாதுஸ்ரீ கௌராம்பா பாயி சாயேப்'
'மாதோஸ்ரீ இராம குமராம்பா பாயி சாஹேப்'

எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இராணிகளை 'பாயி சாகேப்' என்றும் அரசரின் தாயாரை 'ஆவுசாகேப்' என்றும் அழைத்தனர்.

அரசருடைய அந்தப்புர அன்பு மகளிர் 'கோவிந்தா பாயி அம்மாள்' 'அகிலாண்ட பாயி அம்மாள்' 'தர்ம்மு பாயி அம்மாள்' என 'அம்மாள்' அடைமொழியுடன் அழைக்கப்பெற்றனர்.

நாட்டுப்பிரிவுகள்

மராட்டியர் ஆட்சிப் பகுதிகள் சுபா, சீமை (சீர்மை) வட்டம், மாகாணம், ஊர் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. சில பகுதிகளில் சோழர், விசயநகர, நாயக்கர் காலத்தில் வழங்கின வளநாடு, நாடு, கூற்றம், சாவடி போன்ற பிரிவுகள் அப்படியே வழங்கப்பெற்றன. பெரிய வட்டங்கள் சில வடக்கு, தெற்கு என்று பிரிக்கப்பட்டன. சில தனியூர்களும் இருந்தன. பற்று, பத்து, கரை, மால் என்றும் சில பகுதிகள் கூறப்பட்டன. அவைகள் பின்னர் பட்டு என்றும் வழங்கப்பெற்றன. பர்க்கானா என்றும் ஒரு பகுதி அழைக்கப் பெற்றுள்ளது. இசுலாமியர் மிகுதியாக இருந்த நாகூர்ப்பகுதி அவ்வாறு அழைக்கப்பட்டது.

1. விசுவநாத், காசிநாத் ராஜ்வாடே (1906), டி.சாம்பமூர்த்தி ராவ் (1907), தஞ்சை சரசுவதி மகால் (1951,1981). இதன் தமிழ்வடிவமும் ஒன்றுண்டு. இதனைப் பேராசிரியர் கே.எம்.வேங்கடராமையா அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழக சார்பில் வெளியிட்டுள்ளார்கள் (1987).
2. HIS HIGHNESS

நாடு முழுவதும் 5 சுபாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயவரம், திருவையாறு என்பன. சுபாவின் தலைவர் சுபேதார் எனப்பட்டார்.

குடியானவர்களுக்கும், அந்தணர்களுக்கும் (அசேஷ வித்வ மகா ஜனங்கள்) உரிய நிலங்களும், ஊர்களும் தனித்தனியாக இருந்தன. வணிகம் நடைபெற்ற பகுதிகள் பேட்டைகள் எனப்பட்டன.

அரசு அலுவலர்கள்

கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் அரசு அலுவலர்கள் பலருடைய அலுவல்பெயர்களைக் காணுகின்றோம். அட்டவணை, அமீனா, அவுல்தார், அஸ்தாந்திரம், ஆயம், உசூர், ஏஜெண்டு, கணக்கு, காரியத்துக்குக் கர்த்தர், காவல், கார்பார், கில்லேதார், கொட்டியக்காரர், சம்பிரதி, சர்கேல், சுபேதார், சமெயிதார், சேனாபதி, தர்மாதிகாரி, தளகர்த்தர், தளவாய், தாசில், தானாபதி, தானீகம், திருப்பணி விசாரிப்பு, திவான், நாட்டாமை, நாட்டுத்தனம், நிஷ்பத்தி, நோட்டக்காரன், பண்டாரம், பெரியதனம், பேஷ்வா, மணியம், மத்தியஸ்தர், மந்திரி, மேஸ்திரி, முத்திரை, வெட்டியான் போன்றோர் பெயர்கள் கிடைத்துள்ளன.

திவான், சுபேதார், கில்லேதார், சர்கேல் போன்ற உயர் பதவிக்கு மராட்டிய மன்னர்களின் நெருங்கிய உறவினர்களே நியமிக்கப்பட்டனர்.

பாளையக்காரர்கள்

தஞ்சை மராட்டியர்களைப் பற்றி வரலாறு எழுதுவோர் 'பாளையக்கார்கள்' மராட்டியர் ஆட்சியில் இல்லை என்றே எழுதிவருகின்றனர். ஆனால் தஞ்சை மராட்டியர் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் பல பாளையக்காரர்களைக் குறிக்கிறது. சீகாழிச்சீமைப் பாளையக்காரரில் வடகால் ராவுத்தமிண்ட நயினார் சிறப்பித்துக் கூறப்படுவர். அவர்களைப் 'பெரிய வகுப்பு' என்பர். அரியலூர், உடையார்பாளையம் பாளையக்காரர்களும்

தஞ்சை மராட்டியரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும் வன்னிய குலப் பெருமக்கள்.

தென்பகுதியில் மதுக்கூர், சிங்கவனம், பாப்பாநாடு போன்ற ஊர்களில் கள்ளர் சமூகப் பெருமக்கள் பெரும் பாளையக்காரர்களாக இருந்துள்ளனர். இவர்கள் இந்திர குலாதிபர் என்றும், சவாயி விசையரெகுநாத மெய்க்கன் கோபாலஞ் சேர்வைகாரர் என்றும், ராஜேந்திர வளநாடு பொய்யூர்க் கூற்றத்துப் பாப்பாகுடிநாடு செறுநல்லிக் கோட்டையிலிருக்கும் நல்லவன் விசையாத்தேவர் என்றெல்லாம் சிறப்பிக்கப்படு கின்றனர். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள மராட்டியர் செப்பேட்டில் 'பாளையக்காரர் வரி' என்ற தொடரே காணப்படுகிறது. மராட்டிய மன்னர்கள் ஊர்வலம் வருமபோது, அரசர் கொலுவிருக்கும் போதும் எந்தஎந்தப் பாளையக்காரர்கள் எங்கெங்கு இருந்தனர் என்ற குறிப்புக்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பிறரை மதித்தல்

செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் சோழர், விசயநகர, நாயக்கர் பெயர்களைச் சிறப்புடனும், உரிய மரியாதையுடனும் குறிக்கப்பெற்றதுடன் தமிழ், தெலுங்கு, உருது, பாரசிகம், ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் எழுத்துக்களைப் பொறித்ததுடன் ஏராளமான தமிழ் வழக்குகளையும் மராட்டியில் புகுத்தியுள்ளனர். பெரும்பான்மையானகல்வெட்டுக்களும், செப்பேடுகளும் தமிழிலேயே பொறிக்கப் பட்டுள்ளன.

மராட்டிக் கல்வெட்டுக்களில் அங்கணம், எல்லை, குட்டை, குழி, கோபுரம், திங்கள், திருப்பணி, தேர்முட்டி, நன்செய், படித்துறை, பாத்திரம், புன்செய், மடப்பள்ளி போன்ற தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

ஆட்சிமுறை

1683 ஆம் ஆண்டு பிரிட்டோ பாதிரியார் கடிதம் ஏகோசி கொடுங்கோல் ஆட்சிபுரிந்தார் என்றும், ஐந்தில் 4 பங்கு

23

ஓலை ஆவணங்களும் முத்திரை ஓலைகளும்

செ. இராசு

ஆவணம் என்பது ஒரு பழந்தமிழ்ச்சொல். சங்க இலக்கியத்தில் பயின்றுவந்த சொல் (அகநானூறு 77). தேவாரம், பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய இலக்கியங்களிலும் தொடர்ந்து வழங்கி வருகிறது. உரிமைப்பத்திரம், ஒப்பந்தப்பத்திரம், நிகழ்ச்சிகளின் பதிவுப்பத்திரம் என்னும் பொருள்தருவது.

அப்பத்திரங்களைப் பல்வேறு பொருள்களில் எழுதிவைக்கும் வழக்கம் முன்பு இருந்தது. ஓலைகளில் எழுதப்படும்போது அவை ஓலை ஆவணங்கள் எனப்பட்டன. பிற பொருள்களில் எழுதப்பெறும் ஆவணங்கள் கூட முதலில் ஓலைகளிலேயே எழுதப்பட்டன.

ஆவணச்சுவடிகள்

உலகில் பதிவுசெய்யப்பட்டுள்ள சுமார் இருபதினாயிரம் ஓலைச்சுவடிகளைப் பொருள்வாரியாகப் பகுப்பாய்வு செய்த திரு மு.கோ.இராமன் பின்வருமாறு பட்டியலிடுகின்றார்.

பொருள்	சுவடிகள்	அச்சானவை	அச்சாகாதவை
1. மருத்துவம்	60%	5%	55%
2. சோதிடம்	10%	2%	8%
3. சமயம், பக்தி	10%	5%	5%
4. கலை, இலக்கியம்	10%	5%	5%
5. இலக்கணம்	5%	4%	1%
6. வரலாறு	5%	..	5%

வரிவிதிக்கப் பட்டதென்றும் கூறுகிறார். அதைப் படித்து வரலாறு எழுதிய ஆசிரியர்களும் கொடிய வரிபற்றி எழுதியுள்ளனர்.

ஆனால் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் வேறு மாதிரியான ஆட்சிமுறையை நமக்குக் காட்டுகிறது. ஏகோசியால் உழவர்கள் பெற்ற சிறப்பும், ஏகோசியின் நலனுக்காக உழவர்கள் விரும்பிக்கொடுத்த மகமைக் கொடைகளையும், வழிபாடு களையும் காணுகிறோம். மராட்டிய மன்னர்களின் நல்லாட்சியை கல்வெட்டுக்கள், செப்பேடுகள், மூலம் அறிகின்றோம்.

பிற செய்திகள்

12, 14, 21, 24, அடிக்கோல்கள் மூலம் நிலங்கள் பல காலங்களில் அளக்கப்பட்டன. நிலங்கள் ,, சில சமயம் விதைநெல்லின் அளவைக் கொண்டும், உழவுசெய்யும் ஏர்களின் அளவைகொண்டும் நிர்ணயம் செய்யப்பட்டன. வணிகர் பேட்டைகளில் கடை வைத்தும், ஊருக்குள் பொருள்களைக் கொண்டுவந்தும் விற்றனர். பல்வேறு பொருள்கள் பொதி, சுமை என்ற அளவுகளில் கொண்டு வரப்பட்டுப் பொருள்களுக்குத் தக்கவாறு கலம், குறுணி, கண்டி, சேர், படி, நாழி, உரி, தூணி, மா போன்ற பல்வேறு அளவுகளில் அவை விற்கப்பட்டன. நிறுக்கப்பட்டவை. மனு, துலாம் என்றும், நெய் தோண்டி என்றும், வெற்றிலை கட்டு என்றும், எண்ணெய் குடம், காணம், சேர் என்றும் அளக்கப்பட்டன.

பணம், பொன், வராகன், சக்கரம், இராசகோபாலசக்கரம், காசு போன்ற நாணயங்கள் வழங்கின. கால், அரைப்பணம் என்றும் துளைப்பொன் என்ற வழக்கும் இருந்தது. நாணயம் உருவாக்கும் கம்பட்டங்கள் நாட்டில் இருந்தன.

இப்பட்டியலின் படி வரலாற்று ஆவணச்சுவடிகள் பெரும்பாலும் அச்சாகாமல் இருப்பது புலப்படும்.

மெக்கன்சி ஆவணங்களில் ஓலை

மெக்கன்சி தொகுத்த சுவடிகளில், சரித்திரம் கைபீது, வமிசாவளி, தலச்செய்திகள், கல்வெட்டு, செப்பேடு, பட்டயம், பலவகை இனாம்கள் பற்றியவை 1379 ஆவணங்கள் 119 ஆவணங்கள் ஓலைகளிலேயே உள்ளன. ஏனையவற்றுள் பல ஆவணங்கள் இன்று காகிதங்களில் இருந்தாலும் அவற்றுள் பெரும்பாலானவை ஓலைகளிலிருந்து எழுதப்பெற்றவையே யாகும். இவை சென்னையிலுள்ள தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளன.

ஓலை ஆவணங்கள்

ஆவணங்கள் எழுதப்பட்ட பல பொருள்களை விட ஓலைகள் விரைவில் அழியக்கூடியவை. இருப்பினும் அவை பக்குவம் செய்யப்பெற்ற முறைகளினாலும், பத்திரங்களைப் பத்திரப்படுத்திவைக்கும் பாங்கினாலும், சுவடி பெயர்த்தெழுதும் பழக்கத்தாலும் காலவெள்ளத்தை நீந்தி நாம் காணக்கூடிய வகையில் பல கிடைக்கின்றன.

சிவகங்கை, இராமநாதபுரம் அரண்மனைகளிலும், புதுக்கோட்டை அருங்காட்சியகத்திலும் அவை உள்ளன. தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகம், திருவாவடுதுறை ஆதீனம், திருவானைக்காவல் பாகூர்மடம், திருவரங்கம், திருவானைக்காவல், திருப்பைஞ்ஞீலிக் கோயில்கள், ஆய்க்குடி, உடையார்பாளையம், வடகால் போன்ற பாளையக்காரர் மாளிகைகள், ஈரோடு கலைமகள் கல்வி நிலையம், தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை, கல்வெட்டியல்துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் போன்ற இடங்களிலும் ஓலை ஆவணங்கள் உள்ளன. தனிப்பட்டவர் களிடம் பல்லாயிரம் ஓலை ஆவணங்கள் இருக்கலாம்.

ஓலை ஆவணங்கள் சரியான முறையில் இன்னும் அளவீடு செய்யப் பெறவில்லை. அவற்றின் சிறப்பு இன்னும் சரியாக உணரப்படவில்லை.

நில அளவை ஓலைகள்

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்நாட்டின் பல மாவட்டப் பகுதிகள் ஊர்வாரியாக துல்லியமாக அளவு செய்யப்பட்டு ஓலைகளில் குறித்துவைக்கப்பட்டுள்ளன. வீடுகள், தோட்டம், புழக்கடைக்கு உரியவர்கள், சாதிவாரியாக மக்கள், கோயில், நீர்நிலை, பொதுஇடம், அறுவடையில் கோயில்கள், மக்கள் பெற்ற பங்கு, ஊர்ப்பணியாளர்கள் தொகை ஆகியவைகூடக் குறிக்கப்பெற்றன. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக ஓலைக் கட்டுக்களைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை பெற்றுள்ளது. தஞ்சையிலும் சில கிடைத்தன. அவை அக்கால சமய, சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு ஆய்வுக்குப் பெருந்துணை புரிவன.[1]

எடுத்துக்காட்டாகப் பனப்பாக்கம் என்ற ஊர் :

1811 சாதுல்லாகான் தீருவை

1812–1815 தோஸ்தல்லிகான் தீருவை

1816–1819 சபதறல்லிகான் தீருவை.

24 அடிக்கோலால் 100 குழி கொண்டது 1 மாவாக அளக்கப்பட்டது. *

மொத்தம்ஊர்ப்பகுதி	கிராம நத்தம்	கரம்பு : கிழக்கு ஏரிக்
90 மா. அவற்றுள்	பாழ்மேடு (2)	கீழ்ப்பள்ள ஓடை 14 மா
நன்செய் 60 மா	ஆக ... 21 1/2 மா	புறம்போக்கு
புன்செய் 30 மா	மானியபூமி	மானியம் கரம்பு 21 1/2
புன்செயில்வாரப்பற்று	(வாரப்பற்று இல்லை)	+10+4+14
இல்லாப்புறம்போக்கு	நன்செய் - புன்செய்	நீக்கி வாரப்பற்று
21 1/4 மா	மிராசுதார் 2 1	உள்ளது.
பிடாரிகோயில்(1/4)	காவலர் 5 2	நன்செய் 60-24 36மா
ஈசுவரன்கோயில்(1/4)	தூக்கிரி 1/2 -	புன்செய் 30-25 1/2 4மா
மேற்குக்குளம்(3/4)	கணக்கு 1 1/2 1	------
வடமேற்கு ஏரி (7)	தட்டான் 1/2 -	இவை செய்கால் 40 1/2 மா
மண்மேடு (10)	கருமான் 1/2 -	-------
வடக்கு	------------	
களத்து மேடு (1)	10 மா 4 மா	

* இதனை அளித்தவர் : ஓலைச்சுவடித்துறை திரு. இலட்சுமணன்.

		நன்செய் -	
		ஏரிக்குக் கீழ்	18மா
		இதன் தெற்கு	
		மேட்டுத் தாக்கு	10மா
		இதன்கிழக்கு	
		பள்ளதாக்கு	7 மா
		வட்டவண்டை	1மா
			------
			36 மா

		புன்செய்	
		தென்மேற்கு	4 1/2மா
			------
			40 1/2 மா

ஓலை ஆவணங்களின் தன்மையும் சிறப்பும்

வரலாறு தழுவிய ஓலை ஆவணங்கள் பெரும்பாலும் சிறு சுவடிகளாகவும் தனி ஓலைகளாகவும் கிடைக்கின்றன. தனி ஓலைகளில் ஆவணங்களை எழுதும் போது ஒரே ஓலையில் எழுதி முடிக்கவேண்டும் என்பது கருதி ஓலைகளின் ஓரங்களை அதிகம் வெட்டாமலும், நறுக்காமலும் நீண்ட அளவில் பயன்படுத்தினர். சில ஆவணங்கள் சுவடி வடிவில் கிடைத்தாலும் அச்சுவடிகள் குறைந்த எண்ணிக்கையுடைய ஓலைகளையே பெரும்பாலும் பெற்றிருக்கும். தனி ஓலைகளைப் பயன்படுத்தும் போது அவற்றின் முதுகு நரம்புகளைக் கிழிக்காமல் இரட்டை ஓலையாக நன்கு பாடம் செய்து உறுதியாக்கி அவற்றைப் பயன்படுத்தினர். அவற்றுள் ஒருசில செப்புத் தகடுகளைப்போல் உறுதியாகக் காட்சியளிக்கும்.

இவற்றின் நடை இடைக்கால, பிற்காலக் கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் ஒத்த ஆவண மொழிநடையிலேயே காணப்படுகின்றன. எழுதுவோரால் ஏற்படும் பிழைகள் மலிந்தும், கொச்சைச் சொற்களும், பேச்சு நடையும், வட்டார வழக்குச் சொற்களும், குழூஉக் குறிகளும் பல கலந்து காணப்படும். எழுத்துக்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வீச்செழுதாகவும், சுருக்கெழுத்துக்களும், குறியீடுகளும் கலந்து எழுதப் பெற்றிருக்கும்.

குறில் நெடில் வேறுபாடு இன்றியும், மெய்ப்புள்ளி இல்லாமலும், ா, ர, ர் ஆகியவை ஒரே மாதிரியாக எழுதப்பட்டும், ந-ண-ன; ல-ள-ழ; ர-ற வேறுபாடு இன்றியும், க-சு, த தம்முள் மயங்கியும் காணப்படும். சில ஆவணங்களில் பாரசீக, அரபு, ஆங்கிலச் சொற்களும் காணப்படும். இடைஇடையே கிரந்த எழுத்துக்களும் கலந்துவரும்.

இவ்விதமான காரணங்களால் இவைகளைத் தொகுப்போரும், பாதுகாப்போரும், படித்துப் பதிப்பிப்போரும் மிகவும் இடர்ப்படுகின்றனர். எனவேதான் இவை பெரும்பாலும் ஆய்வு செய்யப்பெறாமலுள்ளன.

17-19 ஆம் நூற்றாண்டுத் தமிழக வரலாறு பிறநாட்டார் குறிப்புக்களை மூலச் சான்றுகளாகக் கொண்டே எழுதப்படுகிறது. இப்போது ஓலை ஆவணங்கள் போன்ற நம்நாட்டு ஆவணங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஆய்வாளரிடையே ஏற்பட்டுள்ளது. ஓலை ஆவணங்களில் முத்திரை ஓலைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

முத்திரை ஓலைகள்

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காகிதம் புழக்கத்தில் வந்துவிட்டது. இருப்பினும் காகிதம் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது போலும். அதனால் மக்கள் தம் பழைய வழக்கப்படியே தொடர்ந்து ஓலைகளிலேயே எழுதலாயினர். அவ்வாவணங்கள் எழுதும் ஓலைகளில் கிழக்கிந்தியக் கம்பெனியார் தமது முத்திரைகளைப் பொறித்து விற்றனர். அவை முத்திரை ஓலை, அச்சு ஓலை, அச்சுபத்திரம், அச்சடிபத்திரம், அச்சடித்த பத்திரம், அச்சுக்கடுதாசி பத்திரம், 'ஸ்டாம்பு' என்று பலவாறு குறிக்கப்பட்டன. அவற்றில் எழுதப்பட்ட ஆவணங்கள் முறி, சாசனம், பத்திரம், சீட்டு எனப்பட்டது.

முத்திரை ஓலைகளில் ஒரு ஓரத்தில் 'பொக்கிஷம்' என்ற சொல் தமிழிலும் அதற்கு இணையாக ஆங்கிலம், பாரசீகம், தெலுங்கு ஆகியவற்றிலும் எழுதப்பட்டிருக்கும். வட்ட வடிவில் இவை எழுதப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். மற்ற

ஓரத்தில் முத்திரை ஓலையின் மதிப்பு நாலணா, எட்டணா, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் எனப் பொறிக்கப் பட்டிருக்கும். பொக்கிஷ அலுவலரின் கையொப்பமும் இடப்படுவதுண்டு.

தஞ்சை மராட்டியர் ஆட்சிக் காலத்தில் இவ்வாறே வட்ட வடிவில் மராட்டிமொழியில் பொறிக்கப்பட்ட முத்திரை ஓலைகள் வழக்கிலிருந்தன. மராட்டியர் முத்திரைகள் கம்பெனியார் முத்திரையைவிட அளவில் சற்றுச் சிறியவை. 'கொடுக்கல் வாங்கல் அதிகாரியின் முத்திரை' என்னும் பொருளில் 'ஸ்ரீதேவ கேவ நிஷ்பத் பத்ர' என எழுதப்பட்ட வட்டத்தின் உள் 'ஸ்ரீராம்பிரதாப்' என்ற தொடர் பொறிக்கப்பட்டிருக்கும்.

முத்திரை ஓலைகள் வழக்கிலிருந்த காலத்திலேயே மக்கள் தங்களுக்குள்ளாகவே முத்திரையில்லாத வெற்று ஓலைகளிலும் எழுதிக்கொள்ளும் வழக்கமிருந்தது. பதிவு செய்யப்பெறாத இவ்வோலைகளே அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிலர் முத்திரை ஓலைகள் கிடைக்காதபோது வெற்று ஓலையில் எழுதிப் பின்னர் கிடைத்தபோது முத்திரை ஓலைகளில் எழுதிக் கொண்டனர்.

> 'முத்திரை ஓலை கிடைக்காமையால் வெத்தோலையில் எழுதலாச்சுது'
> 'யிப்போது அச்சுப்பத்திரம் ஆசர் யில்லாதபடியினாலே வந்தஉடனே எழுதிக் குடுப்பேனாவும்'

என்ற தொடர்கள் இதனை விளக்கும்.

கடன், குத்தகை, விற்பனை, ஒத்திவைத்தல் போன்ற நடவடிக்கைகள் தொகையின் மதிப்புக்குத் தக்கவாறு விலையுள்ள முத்திரை ஓலைகளில் எழுதினர். திருச்சி மாவட்ட லால்குடி வட்ட நெரிஞ்சலக்குடி ஓலைகளில்

90 ரூ, 100 ரூபாய்க்கு	*4 அணா*
250 ரூபாய்க்கு	*8 அணா*
350 ரூபாய்க்கு	*1 ரூபாய்*
830 ரூபாய்க்கு	*2 ரூபாய்*

முத்திரை ஓலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வளவு ரூபாய் மதிப்புக்கு இவ்வளவு விலையுள்ள முத்திரை ஓலைகளில் எழுதவேண்டும் என்ற சரியான விபரம் கிடைக்காவிட்டாலும் ஒப்பந்தங்களின் மதிப்பு உயர உயர எழுதும் முத்திரை ஓலை மதிப்பு உயருகிறது என்பது மேற்கண்ட குறிப்பிலிருந்து தெரிகிறது.

பொதுவாக ஒரு முத்திரை ஓலையில் ஒரு ஆவணமே எழுதப்பட்டது. சில நீண்ட ஆவணங்கள் இரண்டு ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. ஒரு ரூபாய் முத்திரை ஓலையைப் பயன்படுத்தவேண்டிய ஒப்பந்தத்திற்கு ஒரு ரூபாய் முத்திரை ஓலை கிடைக்காமையால் இரண்டு எட்டணா ஓலைகளும் பயன்படுத்தப்பட்டன.

'ஒரு பத்தரமாயி ஆப்படாததுனாலே நாலது
தேதியில் ரெண்டு பத்தரமாயி எழுதிக்குடுத்தேன்'

என்ற தொடர் ஒரு ஆவணத்தில் காணப்படுகிறது.

முத்திரை ஓலைகளில் தொடர் எண்கள் இடப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனியாக எண்கள் இடப்பட்டன.

1841 வருஷத்திய நம்பர் 688
1844 வருஷத்திய நம்பர் 1000
1847 வருஷத்திய நம்பர் 136
1858 வருஷத்திய நம்பர் 289

என அவை எழுதப்பட்டன.

ஓலை விற்பனை

முத்திரை ஓலைகள் அரசு அலுவலங்களிலிருந்து நேரடியாகவும், விற்பனையாளர்கள் மூலமாகவும் விற்கப்பட்டன.

'1830 வருஷம் சப்டம்பர் மாதம் 12 தேதி சீகாழித் தாலுக்காக் கச்சேரியில் இடமணல் லிங்கப்ப னாயக்கனுக்குக் கடக்க விநாயக நல்லூர் சின்னய்யா பிள்ளை குத்தகை ஈட்டுப் பணம் குடுக்க வேண்டிய சங்கதிக்காக 8 அணா ஓலை விற்கப்பட்டது'

'வீராசாமி முதலி ஸ்டாம்பு தாறொவர்'
'சச்சுதானந்தம் அசூர் ஸ்டாம்பு வெண்டர்'

என்பன போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஒரு ஆண்டுக்குரிய எண் இடப்பெற்ற ஓலைகள் அதே ஆண்டு விற்பனையாகி ஒப்பந்தம் எழுதப்படவேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு ஓலையில் 1850 வருஷத்திய நம்பர் 27 என எழுதப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஓலை விற்கப்பட்ட நாள் 22.6.1852 தான். அவ் வோலையில் பலர் முன்னிலையில் 11.7.1852இல் ஒப்பந்தத்தை எழுதினர். சில ஓலைகளில் வாங்கப்பட்டு அடுத்த நாளே ஒப்பந்தத்தை எழுதியுள்ளனர். சில ஓலைகளில் சில மாதங்கள் கழித்தும் எழுதப்பட்டுள்ளன. ஓலைகளை இவ்வளவு நாட்களுக்குள் பயன்படுத்தவேண்டும் என்ற வரையறை இல்லைபோலும்.

ஒவ்வொரு ஓலையும் யார் யாருக்கு நடைபெறும் எவ்வளவு மதிப்புடைய ஒப்பந்தத்திற்காக யார்மூலம் முத்திரை ஓலைகள் விற்கப்பட்டன என்று தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ஆவணமும் எழுதப்பட்டுள்ளது. எனவே ஒருவர் வாங்கிய ஓலையைப் பிற ஒப்பந்தங்களுக்காகப் பிறர் பயன்படுத்த முடியாது என்பது தெரிகிறது.

முத்திரை ஓலைகள் வாங்கும்போது எழுதப்படும் உத்தேச மதிப்பைக் கூறியே அதற்குரிய முத்திரை ஓலைகள் வாங்கியுள்ளனர். ஒரு ஓலையில் 850 1/2 ரூபாய்க்காக வாங்கப்பட்ட ஓலைகயில் 20 நாட்கள் கழித்து 830 ரூபாய்க்கே பத்திரம் எழுதினர் என்ற விபரம் காணப்படுகிறது.

வட்டியோ, நெல்லோ, அசலில் ஒரு பங்கோ, முழுத்தொகையோ அளிக்கப்பட்டவை ஓலைகளிலேயே 'செல்லு' வைத்து எழுதப்பட்டன. முழுத்தொகை கொடுத்துத் தீர்த்த அன்றே எழுதிக்கொடுத்தவருக்கு முத்திரை ஓலைகள் 'வாபீசு' செய்யப்பட்டன.

அரசு ஓலைகள்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள், சிலருக்கு பட்டாக்கள் நில உரிமைகள் வழங்கி ஓலைகள் அளித்துள்ளனர். இவ்வோலைகளில் மாவட்ட ஆட்சித் தலைவரின் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். திருச்சி மாவட்ட ஓலையொன்றில் J.BIRD COLLY என்று பொறிக்கப்பட்டுள்ளது. அப்பெயர் தமிழில் 'மேஸ்தர் ஜான் பற்ட்டு துரை' என எழுதப்பட்டுள்ளது.

எழுத்தும் கையெழுத்தும்

முத்திரை ஓலைகளை எழுதியவர்கள் தாம் எழுதிய விபரங்களை ஆவணத்தின் இறுதிப்பகுதியில் குறித்தனர்.

'இந்தச் சாசனம் எழுதினது சபாபதிபிள்ளை'
'இந்தப் பத்திரம் யெளுதினது ஆங்கரை கணக்கு
காசி அய்யன் ஓலை எழுத்து'
'இந்தச் சீட்டு யெளுதினது துறையூர்
தேவாங்கப்பெருமாள்பிள்ளை நெட்டெழுத்து'

என்பன போன்ற தொடர்கள் காணப்படுகின்றன. பிற்காலச் செப்பேடுகளிலும் ஆவணம் எழுதப்படுவது 'நெட்டெழுத்து எழுதுதல்' என்று குறிக்கப்படுகிறது.

சில ஆவணங்களில் முழுக்கையெழுத்தும் நெட்டெழுத்து என்று கூறப்படுகிறது.

'இது காரியம் சாஷ்சி இதுக்கடியில் கையெழுத்து
வைத்தபேர்கள் நெட்டெழுத்து'

என்பதன் மூலம் இதனை அறிகின்றோம்.

படிப்பறியாதபல மக்கள் (இன்று இடதுகைப் பெருவிரல் ரேகை வைப்பது போல்) எழுத்தாணியால் கீறியுள்ளனர்.

/ இந்தக் கீறல் ணாவு
। இந்தக் கீறல் மறுதாயி
ப இந்தக் கீறல் ராமசாமி

என்பனவற்றை முத்திரை ஓலைகளில் காணுகிறோம். இவை 'தற்குறி' என்றும் குறிக்கப்பட்டன. 'தற்குறி' என்ற சொல் இப்போது படிக்காத மக்களையே குறிக்கும் சொல்லாகி விட்டது.

ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் 'சம்மதி' 'சம்மதம்' என்று கையெழுத்துடன் எழுதினர். சாட்சிக் கையொப்ப மிட்டவர்களும், மத்தியஸ்தம், முன்னிலை வகித்தவர்கள் கையெழுத்துடன் 'அறிவேன்' என எழுதினர்.

முத்திரை ஓலைகளைப் பெரும்பாலும் ஊர்க்கணக்கர்களும், சிறுபான்மை 'வாத்தியார்' களும் எழுதியுள்ளனர்.

இவ்வோலை ஆவணங்களையும், முத்திரை ஓலை களையும் அழியாமல் பாதுகாத்து அச்சிட்டு ஆய்வு செய்வது மிகவும் இன்றியமையாததாகும். பிற்கால வரலாற்றின் பல கூறுகள் இவ்வோலை ஆவணங்கள் மூலம் மிகத் தெளிவாகத் தெரிகின்றன.

தமிழ்க் கல்வெட்டுக்கள் தொடர்பான நூல்கள்

மூலநூல்கள்

மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறை வெளியீடுகள்

எபிகிராபியா இண்டிகா - *1892* - (Epigraphia Indica)

கல்வெட்டு ஆண்டறிக்கைகள் - 1887 - 1985 *
(Annual Report on Epigraphy)

தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள்
(South Indian Inscriptions)

தொகுதி *1* பதிப்பு, ஈ.உல்சு, சென்னை *1890*
தொகுதி *2* பதிப்பு, ஈ.உல்சு,வி. வெங்கையா எச். கிருஷ்ண சாஸ்திரி *(1891,92,95,1913,14)*
தொகுதி *3* பதிப்பு, ஈ உல்சு, எச். கிருஷ்ண சாஸ்திரி *(1899, 1903, 1920, 19)*
தொகுதி *4* பதிப்பு, எச். கிருஷ்ண சாஸ்திரி, சென்னை, *1923.*
தொகுதி *5* பதிப்பு, எச். கிருஷ்ண சாஸ்திரி, சென்னை, *1925.*
தொகுதி *6* பதிப்பு, கே.வி. சுப்பிரமணிய அய்யர், சென்னை, *1928.*
தொகுதி *7* பதிப்பு, கே.வி. சுப்பிரமணிய அய்யர், சென்னை, *1932.*
தொகுதி *8* பதிப்பு, கே.வி. சுப்பிரமணிய அய்யர், சென்னை, *1937.*
தொகுதி *12* பதிப்பு, *(1904-1935)* (பல்லவர்), வி.வேங்கட சுப்பையர், சென்னை, *1943.*
தொகுதி *13* பதிப்பு, *(1904-1935)* (இராசகேசரி), ஜி.வி. சீனிவாசராவ், சென்னை, *1952.*
தொகுதி *14* பதிப்பு, (பாண்டியர் *1904-1935*) ஏ.எஸ். இராமநாத-அய்யர், டெல்லி, *1962.*
தொகுதி *17* பதிப்பு, *(1903-4)* கே.ஜி. கிருஷ்ணன், டெல்லி, *1964.*
தொகுதி *19* பதிப்பு, (பரகேசரி *1904-1935*), ஜி.வி. சீனிவாசராவ், டெல்லி, *1970.*

* இந்த வரிசை முதலில் Madras Epigraphical Report, என்றும் Annual Report on South Indian Epigraphy என்றும் அழைக்கப்பட்டது.

தொகுதி 21 பதிப்பு, (1904-5), கே.ஜி. கிருஷ்ணன், அச்சில்
தொகுதி 22 பதிப்பு, (1905-6) பகுதி 1 (1-302),
ஜி.வி. சீனிவாசராவ், டெல்லி, 1983.
தொகுதி 23 பதிப்பு, (1906-7), ஜி.வி. சீனிவாசராவ், டெல்லி, 1979.

தொகுதி 24 பதிப்பு, (ஸ்ரீரங்கம்), எச்.கே. நரசிம்மசாமி, டெல்லி, 1982.

முதல் இராசேந்திரனது கரந்தைத் தமிழ்ச்சங்கம் செப்பேடுகள் (Karandai Tamil Sangam Plates of Rajendra Chola I, Ed. K.G. Krishnan, 1984), த.நா. அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடுகள்.

கல்வெட்டு-ஓர் அறிமுகம், பதிப்பு, நடன காசிநாதன், கு. தாமோதரன் 1980 (மூன்றாம் பதிப்பு).

கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், பதிப்பு, 5 தொகுதிகள், நடனகாசிநாதன், இரா. நாகசாமி, 1972, 1979.

குடந்தைக் கல்வெட்டுக்கள், முதல் தொகுதி, பதிப்பு, என். மார்க்சிய காந்தி, 1980.

செங்கம் நடுகற்கள், பதிப்பு, இரா. நாகசாமி, 1972.

சென்னை மாநகர்க் கல்வெட்டுக்கள், பதிப்பு, இரா. நாகசாமி, 1970.

தஞ்சைப் பெருவுடையார் கோயில்கல்வெட்டுக்கள், பதிப்பு, இரா. நாகசாமி, 1969.

தர்மபுரிக் கல்வெட்டுக்கள், பதிப்பு, இரா. நாகசாமி, 1975.

திருத்தணி வேளஞ்சேரி செப்பேடுகள், பதிப்பு, இரா. நாகசாமி, 1979.

திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டுக்கள், பதிப்பு, இரா. நாகசாமி, 1978.

நன்னிலம் கல்வெட்டுக்கள், பதிப்பு, மூன்று தொகுதிகள், ஏ. பத்மாவதி, 1979-80.

திறுவன வெளியீடுகள்

ஆவணம் (தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்) தொகுதிகள் 1-11, (1991 முதல்)

இராமேச்சுரம் கும்பாபிஷேகக் சிறப்பு மலர், பதிப்பு, சோமலெ, இரண்டாம் பகுதி, இராமேசுவரம், 1975.

கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி, பதிப்பு, சி. கோவிந்தராசன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1984.

தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், பதிப்பு, இராசு. செ. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50, பதிப்பு, இராசு. செ. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.

தென்இந்தியக் கோயில் கல்வெட்டுக்கள், பதிப்பு, தி.நா. சுப்பிரமணியம், அரசு பழஞ்சுவடி நூலகம், சென்னை, (மக்கன்சி தொகுத்தவை)

தொகுதி 1 1953.

தொகுதி 2 1954.

தொகுதி 3 P.I 1955.

தொகுதி II 1957. (கல்வெட்டுச் சொல்லடைவும்) பண்டைத் தமிழ் எழுத்துக்கள் மறுபதிப்பும் இதில் அடங்கியுள்ளது.

பல்லவர் செப்பேடுகள் முப்பது, பதிப்பு, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1966.

பாண்டியர் செப்பேடுகள் பத்து, பதிப்பு, தமிழ் வரலாற்றுக்கழகம், சென்னை, 1967.

புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுக்கள், புதுக்கோட்டை, சமஸ்தானம், புதுக்கோட்டை, 1929.

வரலாறு (டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி) தொகுதிகள், 1993 முதல்

திருமலை - திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுத் தொகுதிகள்

தொகுதி -1 முற்காலக் கல்வெட்டுக்கள், பதிப்பு, எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, சென்னை, 1931.

தொகுதி -2 சாளுவ நரசிம்மர் காலக் கல்வெட்டுக்கள், பதிப்பு, எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, வி. விஜயராகவாச்சாரியார், சென்னை, 1933.

தொகுதி - 3 கிருஷ்ணதேவராயர் காலக் கல்வெட்டுக்கள், பதிப்பு, வி. விஜயராகவாச்சாரியார், சென்னை, 1935.

தொகுதி - 4 அச்சுதராயர் காலக் கல்வெட்டுக்கள், பதிப்பு, பதிப்பு, வி. விஜயராகவாச்சாரியார், சென்னை, 1936.

தொகுதி - 5 சதாசிவராயர் காலக் கல்வெட்டுக்கள், பதிப்பு, பதிப்பு, வி. விஜயராகவாச்சாரியார், சென்னை, 1937.

தொகுதி - 6 பாகம் 1, வேங்கடாபதிராயர் காலக் கல்வெட்டுக்கள் பதிப்பு, 1937.

தொகுதி - 6 பாகம் 2 Epigraphical Glossary on Tirupati Devasthanam Inscriptions, V. Vijayaraghavachariar, Madras, 1938.

திருவாங்கூர் தொல்லியல் வரிசை
(Travancore Archaeological Series)

தொகுதி -1 பதிப்பு, டி.ஏ.கோபிநாதராவ், 1910-13, மறுபதிப்பு, 1988.

தொகுதி -2 பதிப்பு, டி.ஏ. கோபிநாதராவ், 1916-21.

தொகுதி - 3 பதிப்பு, கே.வி. சுப்பிரமணிய அய்யர், 1922-23.

தொகுதி - 4 பதிப்பு, கே.வி. சுப்பிரமணிய அய்யர், 1924.

தொகுதி - 5 பதிப்பு, ஏ.எஸ். ராமநாத அய்யர், *1924-27.*

தொகுதி - 6 பதிப்பு, ஏ.எஸ். ராமநாத அய்யர், *1927.*

தொகுதி -7 பதிப்பு, ஏ.எஸ். ராமநாத அய்யர், *1931.*

தொகுதி - 8 பதிப்பு, ஆர். வாசுதேவப்பொதுவாள், *1938.*

இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்கள்

Epigraphia Tamilica (A Journal of Tamil Epigraphy), University of Ceylon Peradeniya, 1971.

Epigraphia Zeylanica, Colombo, 1940.

Inscriptions of Ceylon, Vol I, Early Brahmi Inscriptions, Archaeologica Survey of Ceylon, Colombo, 1970.

Muller, E., Ancient Inscriptions in Ceylon, London, 1883.

Veluppillai, A. Ceylon Tamil Inscriptions Pt. I, University of Ceylor Peradeniya, 1971.

Veluppillai, A. Ceylon Tamil Inscriptions, Pt. II, University of Ceylo Peradeniya, 1972.

சார்பு நூல்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பதிப்பு, தென்னிந்திய *கல்வெட்டுக்கள், 1983.*

இராகவையங்கார், மு., இலக்கிய சாசன வழக்காறுகள், தமிழ *அரசு, சென்னை (1929 பிப்ரவரியில் நிகழ்த்திய* - சென்னை *பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள்)*

இராகவையங்கார், மு., சாசனத் தமிழ்க்கவி சரித *மானாமதுரை, 1961 (மூன்றாம் பதிப்பு)*

இராகவையங்கார், மூ., பெருந்தொகை, மதுரை, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை 1936.

இராசேந்திரன், அ., ப., தொல்லியல் கருத்தரங்கு தொகுதி 2, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1983.

ஏகாம்பரநாதன், ஏ., கல்வெட்டில் சமணம், ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1979.

கிருஷ்ணமூர்த்தி, இரா., தமிழ் வட்டெழுத்து, சென்னை, 1980.

குடவாயில் பாலசுப்பிரமணியன், திருவாரூர்த் திருக்கோயில், தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர், 1988.

குப்புசாமி.சு., கல்வெட்டுக்களில் புதுவைப் பகுதிகள், புதுவை வரலாற்றுச் சங்கம், 1974.

குப்புசாமி. சு., வரலாற்று வடிவங்கள், சேகர் பதிப்பகம், சென்னை, 1976.

சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., இலக்கியமும் கல்வெட்டுக்களும், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.

சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்,மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.

சாம்பசிவம், ச., கல்வெட்டுக் கருவூலம், வளவன் வெளியீடு, மதுரை, 1979.

சிரோமணி, ஜி. கோவிந்தராஜு, எஸ். சந்திரசேகரன், எம்., கல்வெட்டு எழுத்துக்களில் திருக்குறள், கிறித்துவக் ல்லூரி, சென்னை, 1980.

சுப்பிரமணியம், பூ. மெய்க்கீர்த்திகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

தங்கவேலு, கோ., தியாகராசன், இல., சம்புவராயர் வரலாறு, கோபால் நாராயணன் நினைவு கல்வி அறக்கட்டளை, சென்னை, 1990.

தாமரைக் கண்ணன், வரலாற்றுக் கருவூலம், சேகர் பதிப்பகம், சென்னை, 1984.

நடன காசிநாதன், கல்லெழுத்துக்கலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.

நாகசாமி, இரா, காலச்சுவடுகள், சேகர் பதிப்பகம்

தொல்லியல் கட்டுரைகள், சேகர் பதிப்பகம்,

கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், சென்னை, 1977.

நாகசாமி, இரா., கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, 1968.

நாகசாமி, இரா., பதிப்பு, நடுகல் கருத்தரங்கு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1974.

நாகசாமி, இரா., யாவரும் கேளிர், வாசகர் வட்டம், சென்னை, 1973.

நாகசாமி, இரா., மற்றும் பிறர், கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1980.

பன்னீர்செல்வம், இரா., கல்வெட்டுக்கள் (ஒரு முன்னுரை), கேரளப் பல்கலைக்கழகக் கூட்டுறவுப் பண்ணை அச்சகம், திருவனந்தபுரம், 1969.

மகாதேவன், வே., கல்வெட்டுத் தேன்துளிகள், அன்னபூர்ணா பதிப்பகம், திருப்பனந்தாள், 1979.

வேங்கடசாமி, மயிலை சீனி, சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, 1981.

வேங்கடசாமி, மயிலை. சீனி, சாசனச் செய்யுள் மஞ்சரி, பாரி நிலையம், சென்னை, 1959.

வேங்கடராமையா, கே.எம். ஆய்வுப்பேழை, அன்னபூர்ணா பதிப்பகம், திருப்பனந்தாள், 1980.

வேங்கடராமையா, கே.எம்., கல்லெழுத்துக்களில், அன்னபூர்ணா பதிப்பகம், திருப்பனந்தாள், 1978.

வேங்கடேசன், ந., வரலாற்றில் வில்லியனூர், சேகர் பதிப்பகம், சென்னை, 1979.

வேலுப்பிள்ளை, அ., சாசனமும் தமிழும், பேராதனை, 1971.

Agesthialingom, S., & Shanmugam, S.V., The Language of Tamil Inscriptions 1250-1350, Annamalai University, Annamalai Nagar, 1970.

Burgess, Jas., S.M. Natesa Sastri, Tamil and Sanskrit Inscriptions, Madras, 1886.

Krishnan, K.G., Studies in South Indian History and Epigraphy, Madras, 1981.

Burnell, A.C., Elements of South Indian Palaeography, from the Fourth to the Seventeenth Century A.D. 2nd. Ed. London, 1878.

Dani, A.H., Indian Palaeography, Oxford University Press, 1963.

Ekambaranathan, A., & Sivaprakasam, C.K., Jaina Inscriptions in Tamil nadu, (List) Madras, 1987.

Gupta, S.P., and Ramachandran, K.S., Ed. The Origin of Brahmi Script, D.K. Publications, Delhi, 1979.

Krishna Sastri, H., The Caverns and Brahmi Inscriptions of Southern India, Proceedings and Transactions of the First Oriental Conference, Poona, 1919, pp. 327-348.

Krishnaswami Ayyangar, s., Ed., The Historical Inscriptions of Southern India collected till 1932 and outlines of political History, Robert Sewell, Madras, 1932.

Mahadevan, Iravatham., Tamil Brahmi Inscriptions, Tamil nadu State Department of Archaeology, Madras, 1970.

Mahadevan, Iravatham., Tamil Brahmi Inscriptions of the Sangam Age, Proceedings of II international Conference Seminar of Tamil Studies, Madras, Vol I, 1971, pp. 73-106.

Mahalingam, T.V., Early South Indian Palaeography, University of Madras, Madras, 1967.

Mahalingam, T.V., Ed. Inscriptions of the Pallavas, ICHR, Delhi, 1988

Natana Kasinathan, Hero-stones in Tamilnadu, Arun Publications.

Noboru Karashima, Subbarayalu, Y., & Toru Matsui; A Concordance of the Names in the Cola Inscriptions, 3 Vols, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 1978.

Noboru Karashima, South Indian History and Society : Studies from Inscriptions, AD 850-1500, OUP, 1983.

Rajan, K., South Indian Memorial Stones, mano Patippakam, Thanjavur, 2000.

Rangacharya, V., A Topographical List of the Inscriptions of the Madras Presidency, Collected till 1915 with Notes and references, 3 vols, Madras, 1917.

Ramesh, K.V. Indian Epigraphy, Vol.I, Sundeep Prakashan, Delhi, 1984.

Robert Sewell, List of Inscriptions, and sketch of the Dynasties of Southern India, Madras, 1884.

Sircar, D.C., Indian Epigraphy, Delhi, 1965.

Sircar, D.C., Indian Epigraphical Glossary, Motilal, Delhi, 1966.

Sivaramamurthi, C., Indian Epigraphy and South Indian Scripts (Bulletin of the Madras Government Museum Vol III No. 4) Madras, 1952.

Subramania Aiyar, K.V., "The Earliest moments of Pandya Country and their inscriptions" Proceedings of the Third Oriental Conference, Madras, 1924, pp. 275-300. Reprinted in his Historical Sketches of Ancient Dekhan, Vol III, (Coimbatore, 1969) Ch I.

Subramaniam, N., & Venkataraman, R., Tamil Epigraphy - A Survey, Ennes Publications, Madurai, 1980.

Veluppilllai, A., Epigraphical Evidences for Tamil Studies, International Institute of Tamil Studies, Madras, 1980.

Veluppillai, A., Pandya Inscriptions, A Language Study, Jaffna 1972.

Veluppillai, A., A study of the Dialects of Inscriptional Tamil, DLA, Trivandrum, 1976.

தமிழ்ப் பல்கலைக்கழகம்